அமெரிக்கா : பெருகிவரும் படுகொலைகள்

உலகிலா

டிசம்பர் 1994

கெய்ரோ மகாநாடு

முகத்திரைக்குப்பின்



எஸ்தோனியாவின் சோகக் கதை

பால்ரிக் கடலில் போக்குவரத்துச் சேவையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த எஸ்தோனியாக் கப்பல் மூழ்கியது இந்த நூற்றாண்டின் மிகப்பெரிய விபத்தாகும். விஞ்ஞானமும் தொழில் நுட்பமும் முன்னேறிய இந்தக் காலப்பகுதியில் பாரிய உயிரிழப்பைத் தடுக்கமுடியாதது மிகப்பெரிய துயரமாகும்.

பக்கம்: 26



கொலைமலிந்த அமெரிக்கா

அமெரிக்காவின் கட்டுப்பாடற்ற ஆயுத விற்பனை, அதன் உள்நாட்டில் சட்டத்தையும், ஒழுங்கையும் குலைத்துள்ளது. சகல விதமான வன்முறை கொளையும் தகவல் தொடர்புசாதனங்கள் கட்டுப்பாடற்று வழங்குவதால், அமெரிக்காவின் இளம் சமுதாயம் ஒழுக்கக்கேடான கொலைகார எண்ணங்களை வளர்த்துக் கொள்கிறது.

பக்கம்: 40

உலக விவகாரங்கள்

ஆசியா

பாகிஸ்தானின் அரசியல் குளறுபடிகள் —05
பர்மா இராணியுடன் பேரம் —08
மலேசியாவில் புதிய மதப் பிரிவு —11
மாவோவின் அந்தரங்கம் —13
டென்சியாவோபிங்கின் இறுதிக்காலம் —15
ஜப்பானின் போர்க்காலக் குற்றங்கள் —17
மீண்டும் சதாம் ஹுசைன் —20
இஸ்ரேலின் இராணுவத்தளபதி —22
கம்போடியாவில் இழுபறி —24

ஐரோப்பா

எஸ்தோனியாவின் சோகக் கதை —26
சரஜேவோ நினைவுகள் —29
கடந்த காலத்தின் இறுதி நாள் —32
காக்கேசசில் பெருங் குழப்பம் —35

அமெரிக்கா

வெள்ளை மாளிகையைத் தாக்கிய தற் கொலையாளி? —38
கொலை மலிந்த அமெரிக்கா —40
ஹெய்ற்றியில் தலையீடு —43

ஆபிரிக்கா

கிளர்ச்சியாளர்களை விடுவித்தல் —46

அறிந்து கொள்ளுங்கள்

அதிசய ஆண்டு —47

மனிதவியல் வரலாறு

சீனாவின் மம்மிகள் —49
மண்ணில் மறைந்தவை —51

உலா: 16

உலக உலா
பலதுறை சார்
மாத இதழ்

விலை ரூபா 100/-

சுற்றுச் சூழல்

மாசுபடுத்தப்பட்ட அமேசன் —54

விலங்கியல்

கொடிய சிலந்தியினம் —57

மருத்துவம்

புற்றுநோயைத் தடுத்து நிறுத்தல் —60

உளவியல்

உரையாடக் கற்றுக்கொள்ளுங்கள் —65

குற்றவியல்

மறைந்துபோன அரும் பொருள்கள் —69
தாய்லாந்தில் மிகப் பெரிய திருட்டு —71

வாணிகம்

விண்வெளி வேலிச்சண்டை —73

சமூகவியல்

இலக்கு மாறிய பயணம் —78

பல்தினைப்பகுதி

செய்திச் சரம் —03
பார்வைகள் —04

★

அச்சுப் பதிப்பு

இராசன் அச்சகம்
144, அருச்சுனா சாலை,
யாழ்ப்பாணம்.

★

முன் அட்டைப் பதிப்பு

அந்திவானம் பதிப்பகம்
ஐந்து சந்தி,
யாழ்ப்பாணம்.

★

வெளியீடு

உலக உலா நிறுவனம்
144, அருச்சுனா சாலை,
(3 ஆம் மாடி)
யாழ்ப்பாணம்.

★

பணிமனை

உலக உலா செயலகம்
நவாலி வீதி,
ஆனைக்கோட்டை.

★

விநியோகஸ்தர்கள்

தென்மராட்சிக் கோட்டம்

சோதி புத்தக நிலையம்
கச்சாய் வீதி,
சாவகச்சேரி.

★

வடமராட்சிக் கோட்டம்

உதயன் புத்தக நிலையம்
மருதடி,
பருத்தித்துறை.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

சுதந்திர பலாஉ (PALAO)

பலாஉ குடியரசு தென்பசுபிக்கில் உள்ள தீவு. ஒக்ரோபர் 9 ஆம் தேதியில் இருந்து ஐக்கிய அமெரிக்காவின் நம்பிக்கைப் பிரதேச அந்தஸ்தை முடித்துக் கொள்கிறது. இரண்டாம் உலகப்போரின் பின் முன்னெடுக்கப்பட்ட ஒப்பந்தப்பிரகாரம் பலாஉ ஐக்கிய அமெரிக்காவிடம் இருந்து நம்பிக்கை உறவு முறையிலிருந்து சுதந்திர நாடாக வந்தது. ஜூலையில் பலாஉ மக்கள் ஐ. அமெரிக்காவுடனான சுயாதிபத்திய உறவுக்கான ஒப்பந்தத்திற்கு அதிகாரம் அளித்தனர். இந்த உடன்படிக்கைப் பிரகாரம் பலாஉ சுயாதீன ஆட்சி நாடாகும். ஐ. அமெரிக்கா வெளிப் பாதுகாப்புக் கடமையை வைத்திருக்கும்.

ஜப்பான்

சூட்டுக்கான நட்டஈடு

இரு வருடங்களுக்கு முன் பாற்றன்றோக் என்ற இடத்தில், ஜப்பானிய மாணவன் கொல்லப்பட்டதற்காக அவருடைய பெற்றோருக்கு நட்ட ஈடாக 6,50,000 அமெரிக்க டொலர் வழங்குமாறு ஜூரியானாவிலுள்ள அமெரிக்க நீதிமன்றம் தீர்ப்பளித்தது. ஹற்றோறி என்ற மாணவன் ஹலோவின் கட்சியின் இருப்பிடம் என்று தவறாக ஒரு வீட்டின் கதவைத் தட்டியபோது சுடப்பட்டார். வீட்டுக்காரர் றொட்னி பியேர்ஸ் பதற்றமாகக் காணப்பட்ட இளைஞர் ஒரு கொலையாளி என்று கருதினார். நீதிபதி ''கொலைக்கான எதுவித நியாயமும் கிடையாது'' என்று தீர்ப்பளித்தார்.

தியேத்தில் பிரசாரம்

''பிரிவினைக்குத் தீவிர எதிர்ப்பு'' என்ற தொனிப் பொருளில் தியேத்தியப் பாடசாலைகளில் நடுத்தர மற்றும் ஆரம்பதர மாணவர்களுக்கு ''தேசாபிமானக் கல்வி'' என்ற கொள்கைப் பிரசாரத்தை ஆரம்பிக்க இருப்பதாக சீனா, அறிவித்தது. அரசு ''மக்கள் தினசரி'' அவ்வாறான முயற்சி நாளந்தம் சீன கொடி ஏற்றல் வைபவம், மற்றும் சீன தேசிய கீதம் பாடுதல் ஆகியவற்றை உள்ளடக்கும் என்று கூறுகிறது.

இந்தியா

ஹெயிற்றிக்கு இராணுவப் பிரிவு

ஹெயிற்றியில் ஐ. நாவின் அமைதிகாக்கும் நடவடிக்கையின் போது பணியாற்றுவதற்காக இந்தியா 5,000 இராணுவத்தினரை தயார் செய்கிறது. இது முக்கிய இராணுவ நிலையங்களைப் பாதுகாக்கவும், தேர்ந்தெடுக்கப்பட்ட சிவில் அரசை மீண்டும் ஏற்படுத்தவும் ஐ. நாவால் எடுக்கப்பட்ட ஆரம்ப நடவடிக்கையைப் பின்பற்றும். ஹெயிற்றி ஐ நா பணி அமெரிக்காவில் ஆயித்துருப்புக்கள் முதல் தடவையாகச் சேர இடமளிக்கிறது.

அணுக்கரு ப் பரிசோதனை

லொப்நோர் பரிசோதனைக் களத்தில், இவ்வாண்டு நான்கு மாதங்களுக்குள், சீனா இருமுறை அணுக்கரு ஆயுத வெடிகளை வெடித்தது. பெய்ஜிங் பேச்சாளர் ஒருவர் இத நியாயப்படுத்தி உரையாற்றினார். எந்தவோர் அணுவாயுத நாட்டிலும் மிகக் குறைந்த பரிசோதனைகளையே சீனா நடாத்தியுள்ளது என்கிறார்.

கம்போடியா

பத்திரிகை ஆசிரியர் படுகொலை செய்யப்பட்டார்

அரசாங்கத்தை கடுமையாக விமர்சிப்பவரான பத்திரிகை ஆசிரியர் நுவோசாண் சென்ற செப்டெம்பர் 7 ஆம் தேதி, நொம்பென் தெருவொன்றில் வைத்து இன்னும் அடையாளம் காணப்படாத மோட்டார் சைக்கிளில் துப்பாக்கி ஏந்தி வந்தவர்களால் சுட்டுக்கொல்லப்பட்டார். அதற்கு மறுநாள் இவ் ஐ.நா.மனித உரிமைகள் செயற்பாட்டைச் சேர்ந்த உத்தியோகத்தர் ஒருவரின் ஐந்து வயது மகளின் கால்களில் வெடி வைக்கப்பட்டது. இது கம்போடியாவில் மனித உரிமைமீறல்கள் நடப்பதாக ஐ. நா. சாடி வருவதை மௌனமாக்க வெனச் செய்யப்பட்ட ஒரு செயலாகக் கருதப் படுகிறது.

மலேசியா

இணைந்த நீர்வு

மலேசியாவும் சிங்கப்பூரும் புலவுபாடு புட்டி (வெள்ளைமலைத் தீவு) என்ற ஒரு தீவிற்குச் சொந்தம் கோரிப் பிணங்கி நிற்கின்றன. 1988 முதல் சிங்கப்பூர் அரசு அத்தத் தீவிற்கு மலேசிய மீனவர்கள் வரவிடாமல் தடுத்து வருகிறது. சென்ற செப்ரெம்பர் 7 ஆம் தேதி இரு நாட்டுப் பிரதமர்களும் சந்தித்துக் கதைத்த பின்பு, அந்தப் பிணக்கை ஹேக்நகரில் உள்ள அனைத்துலக நீதிமன்றிற்குச் சமர்ப்பித்து, தீர்ப்புப்பெறுவதென இரண்டு நாடுகளும் இணங்கிக் கொண்டுள்ளன.

சர்வாதிகாரிகள் எங்கே போய்விட்டார்கள்

சர்வாதிகாரிகளைப் பற்றிய ஒரு வேடிக்கையான விடயம் அவர்கள் அதிகாரத்தில் இருக்கும் பொழுது, ஒய்வு எடுப்பதே கிடையாது. அதே போல் அதிகாரத்தில் இல்லாத போதும் அவர்கள் சும்மா இருப்பதாகத் தெரியவில்லை. மிக அண்மையில் ஹெயிற்றியில் ஆட்சியைக் கைப்பற்றிக்கொண்டு இருந்த ஜெனரல் ராவுள் செட்ராஸ் பனாமாவிற்கு ஓடித் தப்பி விட்டார். அவருக்கு தம்மைப்போன்ற ஏனைய பல வான்கள் சேவையில் இருந்து ஒய்வு பெற்றபின்பு என்ன செய்கிறார்கள் என்று அறிய விருப்பம் இருக்கக் கூடும். அந்த முந்திய முரட்டுப்போர்வழிகள் சிலரின் தற்கால நிலைபற்றிய சில தகவல் இதோ:

✲ அனஸ்டாசியோ சொமாசா:—

நிக்காரகுவா நாட்டின் ஜனாதிபதியாக இருந்தவர். 1979 சான்டனிஸ்டபோராளிகளிடம் பிடிபடாமல் தப்பி பராகுவே நாட்டிற்கு ஓடினார். அடுத்த ஆண்டில் அங்கு வைத்துப் படுகொலை செய்யப்பட்டார்.

✲ எறிக் ஹொனேகர்:—

முன்னாள் கிழக்கு ஜேர்மனியின் ஜனாதிபதியாக இருந்தவர். 1991 இல் அந்த நாடு சரிந்த பின்பு, சோவியத் ஒன்றியத்திற்குத் தப்பி ஓடினார். 1993 இல் சிலி நாட்டுக்கு ஓடிப்போய் அங்கேயே காலமானார்.

✲ மனுவெல் அந்தோனியே நொறிகா:—

பனாமா நாட்டின் ஜனாதிபதியாக இருந்த பொழுது, 1989 இல் ஐக்கிய அமெரிக்கா படையெடுத்துக் கைது செய்து புளோரிடாவுக்குக் கொண்டு சென்றது. அங்கே போதைப் பொருள் கடத்தற் குற்றத்திற்காக வழக்கு விசாரணை நடத்தப்பட்டு 40 ஆண்டு சிறைவிதிக்கப்பட்டு அனுபவித்துக்கொண்டு வருகிறார்.

✲ ஜேன் படேல் போக்காசா:—

மத்திய ஆபிரிக்கக் குடியரசின் சக்கரவர்த்தியாய் இருந்தவர். 1979 இல் ஐவரி கோஸ்ட் நாட்டிற்குச் சென்று பின்பு பிரான்சுக்குப் போனார். 1986 இல் மீண்டும் தமது நாட்டுக்கு வந்து கொலைக்குற்றத்திற்குத் தண்டனைத் தீர்ப்புப்பெற்ற இவர், 1993 இல் அரசாங்க மன்னிப்புப் பெற்றார்.

✲ ஜேன் கிளோட்டுவலியர்:—

ஹெய்ற்றியின் சர்வாதிகாரியாக மிக இளம் வயதிலேயே அதிகாரத்தைக் கைப்பற்றிச் சர்வாதிகாரம் செலுத்திய பின்பு, வீழ்த்தப்பட்டு 1986 இல் றிவேயிராவுக்குச் சென்றார். வீட்டு வாடகையைச் செலுத்தாததால் குடியிருந்த வீட்டில் இருந்து துரத்தப்பட்டார். இப்பொழுது கான்ஸ் நகரில் தமது தாயாருடன் வசிக்கிறார்.

✲ இடி. அமீன்:—

மிழையான வழியில் உகண்டா நாட்டின் ஜனாதிபதி ஆனவர். 1979 இல் பதவி கவிழ்க்கப்பட்டு லிபியாவுக்குத் தப்பி ஓடி தற்பொழுது சவுதிஅரேபியாவில் வாழ்கிறார்.

பாகிஸ்தானுக்கு மீண்டும் இராணுவ ஆட்சிதான் தஞ்சமாகுமா?

எழுதியவர்:
லாகூரிலிருந்து அகமட் றஷிட்

பெனாசிர் பூட்டோவை அரசியல் எதிரணியினர் அகற்றுதற்கு விடாப்பிடியாக நிற்கின்றனர்.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

சென்ற செப்ரெம்பர் 20 ஆந் தேதி பாகிஸ்தானில் ஒரு பொது வேலை நிறுத்தம் நடைபெற்றது. அதற்கு அழைப்பு விட்ட முன்னாட் பிரதமராக இருந்த தற்போதைய எதிர்க் கட்சித் தலைவர் நவாஸ் செரீப் ''நாங்கள் ஒரு போராட்டம் நடத்திக்கொண்டு இருக்கிறோம்'' என்று அறைகூவல் விட்டார். அவர் அன்று லாகூர் நகரின் தெருக்களில் கூரில் ஒடித்திரிந்த பொழுது அவருடைய மெய்க்காப்பாளர்கள் ஏ. கே. 47 களை ஏந்தியவர்களாகவானை நோக்கிச் சுட்டனர். அவ்விதம் அவர்கள் தங்கள் பலத்தைக் காட்டிய பொழுது சாதாரண பொது மக்கள் பதற்றத்தில் பதுங்கினர். செரீப்பின் பாகிஸ்தான் முஸ்லிம் லீக் கட்சிக்கு அந்த வேலை நிறுத்தம் ஓர் அரசியல் வெற்றியாக அமைந்து விட்டது. அவருடைய ஆதரவாளர்கள் பலர் வெடிச் சூடுகளுக்கு மத்தியில் கைது செய்யப்பட்டனர். அவர்களில் அநேகர் பொலிஸாரின் கண்ணுக்கு முன்னாலேயே கடைக்காரர்களைக் கடையடைப்புச் செய்யும் படி கட்டாயப் படுத்தியவர்கள் ஆவர்.

தேசிய அரசுப் பேரவைக்குப் பிரச்சினையைத் தீர்க்க முடியாது விட்டால் மக்கள் அதனைத் தீர்த்து வைப்பார்கள் என்று செரீப் முழக்கமிட்டுக் கூறினார். வேலை நிறுத்தம் நிகழ்ந்தபோது நிலவிய செயல் பலத்தால் உந்தப் பட்டு அவர் அப்படிக் கூறியது பாகிஸ்தானில் குழப்ப நிலை மேலும் தொடரப்போகிறது என் பலதைக் காட்டுவதாக உள்ளது.

பிரதமர் பெனாசிர் பூட்டோவுக்கும், எதிரணித் தலைவர் செரீப்புக்கும் இடையில் பாராளுமன்றத்துக்குள் நடந்த சொற்போர் இப் பொழுது தெருவுக்கு வந்துள்ளது. அரசியற் போர் மீண்டும் பாகிஸ்தானை அரசியல் எதேச்சாதிகாரத்தின் விளிம்பில் நிற்க வைத்துள்ளது தெளிவாகத் தெரிகிறது. இப் பொழுது நிகழும் போர்க் குமுறல்களுக்கு இடையில் பாகிஸ்தானில் மீண்டும் குழப்பத்தை அடக்க இராணுவத்தால்தான் முடியும் என்றவாறான அறிகுறிகள் எங்கும் தென்படுகின்றன.

பெனாசிர் பூட்டோ இரண்டாவது முறையாக ஆட்சிக்கு வந்த பின்பு அண்மைக் காலத்தில் அனைத்துலக அரங்கில் அவர் பெற்ற பல வெற்றிகளையெல்லாம் இப்பொழுது நடந்து முடிந்த வேலை நிறுத்தம் மழுங்கடித்து விட்டது. பாகிஸ்தானின் தொலைத் தொடர்பு நிறுவனத்தின் பங்குகளை வெளிநாடுகளில் சந்தைப் படுத்தியதன் மூலம் ஒரு பில்லியன் டொலர் அன்னியச் செலாவணி மூலதனமும் பாகிஸ்தானின் தொழில் துறைகளில் அன்னிய முதலீட்டாளர்கள் பங்கு கொள்ள வைக்கும் திட்டத்தால் 4 மில்லியன் அளவுக்கு அமெரிக்கர்களின் முதலீடுகளையும் அந்த நாட்டுக்கு ஈட்டிக் கொடுத்த பிரதமர் பூட்டோ அதனால் தான் வெற்றி பெற்றதாக நினைத்தார். ஆனால் சாதாரண பொது மக்களுக்கோ தமது பிரதமர் அங்கு நிகழும் தெருப் போராட்டங்களால் அவர்களுக்கு ஏற்படும் இடர்களைத் தீர்க்க முடியாமல் தட்டிக் கழித்துக்கொண்டு போவது போன்ற உணர்வுதான் ஏற்பட்டுள்ளதென்று கூறலாம்.

''இந்த வேலை நிறுத்தம் எடுத்துக் காட்டியுள்ள மக்களின் மனக் குமுறலை எதிர்கொள்ள அரசாங்கம் தயாராக இருக்கவில்லை'' என்று பிரதமர் பெனாசிரின் ஆளும் அரசியல் கட்சியான பாகிஸ்தான் மக்கள் கட்சியின் தலைவர் ஒருவர் கருத்துத் தெரிவித்துள்ளார். உலக வங்கியின் கணிப்பைப் பொறுத்தவரை பூட்டோ பெரும் அளவிலான பொருளாதாரத் துறைகளில் சாதனை செய்துள்ளார். ஆனாலும் நாட்டிற்குள் நிலவும் பின்னடைவுகளையும், அரசியற் கொந்தளிப்பையும் அடக்க அவர் பெரும் பாடுபடவேண்டியவராக உள்ளார். இந்த இரண்டு விடயங்களுக்கும் இடையில் சமன்பாட்டை உண்டாக்க முடியாமல் இருப்பதுதான் பூட்டோவின் அரசாங்கம் எதிர் நோக்கும் பெரும் சவாலாகும்.

நடந்து முடிந்த அந்த வேலை நிறுத்தம் உள்நாட்டில் நிலவும்

பொருளாதார நெருக்கடிகளால் மக்கள் மனங்களில் ஏற்பட்டுள்ள மனக்கசப்பை வெளிப்படுத்துவதிலும் பார்க்க உண்மையில் நவாப் செரீபைச் சார்ந்து கொண்டுள்ள மக்கள் ஆதரவை வெளிப்படுத்துவதாகவே அமைந்தது. பூட்டோ ஆட்சிக்கு வந்த பின்பு வரவு செலவுத் திட்டங்களில் சமன்பாடு ஏற்படுத்தி நாட்டில் சிக்கன வாழ்வு முறையை உண்டாக்கிப் பொது மக்களுக்குப் பயன்படும் பல சேவைத் துறைகளைத் தேசிய மயப்படுத்தியும் விட்டார். ஆனால் உள்நாட்டுப் பொருளாதாரத்தை விரைந்து வளர்த்து விரிவடைய வைக்கும் எதனையும் அவர் அதிகமாக நிகழ்ந்த அரசியல் பிரச்சனைகளின் போது முடக்குண்ட உள்நாட்டுப் பொருளாதாரம் இன்னமும் தொடர்ந்து மந்த நிலையில் தான் உள்ளது.

பணவீக்கம் 11.7 வீதமாகக் கடந்த ஒகஸ்ற் மாதத்தில் நிலவியதாக அரசாங்கம் கூறினாலும் பிரயோகப் பொருளியல் நிலையத்தின் தலைவரான பொருளாதார அறிஞர் ஹாபீஸ் பாசா என்பவர் ''பணவீக்கம் 20 வீதம் மேலே உள்ளது'' என்று கூறுகிறார். ''பொருளாதாரத்தை வளர்க்கும் எவ்வித நடவடிக்கைகளையும் அரசாங்கம் மேற்கொள்ளாது இருப்பதனால் மக்கள் மனங்களில் பெரும் வெறுப்பு நிலவுகிறது'' என்றும் அவர் கூறினார். கராச்சியில் முக்கிய உணவுப் பண்டங்களின் விலைகள் இரு மடங்காக அதிகரித்து விட்டன. சிந்து மாகாணத்தில் ஏற்பட்ட வெள்ளத்தால் பருத்திப் பகுதியில் 10 வீதத்துக்கு மேலே அழிந்து விட்டது.

நவாப் செரீப்பின் மீது சார்புள்ள பெருந் தொழில் அதிபர்களுக்கு வருமான வரித் துறையினர் தொந்தரவு தந்ததும் பூட்டோவிற்கு எதிராகப் பிரதிபலித்து உள்ளது. ரூபா 1.7 மில்லியன் அளவுக்கான வரி வசூலிப்புகளுக்கு எதிராகச் செரீப்பின் பல்தொழில் சார் பெரும் நிறுவனமான இத்தியாக்கிற்கு எதிராக வழக்குத் தொடரப்படும் என்று அரசாங்கம் அறிவித்துள்ளது. அரசுடைமையான வங்கிகள் இத்தியாக்கிற்கும், பாகிஸ்தான் முஸ்லிம் லீக்கைச் சேர்ந்த வேறு பல தொழில் நிறுவனங்களுக்கும் கடன் வழங்குவதை நிறுத்தி விட்டன.

பாகிஸ்தான் இராணுவத் தளபதி வாகித்

நவாப் செரீப் பிரதமராக இருந்த பொழுது தனது செல்வாக்கைப் பிரயோகித்துச் சட்டத்திற்கு மாறாக அரசு காணிகளைப் பங்கிட்டுக் கொடுத்தார் என்ற குற்றச் சாட்டுக்களின் பேரில் தொடரப்பட்ட வழக்குகள் நீதிமன்ற விசாரணைகளில் உள்ளன. ''நாங்கள் இறுதிவரை தள்ளப்பட்டு உள்ளோம். இனி நாங்கள் இந்த அரசாங்கத்தை அப்புறப்படுத்தி நாட்டைச் சுத்திகரிக்க எங்களால் இயன்ற அனைத்தையும் மேற்கொள்வோம்'' என்று செரீப் அதற்குப் பதிலாகச் சூள் உரைத்துள்ளார்.

உண்மையில் 'தவாசிங்ரன் போஸ்ட்' என்ற பத்திரிகை வெளியிட்டுள்ள செய்தியால், தமக்கு ஏற்பட்டுள்ள களங்கத்தை அகற்றவே செரீப் அவசரப்பட்டு இந்த வேலை நிறுத்தத்திற்கு அழைப்பு விட்டார் போல் தெரிகிறது. அந்தச் சேதியில் அவர் பிரதமராக இருந்த பொழுது, இருந்த இராணுவத் தளபதி ஜெனரல் அஸ்லாம் பேக், மேற்கு நாடுகளுக்கு ஹிரோயின் போதைப் பொருள் கடத்தவென அமைத்த இராணுவ இரகசியப் பிரிவினை நிறுத்தி அகற்றினார் என்று கூறப்பட்டு உள்ளது. அந்தச் செய்தி வெளிவந்த பின்பு தமக்கு ஏற்பட்ட அவமதிப்பை அகற்ற செரீப் இராணுவத்தைத் தூண்டி விட்டுப்பெனாசிர் பூட்டோவின் ஆட்சியைக் கவிழ்க்க மிகவும் பாடுபடுகிறார் என்று கூறி, செரீப் அந்தச் செய்தித் தாளுக்கு எதிராக 100 மில்லியன் அமெரிக்க டொலர் கோரி மான நட்ட வழக்குத் தொடுத்துள்ளார். அந்தப் பத்திரிகையோ தனது செய்தி சரியானது என்று கூறுகிறது.

இராணுவம் கடும் நடவடிக்கையில் இறங்க வைப்பதில் ஒரு வலதுசாரி அரசியல் வாதிகள் குழுவும், பதிவு ஓய்வு பெற்ற இராணுவ ஜெனரல்களும் கூட முயன்று கொண்டு உள்ளனர். அவர்கள் செரீப்புக்கும் பூட்டோவுக்கும் எதிரானவர்கள். அதில் முக்கிய பங்கு ஆற்றுபவர், செரீப்பின் பாகிஸ்தான்

தமிழில்:

— நிரு. நா. இருளராசா —

முஸ்லிம் கட்சியைச் சேர்ந்தவரும் செரீப்பிற்கு எதிராளியான வருமான பீர்பகாறா என்பவராவார். அவரும் அவருடைய ஆதரவாளர்களும், இராணுவம், அரசாங்கத்தைப் பொறுப்பெடுத்து மூன்று ஆண்டு காலத்திற்கு இராணுவக் கட்டுப்பாட்டிற்குள்ளான ஆட்சி ஒன்று அமைய வைப்பதைத் துண்டிக் கொண்டு உள்ளனர். அதன் மூலம் பூட்டோ, செரீப் இருவரினதும் அரசியல் வாழ்வை ஒரம் கட்டுவது அவர்களுடைய நோக்கமாகும்.

''பாகிஸ்தான் மக்கள் கட்சியினதும், பாகிஸ்தான் முஸ்லிம் லீக்கினதும் கொள்கைகளில் பெரும் மாற்றம் ஏற்பட்டால் அன்றி, இராணுவம் நாட்டைக் காக்க நடவடிக்கையில் இறங்குவது தடுக்க முடியாததாகும்'' என்று முன்னாள் மத்திய அமைச்

சர்களில் ஒருவரான சாகிட் சரபராசினின் சார்புக் குழுவைச் சேர்ந்த ஒருவர் கூறினார்.

இதற்கிடையில் பூட்டோவின் மீது நம்பிக்கை இல்லாத் தீர்மானம் ஒன்றைக் கொண்டு வந்து, அதற்கு இராணுவத்தின் அனுசரணையைப் பெற பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரான மீர்ஷ பருள்ள ஜமாயிலைச் சார்ந்த குழுவொன்று முயல்கின்றது. அதன் மூலம் அவர், பூட்டோ, செரீப் இருவரையும் ஓரங் கட்டுவதுடன் இராணுவம் ஆட்சியைக் கைப்பற்றுவதையும் தடுக்கலாம் என்று நம்புகிறார்.

இந்த வதந்திகளைப் பற்றிக் கருத்துக் கூற, இராணுவத்தளபதி ஜெனரல் வாஹீத் மறுத்து விட்டார். அவர் இது வரை அரசியல் வாதிகளைச் சந்திக்க மறுத்துள்ளதுடன், தனது படை உயரதிகாரிகளையும் அப்படியே நடக்கும்படி கட்டளை இட்டுள்ளார். இருந்தும், இராணுவம் தற்சமயம் நாடு உள்ள நிலைமையைப் பற்றி ஆழ்ந்த கவனம் செலுத்துவதாக அறிக்கைகள் கூறுகின்றன. இராணுவத்தின் உடனடிக் கவனத்திற்கு உள்ளாகி இருக்கும் விடயமாக இருப்பது பூட்டோவின் அசட்டைக்கு உள்ளாகியிருக்கும் சிந்து மற்றும் பலுகிஸ்தான் மாநிலங்களில் வளர்ந்து கொண்டு செல்லும் அரசியற் பூசலாகும்.

கராச்சி நகரில், நாளொன்றிக்கு ஐந்து தொடக்கம் பத்துப் பேர் போட்டிக் குழுக்களின் சூட்டுத் தாக்குதல்களால் கொல்லப் பட்டுக் கொண்டிருக்கிறார்கள். சென்ற ஒகஸ்ற் மாதத்தில், பலுகிஸ்தானின் தலைநகர் குவெட்டாவில், இனத்தலைவர்களின் குழுக்களுக்கு இடையில் நடந்த சண்டையில் ஒன்பது பேர் கொலலப்பட்டு, இருபது பேர் படுகாயமுற்றனர். பாகிஸ்தான் மக்கள் கட்சித் தலைமையின் கீழ் அங்கு ஆட்சி நடத்தும் முதலமைச்சர் நவாப் சுர்பிகார் மக்ஸியின் அரசாங்கம், மத்திய அரசின் கட்டளைகளை ஏற்கவோ, முக்கிய பொருளாதார விடயங்களான வெளி நாட்டு நிறுவனங்களைக் கொண்டு அங்கே எண்ணெய் வள ஆய்வு நடத்தல் போன்றவற்றில் ஒத்துழைக்கவோ மறுக்கிறது.

பிரதமர் பெனாசிர் பூட்டோவால் பலுகிஸ்தானில் மத்திய அரசின் கீழான நேரடி ஆட்சியைப் புகுத்த முடியும். ஆனால், அவர் அப்படிச் செய்தால் அங்கே வன்முறை பெருகும்.

மீண்டும் ஒரு முறை, பாகிஸ்தான் தனது அரசியல் வாதிகள் உண்டாக்கும் அரசியல் வெள்ளத்துள் மூழ்கப் போகிறது போல் தெரிகிறது.

வார் ஹஸ்ரேன் எக்னமிக்றிவியூ.
ஒக்ரோபர் 6, 1994

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

சீனத் தலைவருக்கு கடுமையான சுகயீனமா? தாய்வான் பெரிதும் வருந்துகிறது.

தாய்வானின் பிரதமர் லீ தலைமையில் உயர் அதிகாரிகள் அண்மையில் கூடி டெங் சியாவோபிங்கின் மரணத்திற்கான இரங்கற் செய்தி ஒன்றினை வரைய முற்பட்டனர். அதன் மூலம் தாய்வானின் புலனாய்வுத் துறை சென்ற மாதத்தில் தனது 90 ஆவது வயதை அடைந்த சீனக் கம்யூனிஸ்ட் தலைவர் கடுமையாகச் சுகவீனம் உற்று இருப்பதாக நம்புகின்றனர். முன்பு தாய்வான் ஏற்பாடு செய்த சேதி வரைவு ஒன்றில் சீனாவில் ஜனநாயக இயக்கத்தைக் கடுங்கரங்கொண்டு டெங் அடக்கியதை விமர்சிக்க முற்பட்டதை அந்த அதிகாரிகள் நிராகரித்து விட்டதாக அறியக் கிடைக்கிறது. ஆனால் புதிதாக வரையப்பட்டுள்ள சேதியில் தாய்வான் சீனாவின் மிதவாதிகள் டெங்கின் மரணத்தின் பின்பு அதிகாரத்தைப் பேண வேண்டும் என்று கூறப்பட்டுள்ளதாகத் தாய்வான் பிரதமர் லீயின் ஆலோசகரிடமிருந்து அறிந்து கொள்ள முடிந்ததாக நியூஸ்வீக் சஞ்சிகை வெளிப்படுத்தியுள்ளது.

பர்மா இராணியுடன் பேரம் பேசும் இராணுவ ஆட்சியாளர்கள்

— நெட்டிருப்புப்

பாருக்கு நெக்குவிடாப் பாறை பசுமரத்தின் வேருக்கு நெக்கு விடும்.

இருபதாம் நூற்றாண்டின் இறுதி ஆண்டுகளில், பல அதிசய அரசியல் மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன. தென் ஆபிரிக்காவில் கறுப்பர் ஆட்சி, பி.எல்.ஒ. இஸ்ரேல் பேச்சு, இலங்கையில் உயர் மட்டச் சந்திப்பு என்ற வரிசையில் பர்மாவில் முடிதரியாத ராணி என வர்ணிக்கப்பட்ட அவுன்சான் சூகீ யுடன் பர்மிய இராணுவம் பேச முன்வந்துள்ளதையும் குறிப்பிடலாம். இவ்வருட செப்ரெம்பர் 21 ஆந் தேதி, இப் பெண்மணியும், பர்மாவை ஆளும் இராணுவக் குழுத் தலைவர்கள் இருவரும் தொலைக்காட்சிக் கருவிகளுக்கு முன்னால் சந்தித்துள்ளனர். மாலை 7.30 மணித் தொலைக் காட்சிச் செய்திகளைப் பார்த்துக் கொண்டிருந்தவர்கள், தமது கண்களை நம்பமுடியாமல் திகைப்படைந்தனர். முன்கூட்டியே விளம்பரம் ஒன்றும் செய்யாதபடியால், அரசின் பிரச்சாரக் கருவியான தொலைக்காட்சியைப் பலரும் பார்க்கவில்லை. இதனால் இந்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த சந்திப்பைக் காணும் சந்தர்ப்பத்தைப் பலர் தவறவிட்டுள்ளனர். அடுத்த நாள் தணிக்கை செயயப்பட்ட அரச கட்டுப்பாட்டில் இயங்கும் பர்மியப் பத்திரிகைகள் பெருந் தொகையாகக் கூடுதல் விலையில் விற்கப்பட்டுள்ளன. அந்த நாட்டைப் பொறுத்தவரில் இதுவும் ஓர் அதிசயம்தான்.

ஒரு நூற்றாண்டுக்கு மேலாக பிரிட்டிஷாரின் பிடியில் இருந்த பர்மா, 1948 ஆம் ஆண்டு விடுதலை பெற்றுள்ளது. பர்மாவின் பண்டைய வரலாறு, தன்னாட்சியைக் காப்பாற்ற நடத்தப்பட்ட நெடிய தொரு போராட்டமாகும். இலங்கையைப் போல் பர்மாவுக்கும், 17 ஆம் நூற்றாண்டில் முதலில் போர்த்துக்கேயரும், பின்பு டச்சுக்காரரும் வியாபார நிமித்தம் வந்துள்ளனர். இவர்களால் மடக்கிப் பிடிக்க முடியாத பர்மாவை, பிரிட்டிஷார் 19 ஆம் நூற்றாண்டில் தொடர்ச்சியான பல யுத்தங்களின் பின் தமதாக்கிக் கொண்டுள்ளனர். 1937 ஆம் ஆண்டு வரை பர்மா, பிரிட்டிஷாரின் இந்திய சாம்ராச்சியத்தின் ஓர் அங்கமாகவே ஆளப்பட்டுள்ளது. பின்பு 1948 இல் விடுதலை ஆகும் வரை, பர்மா தனிப் பிரிவாக்கப்பட்டுப் பிரிட்டிஷ் சாம்ராச்சியத்தின் ஒரு தனி நாடாக்கப்பட்டுள்ளது. இரண்டாம் உலக யுத்தம் தொடங்கி, சில வருடங்களின் பின் 1941 ஆம் ஆண்டு ஜப்பான் பர்மாவைக் கைப்பற்றி யுத்தம் முடியும் வரை தன்வசம் வைத்திருந்துள்ளது 1945 வரை.

பர்மா ஐந்து மாகாணங்களை உள்ளடக்கிய நாடாகும். அவை: ஷான் (Shan), கச்சின் (Kachin), கரன் (Karen), கயா (Kayay), சின் (Chin) என்பனவாம். ஐந்து இனங்களைவிடக் கணிசமான தொகை சீனர்களும், இந்தியர்களும் இங்கு காணப்படுகின்றனர். பல்வேறு பர்மிய இனங்கள் கலந்த கலியாணவீர் இனமும் உண்டு. இவர்களை ஓர் இனமாக இன்று கணிக்கின்றனர். கிட்டத்தட்ட 126 சுதேசிய மொழிகள் பர்மாவில் பேசப்படுகின்றன. இவற்றுள் பல எழுத்துரு அற்றவை. பர்மியமொழி எனப்படுவதே தேசிய மொழி அந்தஸ்துப் பெற்றுள்ளது. இது பள்ளிக் கூடங்களிலும், கல்லூரிகளிலும் படிப்பிக்கப்பட்டு வருவதால், இனங்களுக்கிடையில் தொடர்புப் பாலமாக இருந்து வருகின்றது. 90 வீதமான பர்மியர்கள் புத்த மதத்தைச் சார்ந்தவர்கள். பர்மா புத்த கோயில்கள் நிறைந்த நாடு. இதனால், நிலப்பரப்பையும், சனத்தொகையையும் கணக்கிடும் அறிஞர்கள், உலகின் மிகக் கூடிய தொகையான புத்தகோயில்கள் உள்ள நாடென்று இதைக் கூறுவர். பர்மா கீழிருந்து மேல்வரை கிழக்கெல்லையில் தாய்லாந்து, லாவோஸ், சீனாவையும்; வடக்கில் சீனா, இந்தியா, வங்காளதேசம் ஆகியவற்றையும்; மேற்கில் இந்தியாவையும், வங்காள தேசத்தையும் கொண்டுள்ளது. தெற்கில் இந்து சமுத்திரத்தின் நீர் வங்

கள விரிகுடாவாகவும், அந்தமான் கடலாகவும் உருப்பெற்றுள்ளது.

பர்மாவின் மண் வளமிக்கதாக இருப்பினும்; ஜனநாயகமும், பாராளுமன்ற அரசு முறையும் அதில் வேர்விட மறுத்துள்ளன. பர்மாவின் சிறப்பு, அதன் நீர் வசதியிலும் சொகுசான மண்ணிலும் தங்கியுள்ளன. அதன் வனப்பிரதேசத்தில் மிகவும் பெறுமதியுள்ள தேக்குப் போன்ற மரங்கள் காணப்படுகின்றன. உலகின் மொத்த மரத்தேவையில் முக்காற் பங்கை பர்மா பூர்த்தி செய்கின்றது. பர்மாவில் ஜனநாயகம் தோல்வி அடைந்ததிற்கு ஆட்சி அதிகாரத்தைக் கைவிட மறுக்கும் பர்மிய இராணுவமே காரணம். 1948 ஆம் ஆண்டு விடுதலைபெற்றபின் 1958 வரைப் பாராளுமன்ற அரசு முறை பர்மாவில் இருந்துள்ளது. செப்ரெம்பர் 1958 இல் பர்மிய இராணுவத் தளபதி நேவின் (Newin) ஆட்சியைக் கைப்பற்றியுள்ளார். பெப்ரவரி 1960 வரை, இவர் சர்வாதிகாரியாக இருந்துவிட்டு மீண்டும் பாராளுமன்றத்திடம் அதிகாரத்தை ஒப்படைத்தார். ஆனால், இரண்டு வருடங்கள் சென்றவுடன் மீண்டும் ஆட்சியை நேவின் கைப்பற்றியுள்ளார். 1988 ஆம் ஆண்டு வரை இவரே பர்மாவின் முழுச் சர்வாதிகாரியாகத் திகழ்ந்துள்ளார். 88 இல் இளைப்பாறிய பின்பும் நேவின் திரைமறைவிலிருந்து சகல நடவடிக்கைகளாலும் வழி நடத்தி வருகின்றார். இன்று ஆட்சி பீடத்தில் இருக்கும் அதிகாரிகள் யாவரும் இவருடைய கைப் பொம்மைகளே.

1974 ஆம் ஆண்டு யூலை மாதம் 19 ஆந் தேதி, பெரும் சுதந்திரப் போராட்ட வீரனும் செழிப்பான, பலமான பிரிவினைவாதங்கள் அற்ற பர்மாவைத் தோற்றுவிக்கக் கூடிய வல்லமையுள்ள ஜெனரல் அவுங் சான் (Aung san) அவருடைய தோழர்களுடன் கொலை செய்யப்பட்டுள்ளார். இக்கொலை இன்று வரை தீர்க்கப்படாத மர்மமாகவே இருக்கின்றது. அவுங் சானின் மறைவு நேவினின் உயர்வுக்கு வழி செய்துள்ளது எனலாம். 1988 இல் நேவின் பதவி இறங்குவதற்கு உடன் காரணமாக நாட்டில் பரவலாக நடைபெற்ற ஜனநாயகச் சார்புக் கிளர்ச்சிகள் அமைகின்றன. இவற்றைத் தணிக்கும் நோக்கில், இவர் தாமாகவே இளைப்பாறியுள்ளார். நேவினின் வாரிசுகளாக ஜெனரல் தான்சுவேயும், அவரின் புலனாய்வுத்துறை அதிகாரியான லெப்ரினன்ற் ஜெனரல் கின் நியுன்ற் என்பவரும் பர்மாவை ஆட்சி செய்யும் பர்மிய புரட்சிகர ஆட்சிக் குழுவில் அங்கம் வகிக்கின்றனர். இவர்கள் இருவரும் பர்மாவின் மிகப்பலம் பொருந்திய மனிதர்களாக இருக்கின்றனர்.

தமிழில்:

கலாநிதி க. சோமஸ்கந்தன்

பர்மாவின் தியாகிகள் வரிசையில் வைக்கப்பட்டிருக்கும் ஜெனரல் அவுங் சானின் மகள்தான் சூகி. இவர் இங்கிலாந்தில் கல்விகற்று, ஓர் ஆங்கிலப் பேராசிரியர் மைக்கேல் அரிஸ் (Michaeal Aris) என்பவரைத் திருமணம் செய்துள்ளார். இவர் தீவிர புத்தமதக் கொள்கைகளைக் கடைப்பிடிப்பவர். இராணுவத்தைப் பதவி விலகும்படியும், தேர்தல்களை நடத்தும்படியும் கோரி இவர் 1988 ஆம் ஆண்டு நாடளாவிய பிரச்சாரம் மேற்கொண்டுள்ளார். நேவின் பதவி விலகியதோடு சூகியை வீட்டுக் காவலில் வைத்துள்ளார். யூலை 20, 1989 தொடக்கம் இன்றுவரை இவர் இவ்வாறு மறியல் செய்யப்பட்டுள்ளார். ஆனால், 1990 ஆம் ஆண்டு மே மாதம் இராணுவ அதிகாரிகள் ஒரு தேர்தலை அனுமதித்துள்ளனர். இதில், சூகி நிறுவிய தேசிய ஜனநாயகக் கட்சி பெரும் பான்மை வெற்றி அடைந்துள்ளது. எனினும் இக் கட்சி பதவி ஏற்பதை இராணுவம் தடைசெய்ததோடு பல தெரிவு செய்யப்பட்ட அங்கத்தவர்களைக் கைது செய்தும் இன்னுமொரு சிலரை நாடு கடத்தியும் உள்ளது. 1991 ஆம் ஆண்டு தடுப்புக்காவலில் உள்ள சூகிக்கு நோபல் அமைதிப் பரிசு கிடைத்துள்ளது. ஆனால் அதைப் பெறுவதற்குச் செல்ல அவர் விடுவிக்கப்படவில்லை.

1988 ஆம் ஆண்டு நடைபெற்ற கலவரங்களில், இராணுவத்தின் எதிர் நடவடிக்கைகளால் 3,000 இத்திற்கு மேற்பட்ட பொதுமக்கள் கொல்லப்பட்டனர். எனினும் நாட்டின் சுபீட்சத்தைக் கருத்திற் கொண்டு சூகி அம்மையார், இராணுவமும் மக்கள் பிரதிநிதிகளும் ஒன்று கூடி கருத்துப் பரிமாற வேண்டிய அவசியத்தை வலியுறுத்தி வந்துள்ளார். இவ்வாறான நடவடிக்கை தமக்கு இழுக்காவதோடு மக்கள் பிரதிநிதிகளும் தேவையற்ற அங்கீகாரம் வழங்கிவிடுமென்று இராணுவம் கருதியுள்ளது. கொந்தளிப்பைத் தணிக்கும் முகமாகத் தேர்தலை அனுமதித்த இராணுவம், வெற்றி பெற்ற மக்கள் பிரதிநிதிகளுக்கு ஆட்சி உரிமை அளிக்க மறுத்துள்ளது. 1990 ஆம் ஆண்டு தொடக்கம் இராணுவம் கடைப்பிடிக்கும் அரசியல் திட்டத்தைப் பின்வருமாறு சுருக்கிக் கூறலாம். முதலாவதாகத் தேசிய ஜனநாயகக் கட்சியை அழித்தல். இதில் இராணுவம் பெரும் வெற்றி அடைந்துள்ளது. இக் கட்சியைச் சேர்ந்தவர்கள் இன்று இராணுவ மிரட்டல்களால் தமது நடவடிக்கைகளைக் கைவிட்டுள்ளனர். இந்தியா போன்ற பிறநாடுகளில் இருந்து கொண்டு பிரச்சாரம் செய்தவர்கள், அந்த நாடுகளின் வற்புறுத்தலால் செயலிழந்துள்ளனர். இவ்வளவு காலமும் பர்மாவுக்கு எதிரான கொள்கையை நடைமுறைப்படுத்திய இந்தியா, இன்று பர்மிய வர்த்தகத்தை விரும்பி இராணுவ ஆதரவு நாடாக மாறியுள்ளது. அத்துடன் இந்திய அரசுக்கு எதிரானவர்கள் பர்மாவில் இருந்து கொண்டு செயற்படுவதையும் தடுக்க இந்த மாற்றம் உதவும். இரண்டாவதாக தன்னாட்சி கோரும் பர்மிய பிரிவினைவாதிகளுடன் உடன்பாட்டிற்கு வருதல். இதிலும் பர்மிய இராணுவம் இரட்டை வெற்றி அடைந்துள்ளது. பிரிவினைவாதிகளுடன் சேர்ந்து போராடிவந்த ஜனநாயகவாதிகள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

மூன்றவதாக நாட்டிற்கு ஓர் அரசியல் அமைப்புச் சட்டத்தை உண்டாக்கி, அதன் காரணமாக பர்மிய வாழ்வில் தமக்கொரு நிலையான இடத்தைப்பிடித்தல். இதில் அவர்கள் தோல்வி அடைந்துள்ளனர். மக்கள் ஆதரவு பூரணமாக இல்லாததே காரணம். நான்காவது வெளிநாட்டு முதலீடுகளையும், நிதி உதவிகளையும் பர்மாவுக்குக் கிடைக்கச் செய்தல். ஆசிய நாடுகள் இன்று பர்மாவுடன் வர்த்தகம் செய்வதையும் பர்மாவில் முதலீடு செய்வதையும் நடைமுறைப்படுத்துகின்றன. தாய்லாந்தையும் சிங்கப்பூரையும் சுட்டிக்காட்டலாம். ஆனால் நிதி உதவிகள் மாத்திரம் கிடைக்கக் காணோம். சூகி மறியலில் இருக்கும் வரை உலகவங்கி போன்ற சர்வதேச நிதி நிறுவனங்கள் கடனுதவி செய்யமாட்டா என்பது வெளிப்படை. அமெரிக்கா உட்பட சகல உதவி புரியும் ஐரோப்பிய நாடுகள் யாவும் சூகியின் விடுதலையை முன்நிபந்தனையாக வைத்துள்ளனர். இன்று பர்மாவின் முக்கிய வர்த்தகப் பங்காளி சீனா தான். ஜப்பானுக்கு எதிராகச் சீனாவுக்கு உதவிகளை அனுப்புவதற்கு பிரிட்டிஷார் 1938 இல் பர்மாவிலிருந்து சீனாவுக்குப் போகும் நெடுஞ்சாலையை அமைத்துள்ளனர். இன்று இப்பாதை இரு நாட்டுத்தொடர்பைப் பலப்படுத்தியுள்ளது. ஆனால் சீனா செய்யும் உதவியெல்லாம் பர்மாவின் கடலோரத்தீவுகளைத் தமது பாவிப்புக்கு எடுப்பதில் குறியாக உள்ளது. இதைச்சமன் செய்வதற்கு மேற்குலகத் தொடர்பும் வர்த்தகமும் நிதியும் இராணுவ அரசுக்குத் தேவைப்படுகின்றது. காலப்போக்கில் சூகி ஒரு காணமற்போன அத்தியாயமாகிவிடுவார் என்ற இராணுவத்தினரின் கணக்கு பிழைத்துவிட்டது. உலகின் மனச்சாட்சியைத் தட்டிக் கேட்கும் அளவுக்கு அவர் வளர்ச்சி கண்டுள்ளார். மறதிக்குப் பேர்போன உலக நாடுகள், அவரை மறவாதிருப்பதும் அவரை விடுதலை செய்யும்படி கொடுக்கும் பல்வேறு அழுத்தங்களும் இராணுவ அரசுக்குத் தலையிடியாக மாறியுள்ளது. ஒருவிதத்தில் இன்று மறியலில் இருப்பது இராணுவம்தான். இந்தப்பிரச்சனையைத் தீர்க்காமல் நகர முடியாது இருப்பதை வேறு எவ்வாறு கூற முடியும்? இன்று நாடொன்றும் தனித்து தொடர்பற்று இயங்க முடியாத நிலை. இராணுவம் உலக அங்கீகாரத்தை விரும்புவது இயற்கை, நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்த இராணுவம் விரும்புகின்றது. இதற்கெல்லாம் தடையாக இருப்பது ஐந்து வருட காலமாக அவர்கள் மறியல் வைத்த பெண்மணிதான். சமரசம் பேசுவதற்கு இந்தக் கைதியின் வீட்டுக்கு தூதுவரை அனுப்பவேண்டிய கட்டாயம் இராணுவத்திற்கு ஏற்பட்டுள்ளது. அமெரிக்கரான அரிசோனா மாகாண காங்கிரஸ் பிரதிநிதி நிக்காட்சன் சென்ற தூது பலனளிக்கவில்லை. இங்லாந்தில் வதியும் பர்மியப் புத்தகுரு இராணுவத்தின் கோரிக்கைக்குச் செவிமடுத்து தூது சென்றுள்ளார், றெவாட்டா தம்மா என்ற இந்த மதகுருவின் முயற்சிகள் பலன்தந்துள்ளன. இதன் காரணமாகப் பர்மிய இராணுவ அரசின் அதிசக்திவாய்ந்த ஜெனரல்களான தான் சுவேயும், கின் நியுன்றனும் நிராயுதபாணிகளாக முழந்து நின்று தொலைக் காட்சிக் கருவிகளின்முன் சூகியை வரவேற்ற காட்சியை உலகம் கண்டுள்ளது.

ரைம், ஒக்ரோபர் 3, 1994

வார்ஸ்ரேன் எக்கனமிக் றிவியூ, ஒக்ரோபர் 6, 1994

திடுக்கிடச் செய்யும் சாகசக் குழு

டோக்கியோ சாகசக் குழுவினர் தங்கள் விளையாட்டுக்களை மற்றோர் பார்த்து வியக்கக் காட்டும்போது, எந்தக் கணத்தில் என்ன நடக்குமோ என்று கூறமுடியாத நிலைக இருக்கும்.

அக்குழுவின் தலைவர் நாம்பு டொறாடோ உயிருடன் இரண்டொரு நட்டுவக்காலிகளை விழுங்கிக் காட்டுவார். அடுத்தவரான குஷியோ ''மண்ணெய் மனிதன்'' என்ஜின் ஒயிலைக் குடித்துக்காட்டி எண்ணெய் வார்த்து எரியூட்டிய தீப்பந்தங்களைத் தனது உடல் துவாரங்களில் புகுத்தி எரியச் செய்வார்.

மூன்றாமவர் டண்ணா கெரயாணாகி பிளாஸ்டிக் போத்தல்கள் நொருங்கும்வரை அவற்றில் உள்ள காற்றை உறுஞ்சிக் காட்டுவார், அத்துடன் அவர்கள் பாடகர்களாகவும் பார்வையாளர்களைப் பரவசமூட்டுகின்றனர். அந்த நால்வர்குழு இரவு உணவு வ்டுதிகளில் வாடிக்கையாளர்களுக்கு வேடிக்கை காட்டிப் பிழைத்தல் தொடங்கி, 1990 இல் நிலத்துக்கடியில் விரையும் புகையிரத நிலையங்களில் காட்சிகள் நடத்தத் தொடங்கிய பின்பு மிகவும் பிரபல்யம் அடைந்து, இப்போது ஜப்பானுக்கு அப்பால் வெளிநாடுகளிலும் காட்சிகள் நடத்தத் தொடங்கி விட்டனர். இந்த ஆண்டு அவர்கள் அவுஸ்ரேலிய இரசிகர்களுக்குச் சாகச விருந்து கொடுக்கச் செல்ல உள்ளனர். அவுஸ்ரேலியாவின் நட்டுவக்காலிகளுக்கு இலி ஆபத்துத்தான்!

ஏசியாவீக்

அப்பாவே தெய்வம்- ஒரு புதிய மதப்பிரிவு

"அன்பும் அரவணைப்பும் - உலக ஒற்றுமைக்கு வழி."

முகம்மது அசாரி (Mohammad Ashari) என்ற 57 வயது மலேசியர் நிறுவிய புதிய ரக இஸ்லாமிய தீவிரவாதம், காட்டுத் தீ போல் உலகெல்லாம் பரவி வருகின்றது. ஒரு இலட்சத்திற்கு மேற்பட்ட இதன் ஆதரவாளர்கள் மலேசியாவில் மாத்திரம் காணப்படுகின்றனர். சீனாவிலும், மத்திய ஆசியாவிலும் வாழும் முஸ்லிம்கள் இவரின் போதனைகளில் இலயித்துப் போயிருப்பதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. வெள்ளையர்கள் அல்லாதோர், கறுப்பர்கள் மற்றும் ஏதோ சமூகக் குறைபாடுகளால் அல்லற்படும் அமெரிக்க வாசிகளும் இந்த இயக்கம் வெளியிடும் கைநூல்களையும், சஞ்சிகைகளையும் ஊன்றிப் படிப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இஸ்லாமின் மதக் கோட்பாடுகளுக்கு அமைவாகப் புதிய அமைத்தங்கள் பரிமாணங்களுடன் செயற்படும் இந்தப் பிரிவைப் பற்றி நாம் அறிந்த மட்டில் சற்று ஆராய்வோம்.

நாலு மனைவிகளின் கணவரான அசாரி ஒரு முன்னாள் மலேசிய நிர்வாக அதிகாரி. இவர் அல் அர்கம் (Al Arqam) என்ற பெயருடன் இந்த இஸ்லாமிய இயக்கத்தை 1968 ஆம் ஆண்டு நிறுவி உள்ளார். பல்லாயிரம் ஆதரவாளர்கள் இருந்தாலும் முழு நேர ஊழியர்கள் 10,000 ஆண், பெண் இருபாலாரும் இருப்பர் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. இவருடைய கொள்கைகளில் நம்பிக்கையுடைய 7,000 இத்திற்கு மேற்பட்ட நிர்வாக சேவை அங்கத்தவர்கள் இன்று மலேசியாவில் காணப்படுகின்றனர். இஸ்லாமியர்கள் வர்த்தகத்தில் ஈடுபட வேண்டும். அதில் பெரும் வெற்றி பெற வேண்டும் என்பதே இவருடைய சித்தாந்தத்தின் அடிப்படை. இது வேறு அடிப்படை வாதங்களிலிருந்து வேறு பட்டதாகும். இதுவே இன்றைய உலகத்தாரால் அசாரி அவர்கள் பெரும்பாலும் ஏற்றுக் கொள்ளப்படுவதற்கு முக்கியகாரணமாகும். 417 இற்கும் மேற்பட்ட நிறுவனங்களையும், தொழில்களையும் அல் அர்கம் மலேசியாவில் நடத்துகின்றது. அவர்களுடைய முதலீடுகளின் முழுத்தொகை 115 மில்லியன் டொலர் என்றும் அறிய வருகின்றோம். பல்பொருள் அங்காடிகள், பேருந்து சேவைகள், சுற்றுலா ஒழுங்கு செய்தல், கணனி மற்றும் இலத்திரவிரல் சாதனங்கள் விற்பனையும், திருத்த வேலையும் போன்ற பலதரப்பட்ட முயற்சிகளில் அல் அர்கம் ஈடுபடுகின்றது.

அல் அர்கம் நடத்தும் தொழிற் சாலைகள் நடுத்தர வகுப்பினருக்குத் தேவையான சமையலறைச் சாதனங்கள் முதற் கொண்டு முகம் திருத்தும் பொருள்கள் வரை

அல் அர்கம் நடத்தும் வர்த்தக நிறுவனத்தின் முகப்பும், முடி உடையணிந்த ஒரு பெண்ணும்.

தயாரிக்கின்றன. அவர்கள் சிறுவர்களுக்காக பள்ளிக்கூடங்களையும், ஆரோக்கிய வாழ்வுக்கு வழி காட்டும் சேவை நிலையங்களையும் மிகவும் குறைந்த கட்டணத்திற்கு நடத்துகின்றார்கள். ஆகையால் இவர்களுக்கு ஆதரவு நல்காதோரும் இவர்களை நாட வாய்ப்பு ஏற்படுகின்றது. இவர்கள் பிற நாடுகளிலும், பண முதலீடு செய்துள்ளார்கள் என்றும் செய்திகள் தெரிவிக்கின்றன. வர்த்தகத்தில் முன்

னேற்றம் என்ற கருத்தை மையமாகக் கொண்ட இந்த இயக்கம், மலேசியாவின் இஸ்லாமிய வர்த்தகப் பெருமக்கள் மத்தியில் பெருவரவேற்புப் பெற்றதில் வியப்பில்லை. மலேசியாவில் நெடுங்காலமாக வர்த்தகம் சீனர்கள், இந்தியர்கள் ஆகியோரின் கையில் தங்கியுள்ளது. ஆகவே இந்தப் போதனை மலேசியர்களைத் தட்டியெழுப்பும் ஒரு யுக்தியாகவும் நாம் கொள்ளலாம்.

இந்த இயக்கத்தில் தீவிர ஈடுபாடும், நம்பிக்கையும் உள்ளவர்கள் நிறுவனரும், குருவுமான முகமது அசாரியை மலேசியாவின் தேசிய மொழியில் 'அபுயா' என்று அன்பொழுக அழைக்கின்றனர். அபுயா என்றால் அப்பா அல்லது தந்தை என்று பொருள் படும். இவருடைய போதனையைப் பின்பற்றி பலர் குழு வாழ்க்கையை மேற்கொள்கின்றனர். அதாவது பெரிய நிலங்களில் பல விடுதிகளை அமைத்து அங்கு கூட்டாக வாழ்கின்றனர். இதற்குள் பள்ளிக் கூடங்களும், வேறு தேவைப்பட்ட வசதிகளும் செய்யப்பட்டுள்ளன. தலைநகர் கோலாலம்பூரில் ஒரு புறத்தே இப்படியானதொரு நிலையம் இருக்கின்றது. அங்கு 3,00 விசுவாசிகள் வாழ்கின்றனர். அமைதியாகவும், கட்டுக்கோப்பாகவும் சீவிக்கின்றார்கள். பார்வையிடச் செல்வோரையும், விருந்தினரையும் வரவேற்று உபசரிக்கிறார்கள். இதன் தீவிர அங்கத்தவர்கள் எல்லோரும் வித்தியாசமான ஆடை அலங்காரம் செய்கின்றனர். இவர்களுடைய ஆடைகளின் நிறம் பச்சை. ஆண்கள் தலைப்பாகையும், கைநீள அங்கியும் அணிகின்றார்கள். கண்ணுக்கு இலேசாக மையிட்டுக் கொள்கிறார்கள். ஏனென்று புரியவில்லை. பெண்கள் உடல் முழுவதையும் முடி நிலம் வரை நீண்ட அங்கியைப் போட்டிருக்கின்றனர். கண்கள் மாத்திரம் வெளியில் தெரிகின்றன. இவர்கள் யாவரும் தெருக்களில் போகும் போது வித்தியாசமாகக் காணப்படுகிறார்கள்.

அல் அர்கம் நடத்தும் தொழிற்சாலை மற்றும் வர்த்தக நிறுவனங்களின் முகப்பில் '' அன்பும் அரவணைப்பும் – உலக ஒற்றுமைக்கு வழி'' என்ற வாசகங்கள் ஆங்கிலத்திலும், மலே மொழிகளிலும் காணப்படுகின்றன. அத்துடன் அசாரியின் பெரிய படமும் இவ்விடங்களில் தொங்க விடப் பட்டிருக்கும். இவர்கள் பலாத்காரத்தை வெறுக்கிறார்கள். அசாரியின் செற்படி பண்பாகவும், நாட்டின் சட்டத்திற்குப் பணிந்தும் நடக்கிறார்கள். ஆனால் ஆணைக்கும் அடி சறுக்கும் என்பது போல் அசாரி தனது தெய்வீகத்தை தன் உரைகளில் வெளியிட்டு வருகின்றார். ''இறைவனின் சக்தி தனக்கு உண்டு என்றும், தான் சுவர்க்கத்தில் நபிகள் நாயகம் முகம்மதுவை சந்தித்துப் பேசியுள்ளதாகவும்'' அசாரி தெரிவிக்கின்றார். பெரும்பாலான பக்தர்கள் இதை நம்புகிறார்கள். ஆனால் மலேசிய அரசும், இவருக்கு எதிரானவர்களும் இதை நம்பு மறுப்பதோடு அசாரிக் கெதிராகப் பல நடவடிக்கைகளையும் எடுக்கத் தொடங்கியுள்ளனர்.

கடந்த 13 வருடங்களாகப் பிரதமர் மகதீர் முகமமது மலேசியாவின் பிரதமராகப் பதவி வகிக்கின்றார். அடுத்த தேர்தல்கள் 1995 –ம் ஆண்டு வரவிருக்கின்றன. மலேசியாவின் அமோக பொருளாதாரமுன்னேற்றம் மகதீரின் வெற்றிக்குக்காரணம எனலாம். அல் அர்கம் இயக்கம் வளர்ச்சி அடைவதால் நாட்டில் கொந்தளிப்பு ஏற்படும்; வெளிநாட்டு முதலீட்டாளர்கள் முதலீடு செய்யத் தயங்குவார்கள் என்றெல்லாம் மகதீர் கருதுகிறார். அத்துடன் மலேசியா ஒரு பல்லின நாடு. அல் அர்கம் இனங்களுக்கிடையிலான ஒற்றுமையை அது கெடுத்துவிடும் என்றும் அவர் அபிப்பிராயப் படுகிறார். இதன் காரணமாக அரசசார்புப் பத்திரிகைகள் அசாரி மீது பல அவதூறுகளைப் பரப்பி வருகின்றன. அசாரிக்கு நான்கு மனைவிகளும், 40 பிள்ளைகளும் உள்ளனர் இதை சந்தர்ப்பம் கிடைத்த போதெல்லாம் அவர்கள் கிண்டல் பண்ணத் தவறுவதில்லை; ஆனால் ஒன்றுமட்டும் நிச்சயம், அல் அர்கம் ஒரு போதும் பலாத்காரத்தைப் போதித்ததுமில்லை. பலாத்காரத்தில் யாதொரு சந்தர்ப்பத்திலும் ஈடுபட்டதுமில்லை.

இந்தியாவில் தடாச்சட்டம் போன்ற உள்நாட்டுப் பாதுகாப்புச் சட்டம் மலேசியாவிலும் உண்டு. இதன் கீழ் ஒருவன் விசாரணையின்றி இரண்டு வருடம் வரை சிறையில் அடைத்து வைக்கலாம். அல் அர்கம் இயக்கத்தை நசுக்குவதற்கு மகதீர் அரசு மலேசியாவின் உள்நாட்டுப் பாதுகாப்புச் சட்டத்தைப் பயன்படுத்துகின்றது. அசாரியும், இவருடைய ஒரு மனைவியும், அவர்களுடைய 6 மாதக் குழந்தையும் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். அவருடைய உதவியாளர்களும் பெருந் தொகையாகக் கைது செய்யப்பட்டுள்ளனர். விடுதலைக்கு மனுச் செய்த அவருடைய வழக்கறிஞரும் இப்போது சிறையில் இருக்கிறார். அசாரியால் இஸ்லாமுக்கு ஆபத்து என்று மகதீர் சுட்டிக்காட்டியதை தாய்லாந்து, இந்தோனேசியா, சிங்கப்பூர், புரூனி போன்ற அரசுகள் ஏற்றுக் கொண்டுள்ளன. இதன் காரணமாக அவர்களும் அல் அர்கம் இயக்கத்திற்கெதிராகப் பல தடைகளையும மறுப்புக்களையும் தெரிவித்துள்ளனர். அல் அர்கம் அடுத்த தேர்தலில் அரசியலில் குதிக்கலாம் என்ற சந்தேகம் பிரதமர் மகதீர் முகம்மதுவுக்கு உண்டு என்று மேற்குலகப் பத்திரிகைகள் தெரிவிக்கின்றன. மீண்டும் போட்டியிட விருப்பமுடையவரானபடியால் காலதாமதமின்றி தற்போதே அசாரியைக் கிள்ளி எறிய அவர் ஆரம்பித்து விட்டார் என்றும் இதே பத்திரிகைகள் தெரிவிக்கின்றன.

ஆதாரம்: நியூஸ்வீக் 19.9.94

★

தப்பிப் பிழைத்தவரின் தனித்துவப் பாடல்கள்

சினா என்ற கப்பலில் மாபெரும் மீகாமன் மாசேதுங். அவரின் அந்தரங்க வாழ்வு பற்றி அவருடைய வைத்தியர் எழுதிய விளக்கமான நூல் வெளியாகிறது.

எழுதியவர்: பார்பரா றுடோல்வ்

"பேரிடர் வாய் வழியாகவே வெளிவருகின்றது" என்று அந்தப் பெரிய மனிதர் ஒரு கட்டத்தில் அவரை எச்சரித்தார். அவ்வாறு எச்சரிக்கப்பட்டவர் வேறு யாரும் அல்லர். மாவோவின் நம்பிக்கைக்குப் பாத்திரமாயும், 22 ஆண்டுகள் தொடர்ந்து அவரின் கூட்டாளியாயாகவும் விளங்கிய டாக்டர் லிஷிசுய்தாம். அந்தக் கால இடைவெளியில் மாவோவின் இராசரிக அரசவையில் அவருக்கு விசுவாசமாக அந்தரங்கத் தூய்மையோடு இணைந்திருந்த பலரும் அவரால் கைகழுவப்பட்டோ, கொலைக்கு உள்ளாகியோ மறைந்து போனார்கள். ஆனால் டாக்டர் லி, மாவோவின் ஆலோசகராய் விளங்கி வந்ததோடு உயிர் தப்பிப் பிழைத்தும் அதிசயந்தான். "எனக்கு மாவோவின் அரக்குத்தனம் தெரிந்து தான் இருந்தது. நான் அதையெல்லாம் அமைதியாக அவதானித்து என்னைக் காப்பாற்றிக் கொண்டேன்."

மனச்சாட்சிக்குத் துரோகம் இழைக்காமல் லி, தலைவர் மாவோவின் அந்தரங்க வாழ்க்கை என்ற தலைப்பில் 638 பக்கங்களில் தமது நினைவுகளை நூலாக எழுதியிருக்கிறார். அடுத்த வாரம் அமெரிக்காவில் "றான்டம்" பிரசுராலயம் வெளியிடவிருக்கும் இந்த நூல் மாவோவின் அரசியல் வாழ்வு பற்றியோ, தலைமைத்துவம் பற்றியோ விபரங்கள் எல்லாவற்றையும் கொண்டிருக்கவில்லை. ஆனால் மாவோவை ஒரு மனிதராகக் கண்டு அவரின் அந்தரங்க வாழ்வை அது விரிவாகத் தருகிறது. 74 வயதான லி, நாடகச் சுவை மலிந்தவையான மாவோவின் "நான்" என்னும் ஆணவம், அளவு கடந்த காம இச்சை, தனிப்பட்ட நடத்தைகள் (மாவோ என்றைக்கும் குளித்தோ, பல் துலக்கியதோ கிடையாது) என்பனவற்றைத் தமது நூலிலே சித்திரிக்கிறார்.

1958 இல் முன்னோக்கிய பெரும் பாய்ச்சல் காரணமாகப் பட்டினிப் பஞ்சத்துக்கு முகமூடியிட்டு மறைத்துக் கொண்ட கிராமங்களில் மாவோவோடு பயணஞ் செய்தவர் லி. 1972 இல் அமெரிக்க ஜனாதிபதி றிச்சாட் நிக்சன் சீனாவுக்கு வருகை தந்த வேளையில் நிக்சனும், மாவோவும் கலந்து கொண்ட நிகழ்ச்சிகள் யாவிலும் சுதந்திரமாக இடம் பெற்றவர். மாவோ தமது கடைசி மூச்சை அவரின் கையைப் பிடித்த வண்ணமே விட்டார்.

மேற்குச் சீன ஒன்றியத்தின் பல்கலைக்கழக மருத்துவ மனையினதும், பட்டதாரி மாணவர்களினதும் பணிப்பாளராய் விளங்கிய லி, நியூயோர்க் பல்கலைக்கழகத்தின் எம். டி. பட்டதாரியுமாவார். இந்தப் பதவி நிலையிலே தான் அவர் 1955 இல் மாவோவால் சேவைக்கு அழைக்கப்பட்டார். "அமெரிக்காவிலோ, பிரித்தானியாவிலோ பயிற்சி பெற்றவர்களையே நான் எனது சேவையில் வைத்திருக்க விரும்புகிறேன்."

1954-க்கும், 1966-க்கும் இடைப்பட்ட காலத்தில் செங்காவலர்கள் (Red Guards) தங்களின் அரசியல் எதிரிகளின் வீடுகளைச் சோதனை செய்யத் தொடங்கிய வேளையில் மாவோவின் கட்டொழுங்கற்ற ஆட்சியில்நிகழ்ந்தவை பற்றிய தமது அவதானிப்புக்களை லி, பல குறிப்புப் புத்தகங்களில் ஏராளமாக எழுதி வைத்திருந்தார். அவை 1966 இல் எரிந்து போயின. ஆனால் 1976 இல் மாவோ மரணமானதைத்தொடர்ந்து லி, தமது நினைவில் இருந்தவற்றை மீண்டும் எழுதத் திட்டமிட்டார். இந்நிலையில் அவரும் அவரின் மனைவியும் ஐ. அமெரிக்காவில் வாழ்ந்த தமது மக்கள் இருவரோடு சேர்ந்திருக்க 1988 இல் அல்லு சென்றார்கள். ஓராண்டின் பின் அவர் மனைவி நோய்வாய்ப்பட்டு மரணப் படுக்கையில் இருந்தபோது தம் கணவரின் நினைவுகளை நூலாக எழுதும்படி வற்புறுத்தி வேண்டினார். 'எனக்காக, உங்களுக்காக, எம்

கள் வழித் தோன்றல்களுக்காக அவற்றை நீங்கள் எழுத வேண்டும்.'' என் மனைவியின் இறுதி வார்த்தைகளே இவை என்று கடந்த மாதம் தாம் அளித்த பேட்டி ஒன்றில் லி குறிப்பிட்டார்.

இந்த நூல் உணர்வைக் கிளறவைக்கும் அத்தியாயங்கள் பல உள்ளன. அவை மாவோவின் எல்லை கடந்த காமஇச்சையைப் பறைசாற்றின. பாலியல் கட்டுப்பாடு அவசியம் என்று மக்களுக்குச் சட்ட வரம்பிட்டு வலியுறுத்தி வந்த அவரோ ஒரே நேரத்தில் பல பெண்களைத் தமது படுக்கை அறைக்குள் கொண்டு சென்றார். அவருடைய மாலை வேலைகள் பெரும்பாலும் போல்ரூம் நடனங்களில் ஆரம்பித்தன. அவை ஆரம்பித்த சிறிது நேரத்தில் நடன மண்டபத்திற்குப் பக்கத்தில் தமக்கெனச் சிறப்பாகத் தயாரிக்கப்பட்ட படுக்கையறைக்கு அவர் பெண்களை வழிநடத்திச் செல்வார். ''பெண்ணைக் கையில் பிடித்து அவர் அழைத்துச் சென்று அறைக் கதவை மூடிகொண்டதை நான் அடிக்கடி கண்டிருக்கிறேன்' என்று லி எழுதுகிறார்.

60 களில் தமது நான்காவது மனைவியோடு படுக்கையில் பங்கெடுப்பதைத் துறந்த மாவோவுக்கு நூற்றுக்கணக்கான இளங் காதலிகள் இருந்தனர். அவர்களில் பலர் பாலியல் நோய்க்கு உள்ளான போது மாவோ சொன்னார்: ''இவை (இந்த நோய்கள்) இவர்களின் கௌரவ முத்திரைகள்; சீனத் தலைவரோடு இவர்கள் கொண்டிருந்த நெருங்கிய உறவின் சின்னங்கள்.'' பாலியல் நோய்க்கான பரிசோதனைக்கு மாவோ உட்படுத்தப்பட்ட போதிலும் அவருக்கு அந்த நோய்க்கான அறிகுறிகள் வெளிப்படையாகத் தோன்றவில்லை என்று எழுதும் லி,''பெண்களின் உடல்களினுள்ளேயே நான் அவற்றைக் கழுவி விடுகிறேன்'' என்று மாவோ குறிப்பிட்டதாகவும் தெரிவித்தார். ''மிகையான காமத்தினால் மட்டுமே அவர் முறைகேடான பாலியற் சேர்க்கைகளில் ஈடுபடவில்லை; டாவோக்களின் (சீனத்தின் ஒரு சமயப் பிரிவினர்) நம்பிக்கையின் படி பாலியற் சேர்க்கை நீண்ட ஆயுளை அளிக்கும் என்பதாலும், அதில் அதிகம் அதிகமாக ஈடுபட்டார். அது மட்டுமன்றித் தமது எதிரிகளை முறியடிக்கும் கருவிகளாகவும், ஆயுதங்களாகவும் பெண்கள் அவரால் பயன்படுத்தப் பட்டனர்.

லி; மாவோவின் வைத்தியராகப் பணியேற்று ஒராண்டான போது மாவோ தம்முடைய அமைச்சர்கள் இருவர் தமக்கு ஏராளமான மெய்க்காவலரை நியமிப்பதன் மூலம் தம்மை மக்களில் இருந்து அந்நியப் படுத்துகிறார்கள் என்று அவர்கள் மீது குற்றஞ் சாட்டினார். அந்த இரு பெருந் தலைவர்கள் மீதும் அவர் மிகக் கடும் வார்த்தைகளைக் கையாண்டதை லி இந்த இடம் மிகவும் ஆபத்தானது என்று நினைத்ததாக எழுதுகிறார்.

தமிழில்: நிரு. சொக்கன்

சீனாவில் கலாசாரப் புரட்சி ஆரம்பிக்கு முன்னர் இடம் பெற்ற முன்னோக்கிய பெரும் பாய்ச்சலின் போது அந்தப் பெரும் பாய்ச்சல் சிறிய அளவிலான கைத்தொழில்களை ஊக்குவித்து அதே வேளை விவசாயத்தைப் புறக்கணித்தது. இதனால் பல மில்லியன் மக்கள் பட்டினிச் சாவுக்கு உள்ளாயினர். ஆனால் மாவோ இந்தப் பேரழிவுக்கான பொறுப்பைத் தம்முடையதாக ஏற்றுக் கொள்ளாது தமக்கு மிகவும் விசுவாசமாயிருந்த பாதுகாப்பமைச்சர் பெஸ் டிஹுவையை என்பவரை அவர் தம்மைக் கண்டனம் செய்தமைக்காகப் பதவியிலிருந்து விலக்கினார். ''இதில் எந்த விதநீதி நியாயமும் இருக்கவில்லை என்பதை நான் தெரிந்து கொண்டேன். உண்மை என்று நீர் நினைத்ததை உம்மால் எக்காலத்திலும் வெளிப்படையாகச் சொல்ல முடியாது.''

மாவோவின் வைத்தியராய் லி பணிபுரிந்த காலத்தில் பல தடவைகள் மாவோ மருந்துகளில் நம்பிக்கை இழந்திருந்ததை நேருக்கு நேர் காணப் பல சந்தர்ப்பங்கள் கிடைத்தன. 1972 இல் மாவோ நோய்வாய்ப்பட்டுப் பல வாரங்கள் படுக்கையில் கிடந்தார். சுவாசிப்பதே அவருக்கு மிகக் கடினமாயிருந்தது. இருமுவதற்கே சிரமப்பட்டார். ஆனால் அவர் சிகிச்சை பெற மறுத்து விட்டார். பெப்ரவரி முதலாந் தேதியளவில் அவரின் உடல் மிகக் கடுமையான நோய் வாய்ப்பட்டார். ''இன்னமும் நான் உயிர்வாழ நம்பிக்கை இருக்கிறதா?'' என்று அவர் வீயை வினாவினார். லி அடுத்து வந்த மூன்று வாரங்களும் மாவோவுக்கு அளித்த சிகிச்சையின் பலனாக மாவோ நிச்சாட் நிக்ஸனை பெப்ரவரி 21 அன்று வரவேற்கக்கூடிய அளவிற்குச் சுகமடைந்தார். லி எழுதுகிறார்: ''நான் என்றாவது அவரைக் காண்பேனா என்ற அளவிற்கு மாவோ அதிர்ச்சி அடைந்தவராய்க் காணப்பட்டார். அவர் அதிகாலையில் எழுந்தார். ஐந்து மாதங்களுக்கு மேலாக முகச் சவரமோ, தலைச்சவரமோ செய்யாதிருந்த அவருக்கு ஷெள் பியூமிங் என்பவர் அவ்விரண்டையுஞ் செய்தார். ஹென்றி கிசிங்கர் (ஐ. அமெரிக்காவின் அந்நாள் வெளியுறவுச் செயலாளர்) மாவோவுக்கு மிகவும் இரகசியமாக அனுப்பியிருந்த பிராண வாயு வங்கி, சுவாசக்கருவி உட்பட முக்கியமான மருத்துவ சாதனங்கள் அனைத்தையும் அவருடைய அறையிலிருந்து அகற்றவேண்டியிருந்தது, நாங்கள் பிராணவாயு வங்கியை ஒரு பெரிய றங்குப் பெட்டியில் இட்டதோடு எஞ்சியவற்றைப் பூச்சாடிகளுக்குப் பின்னால் மறைத்து வைத்தோம்.''

லியின் நூல் முழுவதிலும் மாவோ காலத்துக்கு முக்கியஸ்தர் பலர் பற்றிய பேனாச் சித்திரங்கள் பரவலாக உள்ளன. கலாசாரப் புரட்சியின் போது அதன் பிரதான உந்து சக்தியாய் விளங்கியவர் ஜியாஸ் குயிங் என்ற பெண்மணி. இவர் சுய காதல் மிக்கவராய் எப்போதும் தமக்கு ஏதோ நோய் பிடித்திருப்பது போன்ற உணர்வோடு செயற்படும் உளவியல் நோயாளியாகக் காட்சி தந்தார். (இவ்வாறான உளத்தாக்கம் Narissistic Hypochondriac எனப்படும்). ''நோயினால் தமது

உடல் எப்போதும் துளையிடப் படுவதாகவும் தமது காதுகளிலே இடைவிடாத இரைச்சல் எழுவதாக வும் அவற்றினூடாகப் பூச்சிகள் நுழைந்து ஊருவது போன்ற உணர்ச்சியுண்டாவதாகவும் அவர் முறையிடுவது வழக்கம். வெளிச் சமோ, பெரும் சத்தமோ கேட்ப தற்கு முடியாதிருந்தார்.'' நீண்ட காலம் பிரதமராய் விளங்கிய சௌ என்லாய் சீனாவுக்கு வெளியில் தமக்கிருந்த மதிப்பின் அளவுக்கு தம் நாட்டில் இல்லை என்றிருந்த போதிலும் அந்த அளவில் அவர் திருப்தியடைந்தவராகவே காணப் பட்டார். ''அவர் மிகவும் இனியவ ராகவும், மேற்கு நாட்டவரால் தங் களுக்கு நெருங்கியவராகக் கருதப் பட்டவராகவும் இருந்தபோதிலும் மாவோவுக்கு விசுவாசமான ஊழிய ராகவே வாழ்ந்தார்.''

மாவோவின் அந்தரங்க வாழ்வு ''நூலில் மாவோவின் உடலைப் பதனிட்டுக் காத்தல் (Embalm) பற் றிய கிளைக்கதை ஒன்றும் வருகி றது. மாவோவின் உடலைப் பத னிட்டுக் காத்தற்கு வழக்கமாக உப யோகிக்கப்படும் அளவிலும் ஆறு மடங்கு அதிகமாக (22 லீற்றர்) (Formaldehyde) போமல்டிகைட் திரவம் ஏற்றப்பட்டது. அதன் பெறு பேறு அதிர்ச்சி தருவதாய் இருந் தது. மாவோவின் முகம் பந்து போல ஊதிப் பருத்தது. அவரின் கழுத்தகலம் தலையளவுக்குப் பருத் தது. போமல் டிகைட் திரவம் அவ ரின் உடலில் இருந்து வியர்வை போல வெளிப்பட்டது.

லி அமெரிக்காவிற்குக் குடியே றிய பின்னர் சீனாவின் உத்தியோக பூர்வமான ஆவணங்களில் இருந்து அவரின்பெயர்நீக்கப்பட்டது.மாவோ வுடன் அவர் எடுத்துக்கொண்ட நிழற் படங்கள் மீள் செப்பனிடாத போதிலும் (Unre touched) அவற் றில் அவரின் முகத்தை அடையா ளங் காணக்கூடியதாக இருக்கி றது. இத்தகைய படங்கள் பல அவ ரின் நூலிலே இடம் பெற்றன. 22 ஆண்டுகளாய் ஒவ்வொரு நாளும் சீனத்து மாபெரும் மீகாமனான மாவோவுடன் அவர் கழித்த சுவை யான வாழ்வு பற்றி லி பின்வரு மாறு கூறுகிறார்: ''(மாவோவுடன் வாழ்ந்த காலத்தில்) எனது மனச் சாட்சிக்கு நான் பணிந்து போக முடியாதிருந்தது. ஆனால் நான் தப் பிப் பிழைத்து வாழ்வதற்கு அவ்வாறு தான் நடந்து கொள்ள நேர்ந்தது. இந்த நூலுக்கு எனது வாழ்க்கை யையே அர்ப்பணித்துள்ளேன்.''

ரைம் ஒக்ரோபர், 17, 1994

மரண வாயிலில் டெங் சியோபிங்

உருவில் சிறியவரானாலும் ஆற்றலில் பெரியவரான சீனத்தலைவர் டெங், தனது இறுதிக் கட்டத்தை நெருங்கிக் கொண்டிருக்கிறார். அவருக்கு அகவை 90. இவர் இறந்தபின் சீனாவில் மேற்கு அரசியற் குழப்பங்கள் நேரிடலாம் எனப் பார்வையாளர்கள் கட்டியம் கூற ஆரம்பித்து விட்டனர். மாவோவின் ஆவி பிரியும் முன்பே நால்வர் கொண்ட குழு ஆட்சியைப்பிடிக்கும் முயற்சியில் இறங்கிவிட்டது. 1976 இல் மாவோ இறந்தபின் இந்த நால்வரும் துரத்தப்பட்டு ஹுவா குவோபெங் பதவிக்கு வந்ததும் நாம் அறிந்ததொன்றே. 1978 இல் இராணுவத்தலைமைப்பீடத்தின் ஆதரவுடன் டெங், குவோபெங் கினை பதவி இறக்கியதையும் நாம் அறிவோம். இன்றுவரை டெங் சீனாவின் அதிசக்திவாய்ந்த மனித ராக இருக்கின்றார். சீனாவின் ஜனாதிபதி ஜியாங்ஸ் செமின் ஒரு தீவிர டெங் ஆதரவாளர். டெங் முன்னெடுத்த கொள்கைகளைச் செயற்படுத்துவதே இவருடைய முக்கிய பணியாகும்.

மனிதனிடம் செல்வம் குவியா மல் தடுத்து தனிமனிதனிடம் செல்வம் குவிந்திருந்தால் பறித்து எல்லோருக் கும் பகிர்ந்து பங்கிட்டு அளிப்பதை வற்புறுத்தும் நெறி பொதுவுடைமை யாகும். டெங் சியோ பிங் பதவிக்கு வந்தபின் இந்த அடிப்படைவாதம் தள்ளிவைக்கப்பட்டுள்ளது. மாவோ ஒதுக்கி வைத்த மேற்குலகத் தொடர்பை வரவேற்றவர் டெங்.

இராணுவ பலத்துடன் விளங்கும் ஜியாங்ஸ் செமின்

சந்தைப் பொருளாதாரம் சீனாவின் மேம்பாட்டிற்கு அவசியம் என்பதை உணர்ந்த டெங், மேற்கு நாடுகளின் முதலீட்டையும் தொழில் நுட்பத்தை

யும் சீனாவுக்கு வரவழைத்துள்ளார். இதன் காரணமாகச் சீனா என்றுமில்லாதவாறு மாபெரும் வர்த்தக நாடாக வளர்ச்சி பெற்றுள்ளது. அதே சமயத்தில் சீனா தனது ஆயுதபலத்தையும் பெருக்கிக் கொண்டு உலக அரங்கில் வல்லரசு நிலையும் பெற்றுள்ளது. ஆயுதத் தயாரிப்பிலும், மலிவு விலையிலும் அவற்றைப் பிறநாடுகளுக்கு விற்பதிலும் சீனா முதலிடத்தைப் பெற்றுள்ளது. டெங் வளர்த்த சீனாவில் தனியுடைமை நெறி தழைத்தோங்கியுள்ளது.

சீனா: கேந்திர நிலைகளில் தனது ஆதரவாளர்களை ஜியாங் நியமித்து தன்னைப் பலப்படுத்திக் கொள்கின்றார்.

டெங் மரணமடைவதைத் தடுக்க முடியாவிட்டாலும் தன்னைப் பலப்படுத்துவதிலும் தன் ஆதரவாளர்களைக் கேந்திர நிலைகளில் அமர்த்துவதிலும் ஜியாங்கு தற்சமயம் ஈடுபட்டுள்ளார். ஜியாங்கு செமின், சங்காய் நகரின் புதல்வன். சீனாவின் மிகப்பெரிய நகரம் இதுவே. சீனாவின் பங்குச்சந்தைப் பணக்கொடுக்கல் வாங்கல் மையம் இங்குதான் உள்ளது. உலகின் மிகப்பெரிய நகரங்களில் சங்காய் நகரும் ஒன்று. சீனாவின் மிகப் பெரிய கப்பல்துறையும் இதுதான். இன்றைய சீனாவின் மிகப்பெரிய தொழில்பேட்டை சங்காய் தான். யங்ரிஸ் நதி முகத்தில் கிழக்குச் சீனக் கடலைப் பார்த்தபடி இந்த நகரம் காணப்படுகிறது. சீனாவின் சகல பிரதான நகரங்களும் சங்காயுடன் புகையிரதப்பாதை, விமானப் பாதை தொலைபேசி போன்றவை மூலம் தொடுக்கப் பட்டுள்ளது. சங்காய் வாசிகளின் பெருமையும், அரசியல் வல்லமையும் குறைத்து மதிப்பிட முடியாது.

தனது முதன்மையைப் பலப்படுத்தும் விதத்தில் ஜியாங்கு சங்காய் நகரின் மேயர் ஹூவொன்கு ஜூ என்பவரைத் தன் பால் இழுத்துக் கொண்டுள்ளார். 20 அங்கத்தவர்கள் கொண்டசீனாவின் ஆட்சிக் குழுவில் ஜூ அவர்களுக்கு அண்மையில் இடம் ஒதுக்கிக் கொடுத்துள்ளார். தனக்கு எதிர்காலத்தில் அரசியல் எதிரியாக வரக்கூடும் என்ற அச்சத்தில் நெடிய வரலாறு கொண்ட ஜியாங்கு குடும்பத்தினரை தள்ளிவைக்கும் நடவடிக்கையிலும் அவர் இறங்கியுள்ளார். இந்தக் குடும்பத்தின் மூத்தவரான ஜியாங்கு ஷான்கு வயது 86; மாவோ காலத்தில் முக்கிய போராளி. இவருடைய சகோதரன் முறையானவர் ஜியாங்கு சைபின்கு. இவர் சீன இராணுவத்தின் அரசியல் அதிகாரி. தொலைக்காட்சிச் செய்திகளில் இவரைக் குறிப்பிட வேண்டாம் என்றும் இவருடைய படத்தைக் காண்பிக்க வேண்டாம் என்றும் தேசியத் தொலைக்காட்சி நிலையத்திற்கு உத்தரவிடப்பட்டுள்ளது. இவ்வருடம் மேதின விழாவில் சைபின்கு பங்குபற்றினாலும் அவருடைய படமும் அவர் சம்பந்தமான செய்திக்குறிப்பும் வெளிவரவில்லை. இன்று இருவரும் ஓரங்கட்டப்பட்டுள்ளனர் என்பது வெளிப்படை.

சீன இராணுவத்திலும் தனக்கு விசுவாசமுள்ள அதிகாரிகளுக்கு ஜியாங்கு பதவி உயர்வு கொடுத்துள்ளார். அண்மையில் 19 ஜெனரல்களைப் புதிதாக நியமித்து இராணுவத்தின் மீதான தனது பிடியை அவர் இறுக்கியுள்ளார். ஜியாங்கு குடும்பத்தினருக்கு இராணுவத்திலுள்ள செல்வாக்கை இல்லாதொழிக்கும் நடவடிக்கை இதுவாகும். இத்துடன் ஆட்சிக் குழுவின் சக்திவாய்ந்த செயலகத்திற்குத் தனது பொருளாதாரச் சீர்திருத்தக் கொள்கைகளுக்கு ஆதரவாளர்களையும் ஜியாங்கு நியமிக்கத் தவறவில்லை. சங்காய் நகரத் தொடர்புள்ளவர்கள்பாடு கொண்டாட்டம் தான். ஜியாங்கு அவர்களுடைய அரசியல்வாழ்வு சங்காய் நகரின் மேயராக ஆரம்பித்து தலை நகருக்கு டெங்கினால் அழைக்கப் பட்டு ஆரம்பித்ததை இங்கு குறிப்பிட வேண்டும். டெங் இன்னும் பல மாதங்கள் தாக்குப் பிடிக்க மாட்டார் என செய்திகள் தெரிவிக்கின்றன. மாவோவின் மறைவுக்குப் பின் நடந்த குழப்பங்கள் மீண்டும் நடைபெற ஜியாங்கு அனுமதிக்க மாட்டார் என்பது திண்ணம்.

நியூஸ்வீக், ஒக்ரோபர் 10, 1994

சீனாவின் சமாதானத் தூதுவர் மீள அழைத்துக் கொள்ளப்பட்டார்.

கொரியாவில் யுத்த நிறுத்தத்தை மேற்பார்வை செய்யும், பான்முன் ஜோம்மில் அமைந்துள்ள இராணுவ போர் நிறுத்த ஆணைக்குழுவில் உள்ள தனது பிரதி நிதியைச் சீனா திருப்ப அழைத்துக் கொண்டுள்ளது. இருந்தாலும் கூட அந்த ஒப்பந்தம் இன்னும் வலுவுள்ளதாக உள்ளதென்று சீன வெளியுறவு அமைச்சுப் பேச்சாளர் ஒருவர், சென்ற செப்ரெம்பர் 2-ந் திகதி கூறினார். 1991 இல் அமெரிக்கா ஒரு தென் கொரிய ஜெனரலை அந்தப் போர் நிறுத்த ஆணைக்குழுவின் தலைவராக நியமித்த பொழுது, வட கொரியா ஒரு தலைப்பட்சமாக அந்தக் குழுவிலிருந்து விலகி விட்டது. அதன் பின்பு இற்றைவரை பேச்சுக்கள் ஏதும் நடைபெறவில்லை.

எம்மை மன்னிக்க வேண்டுகிறோம்!

ஜப்பான்: "நினைவே நெருப்பாகி நெஞ்சே உலையாகி"

இரண்டாம் உலகயுத்த காலத்தில் ஜேர்மனியிலும், ஜப்பானிலும் கைதிகள் மீது பல தடை செய்யப்பட்ட பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. நாம் எதுவும் செய்வோம், எம்மைக் கேட்க யாரும் இல்லை என்ற எண்ணத்தில் இரு நாடுகளிலும் பல்லாயிரக் கணக்கான மருத்துவர்கள் இப் பரிசோதனைகளில் ஈடுபட்டுள்ளனர். கொலைக்களத்திற்குக் கொண்டு செல்வதற்கு முன், யூதர்கள் அடைக்கப்பட்ட தடுப்பு முகாம்கள் ஜேர்மன் ஆய்வுக் கூடங்களுக்கு முடிவில்லாத பலிக்கடாக்களைக் கொடுத்துள்ளன. இதே வசதி ஜப்பானுக்கும், அது 1945 ஆம் ஆண்டு வரை பிடித்து வைத்திருந்த சீனாவில் கிடைத்துள்ளது. வட சீனாவின் மஞ்சூரியா மாகாண ஹார்பின் (Harbin) நகரின் ஒரு புறத்தில் ஆறு சதுர கிலோ மீற்றர் நிலத்தில், ஜப்பானியர்கள் ஓர் ஆய்வு கூடத்தை நிறுவியிருந்தனர். இங்கு பல கட்டடத் தொகுதிகள் அமைக்கப்பட்டன. ஆயிரத்திற்கு மேற்பட்ட விஞ்ஞானிகளும், உடற்கூறு சம்பந்தமான நிபுணர்களும் ஜப்பானில் இருந்து தருவிக்கப்பட்டு, இங்கு தங்க வைக்கப்பட்டிருந்தனர். ஒரு வகை முகாம் என வர்ணிக்கப்படக் கூடிய இந்த ஆய்வு நிலையத்தின் ஸ்தாபகரும், இயக்குனரும் ஷிரோ இஷி (Shiro Ishii) என்ற அதிகாரி யாவார். இவர் இறந்து விட்டார். ஆனால், இவருடன் வேலை செய்த ஒருசிலர் இன்னும் உயிருடன் இருக்கிறார்கள்.

ஹார்பின் நகரில் பின்ங்:: பான்ங் (Pingfang) பகுதியில் அமைந்த இந்தக் கொடூரமான ஆய்வு கூடத்திற்கு, அக்காலத்தில் ஜப்பானிய நிர்வாக சேவையினர் 731 என்ற இலக்கத்தைக் கொடுத்திருக்கின்றனர். இன்னும் ஆய்வாளர்கள் பின்ங்::பான்ங் ஆய்வு கூடத்தை இலக்கம் 731 என்று சுருக்கமாக அழைப்பர். தனது கைப்பொருளுக்கு தோமிச்சி முரோயாமா ஜப்பானியத்துருப்புக்கள் பலவந்தமாகப் பயன்படுத்திய பல்லாயிரம் வசதிப் பெண்டிரிடம் மன்னிப்புக் கோரியுள்ளனர். இத்துடன் ஜப்பான் ஆக்கிரமிப்பு யுத்தம் செய்யவில்லை என்று பேசிய முக்கிய அமைச்சர் ஒருவர் பதவி விலகியுள்ளார். உயர் மட்டத்தில் மனமாற்றம் நிகழ்ந்தாலும் இலக்கம் 731 இல் நடந்தவற்றை ஒத்துக்கொள்ளுமளவுக்கு இன்னும் ஜப்பானிய அதிகார வர்க்கம் தயார் நிலைக்கு வரவில்லை. இங்கு நடந்தவற்றை அவர்கள் மறைக்கவே விரும்புகின்றனர். என்றாலும் மனச் சாட்சியின் உறுத்தலாலும், வெளியுலக ஆய்வாளர்களின் கவனத்திலிருந்து தப்பமுடியாத காரணத்தாலும் ஜப்பானியர்களே பல அதிர்ச்சியூட்டும் தகவல்களை வெளியிடுகின்றனர்.

நோய் பரப்பும் நுண்ணுயிர்க் கிருமிகள், நச்சு வாயுக்கள், இரசாயனப் பொருள்கள் போன்றவற்றைப்



கிறிய ரக மாதிரி உருவங்கள்

நிகரானதோர் ஆசியல் அந்தஸ்தை உலக அரங்கில் தரும்படி கோரும் ஜப்பான், அண்மைக் காலத்தில் தனது யுத்த காலக் கொடுமைகளுக்குப் பரிகாரமாகப் பகிரங்க மன்னிப்புக் கேட்க ஆரம்பித்துள்ளது. இப்போது பிரதமராக இருக்கும் போராயுதமாக வடிவமைத்தல். இதுவே இலக்கம் 731 இன் பிரதான நோக்கமும். இதன் தலைவர் ஷிரோ இஷி இங்கு தயாரிக்கப்பட்ட ஆயுதங்களின் தாக்கத்தை, உயிருள்ள மனிதர்கள் மீது ஆண், பெண், சிறுவர்கள் என்று வகைப்

படுத்தி ஆய்வு செய்துள்ளனர். பெருந் தொகையான காட்டு எலிகள் இங்கு வளர்க்கப்பட்டு, கொள்ளை நோய்க்கிருமிகள் தயாரிக்கப்பட்டு, மனித உடலிலும் செலுத்தப்பட்டுள்ளன. நோயின் வேகம், தாக்கம், முடிவு போன்ற ஆய்வுக் குறிகள் பதியப்பட்டு ஆவணக் காப்பகத்தில் பாதுகாக்கப்பட்டன. உணவுகள் மூலம் பரவும் பற்றீரியாக் கிருமிகள் பற்றிய ஆய்வுகளும் நடத்தப்பட்டு, கைதிகளின் மரணம் வரை குறிப்புக்கள் எடுக்கப்பட்டுள்ளன. இன்னும் பல்வேறு நோய்க்கிருமிகளும் தயாரிக்கப்பட்டு புட்டிகளில் அடைக்கப்பட்டுள்ளன. கிணற்று நீரில் நஞ்சு கலப்பதால் இறப்புக்களின் விகிதாசாரம் பற்றியும் விரிவான ஆய்வுகள் மேற் கொள்ளப்பட்டுக் கோப்புகள் பதியப்பட்டுள்ளன. இந்த ஆய்வு கூடத்தில் இறந்த கைதிகளின் தொகை 3,000 என்று முன்பு மதிப்பிடப் பட்டுள்ளது. ஆனால் அமெரிக்க வரலாற்று ஆசிரியர் செல்டன் ஹரிஸ் வெளியிட்ட நூலில் 12,000 கைதிகள் இறந்திருப்பர் என்று திட்டவட்டமாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இன்னும் பலர் மேலதிகமாக இறந்திருக்கலாம் என்ற சந்தேகம் தனக்கு உண்டு என்றும், அவர் தனது நூலில் தெரிவித்துள்ளார்.

இலக்கம் 731 இல் மனித உடல் அறுவை நிபுணராகக் கடமை புரிந்த கென்யுயாசா (Ken Yuasa) என்ற 77 வயது நபர் இன்னும் உயிரோடு இருக்கிறார். தானும், தனது சகாக்களும் சீனக் கைதிகளுக்குச் செய்த, எழுத்தில் வடிக்க முடியாத பல கொடுமைகளை இன்றும் மனந்திறந்து மேடைகளில் பேசி வருகிறார். இவர் ஓர் இராணுவ அதிகாரி எனினும் இவர் இந்த ஆய்வு கூட சேவைக்காக இராணுவ சேவையிலிருந்து விலக்கப்பட்டுள்ளார். நச்சுக் கிருமி ஆயுதங்களைப் பெருமளவில் தயாரித்து இராணுவத் தேவைக்குப் பயன்படுத்தும் திட்டத்தில் இவர் ஈடுபட்டிருந்தார். துவக்கு ரவைகள் பாய்ந்து மனித உடல் சிதையும் விதத்தையும், உடலில் புகுந்த ரவைகளை அப்புறப்படுத்தும் முறைகளையும் தான் தீவிரமாக ஆய்வு செறததாகப் பத்திரிகையாளருக்குச் சொல்கிறார். தனது ஆய்வுகளின் போது பல உயிருள்ள கைதிகளைத் துவக்கால் சுட்டதாகவும், பின்பு அவர்களுடைய உடல்களை வெட்டிப் பரிசோதித்ததாகவும், அவர் வாக்கு மூலம் கொடுத்துள்ளார். உயிர் பிரியாமல் இருந்த உடலைப் பிரித்துப் பாகம் பாகமாகப் பரிசோதிக்கும் போது மயக்கமருந்தோ, வலியைத் தடுக்கும் நிவாரணிகளோ ஒருபோதும் கொடுப்பதில்லை என்று அவர் தெரிவித்துள்ளார். இந்த விதத்தில் கைதிகளின் தலையில் துவாரமிட்டு மூளைத் திசுக்களைப் பரிசோதனைக்காக வெளியே எடுத்ததாகவும் அவர் ஒப்புக்கொண்டுள்ளார். "ஜப்பானியப் பாராளுமன்றம் என்னை அழைக்கட்டும் நான் நாட்டின் சார்பில் எம்மை மன்னிக்கும்படி உலகை வேண்டுவேன்" என்கிறார் கென்யுயாசா. இலக்கம் 731 இருந்ததாகவே ஒத்துக்கொள்ளாத அரசு இவரின் வேண்டுகோளை ஏற்காது என்பது திண்ணம்.

71 வயதான தக்கியோவானோ மனவேதனை பொறுக்க முடியாமல் தான்செய்த குற்றங்களையும், 731 இல் நடந்தவற்றையும் தெரிவிக்கின்றார். மனித உடல் உச்ச வெப்பத்திற்கும், கடும் குளிருக்கும் எப்படித் தாக்குப் பிடிக்கிறது போன்ற ஆராய்ச்சிகளைத் தான் கண்டதாக அவர் கூறுகிறார். உயிர் பிரிந்து கருவாடாகும் வரை மனித உடலுக்குச் சூடு ஏற்றப்படும் என்றும், கடும் குளிருள் உயிருள்ள மனித உடல் ஓர் ஐஸ்கட்டியாக மாறிவிடும் என்றும் அவர் விபரிக்கின்றார். வெளி நிலத்தில் அறையப்பட்ட கம்பிகளில் கைதிகள் பிணைக்கப்பட்ட பின், அவர்கள் மீது கிருமிக்குண்டுகளும், நச்சு வாயுக் குண்டுகளும் ஏவப்படுமென்றும், பின்பு சடலங்கள் ஆய்வுக்கு எடுத்துச் செல்லப்படும் என்றும் அவர் வாக்குமூலம் கொடுத்துள்ளார். மனித உடல் மீது காற்றைக் கூட்டியும், குறைத்தும் அழுத்தம் பிரயோகிக்கும்போது நடப்பவற்றை அவதானிக்கப் பிரத்தியேகமான அறை ஒன்று இருந்தது என்றும், அங்கு இறந்தவர்களின் சடலங்கள் வெட்டிப் பரிசோதிக்கப்படும் என்றும் அவர் தனது உரையில் கூறினார். உயிருள்ள போதே மயக்க மருந்து கொடுபடாமல் அறுவைப் பரிசோனைகள் நடப்பதைத் தான் கண்ணுற்றதாகவும், அவர் மேலும் தெரிவித்தார். உயர் அதிகாரிகளின் கட்டளைப்படி மொங்கோலிய எல்லையிலுள்ள குடிநீர்க் கிணறுகளில் தான் நஞ்சுகலந்ததாகவும் அவர் ஒப்புக் கொண்டுள்ளார். ஆயிரக்கணக்கான போத்தல்களிலும், கண்ணாடிச்சாடிகளிலும் மனித உடலின் பாகங்களும், உறுப்புக்களும் பாதுகாத்து வைக்கப்பட்டிருந்த களஞ்சியத்தில் தான் கடமையாற்றியதாகவும் அவர் இறுதியாகக் கூறினார்.

தமிழில்:
கலாநிதி க. சோமஸ்கந்தன்

ஜப்பானிய அரசு மௌனம் காத்தாலும், பல முற்போக்கான ஜப்பானியர்கள் இன்று ஹார்பின் நகரில் நடந்தவற்றை வெளிப்படுத்துவதில் முனைப்பாக உள்ளனர். இவர்கள் நடமாடும் கண்காட்சி ஒன்றைத் தயாரித்துள்ளனர். 731 இல் நடந்தவற்றை விபரமாகக் கூறும் ஏடுகளையும் இவர்கள் வெளியிட்டுள்ளனர். அங்கு செய்யப்பட்ட சகல பரிசோதனைகளைச் சித்திரிக்கும் சிறிய ரக மாதிரி உருவங்கள் தத்ரூபமாகச் செய்யப்பட்டு கண்ணாடிப் பேழைகளில் அடைக்கப்பட்டுக் காண்பிக்கப்படுகின்றன. ஆய்வு கூடத்தின் முழு அளவு வரைபடம் எப்பகுதியில் என்ன நடந்தது என்பதைக் காட்டுகிறது. ஜப்பானியப் பொது மக்களால் இந்தக்கண்காட்சி "ஜப்பானின் வெட்கக்கேடு" என்று வர்ணிக்கப்படுகிறது. இது வரை இரண்டு இலட்சம் ஜப்பானியர்கள் இவதப் பார்வையிட்டு வேதனைப்பட்டுள்ளனர். 1945 ஆம் ஆண்டு ஜப்பான் தோல்வியடையும் வேளையில் இயக்குநர் இஷி 731 இற்குக் குண்டு வைத்துத் தகர்த்தும், தீயிட்டுக் கொழுத்தியும், அது இருந்த இடம் இல்லாமல் செய்ய எத்தனித்துள்ளார். மஞ்சூரியாவை நோக்கி ருஷ்

யப்படைகள் முன்னேறி வந்தபடியால் அவர் தன்னுடைய வேலையை முற்றாகச் செய்ய முடியவில்லை. இன்று சீன அரசு யாவற்றையும் ஜப்பானியர்களின் அட்டூழியத்தின் சின்னமாகப் பாதுகாத்து வருகின்றது. வருடமொன்றிற்கு 4,000 பிற நாட்டவர் இதைப் பார்வையிட வருகை தருகின்றனர். இதில் பெரும் பகுதியினர் ஜப்பானியர்கள். இந்த ஞாபகச் சின்னம் சிதலம் அடைந்துள்ளபடியால் இப்போது பெருந் தொகை நிதி ஜப்பானியப் பொது மக்களால் சேகரிக்கப்படுகின்றன. இயக்குநர் இஷி குண்டுவைத்துத் தகர்த்தபோது வெளியேறிய நச்சு வாயுக்களாலும், கிருமிகளாலும் இறந்தோர்தொகை இன்னும் கணக்கிடப்படாதது ஒரு மேலதிக அதிர்ச்சி ஊட்டும் தகவலாகும்.

731 ஆம் இலக்க ஆய்வு நிலையத்தில் இறந்தோரின் உறவினர்கள் அண்மையில் சீனாவில் இருந்து ஜப்பானுக்கு மேற்கூறிய முற்போக்கு ஜப்பானியர்களால் அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர். உருக்கமான மத வைபவங்கள் நடைபெற்றன. அதன் பின் ஒவ்வொருவருக்கும் கணிசமான தொகைப் பணம் கொடுக்கப்பட்டுள்ளது. பணம்தான் ஜப்பானியர்களின் சாபக்கேடு. எதையும் பணத்தால் மூடலாம், மறைக்கலாம் என்று அவர்கள் நம்புகின்றனர். ஜப்பானின் மருத்துவர் சங்கம் சர்வதேச சட்டங்களுக்கும், விதிமுறைகளுக்கும் முரணான ஹார்பின் பரிசோதனைகளுக்கு எதிராக யாதொரு கண்டன அறிக்கையும் விடாதது குறிப்பிடத்தக்கது. காரணம் என்னவென்றால் பெரும்பாலான குற்றவாளிகள் இந்தச் சங்கத்தின் அங்கத்தவர்கள். மாறாக ஜேர்மனியில் மருத்துவர் சங்கம் பல்வேறு கண்டனங்களையும், புலனாய்வுகளையும் செய்துள்ளதை நாம் அவதானிக்கலாம். மேற்கு நாட்டவர்கள் ஹார்பின்நகர் நடப்புக்களைத் துருவித்துருவி ஆராயத் தொடங்கியுள்ளனர். பிரிட்டிஷ் மற்றும் அமெரிக்கக் கைதிகளும் இங்கு வதை செய்தபின் கொல்லப்பட்டிருக்கலாம் என்ற வலுவான சந்தேகம் நிலவுகிறது. 1989 ஆம் ஆண்டு முன்னாள் இராணுவ மருத்துவக் கல்லூரியின் நிலத்தடியில் வெட்டிப் பார்த்தபோது, பெருந்தொகையான மனித எலும்புகளும், மண்டை ஓடுகளும் வெளிவந்தன. இது நடந்த இடம் தலைநகர் ரோக்கியோவில். ஜப்பானியச் சுகாதார இலாகாவினர் இவற்றை எரியூட்ட விரும்புகின்றனர். ஆனால் இவை ஹார்பின் போன்றதொரு வன்முறையின் எச்சம் என்று கூறி சில ஜப்பானியர்கள் அதை நிறுத்துப்படி வழக்குத் தாக்கல் செய்துள்ளனர். இன்னும் விசாரணை தொடங்கவில்லை. இவ்வாறெல்லாம் நடந்தபின் ஜப்பானிய அரசு தனது நீண்டகால மௌனத்தைத் தொடர்வதில் அர்த்தமில்லை.

நியூஸ்வீக் ஒக்ரோபர் 03, 1994

சூரிய ஒளியால் இயங்கும் கமிரா
(புகைப்படக் கருவி)

ஏதோ ஓர் அருமையான முக்கிய நிகழ்வின் போது ஒருவர் அதனை நிழற்படம் பிடிக்கக் கமிராவை அழுத்தும்போது சில வேளை கமிரா இயங்காமல் போவதும் உண்டு. உரியவேளைக்கும் மின்கலனை மாற்றி கமிரா இயங்க வேண்டிய அளவு சக்தி உள்ளதா என்று முன்னமே சரிபார்த்து வைக்காதவர்கள் அத்தகைய ஏமாற்றத்தை அடைவதுண்டு. ஆனால் அதற்கும் பரிகாரமாக இப்பொழுது சூரிய ஒளியின் மூலம் மின்சாரம் பெற்று இயங்கும் கமிரா ஒன்றை அமெரிக்காவில் றீகோ நிறுவனம் உற்பத்தி செய்து சந்தைப்படுத்துகிறது. இந்தக் கமிரா இயங்குவது சூழலுக்கும் நல்லதாகிறது. கமிராவின் மேல் பொருத்தப்பட்ட 6 ஒளி ஈர்ப்புக் கலன்கள் சூரிய ஒளியையோ வேறமையான உள்ளறை ஒளியையோ ஈர்த்து மின் பிறப்பிக்கின்றன. அது மட்டுமல்லாமல் அவ்விதம் பிறப்பிக்கப்பட்ட மின்சாரம் பல வாரங்களுக்கு அதனுள் தேங்கி நின்று தேவைப்படும்போது மின்வலு கொடுக்கின்றது. உள்ளே களஞ்சியப்படுத்தப்பட்டுள்ள மின்சாரம் முடிவடைந்து விட்டால் கூட கமிரா உடனடியாக ஒளியிலிருந்து மின்பிறப்பித்து தன்னை இயக்க நிலையில் வைத்துச் செயற்படும். ஒரு செக்கன் முதல் ஒரு செக்கன்டின் 2,000 த்தில் ஒரு பகுதி வரையான காலத்திற்குள் கமிராவின் ஒளி புகு வேகத்தைக் கட்டுப்படுத்த முடிவதுடன் தானாக கமிரா இயங்கவைக்கும் அமைப்பும் ஒரு படச் சட்டத்துள் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட ஒளிப்படங்களைப் பிடிக்கும் வசதியுங் கூட அந்தக் கமிராவில் உள்ளது. அத்துடன் அந்தக் கமிராவில் பல வகையான வாடிகள் (லென்சுகள்) பொருத்தவும் வசதியுள்ளது. ஒரு புறம்பான இணைப்பி மூலம் ஒருவர் மின்கலனால் இயங்கும் ஒளிவிச்சுச் சாதனத்தை (Flashunit விரும்பினால் இணைத்துக் கொள்ளலாம். விலை 450 டொலர்.

சதாம் மீண்டும் திடும் என்று உலக அரங்கில் ஆடுவதேன்?

தமிழில்: திரு. நா. திருப்பராசா

1991 வளைகுடாப் போரில் அடித்து வீழ்த்தப் பட்ட பின்பும், இன்னும் மீசையில் மண் ஒட்டவில்லை என்று வீராப்புப் பேசி விறைப்பாக நடக்கும் ஈராக்கிய ஜனாதிபதி சதாம் குசேனின் விடாக் கண்டத்தனம் விடுபடுமா?

1991 இல் ஈராக்கின் ஜனாதிபதி சதாம் குசேன் சிறிய குவைத் நாட்டின் மீது படையெடுத்து ஆக்கிரமித்துக் கொண்ட பின்பு அமெரிக்கா தலைமையிலான ஐ. நா படைகள் அங்கு சென்று ஈராக்கியப் படையை விரட்டியடித்து, சதாமை நிலைகுலையச் செய்த பின்பும் சதாம் இன்னும் தலை குவியாமல் பலமாகவே உள்ளார்.

சென்ற ஒக்ரோபர் முற் பகுதியில் மீண்டுமொரு போட்டி விளையாட்டுப் போர் நடத்த விரும்பவராக அவர், தமது குடியரசுப் படை அணிகள் இரண்டு உட்பட 64,000 பேர் கொண்ட படையை குவைத் நாட்டு எல்லையில் கொண்டு வந்து குவித்தார்.



முன்பு ஆக்கிரமிப்பு நடத்தப் பட்டபோது நடந்தது போலவே படை குவிக்கப்பட்டாலும் இம் முறை அந்தப் படை குவைத் நகருக்குள் புகுவது நடக்காது என்றாலும் அது எல்லைக்குள் அத்து மீற இடம் உள்ளது என்று ஜனாதிபதி கிளிங்ரனின் அலுவலக அதிகாரி ஒருவர் கருத்துக் கூறினார்.

சதாம் எப்பொழுதும் பாடம் படிப்பதில் மெதுவாகவே செயற் படுபவராக இருக்கிறார் என்பதுடன் அந்தப் படித்த பாடத்தின் நோக்கத்தை அரிதாகவே புரிந்து கொள்பவராகவும் அவர் இருக்கிறார். இம் முறை அவர் படையை அனுப்பியதன் முக்கிய காரணம் ஈராக் மீது வளைகுடாப் போரைத் தொடர்ந்து ஐ. நா. விதித்துள்ள கடுமையான தடையை, அடுத்து வரும் கூட்டத்தின் வாக்கெடுப்பில் ஐ. நா. அகற்றிக் கொள்ளச் செய்வதற்காகத் தான் என்பது தெரியக் கூடியதாக உள்ளது. ஆனால் அவர் அப்படிப் படையெடுப்பு நடத்த முனைவது போல் காட்டாமல் அமைதியாக இருந்திருந்தால் கூட அதனை அடைந்திருக்கக் கூடிய சூழ் நிலை உள்ளது.

ஐ. நா. விதித்துள்ள தடையைத் தொடர விரும்பும் பாதுகாப்புச் சபையின் நிரந்தர உறுப்பு நாடுகள் அமெரிக்காவும், பிரித்தானியாவும் மட்டும் தான். ஏனையவற்றுள் ருஷ்யா தன்னிடம் ஈராக் போருக்கு முன்பு வாங்கியபோர்த் தளபாடக் கடனான 6 பில்லியன் டொலரை மீளப் பெறக் காத்திருக்கிறது. பிரான்ஸ், ஈராக்குடன் பெரும் பண ஈட்டம் தரும் வர்த்தகத் தொடர்புகளை மேற்கொள்ளக் காத்திருக்கிறது. சீனாவிடம் ஈராக்கிற்கு விற்பனை செய்ய நிறையப் போர்த் தளபாடங்கள் உள்ளன. ஆகவே ஐ. நா. தங்களுடைய விதியைத் தன்கைக்குள் பொத்திப் பிடித்துக் கொண்டு இருப்பதை அந்த நாடுகள் மூன்றும் விரும்புமா? என்று கேள்வி எழுப்பிய அமெரிக்கக் கடற்படை அதிகாரி ஒருவர், "ஈராக் தான் அதற்கு எதிராக நடந்து கொள்கிறது" எல்லும் கருத்துக் கூறினார். ஈராக்கின் துணைப் பிரதமர் தாரிக் அஸீஸ், ஈராக்கிற்கு எதிராக ஐ. நா. வின் தடை விதிப்பை மேலும் தொடர வைக்க முயல்பவர் போல் அண்மையில் பேசினார். "ஆகவே அமெரிக்காவுக்கு அந்தப் பேச்சு ஒரு நன்மையாகவே கருத வேண்டும்" என்றும் அந்த அதிகாரி கூறினார். ஆகவே அமெரிக்காவின் விருப்பும் ஐ. நா. வின் தடையும் தொடர்ந்தால் ஈராக்கின் கடுப்பும் அதிகரித்து சதாம் குசேன் மீது உள் நாட்டில் அழுத்தம் அதிகரித்து மோதும். இப் பொழுது அந்த நாடு முடங்கிக் கிடக்கிறது. முக்கிய அடிப்படைத் தேவைகளான மருந்து வகைகள், வேளாண் இடு பொருள்கள் என்பனவற்றை இறக்குமதி செய்ய முடியாத நிலை நீடித்துக் கொண்டு போகிறது. எண்ணெய் ஏற்றுமதி செய்ய முடியாமையால் ஆண்டு ஒன்றிற்குப் 15 மில்லியன் பெறுமதியான வர்த்தகம் முடங்கிக் கிடக்கிறது. ஏற்கனவே உணவுப் பற்றாக் குறையால் ஏற்பட்ட குறைவான ஊட்டத்தால் வருந்தி நிற்கும் மக்களை மேலும் வாடச் செய்வதற்கு பங்கிட்டு உணவு அளவை சரி அரை வாசியாகக் குறைத்து உள்ளது அரசாங்கம்.

அமெரிக்காவில் வாழும் ஓர் ஈராக்கியரிடம் கருத்துக் கேட்ட பொழுது, '' ஐ. நா. வின் தடையால் ஈராக்கிய மக்கள் அழிக்கப்பட்டுக் கொண்டு இருக்கிறார்கள். ஈராக் கடந்த நான்கு ஆண்டுகளாகக் காயப்படுத்தப்பட்டுக் கிடந்தாலும் ஒருவரும் அதைப் பற்றிக் கவலைப்படுவதாக இல்லை'' என்று தமது மனக் கவலையைக் காட்டினார்.

துன்பகரமான தண்டனைகளின் தாக்கத்தால் உள்ளூர் எதிர்ப்புக்களை வெற்றி கொள்ள முடியவில்லை.

தம் மீது நாடு கொண்டுள்ள வெறுப்பை அடக்க சதாம், மேலும் கொடூரமாக நடக்கிறார். அவருடைய மதவாத மற்ற அரசாங்கம் சென்ற யூன் மாதத்திலிருந்து சட்டத்தை மீறுவோருக்கு இஸ்லாமிய மதப்படியான தண்டனைகள் விதிக்கத் தொடங்கியுள்ளது. முதல் முறை களவெடுத்தால் வலது கையையும், இரண்டாம் முறை களவெடுத்தால் ஒரு காலையும் வெட்டி அகற்றி அங்கவீனப் படுத்தும் தண்டனை நிறைவேற்றப் படுகிறது. அத்துடன் சென்ற ஒகஸ்ற் மாதத்தில் வெளியிடப்பட்ட ஓர் ஆணைக் கட்டளையின் படி இராணுவத்தை விட்டு விலகி ஓடுவோருக்கும், அவர்களுக்குத் தஞ்சம் கொடுப்போருக்கும் காது அறுக்கப்படுகிறது.

விரக்தியுற்ற குடி மக்கள் புரட்சி செய்வதும் ஒழுங்காக நடத்தப்படாத இராணுவம் நிலை குலைவதும் நியதியே, '' இப்பொழுது எவருமே சதாம் குசேனுக்காகப் போராட விரும்புவதில்லை. நாலாயிரம் அமெரிக்கப் படையினர் அணிவகுத்துச் சென்றால் இலகுவில் பாக்தாத்தைக் கைப்பற்றலாம்'' என்று ஓர் ஈராக்கியர் கூறித் தனது வெறுப்பை வெளிக் காட்டினார். அமெரிக்காவில் ஜோன் ஹொப்கின்ஸ் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த மத்திய கிழக்குப் பற்றிய கற்கைகளுக்கான துணைப் பேராசிரியர் சோவி ஒசேல் என்பவர், '' ஈராக்கில் நிலவும் பற்றாக் குறைகள் மக்களை அரசாங்கத்துக்கு எதிராகப் போராடப் பலம் அற்றவர்களாக ஆக்கி விட்டது. மக்களின் நாட்டம் உணவு தேடுவதிலேயே கழிந்து கொண்டு இருக்கையில், சதாம் குசேன் முன்பு எப்பொழுதும் பார்க்கப் பலம் கொண்டவராக இருக்கிறார்'' என்று கூறுகிறார்.

அமெரிக்கா சதாமை முறைத்துப் பார்த்து வீழ்த்த முயன்று கொண்டிருக்கையில், சதாம் அமெரிக்காவின் வெளியுறவுக் கொள்கையை உன்னிப்பாய் நோக்கி அதன் மூலம் தனக்குச் சாதகமான முடிவுகளுக்கு வருகிறார். வட கொரியர்கள் பிரச்சினை ஒன்றைக்

வளைகுடாப் பகுதியிலுள்ள அமெரிக்கப் படைகள்

12,500 - போர் வீரர்கள்
140 – போர் விமானங்கள்
U. S. S. Tripoli – தாக்குதற் கப்பல்
U. S S. Hewit - 72 ஏவுகணைகளுடன் கூடிய நாசகாரி
U. S. S. Leyte Gulf - 122 ஏவுகணைகளுடன் கூடிய விரைவு போர்க் கப்பல்

வளைகுடாவை நோக்கி வந்து கொண்டிருக்கின்ற அமெரிக்க படைகள்

U S. S. G. Washington – விமானம் தாங்கிக் கப்பல்
U. S, S. J. Berry – நாசகாரிக் கப்பல்
U. S. S. San Jacinto - விரைவு போர்க் கப்பல்
வழங்கற் கப்பல்கள் – 11
போர் வீரர்கள் - 4,000

பிரித்தானிய கப்பல்

H. M. S. Cornwall - விரைவுப் பீரங்கிப் போர்க் கப்பல்

ஈராக், குவைத் எல்லையை நோக்கி நகர்த்திய படைகள்

போர் வீரர்கள் – 50,000
டாங்கிகள் - 700
துருப்புக் காவிச் செல்லும் கவசவாகனங்கள் - 900

தமிழ் அகதிகளுக்கான Tamileelam Archive

பிரதமர் பதவிக்கு மனுச்செய்யும் இராணுவத் தளபதி

1948 இல் நிறுவப்பட்ட இஸ்ரேல் நாட்டிற்கு இவ்வருடத்துடன் 46 அகவை முடிந்து விட்டது. தனது இறைமையைப் பாதுகாக்க ஆயுதப் படையை நம்பி இருக்கும் இந்த நாட்டில், இதுவரையில் 13 முப் படைத்தளபதிகள் பதவி வகித்துள் ளனர். இப்போது பதினான்காவது தளபதியான ஏகூட் பாராக் (Ehud Barak) இஸ்ரேலின் அதி யுயர் இராணுவத் தலைமைப் பதவியை வகிக்கின்றார். இன்னும் சில மாதங்களில் இராணுவச் சேவையிலிருந்து இவர் இளைப் பாற இருக்கின்றார். வித்தியாச மான பாரம்பரியங்களைக் கொண் டது இஸ்ரேலியப்படை. இதில் சேருபவர்கள் மசாடாவை மறவேன் என்றுதான் சத்தியப்பிரமாணம் எடுக்கிறார்கள். பண்டைய ரோமர் களுடன் இறுதிவீரன் இறக்கும் வரை போர் புரிந்து தோல்வி கண்ட யுத்தம்தான் மசாடா. இதை நினைத்து கண்ணீர் விடுப வர்கள் இன்றும் யூதரிலுள்ளனர். கண்ணீர் சிந்த, வெட்கப்படாத இனம் இதுவாகும்.

இஸ்ரேலிய இராணுவ வர லாற்றில் மிகக்கூடுதலான பதக்கங் களையும், சிறப்பு விருதுகளையும் பெற்றவர் ஜெனரல் பாராக். கொமாண்டோக்கள் நிறைந்த இப்படையில் அதிரடிக்குப் புதிய பரிமாணம் வித்தவர் பாராக். இவர் பங்கு பற்றாத உள்நாட்டு வெளிநாட்டுத் தாக்குதல் இல்லை எனலாம். இவருடைய பொழுது போக்கு விசித்திரமானது. திறவு

காசாப் பிரதேசத்தில் இஸ்ரேலியப் படைவீரனொருவன் கொல்லப்பட்ட இடத்தைப் பார்வையிடும் தளபதி பாராக்.

கோல் அல்லது சாவி இன்றிக் கை யில் கிடைத்த கம்பி அல்லது குச்சியை வைத்துக்கொண்டு பூட்டு களைத் திறப்பதே அதுவாகும். சிறுவயது முதற்கொண்டு மிகக் கவனம் எடுத்து இத்திறனை அவர் வளர்த்துள்ளார். வங்கிகள், கப்பகங்கள் போன்றவற்றின் பூட்டுக்களையும் எளிதில் திறந்து விடும் திறன் அவருக்கு இருப்ப தாகப் பேசப்படுகின்றது. இவ ருடைய இராணுவச்சேவையில் இது அவருக்குக் கைகொடுத்துள்ளது. 1972 ஆம் ஆண்டு இஸ்ரேலின் எதிரிகளால் கடத்தப்பட்ட விமானம் ஒன்று ரெல் அவிவ் விமானநிலையத்தில் இறங்கியுள் ளது. பூட்டப்பட்டிருந்த விமானத் திற்குள் உட்புகும் வழிதெரியாது கொமாண்டோ அணியினர் தவித்த போது, சிறிதும் அலட்டிக்கொள் ளாமல் பாராக் கம்பியால் விமானக்கதவைத்திறந்து கொண்டு

கிளப்பிவிட்டு அதனால் பெற்ற நன்மைகள் என்னவென்பது அவ ருக்குத் தெரியும் என்று ஒரு இஸ்ரேலிய அதிகாரி குறிப்பிட்டு, ''முன்பு இருந்த அமெரிக்க ஜனாதி பதி புஸ்ஸும், பிரித்தானியப் பிர தமர் மார்க்கிரட் தட்சரும், இஸ் ரேலியப் பிரதமர் சமீரும், ருஷ்ய ஜனாதிபதி கொர்பச்சேவும் போய் விட்டார்கள் என்றாலும் சதாம் முன்பு எப்பொழுதிலும் பார்க்கப் பலம் வாய்ந்தவராக இருப்பது அவர்கள் பிழை விட்டார்கள் என் பதையும், அவர் செய்தவை சரி யானவை என்பதையும் காட்டச் சான்றாக உள்ளன'' என்றும் கூறி னார்.

கடும் பேச்சும், படை குவிப் பும் போது மென்று அமெரிக்கா நம்பிக் கொண்டு இருக்கையில், ''தாம் ஏதும் முட்டால் தனமா கச் செய்தால் அது தனக்குப் பெரும் சரிவு உண்டாக்கும் என்று சதாம் உணர்வது அவசியமாகும்'' என்று ஓர் இராணுவத் தலை மைப் பீட அதிகாரி, கூறினார். மேலும் அந்த அதிகாரி ''இப் பொழுது சதாம் செய்பவை முட் டாள் தனம் மிகுந்தவையாக உள்ளன'' என்றார். ஆனால் சதா மின் விடாக் கண்டத்தனம் முன்பு குறைவுபட மதிப்பிடப்பட்டுள்ளது. வளைகுடாப் போரின் போது அமெரிக்க கூட்டுப்படைத் தலை மைத் தளபதி கொலின் பொவெல் ஈராக்கிய இராணுவத்தைப் பற் றிக் கூறிய போது, ''முதலில் நாங்கள் அதனைச் சீர் குலைக்கப் போகிறோம். பின்பு நாங்கள் அதனைக் கொல்லப்போகி றோம்'' என்றார். ஆனால் சதாமோ சரிந்து போகாமல் தொடர்ந்து போராடிக் கொண்டு இருக்கிறார். அவரை எவரும் சீர குலைக்கலாம் என்றாலும் அவரை எவரும் அடைத்து வைக்க முடி யாது போல் உள்ளது.

நீனா பர்லேயும், மார்க் தொம்ச னும் தயாரித்த அறிக்கை.

ரைம், ஒக்ரோபர் 17, 1994.

உள்ளுக்குச் சென்றுள்ளார். இத் தாக்குதலில் பணயக்கைதிகள் ஒருவர் மாத்திரம் கொல்லப்பட்டுள்ளார். குற்றவாளிகள் ஒருவரும் தப்பவில்லை. 1973 ஆம் ஆண்டு லெபனான் தலைநகர் பெய்ரூட்டில் பி.எல்.ஒ பூட்டிய கதவின் பின்புற அறையில் இரகசிய மாநாடு நடத்தியபோது, பாராக் கதவைத் திறந்து கொண்டு உட்புகுந்துள்ளார். அவர் குறிவைத்த மூன்று தலைவர்களும் இத்தாக்குதலில் கொல்லப்பட்டுள்ளனர்.

இஸ்ரேலின் தேசிய மொழி கீபுறூவில் (Hebrew) பாராக் என்றால் மின்னல் அல்லது சவுக்கடி என்ற அர்த்தம் உண்டு. தமது பெயருக்கேற்ப செயற்கரிய செய்வதில் ஜெனரல் பாராக் ஒப்பற்றவர் இவர் அருந்திறன் வாய்ந்தவர். கூரிய மதிநுட்பம் உடையவர், நிர்வாகத்திறன் மிக்கவர் என்றெல்லாம் இத்தளபதியைப்பற்றி அடுக்கிக் கொண்டு போகலாம். போர்முனையில் போர் வீரர்களிலும் கூடுதலாக தளபதிகள் இறக்கின்றனர். அவர்கள் முன்செல்வதே காரணம். பாராக் தற்கொடையாளி அல்ல. போருக்கு முன் திட்டமிடுவதில் அவர் ஆற்றல் மிக்கவர். இதுவே அவரின் வெற்றியின் இரகசியம். அவருடைய தீரத்திற்கு நிகராக அவருடைய கல்வியறிவு துணை நிற்கிறது. பௌதிகம், கணக்கியல், இரசாயனம் ஆகியவற்றில் அவர் பட்டதாரி. அத்துடன் கணனியில் ஒப்புநோக்கு முறைமையிலும் பகுப்பாய்விலும் முதுகலைப் பட்டம் பெற்றவர். எனினும் அவருக்கு ஒரு குறையுண்டு. அவர் ஆலோசகர்களைக் கலந்தாலோசிப்பதில்லை. அவருக்கு எல்லாம் தெரியும் என்ற எண்ணம்.

உரோமர் காலத்திலும் சரி இன்றும் சரி இஸ்ரேலில் நாட்டில் இராணுவமும் அரசும் பிரிக்க முடியாதவாறு பிணைந்திருக்கின்றன. அன்றும் இன்றும் இஸ்ரேல் ஒரு மிகச் சிறிய நாடு, ஆனால் அதன் கீர்த்தி மிகப்பெரிது. யூத மதம், கிறித்தவம், இஸ்லாம் ஆகிய மும்மதங்களுக்கும் அவர்களுடைய வரலாறு அடிப்படை. உலகில் தங்கள் எண்ணிக்கைக்கும் நிலப்பரப்புக்கும் பன்மடங்கு மேலான பாதிப்பை அவர்கள் ஏற்படுத்திவிட்டார்கள். கிமு 4–5 வரையில் அவர்கள் எழுதிவைத்த கீபுறூமொழி பைபிள்தான் பழைய ஏற்பாட்டின் கரு. இராணுவ பலமும்

இஸ்ரேலியப்படை வலிமை

இராணுவம்: 104,000

பிரதான போர்த்தாங்கிகள் 3,850

கடற்படை: 9,000

நீர்மூழ்கிக் கப்பல்: 3

விமானப்படையினர்: 28,000

போர் விமானங்கள்: 577

ஆயுதம் தாங்கிய உலங்கு வானூர்திகள்: 80

துணைப்படையினர் :5,04,000

★ இங்கு கட்டாய இராணுவ சேவை யூதர்களுக்கு உண்டு.

I. T. N 1992

அதனோடு இணைந்த தந்திரோபாயமும் அவர்களை நெடுநாட் காப்பாற்றுவில்லை. ஆனால் அவர்கள் இவற்றைக் கைவிடமுடியாதவர்களாக இருக்கிறார்கள். இஸ்ரேலிய அரசியற்கொள்கைகள் இராணுவ நோக்கில் தயாரிக்கப்படுகின்றன ஒவ்வொரு கொள்கை முன்னெடுப்பிலும் நாட்டின் பாதுகாப்பு எவ்வாறு அமைகிறது; நாட்டின் மேலாதிக்கம் எந்நிலையில் உள்ளது என்றெல்லாம் இராணுவம் – அரசு இருசாராரும் கூடி ஆராய்கின்றனர்.

பெரும்பாலான இளைப்பாறிய இஸ்ரேலிய இராணுவ அதிகாரிகள் அரசியல்வாதிகளாகப் பரிணமிப்பதில் அதிசயமொன்றுமில்லை. 13 இளைப்பாறிய முப்படைத் தளபதிகளில் அறுவர் அரசியலில் இறங்கி அமைச்சரவையில் இடம் பிடித்துள்ளனர். இப்போது பிரதமராக இருக்கும் யிற்சாக் றாபின் இப்பதின்மூவரில் ஒருவர். அவர் இப்போது இரண்டாம் முறையாக இப்பதவி வகிக்கின்றார். தொழில் முறையில் அல்லாமல் பாராக் தளபதிக்கும், றாபின் பிரதமருக்கும் நெருங்கிய பாசப் பிணைப்பு உண்டு. அரபுகளின் நிலத்தைத் நாம் எமது பாதுகாப்புத்தேவைக்காகவே வைத்திருக்கிறோம். எமது பாதுகாப்புக்கு அவை தேவையில்லை என்றால் நாம் அவற்றை உதறிவிடத் தயார். இது இருவருக்கும் பொதுவான கொள்கை. இப்போதைக்கு காசா ஜெரிக்கோ பிரதேசத்தைப்போல் மிகுதி நிலத்திற்கு விடுதலை கொடுக்க அவர்கள் தயாரில்லை. ஏனென்றால் இரண்டு இடத்திலும் பி. எல். ஒ ஆட்சி திருப்தியாக வில்லை. அத்துடன் தீவிரவாதிகளை அவர்களால் அடக்க முடியவில்லை. அண்மையில் இஸ்ரேலியப் படையினர் சிலரைக் கொல்லுமளவுக்கு அவர்கள் சென்றுள்ளனர். பிரதமரின் ஆலோசகர்களில் பாராக் முதன்மையானவர் என்பதில் வியப்பில்லை.

யிற்சாக் றாபின் தலைமைதாங்கும் தொழிற் கட்சியில் ஏகூட் பாராக் தளபதிக்கு நல்ல வரவேற்புண்டு. இளைப்பாறியவுடன் அவர் கட்சி அங்கத்தவராவது நிச்சயம். அத்துடன் அடுத்த தேர்தலுடன் அவருக்குப் பாதுகாப்பு அமைச்சர் பதவி கிடைப்பதும் நிச்சயமாகி விட்டது. ஆனால் 1996 ஆம் ஆண்டு நடக்கவிருக்கும் அடுத்த பொதுத் தேர்தலில் மீண்டும் போட்டியிடும் எண்ணத்தை யிற்சாக் றாபின் அண்மையில் வெளியிட்டுள்ளார். ஆகையால் பிரதமர் பதவியில் குறிவைத்திருக்கும் பாராக் அமைச்சரவையில் இடம் பிடித்தபடி றாபின் இளைப்பாறும் வரை காத்திருக்கவேண்டும்.

ரைம் ஒக்ரோபர் 3, 1994

எதிரிகள் எங்குமிருக்கிறார்கள்; அரசியல் அதிகார இழுபறியில் தலைகள் உருளலாம்.

எழுதியவர்: நொம்பென்னிலிருந்து நேற் தாயெர்

மருத்துவ மனையில் அனுமதிக்கப்படுவதற்காகப் பிரான்ஸ் நாட்டிற்குச் செப்ரெம்பர் 2 ஆம் தேதி புறப்பட்டு வந்த கம்போடியாவின் இரண்டாவது பிரதம மந்திரி ஹுன்ஸென்னுக்கு நரம்புத்தளர்ச்சி ஏற்பட்டிருப்பதாக அவர்களுடைய உதவியாளர்களும், மருத்துவர்களும் கூறுகிறார்கள். ஆனால் அந்த ஒய்வும் மிகக் குறுகியதாகவே அமைந்தது.

ஹுன்ஸென் ஒய்வெடுத்துக் கொள்ளு முகமாக இலாவகமாகக் கட்டிலில் படுத்த சில மணி நேரங்களிலேயே கடந்த யூலையில் இவருக் கெதிராகக் கவிழ்ப்புச் சதியில் ஈடுபட்ட குழுவின் தலைவர்களில் ஒருவர் சிறையிலிருந்து தப்பி விட்டதாகத் தலைநகர் நொம் பென்னிலிருந்து தகவல் வந்தது. எனவே ஒரு சில நாள்களுக்குள்ளேயே நாட்டிற்குத் திரும்புவதற்கு ஆயத்தங்களை மேற்கொண்டார்

அவருக்கு அங்கே சில முடிச் சுக்களை வெட்டினாலே சிக்குப் பட்டிருக்கிற கயிற்றை விலக்கலாம் போன்ற அரசியல் குழப்பநிலை காத்திருந்தது. கம்போடியாவின் கூட்டரசாங்கத்தின் உறுதியற்ற தன்மை அதிகரித்துக்கொண்டே செல்வதாக மூத்த அதிகாரிகளும், இராஜதந்திரிகளும் கூறுகிறார்கள்.

மந்திரி சபையில் மாற்றம் நடைபெறுமென்றும், அதில் சர்ச்சைக் குரிய நிதிமந்திரி சாம்ரெயின்சியின் பதவி பறிபோகலாம் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது. ஆனால் இந்த மாற்றம் மாத்திரமே ஹுன் ஸென்னையும், அவருடைய கம்போடியா மக்கள் கட்சியைச் சேர்ந்த Cambodian People's Party) சக்தி வாய்ந்த உறுப்பினர்கள் குறிப்பாகத் தேதியப் பேரவையின் தலைவர் சியாசிம், மற்றும் துணைப் பிரதமர் ஸார் கெங் ஆகியோரையும் திருப்திப்படுத்தப் போதுமானது அல்ல.

மேற்குலகம் இந்தக் குழுப் பிரிவுகளுக்குச் சார்பாக நின்று பிரச்சனைகளுக்குத் தூபமிடுவதிலிருந்து ஒதுங்கிக் கொண்டாலும் துணைப் பிரதமர் சார் கெங் (Sar Kheng) கினால் அரசியல் உறுதிப்பாட்டைப் பேண முடியுமென அமெரிக்கா கருதுகின்றது. அரசியல் ஸ்திரமற்ற நிலையின் ஆணிவேரானது கடந்த யூலை 3 இல் ஹுன்ஸென்னுக்கும், முதற் பிரதமர் நோர்டொம் ரனாரிடா விற்கும் எதிரான, முறியடிக்கப் பட்ட சதிப்புரட்சியின் பின்னர் அவர்களுடைய அதிர்ச்சி அதிகாரமட்டம் முழுவதும் எதிரொலிக்கின்றது. தோல்வியுற்ற சதிப் புரட்சியின் காரணகர்த்தாக்களெனத் தடுத்து வைக்கப்பட்டுள்ள 3 மூத்த அதிகாரிகள் கம்போடிய மக்கள் கட்சியிலிருந்து விலக்கப் பட்டிருந்தாலும் இன்னும் பல அரசியல் புள்ளிகள் இந்தச் சதியில் சம்பந்தப்பட்டிருப்பதாக ஹுன் ஸென்னும், இளவரசர் ரனாரிடா வும், அவர்களுடைய மூத்த ஆலோசகர்களும் தெரிவிக்கிறார்கள். பாதுகாப்பு அமைச்சின் வளவிற்குள் வைக்கப்பட்டிருந்த தடுப்புக் காவலில் இருந்து சதிப் புரட்சியில் சம்பந்தப்பட்ட மூவரில் ஒருவரான முன்னைநாள் உள்நாட்டு அமைச்சர் கின்சொங் செப்ரெம்பர் 4 ஆம் தேதி தப்பித்துச் சென்றது இவர்களுக்கு இருந்த பயத்தை மேலும் அதிகரித்தது. உள்ளே கிடைத்த உதவியுடனேயே தப்பித்திருக்க முடியுமெனப் பரவலாக நம்பப்படுகிறது.

தமிழில்: வைத்தியகலாநிதி
எஸ். பி. ஆர். சிவராஜன்
பல்கலைக்கழக மருத்துவ அதிகாரி

இந்தத் தப்பிச் செல்லலுக்கு முதல்தான் சதிப்புரட்சியில் சம்பந்தப்பட்டதாகச் சந்தேகிக்கப்படும் 43 பேர் கொண்ட பட்டியலை ஹுன்ஸென் தாக்கல் செய்து அவர்களைக் கைது செய்ய வேண்டியிருந்தார் என இராஜதந்திரிகளும், (C P P) இன் தகவல்களும் தெரிவிக்கின்றன. இதில் இணை உள்நாட்டு மந்திரியான சார்கெங்கும் அடங்குவார். ஆனால் பொலிசாரினதும், இராணுவப் பிரிவுகளினதும் விசுவாசத்தைப் பெற்றுள்ள அதிகாரிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க முயன்றால் ஆபத்துக்கள் விளையுமென இளவரசர் ரனாரிடா உட்பட

மூத்த அதிகாரிகள் தனிப்பட்ட முறையில் ஹுன்ஸென்னை எச்சரித்திருக்கிறார்கள். ஹுன்ஸென் அமைச்சரவை மாற்றத்தை மேற் கொள்ளுவாராயின் உண்மையான அதிகாரப் போர் வெடிக்கும். தாம் பயந்து போய் இருப்பதாக மக்கள் ஏற்கனவே உணர்ந்திருக்கிறார்கள் என்கிறார் சார்க்கெனின் விசுவாசி ஒருவர்.

பாதுகாப்பற்ற நிலைப் பாட்டை உணருகின்ற அமைச்சர் சாம் ரெயின்ஸி சின்னபின்னமாக இருந்த கம்போடியாவின் பொருளாதாரத்தை மீண்டும் நல்ல நிலைக்குக் கட்டியெழுப்பிய நிதி மந்திரி சாம்ரெயின்ஸி மூன்றாவது சக்தியாக வளர்ந்த ரனாரிடாவின் விசுவாசிகள் கட்சியான :பன்சின் பெக் கட்சி (Funcinpec Party) யில் தனது சகாக்களை மட்டுமன்றி கம்போடியா மக்கள் கட்சியிலுள்ள இரண்டு பிரிவினரையும் ஒரங்கட்டி விட்டார்.

ரெயின்சேயை விலக்குவதற்கு வருடத்தின் ஆரம்பத்தில் இரண்டு முறை மறுதலித்த சக்கரவர்த்தி நோர்டொம் சிஹானொக் (King Nordom Sihanouk) இப்போது விலக்கப்படுவதற்கு ஆகஸ்ற்றில் பச்சைக் கொடி காட்டி விட்டார். எனினும் இதனைச் செப்ரெம்பர் கடைசி வரை ஒத்தி வைக்குமாறு கேட்டுக் கொண்டுள்ளார். மேலும் வெளிநாட்டமைச்சர் இளவரசர் நோர்டொம் சேரிருவாடா Prince Norodom Sirrudah இணை உள்நாட்டு அமைச்சர் யூ கொக்ரி ஆகியோரின் பதவிகள் மாற்றஞ் செய்யப்படக்கூடிய வாய்ப்புக்களும் காணப்படுவதாக அவதானிகள் கூறுகின்றனர்.

முகமுறிவைத் தவிர்க்கு முக மாக அவர்களுக்கு அரசாங்கத்தில் வேறு பதவிகள் வழங்கப்படலாம் எஃகிறார்கள் உயர் அதிகாரிகள்.

சார்க்கெங்கை கைது செய்ய முடியாவிட்டாலும் அவருடைய இணை உள்நாட்டு அமைச்சர் பதவியைப் பறித்துவிட்டு மந்திரிப் பதவி இல்லாத துணைப் பிரதமர் பதவியுடன் விட வேண்டுமென ஹுன்ஸென் விரும்புகிறார் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன. ஆனால் நீண்ட காலமாகக் கம்போடிய மக்கள் கட்சியில் நிலவும் குழுச் சண்டையை மேலும் பகிரங்கப்படுத்தி விட வழி சமைக்கும்.

கம்போடியாவின் மக்கள் கட்சியைத் திரைமறைவில் ஆட்டிப் படைக்கும் வல்லமை கொண்ட தலைவரும், மிகவும் உயர் நிலையில் செயற்படும் பிரதமர் ஹுன் ஸென்னின் நீண்ட நாள் எதிரியுமான சியாலிம்மின் மைத்துனரே சார்கெங். கம்போடிய மக்கள் கட்சியின் கணிசமான அளவு பகுதியைக் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்கும் சியாசிம்மும், சார்கெங்கும் மற்றும் கட்சியின் உள்வட்டமும், சதிப் புரட்சிக்கான காரணத்தை ஆராய்வதன் மூலம் கட்சியைக் ஹுன் ஸென் பலவீனப்படுத்துகிறார் எனக் குற்றஞ் சாட்டுகிறார்கள். இந்தச் சூழ்நிலையின் அடிப்படையில் கம்போடிய மக்கள் கட்சியிலிருந்து ஹுன்ஸென் வலுக் கட்டாயமாக விலகிப் புதிய கட்சியைத் தோற்றுவிப்பதற்குத் தள்ளப்படுவதற்குரிய தருணத்தைப் பார்த்திருப்பதுதான் ஒரு விடயமாகக் கருதப்பட முடியும் என ஆய்வாளர்கள் கூறுகிறார்கள்.

வார் ஸ்ரேன் எக்கனமிக் ரிவியூ

கரப்பான் பூச்சிகளுக்கு எதிராக இயற்கை வழிப்போர்

நமது வீடுகளில் மிகவும் வெறுக்கப்படும் பூச்சி இனமான கரப்பான்களைக் கொல்ல பல வகை மருந்து தெளித்தல்களும் நச்சுப் பூசல்களும் நடப்பதுண்டு. ஆனால் நகரப்புறச் சூழலில் அறிவியலாளர்கள் இவற்றால் ஏற்படும் பக்க விளைவுகள் நெடுநாள் கணிப்பில் மனிதர்களுக்கு தீங்கு விளைவிக்கக் கூடிய என்று எச்சரிக்கின்றனர். இப்போது இயற்கை வழியில் கரப்பான் பூச்சிகளை அழிக்க இங்கு ஒரு சாதனத்தை அமெரிக் காவில் வோர் செஸ்டர் நகரில் இயங்கும் ஈகோசயன்ஸ் என்ற நிறுவனம் தயாரித்து சந்தைக்கு விட்டுள்ளது. இது தான் உலகில் முதன்முதலில் தயாரிக்கப்பட்ட இயற்கைவழிக் கரப்பான் பூச்சிக் கொல்லியாகும். பெங்கால் றோச் சேம்பர் என்று பெயரிடப்பட்டுள்ள அந்தப் பெட்டிக்குள் உலகில் எங்கும் மண்ணில் இருந்து பெறக்கூடிய மேடார்ஹிசியம் அணிசோபியே (Metarhizium anisopliae) என்ற பங்கசு வைக்கப்பட்டுள்ளது. அந்தப் பெட்டியினுள் கரப்பான் பூச்சி புகுந்ததும் அந்தப் பங்கசு அதில் அதன் உடலில் பட்டுவிடும். மீண்டும் அந்தக் கரப்பான் பூச்சி தனது கூட்டிற்குள் செல்லும்போது அங்குள்ள ஏனைய பூச்சிகளும் பங்கசுத் தொற்றுக்கு உள்ளாகும். இரசாயனப் பூச்சி கொல்விகள் அநேகமாகத் தின்றால் தான் சாவை உண்டாக்கும். ஆனால் இந்தப் பங்கசுவோ தொட்டால், பட்டால் கூட அந்தப் பூச்சியைக் கொன்றுவிடும். அந்தப் பங்கசு மனிதர்கள் வளர்ப்புப் பிராணிகள் மரங்கள் என்பவற்றிற்குத் தீங்கானவை அல்ல. விலை: 12 கொண்ட பெட்டி 8 டொலர்.

எஸ்தோனியா அமிழ்ந்த சோகக்கதை

எஸ்தோனியாக் கப்பல் கடலில் ஆழ்ந்த பின், உயிர் தப்பியவர்கள் அந்தப் பயங்கர அனுபவத்தை என்றும் மறவார். கடும் புயலில் சிக்கிய அம்மாபெரும் வாகனம் தாங்கிக் கப்பலிலிருந்து ''அவசரம் அவசரம்'' என்ற சொற்கள் மட்டுமே வானொலியில் பரப்பப்பட்டன. பின் இரவின் இருளில் உயிர் காக்கும் படகுகள் இறக்கப்பட்டன. பால்ரிக் கடலின் பனிக்கட்டி குளிரால் கதறும் குரல்கள். இரண்டாம் உலகப் போருக்குப் பின், ஐரோப்பாவில் நிகழ்ந்த மிகப் பெரிய கடற்பலி. 900-க்குமேற்பட்ட பயணிகள் இறந்தனர். 150-ச்கு மேற்பட்டோரே உயிர் தப்பினர். ''ரைற்றானிக்'' என்ற உல்லாசக் கப்பல் அத்லாந்திக் கடலில் மூழ்கியதை நினைவூட்டும் சம்பவம்இது. ஆனால் ''எஸ்தோனியா'' வின் சோகக் கதை வேறானது. இது தொழில் நுட்ப அதிசயமான படைப்புமன்று. குபேரச் செல்வர்களின் உல்லாசம் மிதக்கும் நகரமுமன்று. செலவு குறைந்ததும், சாதாரண மக்களும் கார்களும், லொறிகளும் ஏறி இளங்கும் போகும் மிதக்கும் ''பாதை'' என்னும் இப்போக்கு வரத்துக் கப்பல் எஸ்தோனியாவின் தலின் துறை முகத்துக்கும் சுவீடனின் ஸ்ரொக்ஹோம் நகருக்கு மிடையில் ஓரிரவில் ஓடும். மலிவாகப் பண்டங்களைக் கொள்வனவு செய்யப் போகும் மக்களே அதிகம். வழமையாகப் போய் வரும் பிரச்சனை இல்லாத கப்பல் யாத்திரை என்று கருதியவர்களுக்கு கடற் பயணத்தின் துன்பியல் நாடகத்தை நினைவு படுத்தியது இந்த நிகழ்ச்சி.

ஐரோப்பியக் கரையோரத் துறைமுகங்களுக் கிடையில் ஆட்களையும், வாகனங்களையும், புகையிரதங்களையும் ஏற்றிப் போகும் ''பாதை''க் கப்பல்கள் ஆயிரக்கணக்கில் சென்று வருகின்றன. ஆனால் எல்லோர் கவனத்தையும் இக்கப்பலின் சோகக்கதை ஈர்த்தது. சுவீடன், எஸ்தோனியா, ஃபின்லாந்து ஆகிய வட ஐரோப்பிய நாடுகளில் பல நாள்களுக்கு துக்க தினம் அனுஷ்டிக்கப்பட்டது. இந்நாட்டினரே இறந்தோரில் பெரும்பாலானவர்கள். நாடக அரங்குகள், நடன மண்டபங்கள் மூடப்பட்டன. சில காலவரையன்றி கதவடைத்தன. எஸ்தோனியரின் துயரம் வெகு அதிகமானது. ஒரு சட்டசபை உறுப்பினர் கூறினார்: ''இந்நிகழ்ச்சி சுப்பல் புறப்பட்ட எமது எஸ்தோனியா நாடும் கடலில் மூழ்கும் நிலையிலுள்ள தேசிய இனமே என்று பிறர் சுட்டக் கூடிய அவல நிலையை நினைவூட்டுகிறது'' என்று. சுவீடனை நோக்கி வந்த அக்கப்பலில் இறந்த சுவீடியர் தொகை 1809 இல் ருஷ்யாவுக்கு எதிராக நடந்த சவார் போரில் இறந்தோருக்குப் பின் மிகக் கூடிய தொகையாயிற்று. அந்த நாடு இதனைச் சற்றும் எதிர்பார்த்திருக்கவில்லை. திடீர்ப் பிரச்சினைகள் தீர்க்கும் நிலையங்கள் அவசரமாகத் திறக்கப்பட்டன. சில நாள்களுக்கு முன்னர் தலைநகரமான ஸ்ரொக்ஹோமுக்கு 200 கிலோ மீற்றர் மேற்கேயுள்ள லின்டிஸ்பேர்க்கில், நாட்டுப் பற்றுள்ள குடிகள் உள்ளூர் நோயாளர்கள் சிகிச்சை நிலையங்களில் சமையற்காரர் பற்றாக்குறையைப் போக்க சிரமதானம் செய்தனர். இந்தச் சிறந்த தொண்டர்களுள் 33 அரிய சேவை புரிந்தோருக்கு ''எஸ்தோனியா'' கப்பலில் பயணஞ் செய்ய இலவசப் பயணச் சீட்டு வழங்கப்பட்டது. அவர்களுள்



மரணத் தருவாயில்: பனி உறை கடலில் பல மணி நேரம் பரதவித்து உயிர் தப்பிப் பிழைத்தவர்கள் ஹெலிகளிலும், வள்ளங்களிலும் மீட்கப் படும் துயரக் காட்சி.

பால்ரிக் கடலில் நிகழ்ந்த புயல் நாடகம், சுவீடனையும் அதன் அயல் நாடுகளையும் உலுப்பியது.

யாருமே உயிர் தப்பவில்லை. ஐரோப்பா முழுவதும் ''பாதை'' க்கப்பற் போக்குவரத்தின் பாதுகாப்பை அதிகரிக்க வேண்டும் என்று வற்புறுத்தப்பட்டது.

சுவீடிய எஸ்தோனிய இணைப்பு நிறுவனமான எஸ்ற்னைன், கப்பல் ஆழ்ந்ததற்குக் காரணம் முற்பகுதியில் வாகனங்களை உள்ளே கொண்டு வரும் வழிக்கதவை அலைகள் அடித்துத் திறந்ததால் நீர் உட்புகுந்து இருக்கலாம் என்ற கருத்தை மறுத்தனர். மூழ்கிய கப்பலை முற்றாக ஆராய்ந்த பின்னரே முடிவுக்கு வரலாம் என்றனர். ஒக்ரோபர் முதல் வார இறுதியில் ஃபின்லாந்து ஆய்வாளர் 80 மீற்றர் ஆழத்தில், எஸ்தோனியா கடலடியில் கிடப்பதைக் கண்டனர். சுவீடிசு அதிகாரிகள் கப்பலின் முற்பகுதிக் கதவு புயலின் வேகத்தால் அடித்துப் பிளக்கப்பட்டது எனக் கண்டனர். 22,000 தொன் நிறையுள்ள இந்த உருவக் கோட்டையை மேலே தூக்கிப் பரிசோதனை செய்வதா? அல்லது கடலடியில் மூழ்கி, மேற்றளத்தின் கீழ்ப் பகுதிகளில் அகப்பட்டிறந்தோரின் உடல்களைப் பாதுகாப்பதா என்று சிந்தித்தனர். உயிர் தப்பியவர்களைச் சுவீடன், பின்லாந்து மருத்துவ நிலையங்களுக்கு எடுத்துச் சென்று சிகிச்சை அளித்தனர். அவர்கள் கூறும் கதைகள் மயிர்க் கூச்செறியச் செய்வன. பின் இரவு 1 மணியளவில் கப்பல் ஒரு பக்கம் சாயத் தொடங்கியது. 15 நிமிடங்களில் குடைசாய்ந்துவிட்டது. மிகத் தைரியசாலிகளே கீழ்ப்பகுதிகளில் இருந்து பாதுகாப்பாக மேற்பகுதிக்கு வந்தனர். உயிர் தப்பியோரில் பெரும்பாலானோர் வாலிபர்களே. 17 வயது இளைஞன் ஒருவன் தான் கீழ்த் தளத்தில் இருந்து மேல் தளத்திற்கு வரும் படிகளில், பயத்தால் மரத்துப் போய் ஏற முயன்று கொண்டு கைப்பிடிக்கின்ற கிறாதிகளைப் பிடித்து நின்ற முதியோரையும் கதறும் பிள்ளைகளையும் தாண்டி வந்ததாகக் கூறினான்.

கடலில் நிகழ்ந்த துன்பியல் நாடகத்தின் அங்கங்கள்

உயிர் குடித்த பயணம்: (சுவீடனின் உள்ளூர் நேரங்களில்)

மாலை 6. 00 மணி: ''எஸ்தோனியா'' கப்பல் தலைநகரிலிருந்து ஸ்ரொக்ஹோம் நோக்கிப் புறப்படுகிறது. சுவீடிய வானியல் ஆராய்ச்சிக் கழகம் புயற் காற்றுக் கடலில் 17, 19 அடி உயரமான அலையை உண்டாக்கலாம் என்று அறிவிக்கிறது.

நள்ளிரவு 12. 10 மணி: உட்பகுதித் தொலைக்காட்சியில் ஒரு பொறியியலாளர் கப்பலின்கீழ்ப் பகுதியில் சாமான் ஏற்றும் வழிக்கதவின் ஊடாகத் தண்ணீர் உட்புகுவதை அவதானிக்கிறார். கப்பல் பணியாளர்கள் நீர்ப் பம்பிகளை இயக்குகிறார்கள்.

நள்ளிரவு 12. 20 மணி: கப்பல் இடப்பக்கம் கடுமையாகச் சாய்கிறது. பிரயாணிகள் கடுஞ்சத்தத்தோடு விழுவதை அவதானிக்கின்றனர். அடித்தளத்தில் இருந்தவை கார்கள், லொறிகளாய் இருக்கலாம். பயணிகள் உயிர்க்காப்புப் படகுகளுக்கு ஓடிச் செல்லும் குழப்ப அவல நிலை ஏற்படுகிறது.

இந்த ஆவணக்காப்பகம் Tamileelam Archive

அதிகாலை 12. 24 மணி: ''மேதினம்'' ''எஸ்தோனியா'' ''நாங்கள் மூழ்கிக்கொண்டிருக்கின்றோம்; இருட்டு உண்டாகி விட்டது'' இக் குரலை அப்பின்லாந்தின் ஒரு தீவிலுள்ள கரையோரக் காவல் நிலையம் ஒலிவாங்கியது. இது ஒன்றே ஆபத்து ஒலி; அதன் பின் ஏதும் வரவில்லை.

அதிகாலை 12. 30 மணி: அதை நாடிச் சென்ற அப்பின்லாந்து உயிர்காப்புச் சேவையினர்க்குக் கப்பலுடன் ராடர் தொடர்பு அற்றுப் போகிறது.

அதிகாலை 12. 45 மணி: பால்ரிக் கடலின் உறை பனிக்கட்டியில் எஸ்தோனியா மறைகிறது. சில பயணிகள் பாய்ந்து விழுகின்றனர். ஆனால் பெரும்பாலானவர்கள் கப்பலின் நடுப் பகுதிகளில் அகப்பட்டு விடுகின்றனர். 200 அடி ஆழக்கடல் அடித்தளத்திற்குச் செல்கின்றனர்.

அதிகாலை 03. 35 மணி: முதலில் உயிர் தப்பியவர்கள் மீட்கப்படுகின்றனர். வேறு பலர் ஆறு மணி நேரம் உறை பனிக்கடலில் தத்தளிக்கின்றனர். 909 பேர் வரையில் இறந்து விட்டனர் போலும்.

மேற்றளத்தில் நிலை சற்று ஒழுங்காக இருந்தது. கப்பலில் பான்ட்வாத்தியக் குழுவினர் உயிர் தப்பும் உறைகளையும், காற்றடித்த மிதவைகளையும் மற்றையோருக்கு வழங்கினர். தமக்கென எதையும் வைத்திருக்க வில்லை; அந்த நால்வரில் ஓர் இசைவானரே தப்பினார். 29 வயது சுவிடியர் தாமும் சாரான் என்னும் மற்றொரு சுவிடிசு பெண்ணும், சாயும் கப்பலில் இருந்து பாயக் கூடிய இடம் வரை ஒருவருக்கொருவர் உதவி செய்து சென்று, கடலில் பாயுமுன் ஸ்ரொக்ஹோம் நகரில் இராப் போசனத்திற்குத் திகதி குறித்தனர் என்றும் இருவரும் உயிர் தப்பி விட்டனர் என்றும் கூறினார். கப்பலின் பணியாளர்கள் அமைதியாய் நின்று அளப்பரிய சேவை செய்தனர். ஆயினும் அவர்கள் வெகு சில றப்பர் உயிர்க்காப்பு மிதவைகளை விரித்துக் கடலில் மிதக்க விடக்கூடிய தாயிருந்தது. பனி உறையும் கடலில் 20 அடி அலைகளால் எற்றுண்டு நீந்திக் கொண்டிருந்தோர், இருளில் உலங்குவானூர்திகள் உயிர் காக்க வருவதை அவதானித்தனர். உதவி வருமுன் அகன்ற றப்பர் மிதவை ஒன்றில் இருந்த 16 பேரில் 10 பேர் இறந்துவிட்டனர். ஒருவர் குளிர் வருத்தம் தாங்காது கடலில் பாய்ந்து விட்டார். மற்றொருவர் மிதவையில் தப்பிவந்த ஓர் ஒய்வு பெற்ற தச்சுத் தொழிலாளி. தாம்

தமிழில்
காவல் நகரோன்

குளிரால் விறைத்து அரை மயக்கத்தில் கடலில் மிதந்த போது தம்மை மிதவையில் ஏற்றிய இளம் பெண் தானே மிதவையில் உயிர் துறக்கக் கண்டாராம். பின்லாந்துக் கரையோரக் காவலர், "நாம் உயிர் காப்புச் சேவை ஆரம்பித்த போது மிக நம்பிக்கையற்ற சூழ்நிலையில் தான் தொடங்கினோம்" என்கிறார்.

வரலாற்றிலேயே மிகச் செலவு வாய்ந்த கப்பல் உடைவு "எஸ்தோனியா" என்றே கணிக்கப் படலாம். 1987 இல் ஆங்கிலக் கால்வாயில் மூழ்கிய "சுதந்திர வர்த்தக முயற்சி முன்னோடி" கப்பலில் மடிந்தோர் 193: ஆயுள் காப்புறுதி நிறுவனத்தில் கோரப் பட்ட தொகை 68 மில்லியன் டொலர். அதற்கு மேலே எஸ்தோனியா மூழ்கிய நட்டம் மிகப்பெரிய தாயிருக்கும். 1987 இன் "பாதை"க்கப்பல் துன்பியல் நாடகம், வாகனம் தாங்கிக் கப்பல்களின் பாதுகாப்புப் பற்றியே மீளாய்வு செய்யக் காரணமாயிற்று. இந்தப் புதிய விதிகள் சென்ற ஒக்ரோபர் முதல் வாரத்தில் நடைமுறைக்குவர இருந்தன. அத்திகதிக்கு இரு நாள்களுக்கு முன்பே "எஸ்தோனியா" மூழ்கியது.

பின்லாந்தின் துர்க்கு நகரத்தில் இருந்து சோனி எரிக்சனும் அன்ட்று நாகோர்கியும், ஸ்ரொக்ஹோமிலிருந்து மார்க்கஸ், மாப்பியும் கெவின் பிலிங்ஹோற்றும் தலினிலிருந்து லீசா ட்றேயும் எழுதியவற்றின் சாரம்.

* *

சிறகு முளைத்த காதல்

இத்தாலியின் அன்கோனா நகரம் அவ்வளவாகச் சுற்றுலா முக்கியத்துவம் வாய்ந்த இடமாகக் கருதப்படாத ஓர் இடமாகும். அப்படியான இடத்திற்குப் பிரிந்த சோவியத்தின் குடியரசுகளில் ஒன்றான உக்கிரேய்னின் கீவ் நகரில் இருந்து உல்லாசப்பயணிகள் வருவது ஏன்? கீவ் நகரில் இருந்து மட்டும் தான் அட்றியடிக் துறைமுக நகரான அன்கோனாவுக்கு நேரடி விமானச் சேவை உள்ளது. அந்தச் சுற்றுலாப் பயணிகள் அநேகமாக உக்கிரேனிய ருஷ்யப் பெண்களாகவே உள்ளனர். அவர்கள் காற்பக்கம் கட்டையான ஆடையுடன் அன்கோனாவுக்கு வந்து சிறிய கிராமப்புற ஹோட்டல்களில் தங்குகின்றனர். அவர்கள் அப்படி வந்து தங்கியதும் உள்ளூர் ஆண்கள் அங்கு வருகை தருகின்றனர். அந்தச் சுற்றுலாப் பயணிகள் ஒரு வாரம் அளவு தங்கியபின்பு மீண்டும் சொந்த ஊர் திரும்பும் பொழுது அநேகமான சொகுசுப் பொருள்களை வாங்கி உடன் எடுத்துச் செல்கின்றனர்.

இவ்விதம் வந்தவர்களில் பலர் விலை மகளிராக நடந்தமைக்காக காவல்துறையால் கைது செய்யப்பட்டு உள்ளனர். இப்படியான பயணிகளை ஏற்றிவரும் விமானங்களை வானூர்தி நிலைய அதிகாரி ஒருவர் வேடிக்கையாகக் காதல் விமானங்கள் என்று வர்ணித்தார்.

சரஜிவோவை நினையுங்கள்!

உறைபனிக்காலம் வருகிறது, துன்பம் தொடர்கிறது - வெளி உலகம் மிக்க தூரத்தில்.

போர் வேறொருவகை இராஜ தந்திரத்தின் தொடர் எனின் சரஜிவோ எவ்வாறு அமையப்போகிறது? அண்மையிலுள்ள மலைகளில் பனிக் கட்டிகள் விழுந்து கொண்டிருக்கும்போது, ஐ. நா. படையின் மீது தாக்குதல் நடத்தியதற்குப் பதில் அடி கொடுக்கு முகமாக, தலை நகருக்குக்கிட்ட உள்ள சேர்பிய நிலைகள்மீது நேட்டோ போர் விமானங்கள் நாலாவது தடவையாகக் குண்டுத் தாக்குதல் நடத்தின. போர் விமானங்கள் சரஜிவோவுக்கு மேற்கே 11.3 கி. மீ. தொலைவிலுள்ள சேர்பிய நிலைகள் மீது வன்மையாகத் தாக்கி ஒரு தாங்கியை நாசமாக்கின. நான்கு வெவ்வேறு தாக்குதல்களில் இரு பிரெஞ்சு இராணுவத்தினர் கொல்லப்பட்டும், ஒருவர் ஆபத்துக்குள்ளானதையும் தொடர்ந்து, முன்னாள் யூகோஸ்லாவிய அதி உயர் ஐ. நா. அதிகாரியான (Yasushi Akashi) யாசுஷி அகாசியால் அதிகாரமளிக்கப்பட்ட நடவடிக்கையாகும் இது. சரஜிவோவின் புற நகர்ப்பகுதியான செட்றெனிக்கில், பொஸ்னியன் சேர்பியர்களுக்கும், பொஸ்னிய அரசபடைகளுக்கும் இடையில் கடும்போர் செப்ரெம்பர் 18 இல் தொடங்கியபோது, சமாதானக் காவலர்கள் நடுவில் அகப்பட்டுக்கொண்டார்கள். லெப். ஜெனரல் சேர் மைக்கேல் றோஸ், பொஸ்னியாவிலுள்ள ஐ. நா. படைக் கொமாண்டர், போருக்குத் தூண்டுதல் கொடுத்தமைக்காகக் குற்றஞ் சுமத்தினார். அவர் போர் நிறுத்தத்தை மீறினால் சேர்பியர்களைப் போல நேட்டோவின் பதில் நடவடிக்கைக்கு முகம் கொடுக்க வேண்டிவரும் என்று எச்சரித்துள்ளார்.

இடைப்பட்ட வேளையில் பொஸ்னியாவுக்கான எல்லையை பெல்கிறேட் மூடியதும், ஐ. நா. பாதுகாப்புச்சபை, சேர்பியர் மீது விதிக்கப்பட்டிருந்த தடைகள் சிலவற்றை நீக்கி விட்டது. சிவில் விமானப் போக்குவரத்துக்கான தடை 100 நாள்களுக்கு விலக்கப்படும். அப்போது சேர்பியர்கள் சர்வதேச விளையாட்டுக்களையும், கலாசாரத் தொடர்புகளையும் மீளத் தொடங்கலாம். சபை பொஸ்னிய சேர்பியர்களால் வட பொஸ்னியாவில் இன அழிப்புப் பிரச்சாரப் புதுப்பித்தலை வன்மையாகக் கண்டித்தது 3,000 முஸ்லிம்கள் அவர்களின் வசிப்பிடங்களிலிருந்து விரட்டியடிக்கப்பட்டனர்.

சரஜிவோவைப் பொறுத்தளவில் என்ன நடைபெறுகிறது? பொஸ்னிய சேர்பியத் துருப்புக்கள் மீண்டும் தங்களுடைய பிடியை ஒரு நகரின் மீது இறுக்கியுள்ளனர். அந்த நகருக்கு மின்சாரம், எரிவாயு, தண்ணீர் ஆகியவற்றை வழங்க மறுத்துள்ளனர்.

கடந்த வியாழன் வானொலி மூலம் சரஜிவோ நகருக்குப் புறத்தே நேட்டோப் போர் விமானங்கள் மீண்டும் தாக்கியதாகக் கேட்டோம், நடந்ததைப்பற்றியும், வரப்போகிறதைப் பற்றியும் சித்திரிக்கிற படமான "Silent Gun Powder" என்ற திரைப்படத்தை இயக்கிய (Bato Cengic) பாட்டோ சென்ஜிக் வெளிநாட்டு ஒலிபரப்பு நிலையம் ஒன்றிலிருந்து தாம் கேட்டவற்றை எமக்கு விபரமாகக் கூறினார்.

ஆசா அல்லது இன்டிகே என்று வேறு பெயரால் வழங்கப்படும் சிற்றுண்டிச் சாலையில் அதைப்பற்றிக் கேள்விப்பட்டோம். ஒரு பக்கம், மறுபக்கத்தைத் தாக்கிய காரணத்தால் ஐ. நா. படைகளுக்கும், பொஸ்னிய சேர்பியத் தலைவர் றடோவன் கராடிக்லிக் அவர்களின் பையன்களுக்குமிடையில் மோதல்கள் ஏற்பட்டதைப் பற்றியும் அறிந்தோம். சரஜிவோவுக்காகவோ அல்லது சரஜிவோ மக்களுக்காகவோ அவர்கள் கையுறைகளைக் கழற்றவில்லை.

அவான் றமிக் புகழ்மிக்க ஒவியர்களில் ஒருவர். "வேறெங்காவது போய் மனிதர்களைப் போலச் சண்டை செய்யாமல் எங்களை மூட்டைப் பூச்சிகளைக் கொல்வது போல் கொல்கிறார்களே" என்று குறை கூறினார். "அவர்கள் எங்கள் அமைதியைக் குலைக்கிறார்கள்." சரஜிவோ அந்நியர்களிடையே நடக்கும் யுத்தத்தைப்

பற்றிப் பொருட்படுத்துவதில்லை. ஏனெனில் இருசாராரும் எங்களைப் பொறுத்த மட்டில் வித்தியாசமில்லை. எம்மைச் சுற்றியுள்ள ஒன்றாவது அதாவது நெருங்கிய வெளிப்படையான துன்பங்களைத் தவிர எங்களுக்கு ஒன்றுஞ் செய்யப் போவதில்லை. பல மாதங்களாக அற்ப ஆனால் ஒன்று சேர்க்கப்பட்ட பருக்கைக்காகக் குழுமியிருந்த புறாக்களை விரட்டியதையே நேட்டோ விமான ஓட்டிகள் எங்களுக்கு மேலாகச் செல்லும் இரத்தம் உறையச் செய்யும் சத்தத்தால் செய்ய முடிந்தது.

எவ்வாறாயினும் இங்கொன்றும், அங்கொன்றுமாகக் குண்டுகளை வீசியதைத் தவிர வேறொன்றும் நடக்கவில்லை. அன்றொரு நாள் இதுவரை சேதமாக்கப்பட்டவை பற்றிய பட்டியலை இட்டுக் காட்டினார் ஓர் அனாமதேயப் போர்வழி. இரண்டு பழைய இராணுவ வண்டிகள் கொறஸ்டிக்கு அருகே மறைத்து வைக்கப்பட்டிருந்த சில ஆயுதங்கள், அரும் பொருட்காட்சிச் சாலையில் வைக்கத் தகுந்த 2 ஆம் உலக யுத்தத்தின் போது பாவித்த உரவு இயந்திரம் மற்றும் ரி 55 ரக கவசவாகனம் கொறாஸ்டிக்குக் கிட்ட மூன்று குண்டுகள் வெடிக்கவில்லை. சரஜிவோவில் இருக்கும் நாங்கள் புகழ் பூத்த கணித விற்பன்னர் அல்லர். ஆனால் அவ்வளவு சிறிய பலாபலனுக்கு இது மிகப்பெரிய செலவினம் எனக் கொள்ளலாம்,

சரஜிவோவில் இருப்பவர்கள் பற்றிக் குறிப்பிடத்தக்க சிலவற்றை வானொலி மூலம் சொல்லியிருக்கலாம். எங்களுக்காக ஒன்றன் பின் ஒன்றாக அவர் செய்வதாக வாக்களித்தார்கள்; அதுபற்றி எங்களுக்கு ஒன்றும் தெரியாது. ஏனெனில் நாங்கள் சுவலைப்பட வேறு விஷயங்கள் உள்ளன. இப்போதும் சூரியன் கஞ்சத்தனமாகத்தனது ஒளியைப் பரப்புகிறது. ஆனால் நகருக்கு மேலாக இக்மான மலையில் முதல் உறைபனி ஏற்கனவே விழுந்துவிட்டது.

நகரத்தில் உள்ளவர்களின் மனதில் ஒன்றும் இல்லைப் போலும். அதனால் அவர்கள் அதைப்பற்றி ஒன்றும் கூறவில்லை. மேலும் உறைபனியும், மேகமூட்டங்களும் காணும்போது நாங்கள் பெருந் துயரில் விடப்படலாம். முடிவில் லாமல் அதிகரித்த மேகமூட்டமான விடியற் காலையை எதிர்

பார்த்தும் இன்னொரு நாளுக்காகக் கண்களைப் பலவந்தமாக அகலத் திறந்தும் இருப்போம். இந்த வாரம் எனது 9 வயது மகன் சரஜிவோவில் எஞ்சியுள்ள கடைசித் தொலைபேசி மூலம் ''இது நீங்கள் இல்லாமல் கொண்டாடும் மூன்றாவது பிறந்த நாள். நீங்கள் இங்கிருப்பதாக ஒவ்வொரு முறையும்

தமிழில்:
திரு. வி. அரியநாயகம்

வாக்குப் பண்ணியுள்ளீர்கள்'' என்று கூறினான்: எனது மூத்த மகன் இளைஞனாக வளர்ந்து விட்டவன். ''அப்பா சுவலைப்பட வேண்டாம் எனக்கு எல்லாம் விளங்கும்'' என்றான். எனது மனைவி ஒன்றுமே சொல்லவில்லை. அவளுக்குக் கோபம் போலும்.

இந்தப் 14 வயதுப் பையனுக்கு இதுவெல்லாம் என்னவென்று தெரியும்? அவன் விளங்கிக் கொள்வதுபோல நானும் சந்தோஷமாய் இருக்க வேணுமா? அவன் தான் சரஜிவனே அல்ல என்று விளங்கிக் கொள்கிறான். மன்னிப்பு என்பது என்ன என்று தெரியாதவன் வெகு விரைவில் வெறுப்பு என்பதையும் அறிந்து கொள்வான். அங்கேயுள்ள துயரம் மிக்க உலகில் தானும் ஒருவன் என்பதை அது உணர்த்துகிறது. அந்த உலகுக்கு சரஜிவோ ஒருபோதும் உரியது ஆனதில்லை. அதில் சரஜிவோவுக்கு நம்பிக்கையும் கிடையாது. சரஜிவோ திட்டவட்டமாகப் புறக்கணிக்கப்படுவதைத் தெளிவாகத் தெரியமுடிகிறது. ஏனெனில் அது வெறுப்பதில்லை அதனால் தான் போப் அங்கு போவது அவசியம் இல்லை என்பது விளங்கக் கூடியது. எங்களுக்கு மன்னிப்புத்தேவையில்லை. அதற்காக ஒருவர் நியூயோர்க், ஜெனிவா, பிறசெல்ஸ், பாரிஸ், லண்டன் மற்றும் மொஸ்கோவுக்கு செல்ல வேண்டும். அங்கே உயிரின் இரட்சிப்புக்காகப் பிரார்த்திக்க வேண்டும்; துரதிர்ஷ்டவசமாக இருப்பினும் ஒரு நாள் மன்னிப்புக்கான பிரார்த்தனைகள் எமது குழந்தைகளுக்குத் தேவைப்படும்.

எங்களுக்கு வழிபாடுகள் தேவையில்லை. நாங்கள் ஐநா இராணுவக்கட்டளை அதிகாரிகள், சேர் மைக்கல் றோஸ்இன் ஆட்கள், எவ்வாறு சரஜிவோமீது குண்டு போடுவார்கள் என்று பார்க்கக் காத்திருக்கிறோம். அதுதான் அவருக்கு வழங்கப்பட்ட ஆணையின் குறிக்கோள் என்று சொல்லப்பட்டது. போதாத இராணுவத் தளபாடங்களை உடைய அரச படையால் மீறப்பட்ட போர்நிறுத்தம் நகரைச்சுற்றி நிலைகொண்

டுள்ள கராடிஸ்க்கின் படைப் பலத்தை எப்பொழுதாவது சமப் படுத்துமா? எங்களை முற்றுகை இட்டவர்களுக்குத் துணையாக எங்களையும் ஆக்கிக்கொள்ள வேண்டும். இதன் கருத்து என்ன வெனில், இன ஒழிப்புப் பற்றிய முழுக்கதையும் குற்றச்சாட்டுக் களும், ஆக்கிரமிப்புக்களும் முற்று முழுதாக அகற்றப்படவேண்டும். பிறகு போர்முனைக்கு இழுத்துச் செல்லப்பட்டு நேட்டோ விமானங் களின் தாக்குதலின் இலக்குகளுக்கு விடப்படவேண்டும்,

பாலம் றோஸ் அவர் மையக் கருத்தைக் காணத் தவறுகிறார். அசாவில் இருந்துகொண்டே அடுத்த நாளைக்கான திட்டம் பற்றிச் சுற்றிவர இருந்து கதைத் துக்கொள்ளும் போது, வெளியே காத்திருப்பது அவருக்கு நல்லது. முதலாவதாகத் தண்ணீருக்குப் போவதா அல்லது உலகப் புகழ் பெற்ற ஓவியர் (Braco Dimitrije vic) என்பவரின் காட்சிக்குப் போவதா? அன்றேல் சைக்கிளுக்கும் உருளைக்கிழங்குக்கும் முக்கியத் துவம் கொடுக்கும் காட்சிக்குப் போவதா இன்றேல் குடிக்கப் போவதா?

உங்களுக்கு உண்மையைச் சொல்லப்போனால் இந்தாள்களில் பார்க்கும் ஒவ்வொரு புத்தகத்தி லும் காலப்போக்கிலும் மதிய போசனத்தைச் சமைப்பதற்கு ஏதாவது இருக்கிறதா என்பதைப் பார்ப்போம். அதன்பிறகுதான் றேடியோவைக் கேட்காத நேரத் தில் அவற்றை லாபிப்போம். புத்த கங்கள் இல்லாத சமயத்தில் தண் ணீரைச் சேகரித்ததும் இரவு வந்து விடும். அப்போ சரஜிவோவுக்கு வெளியே உள்ள மலைப்பகுதியில் (Unprofor) க்கும் கராடிஸ்க்கின் பையன்களுக்கும் இடையே பரஸ் பரம் இலக்கின்றிப் போடப்படும் குண்டுச் சத்தங்களைக் கேட்போம். பிறகு றோஸ் நாங்களும் அவர் களும் ஒன்று என்பதால் அந்தப் போர் விமானங்களை எம்மீது திருப்ப விரும்புகிறார் என்று அறிகிறோம்.

பாயும் உடும்பை நாய் காப்பாற்றியது

ஜமேக்காவில் காணப்பட்ட பாயும் உடும்பு என்ற பெயர் கொண்ட விலங்கு முன்பு அருகிவிட்டதாக அறிவியலாளர்கள் கடந்த 40 ஆண்டுகளாகக் கருதினார்கள் ஆனால் 1990 இல் ஒரு வேட்டைக்காரனின் நாய் அந்த வகை உடும்பு ஒன்றைப் பிடித்தது. அதைத் தொடர்ந்து ஆரம்பிக்கப்பட்ட முயற்சியின் பயனாக அண்மையில் டைக்ஸாசிலும் இந்தியானாவிலும் உள்ள வனவிலங்குக் காட்சியகங்களில் அந்த வகை உடும்புகள் 12 இனப் பெருக்கத்திற்காக வளர்ப்பதற்கு வைக்கப்பட்டுள்ளன. இன்னும் சில ஆண்டுகளில் அமெரிக்காவில் அந்த உடும்புகளை ஓரளவு தொகையினதாக காடுகளிற் காணலாம் என்று அறிவி யலாளர்கள் நம்புகின்றனர். அந்த உடும்பு வகையைப் பொறுத்த வரை அவை சுற்றுலாத்துறை வளர்ச்சியால் அருகின என்று சொல்ல முடியாது. அவை தம் இரையாகக் கொள்ளும் வேறு மிருகங்களின் இரை உண்வேகத்திற்கு ஏற்றதாகத் தம்மை இனப் பெருக்கம் செய்து கொள்ள முடியாமல் போனதால் தான் அரு கும் ஆபத்தை அடைந்தன.

உண்மையாக இதைத் தனி மனிதனுக்குரியதாக எண்ண வில்லை. உண்மையில் எமது தோலுக்குள் ஊடுருவுவது என்ற வற்றாலும் நாங்கள் எல்லோரும் ஓரினம் என்பதாலும் றோஸ் இதைச் செய்கிறார் என்பதே. அவருடைய குண்டுவீச்சுக்கு கடும் எதிர்ப்பைத் தெரிவிக்க எங்களாலும் இயலாது. எல்லாவற்றுக்கும் தப்பி இருப்பது போல் இதற்கும் தப்புவோம். ஆனால் அவருக்குத் தெளிவாகச் சொல்லவிரும்புவது மலைகளில் இருந்து கொண்டு கண்மூடித்தன மாகப் பெண்கள் குழந்தைகள் என்று கொலைகள் செய்து, தண்ணீர் மின்சாரம் மற்றும் எரி வாயு வளங்களைத் தமக்கு விரும் பியவாறு நிறுத்தியவர்களைப் போல அல்ல நாங்கள்.

நாங்கள் அவர்களைப் போலல் லர். ஒருபோதும் அப்படி இருக்க வில்லை. (இனிமேலும் அப்படி இருக்கப் போவதில்லை) இவை எல்லாவற்றையும் விருந்துக் கழைத்து தேநீர் அருந்தும் போது அவருக்கு அன்பாக வெளிப்படுத்த விரும்புகிறோம். ஆனால் போர் முனையில் அல்ல, வேறு வழியில் லையேல் அங்கே செல்லவும் தயங்க மாட்டோம். அவர் ஒன்று மட்டும் செய்ய வேண்டியது. அது எங் களை நீர் பெறும் இடத்துக்கு நீண்ட தூரம் சென்று வரிசையில் நின்று தண்ணீர்த் தாங்கிகளில் நீர் நிரப்ப விடவேண்டும். பிறகு பிறகு சேகரிக்க கொஞ்ச அவகாசம் தர வேண்டும். ஆதலால் மீதமிருக்கிற புத்தகங்களை எரிக்க அவசியம் இருக்காது.

எங்களுக்காகக் காத்திருக்கும் வேளையில் அவர் காட்சிப் பொருள் களாக வைக்கப்பட்ட சைக்கிள், உருளைக்கிழங்கு மற்றும் காவ்கா வைப் பார்வையிடலாம். சைக் கிள் உருளைக்கிழங்கு ஆகிய வற்றை எப்படிப் பாவிக்கிறோம். காவ்கா அங்கே என்ன செய்கி றார் என்பதையும் சொல்லலாம். இவைகள் யாவும் எங்களால் எப் படி நோக்கப்படுகிறது என்று இப் போதே சொல்லலாம். ஏனெனில் இது உயிர் வாழ்வதற்கான செயல் கள். எமது சொந்த எண்ணம் சர ஜிவோவில் நாங்கள் எல்லோரும் எண்ணக் கலைஞர்கள். இதை நம் பாதவர்கள் இப்போதும் சரஜிவோ எங்குள்ளது என்று நினைப்பவர் கள். கட்டாயமாக எம்மைத் தரி சிக்க வேண்டும்.

ரைம், ஒக்ரோபர் 3, 1994

கடந்த காலத்தின் இறுதி நாள்

பேர்லின், தலின் நிகா ஆகிய இடங்களிலிருந்து கடந்த மாதம் ருஷ்ய இராணுவ வீரர்களின் தாயகம் திரும்பலானது அரை நூற்றாண்டுப் பனிப்போரை ஒரு முடிவுக்குக் கொண்டு வந்தது. ஒரு காலத்தில் ஆப்கானிஸ்தான் தொடக்கம் செக்கோசெலவாக்கியா வரையுள்ள பல நாடுகளிலுமிருந்து திரட்டப்பட்டு ஆயுதபலம் மிக்கதாய், வெளிநாட்டின் இராணுவப் பேராதிக்கத்தின் சின்னமாய் விளங்கிய சுமார் ஒரு மில்லியன் படையானது, படிப்படியாகத் தனது எண்ணிக்கையிலே குறைந்து இந்த இறுதி வாபசோடு முற்றாக ஜேர்மனிய பால்டிக் மண்ணிலிருந்து விலகியது. ஐம்பதாண்டுகளின் பின்பு ஏற்படும் பிரிவாயிற்றே என்று அதற்காக யாரும் ஒரு கண்ணீர்த் துளியைக் கூடச் சிந்தவில்லை. பெரும் சடங்கெதுவும் இடம் பெறவுமில்லை. "வரலாற்றின் அடிச்சுவடு பாதிக்கப்படும் அபூர்வமான வேளைகளில் ஒன்று என்று" ருஷ்ய வரலாற்றாசிரியரான லியுகொபலேவ் இச்சம்பவம் பற்றித் தமது கருத்தைத் தெரிவித்தார்.

ஒரு காலத்தில் எஸ்தோனியா லத்வியா, லிதுவேனியா ஆகிய பகுதிகளில் 2,00,000 ருஷ்யப் படையினர் நிலை கொண்டிருந்தனர், ஆனால் இம்மாதத் தொடக்கத்தில் இப் பகுதிகளிலிருந்து ஒரு சில நூற்றுக்கணக்கானாவர்களே மாஸ்கோ செல்லும் றயில் வண்டிகளில் தம் தாயகம் நோக்கிப் பயணமாவதைக் காண முடிந்தது. அமைதியான பயணம்-பிரியா விடைகளோ, பெருஞ் சடங்குகளோ இடம் பெறாத பயணம். இவர்கள் போன பின்பு லிதுவேனிய ஜனாதிபதி லெனாட், "எங்கள் வரலாற்றிலே மிகுதியும் கவலை தந்த அத்தியாயம் ஒன்று இன்று வெற்றியடைந்தது. இங்கு ருஷ்யத் தலைவர் யெல்சினே நேரில் வந்து பிரியாவிடையிற் கலந்து கொண்டார். அவர் ஜேர்மனியப் பிரதமர் ஹெல்மட் கோல் அவர்களுடன் 7,000 ருஷ்ய வீரர்கள் போரில் மரணமடைந்தோர் நிரந்தரமாகத் துயிலுகின்ற இடுகாட்டிற்கு விஜயம் செய்தார். அவரின் விஜயம் உருக்கத்தை மிகுவிப்பதாயிருந்தது. "ஜேர்மனிய மண்ணினை ஏறக்குறைய 3,20,000 ருஷ்யப் படை வீரர்கள் தமது நிரந்தர துயிலுக்கு இடமாக்கிக் கொண்டார்கள். அவர்களின் வீரசாகசம் இடம் பெறாதிருந்திருப்பின் ஐரோப்பா என்ற ஒன்றே இன்று இருக்க முடியாது. ஜேர்மனியும் வளத்தில் கொழிக்க வாய்ப்பு நேர்ந்திராது" என்றார் யெல்சின்.

பனிப்போர் முடிந்து பேர்லினில் இருந்து மறக்கமுடியாத பகுமை நினைவோடு ருஷ்யப் படைவீரர்கள் மலர்க்கொத்தை ஏந்திய கைகளை அசைத்து பிரியாவிடை பெறுகின்றனர்.

டன் முடிகின்றது" என்றார் லத்வியாவிலேயுள்ள டோம் தேவாலயத்திலே வழிபாட்டாளர்கள் கூடி நின்று 1940 தொடக்கம் சோவியத் படை தமது நாட்டினை ஆக்கிரமித்து இணைத்ததனால் வதைக்கும், மரணத்திற்கும் உள்ளானவர்களுக்காகப் பிரார்த்தனை நடத்தினார்கள்.

ஜேர்மனிய சர்வாதிகாரியான ஹிட்லரின், பேர்லினில் (ஜேர்மனியின் தலைநகர்) 1945 இல் நடந்த பெரும் போரிலே ருஷ்யா மாபெரும் பிரியா விடை வைபவம் இடம் பெற்ற அன்று காலை ஹெல்மட் கோல் ஜேர்மனியை 1990 இல் ஒன்றிணைப்பதிலே ருஷ்யர் மேற்கொண்ட பங்களிப்பினைப் பாராட்டினார். அதே வேளை கிழக்கு ஜேர்மனியை மேற்கு ஜேர்மனியிலிருந்து பிரித்துப் போக்குவரத்தைத் தடைப்படுத்திக் கிழக்கில் வாழ்ந்த மக்களுக்கு, 1948 ஆம் ஆண்டு தொடக்கம் ஏற்படுத்தி வந்த தொல்லைகளைச் சுட்டிக்காட்டவும் அவர் தவறவில்லை. "பிரிவினைக்

கென்று எழுப்பப்பட்ட பெருஞ் சுவரும் முள்ளுக் கம்பி வேலியும் எமது உறவிற்கு எதிரான பெருஞ் சுமையாயிருந்தன.'' இந்த விவாதத்திற்கு முற்றுப் புள்ளி வைக்க ''இந்நாள் கடந்த காலத்தின் இறுதி நாள்'' என்றார் யெல்சின்.

ஆனால் ருஷ்யப் படையினர் சிறுமைக் குட்படுத்தப்படுவதற்கான முதல் நாளும் இதுவே. இது நாள் வரை அவர்கள் ஜேர்மனியிலே சுக வாழ்வு வாழ்ந்தவர்கள். இனித் தனது ஸ்திர நிலையிலேயிருந்து தளம்பலுக்கு உள்ளாகியுள்ள ருஷ்யாவிலே அவர்கள் தமது வாழ்வைத் தொடர வேண்டும். வறுமை ருஷ்யாவை வாட்டுகிறது. பெரும் படையை வைத்திருப்பதோ போஷிப்பதோ அதற்கு இனி வேண்டாத பெருஞ் சுமையாகும். ஏகாதிபத்தியம் இல்லாத நிலையில் பாதுகாப்புக்கென்று படையை வைத்திருப்பதும், அதிகாரிகளுக்குச் சம்பளம் வழங்குவதும்; அதனால் ஆகாத காரியங்கள், பணவீக்கம் காரணமாக அதிகாரிகளின் சம்பளத்தைக் கடுமையாக வெட்டிக் குறைக்க வேண்டிய நிர்ப்பந்தம் ருஷ்யாவிற்கு ஏற்பட்டிருக்கிறது. சோவியத் ஒன்றியம் என்ற பெயரில் அது நிலை பெற்றிருந்த செழிப்புக் காலத்தில் படைச் செலவினங்களுக்கென, மொத்த நிதியிலிருந்து 15 சத வீத -18 சத வீதம் வரை ஒதுக்கி வந்தது. இன்று அது 5 சத வீதமாகக் குறைக்கப்பட்டு விட்டது. 1992 இல் 2.8 மில்லியனாயிருந்த ஆளணி இன்று 1.5 மில்லியனுக்கு முன்பின்னாக ஆக்கப்பட்டுள்ளது.

நிலைமை பெருங் குழப்பத்திலுள்ளதால் சரியான எண்ணிக்கையைத் தெரிந்து கொள்வது கடினம். பொன் நகரத்திலிருந்து நிதிச் செலவினங்களுக்கான பெருமளவு பணத்தைப்பெற்று ருஷ்யாவிலே கட்டடங்கள் எழுப்பப்பட்டன ஒரு காலம். ஆனால்இன்று அந்தப் பணவருகை நிரந்தரமாகத் தடைப்பட்டு விட்டது. அதனால் புதியகட்டடங்களை எழுப்புவதோ, குறையாக உள்ளவற்றைப் பூர்த்தி செய்வதோ இயலாத நிலையில், தாயகம் திருப்பும் படை அலுவலருக்கு வதிவிடங்களை வழங்குதலும் இயலாது. அதனால் அவர்களுக்குப் பாரிய வீட்டுப் பிரச்சினையும் ஏற்பட்டுள்ளது. இதனோடு கட்டாய இராணுவ சேவையும் பெரும்பாலும் வேர்பாரிய நிலையில், படையணிகளிலே மனிதசக்தியின் எண்ணிக்கை குறைந்து விட்டது. கட்டாய இராணுவ சேவைக் குட்படுத்தப்பட்டவர்களில் 50 சத வீதமானவர்கள் சேவைக்குச் செல்ல மறுப்புத் தெரிவித்து வருகிறார்கள்.

முன்னைய சோவியத் ஒன்றியத்தின் படையில் இறுதியாக எஞ்சியிருந்தோர், தமது தாயகத்தின் தளம்பல் நிலை காரணமாக ஜேர்மனியிலிருந்தும், பால்டிக் நாடுகளிலிருந்தும் நீங்கிச் செல்கின்றனர்.

எரிபொருள், படைக்கலன் என்பவற்றின் பற்றாக்குறை நிலவுவதோடு உணவுப் பற்றாக் குறையும், தலையெடுத்து விட்டது. ''ருஷ்யப் படை வீரர்கள் கோபம் கொண்டிருக்கிறார்கள். தங்களின் சம்பளக் குறைப்பாலும், வீடு கிடைக்காமையாலுமே இந்தக் கோபம் எழுந்துள்ளது. அவர்கள் பசியாலும் சிறுமைப்படுத்தலாலும் விரக்திக்கு உள்ளாகியிருக்கிறார்கள். உண்மையில் 1.5 மில்லியன் எண்ணிக்கையில் படை உள்ளது என்பது கூட ஐயத்துக்கு இடமானதே'' என்று சாகசெற்சிலுள்ள தொழில் நுட்பக் கழகத்தைச் சேர்ந்த கல்விமான் பிறியன் டெய்லர் குறிப்பிடுகிறார். இவர் மொஸ்கோ இராணுவம் பற்றிய ஆய்வு நடத்தி வருபவர்.

சில பிரிவுகளைப் பொறுத்தவரை அவற்றினிடையே நிலவும் அதிருப்தியானது இராணுவக் கலகத்துக்கு அண்மித்துச் செல்வதாகத் தெரிகிறது. விளாடிவஸ்ரொக்கிலுள்ள இராணுவத் தினைக்களத்தின் ஊழியர்களுக்கு ஏப்ரல் மாதம் தொடக்கம் சம்பளம் வழங்கப்படவில்லை. இதனால், அவர்கள் வேலை நிறுத்தத்தில் இறங்கியுள்ளார்கள். பாரிய அளவில் இராணுவமயமாக்கப்பட்ட பகுதிகளிலுள்ள இராணுவத்தினர் பலரும் தங்களின் ஆயுதங்களை வெளிநாட்டிற்கு விற்பதில் ஈடுபடுகிறார்கள். உலங்குவானூர்திகள், நீர்மூழ்கிகள், போர்க்கப்பல்கள் முதலியவற்றையும் அவற்றின் உதிரிப்பாகங்களோடு கள்ளச் சந்தையில் விற்பனைசெய்யும் நிலை உருவாகியுள்ளது. மொஸ்கோவின் அலட்சியப்போக்குத் தமது பிரதேசத்தின் பொருளாதாரத்தினை முற்றாக நாசஞ் செய்வதாகக் குற்றஞ் சாட்டும் பிறிமொஸ்கிறாய் மாகாண ஆளுநர் யெவ்கெனி நஸ்ரமென்கோ,

தமிழில்: நிரு. சொக்கன்

''கடுங்குளிரிலிருந்தும், பசியில் இருந்தும் எம்மைக் காத்துக்கொள்ள எங்களுக்குச் சொந்தமான போர்க் கருவிகளை விற்கத் தொடங்கியிருக்கின்றோம்'' என்றார். இவரைப் போலவே பலபகுதிகளிலுள்ள இராணுவ அதிகாரிகள் சட்டத்துக்கு முரணான வகையிலும், ஆட்சிக்கு எதிர்ப்புக்காட்டும் வகையிலும் தமது அவசியத்தேவைகள் கருதியும் இத்தகைய விற்பனைகளில் ஈடுபட்டிருப்பதாகத் தெரிகிறது. ஆயுதக் களவாடல்களும், உயர் அலுவலர்களிடையே வாழ்வுகளும் நிலவுகின்றன. பாதுகாப்பமைச்சைச் சேர்ந்த அதிகாரிகள் இருவராவது குறைந்தபட்சம் கைதாகி நிரூபராக வாழ்வுக்கான விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். கிழக்கு ஜேர்மனியில்

இராணுவத்தினர் பலரும் கறுப்புச் சந்தை வியாபாரத்தில் ஈடுபட்டிருப்பதாக மொஸ்கோப் பத்திரிகையாளர் அலெக்சாந்தர் சிலின் தெரிவிக்கிறார். மேலும், இவர் கப்பற் பிரிவின் மேற்பார்வையாளராயிருந்து 2 மில்லியன் தொன் அளவான போர் உபகரணங்களை ருஷ்யாவிற்குத் திருப்பியனுப்பும் பணியில் ஈடுபட்ட வேளையில் படையாளணியினர் செல்லும் கவச வாகனங்களையும், மிக் 29 ஜெட் போர் விமானத்தையுங் கூட வழங்க முற்பட்டதாகவும் கூறுகிறார். இவர்கள் ஏற்றியனுப்பிய பொருள்களில் உடைகள், சிகரெற்றுக்களும் அடங்கியிருந்தன. அவற்றில் பல விற்பனைக்குள்ளாயின.

உள்நாட்டு நெருக்கடிகள் நிலவும் பகுதிகளில் படைவீரர்கள் தமது சொந்தப்படைக் கலன்களை விற்று வருகிறார்கள். அப்பகுதிகளிலுள்ள இராணுவத் தலைவர்கள் கவச வாகனங்களைப் போர்ப் பிரதேசங்களுக்கு வாடகை அடிப்படையில் வழங்குகிறார்கள். அப்காசியப் பிரதேசம் தொடர்பாக ஜோர்ஜியாவில் ஏற்பட்ட கலவரத்தின்போது ருஷ்ய விமானிகள் தேடுதல் விமானங்களை வாடகைக்கு வழங்கியது மட்டுமின்றித் தமது சேவையைப் போராளிகள், படையினர் ஆகிய இரு பகுதியாருக்கும் பணம் பெறும் அடிப்படையில் வழங்கினர். ஒரு தடவை பறந்து சென்று தேடலுக்கு 5,000 டொலர் பெறப்பட்டது. '' படையணிகளிடையே கட்டுப்பாடு பெரிதும் குலைந்து பழங்காலத்து ஜெங்கிஸ்கானின் படைகளாக ருஷ்யப்படைகள் காட்சி தருகின்றன. முன்னைய படைத்திறன் இன்று அவற்றிற்கு இல்லை '' என்கிறார், 40 ஆண்டுகள் சேவையிலிருந்து இளைப்பாறிய படைத் தளபதியான விளாடிமிர்குட்னிக்.

கிழக்கு ஜேர்மனியிலிருந்து ஏராளமான பொருள்களோடும், செல்வ வசதிகளோடும் திரும்பிய படை அதிகாரிகளும் சிலர் இல்லாமலில்லை. 34 வயதான மேஜர் அனற்றோலி சலோட்ஸ்கியை உதாரணமாகக் காட்டலாம்.

ருஷ்யப் படையணியில் கீழ் நிலைச் சேவைகளுக்கு மேல்நிலைப் படை ஆளணிகளைச் சேர்ந்தவர்களை நியமித்துத் தேவைக்கு மிக அதிகமான ஆட்களைக் கொண்டதாகவே அது விளங்கி வருகின்றது. இவ்வகையிலே கூடுதலாக உள்ளவர்களைத் தொடர்ந்தும் சேவையில் வைத்திருப்பதென்பது பெரும் பிரச்சனைகள்தான். ஆனால், '' அவர்களை உடனடியாகச் சேவையிலிருந்து விலக்கி விடுவதும் இயலாது. அது மிகப்பெரிய அதிருப்தியை ஏற்படுத்தி பாரதூரமான விளைவுக்குக் காலாகிவிடும் '' என்பது டூட்னிக் அவர்களின் கருத்து.

இவ்வாறான சூழ்நிலைகளாலும் அதிருப்திகளாலும் இராணுவச் சதி ஏற்பட்டு அது பெரும் கலகமாக வெடிக்குமா? என்ற கேள்வி எழுவது இயல்புதான். ஆனால், அது நேரக் கூடிய காத்தியம் இல்லை என்றுதான் கூறத்தோன்றுகிறது. ஏனெனில் நாடு திரும்பியுள்ள இராணுவத்தினர் அடக்குமுறையாளர்களாக அந்திய நாடுகளிலே செயற்பட்டு அதன் பலாபலன்களை அநுபவித்தவர்கள். எனவே அந்த அடக்குமுறைக்கொடுமைகளைத் தமது தாய நாத்திலும் கையாள அவர்கள் முற்பட்டார்கள் என்ற நம்பிக்கை இன்னமும் உண்டு.

ரைம், செப்டெம்பர் 12, 1994

இத்தாலியில் அணுக்களவு

இத்தாலிய மாபியக் கொள்ளைக் கும்பலின் வழக்கமான செயற்பாடுகள் போதைப்பொருள் கடத்தல், விபசாரம், கப்பம் சேகரித்தல், கடன் மோசடி என்பனவாகவே இருந்தது போய் இப்பொழுது, அணுக்களவு தான் மிக இலாபகரமானதாக ஆகியுள்ளதாம். மாபியா, எதிர்ப்பாளரான பலர்மோ நகரபிதா லியோலுக்கா ஓர்லாண்டோவின் கூற்றுப்படி அண்மைக்காலம் கைதுகளாலும் புலன் விசாரணைகளாலும் அவர்கள் இப்பொழுது புளுற்றோனியம், யுரேனியம் என்பவற்றையும், போர் ஆயுதங்களையும், முன்னாள் சோவியத் ஒன்றியத்தையும் இழக்கு ஐரோப்பாவையும் சேர்ந்த பல நாடுகளில் இருந்து கள்ளக் கடத்தல், செய்து கொள்ளை இலாபம் அடைகின்றனராம்.

அந்த சோவியத்தைச் சார்ந்திருந்த பல்லாயிரக்கணக்கான பாதுகாப்புத்துறையினருக்கு கள்ளச்சந்தைக்காரர்களுடன் நல்ல தொடர்பு உள்ளதுடன், அரசாங்க ஆயுதக்கிடங்குகள் எங்கெல்லாம் உள்ளன என்பது பற்றிய தகவல்களும் நன்கு தெரியும். சிலருக்கு அந்த ஆயுதக்கிடங்குகளுக்குள் சென்று வரவும் இயலும். இப்பொழுது தொழில் இழந்து உள்ள அவர்கள் மாபியாக் கும்பல்களின் பொறிக்குள் இலகுவாக அகப்படுவதுடன், ஒத்துழைப்புக்கொடுத்து இலகுவாகப் பணக்காரர் ஆகித் தப்பிப் பிழைக்கின்றனர். இது பற்றி ஐரோப்பியப் பாராளுமன்றில் விசாரணைக்குழுவுக்கு அறிக்கை செய்யப்பட்டதால், இப்பொழுது அதற்கு எதிராக நடவடிக்கை எடுக்க யுறோபொல் என்ற ஐரோப்பிய பொலிஸ் அமைப்பின் உதவி நாடப்பட்டுள்ளது.

காக்கேசில் பெருங் குழப்பம்

செக்னியா: சிதறிப்போன குடியரசின் உள்நாட்டுப்போர், முழுப்பிரதேசத்திலும் பரவுமென்ற பயமுறுத்தல் இடம் பெறுகிறது. ஆனால் மொஸ்கோ, குழப்பக்காரர்களுக்குத் தொடர்ந்து ஆதரவளிக்கிறது.

எழுதியவர்:
டொரிண்டா எலியட்

19 ஆம் நூற்றாண்டில் ''மாபெரும் வேட்டை'' என்ற பெயரில் ருஷ்யாவும் ஐரோப்பிய சக்திகளும் காக்கேசசையும், மத்திய ஆசியாவையும் தமது ஆதிக்கத்துக்குள் வைத்திருக்கச் சூழ்ச்சியும், சிறு சண்டைகளும் நிகழ்த்திய வேளையில் ருஷ்யரை எதிர்த்துப் போராடிய மாவீரர் இமாம் ஸமில். இன்றும் தன்னாண்மை அரசு என்று தன்னைச் சரதி வரும் செச்னியாவின் தலைநகரில் ருஷ்யா தனது தலையை நுழைத்து அதனைத் தனது ஆதிக்கத்தில் வைத்திருக்கவே முற்படுகிறது. இந்நிலையில் சட்டம் கேலிக்கூத்தாகியதால் சமிலின் ஆவி மீண்டும் அங்கு வாழத் தொடங்கி விட்டதோ என்ற கேள்விதான் எழுகிறது. இந்தச் சண்டையின் கொடூரம் கோசாக் படையெடுப்பாளரை ''மிகப் பயங்கரம்'' என்று அயரச் செய்துள்ளது. மூன்றாண்டுகளுக்கு முன்பு ருஷ்ய ஒன்றியத்திலிருந்து தம்மை விடுவித்துக்கொண்ட செச்னியரின் அதிபரும், ருஷ்யாவுக்கு எதிராக வருமான சோக்கர் துயதேவ் அவர்களைப் பதவியிலிருந்தும் விலக்குவதிலே மொஸ்கோ குறியாக இருக்கின்றது. செச்னியாவின் தலைநகரான குறொஸ்னியின் சுதந்திரச் சதுக்கத்தில் இளம் செச்னியர்கள் ருஷ்ய வல்லாதிக்கத்துக்கு மிண்டு கொடுப்போரை எதிர்த்துக் கடும் போர் நடத்தி வருகிறார்கள். குமரப் பருவத்தினரான இவர்களை நிறைத்துக் கொண்டு குறொஸ்னி நகர வீதிகளில் துதயேவின் அரசுப் படை வாகனங்கள் குறுக்கும், மறுக்குமாக ஓடியும், இயந்திரத் துப்பாக்கிகளால் சுட்டு வேட்டையாடியும் வருவதால் குடிமக்கள் வாழ்க்கை பெரிதும் அமைதி குறைந்து காணப்படுகிறது.

கஸ்பியன் கடலுக்கும், கருங் கடலுக்குமிடைப்பட்ட காக்கேசஸ் மலைப் பிரதேசத்தில் தான் குழப்பம் தலைதூக்கியிருக்கிறது. மொஸ்கோவின் உதவிப் பின்னணியில் இயங்கி வரும் எதிர்க்கட்சிக்கும் துயதேவின் அரசுப் படைக்குமிடையில் ஆயுதப் போர் நடக்கிறது. ருஷ்யர் தமது ஆட்சிப் பகுதியினுள்ளே நுழைந்தால் பயங்கரவாதச் சட்டத்தை நிறைவேற்றப் போவதாகத் துயதேவ் அறிவித்ததோடு எதிர்க்கட்சியாளரின் தலைமீதும் கடும் தாக்குதலைத் தொடங்கியுள்ளார். அமைதியின் மையிலிருந்து விலக்கி வைக்கச் செச்னியாவின் கலகோரங்களை அடைத்து வைப்பதில் நம்பிக்கை வைத்து ருஷ்யா தற்காலிகமாகப் படையெடுப்பதை நிறுத்தியுள்ளது. ஆனால் ருஷ்ய தேசியவாதிகளோ செச்னியா மீது கடும் நடவடிக்கை எடுக்குமாறு ஆட்சிக்கு அழுத்தம் கொடுக்கிறார்கள். ''செச்னியரிடையே நடக்கும் போர் என்றைக்குமான ஒரு போர்'' என்று

எதிர்க்கட்சிப் போராளியான கலிலா மகமனோவ் கூறுகிறார்: இவர் குறொஸ்னியிலிருந்து இரண்டு மணித்தியால தூரத்திலுள்ள உடைக்கப்பட்ட பாலம் ஒன்றினைத் துதயேவின் படையினரிடமிருந்து பாதுகாக்கப் போராடினார். இவர் இதனைக் கூறியது புதிதாகப் போர் ஒன்று கிளம்புவதற்கு முன்பாகும். இப்பொழுது ''செக்னியாப் பிரதேசம் எங்கணும் போர் பரவியிருக்கிறது.''

செக்னியாவில் எழுந்துள்ள சிக்கல் ருஷ்யப் பகுதிகளில் ஒற்றையாட்சி நிலவவேண்டிய அவசியம் பற்றிய விவாதத்தினை முனைப் புடையதாக்கி விட்டது. ''தனது உள்நாட்டுச் சிக்கல்களுக்குத் தீர்வு காண முடியாத அரசு சிதறிப் போகும்'' என்று ருஷ்யாவின் முன்னாள் நிதியமைச்சரான பொறிஸ் ஃபியடறோஸ் 'இஸ்வெஸ்ரியா' பத்திரிகைக்கு எழுதிய ஒன்றில் குறித்துள்ளார். ''செக்னியாவில் ஒழுங்கை நிலைநாட்ட வேண்டும். முடியாவிட்டால் அதற்குச் சுதந்திரம் வழங்க வேண்டும்'' என்று அவர் வலியுறுத்துகிறார். மொஸ்கோ சனநாயகத்தையே தான் விரும்புவதாகக் கூறியபோதிலும் செக்னியாவில் தமது கட்டுப்பாட்டை அது தளர்த்தக்கூடிய நிலையில் இல்லை. காரணம் புவியியல்சார் அரசியலின் (Geopolitics) அடிப்படையில் நோக்கினால் ருஷ்யாவின் எண்ணெய்க் குதப் பின்னலில் முக்கிய இணைப்பிடமாய்ச் செக்னியா உள்ளமையே. ஜோர்ஜியாவில் எழுந்துள்ள இனவாத நெருக்கடிகள் அதிலிருந்து விடுபட்ட எஃப்காசியா பிரதேசத்தில் சமாதானச் சூழலை அழிப்பனவாயுள்ளன. அஃப்காசியா செக்னியாவிற்கு மேற்கிலுள்ளது. இதன் அயலிலுள்ள தாகெஸ்தானும், ஒசெட்டியாவும் ருஷ்யாவிலிருந்து பிரிந்து செல்லக் கூடும் என்றும் ருஷ்யா அஞ்சுகிறது. காக்கேசஸ் பாதையைப் பயன்படுத்த முடியாவிட்டால் ருஷ்யா கருங்கடல் துறைமுகங்களை அடைவது இயலாது.

ருஷ்யா இதுவரை செய்த காரியம் துதயேவின் அரசுப் படைக்கெதிரான சக்திகளுக்கும் அவற்றின் தலைவரான உமர் அவ்டெர்கானோவுக்கும், 5 மில்லியன் டொலர் வழங்கியதுதான். ஒய்வூதியம் மற்றும் சமூகப் பணிகள் என்பவற்றிற்காக இந்நிதி வழங்கப்பட்டிருப்பதோடு ஆயுதக் கொள்வனவுக்கும் பயன்படுத்த இசைவுள்ளது. ருஷ்ய ஆட்சி பீடம் செக்னியாவில் நிலவும் குழப்பத்தோடு எவ்வித தொடர்பு கொண்டுள்ளது என்பது தெளிவாயில்லை. இதுபோன்றே ருஷ்ய அதிபர் யெல்சினின் பரமவைரியும், செக்னியாவின் குடிமகனுமான ருஸ்லன் கஸ்புலட்டோவ் வகிக்கும் பங்கும் தெளிவற்றேயிருக்கிறது. ருஷ்யச்

தமிழில்: திரு. சொக்கன்

சார்பினருக்கும் எதிரானவராய்த் தம்மைத் தாமே ஆக்கிக் கொண்டு செயற்பட்டு வரும் கஸ்புலட்டோவ் ருஷ்ய சனாதிபத்தியத்தை மீண்டும் கட்டியெழுப்ப முனையும் தேசியவாதிகளான தமது நண்பர்களின் அபிலாசைகளைப் பிரதிநிதித்துவப் படுத்துபவர். செக்னியாவில் துதயேவின் எதிராளியாய்ப் போராடி மரணித்தவர்களுக்கான இஸ்லாமிய நினைவுச் சடங்கொன்றுக்குத் தலைமை தாங்கிய அவர், ''துதயேவை எவ்வித சண்டையும் இன்றியே பதவியிலிருந்து விலக நாம் செய்யலாம்'' என்றார். சுப்றீம் சோவியத் நிலவிய காலத்தில் அதன் உறுப்பினராய் விளங்கியவரும் இன்று யெல்சின் அரசாங்கத்தின் எதிர்க்கட்சித் தலைவருமான அவ்துர்கானோவ், ''தேவை ஏற்படின் துயேனாவை நாம் பலவந்தமாக அவரின் பதவியிலிருந்து தள்ளுவோம்'' என்றார்.

அஃப்காசியன் பிரிவினையாளருக்காக ஜோர்ஜியாவில் ருஷ்யப் படையினரோடு துதயேவின் படையினரும் இணைந்து நின்று போராடியது ஒரு காலம். எனவே மொஸ்கோவுக்கு உபயோகமானவர் என்பதால், அவரோடு ருஷ்ய ஆட்சிபீடம் நேரடியாக மோதுவதைத் தவிர்த்திருக்கலாம். ஆனால் ஜோர்ஜியா மூட்டு உடைக்கப்பட்டுப் பலவீனப்பட்டுவிட்டதால் துதயேவின் உதவி இனி வேண்டியிராது. செக்னியாவின் ஆயுதவிற்பனைச் சந்தையைக் கட்டுப்படுத்தவும், ருஷ்யா முடிவு கட்டியிருக்கலாம். முழுப்பிரதேசத்தையும் அடக்கியொடுக்கச் செக்னியாவில் மூன்று ஆண்டுகளின் முன்பு ருஷ்யா விட்டு வந்த ஆயுதங்கள் போதியவை. ருஷ்யா செக்னியாவிலிருந்து வாபஸ் பெற்ற பொழுது, அங்கு ஆயுதக்களஞ்சியங்களில் விடப்பட்டவையே இவை. இவ்வாறு விட்டு வந்தமையே இப்பிரதேசத்தில் அமைதியின்மையை ஏற்படுத்துவதற்குக் காரணமென்றும், இது வேண்டுமென்றே செய்யப்பட்டதென்றும் செக்வியரிற் பலர் கருதுகிறார்கள். இதற்குப் பதில் காக்கேசசிலிருந்து மேற்கு நாடுகள் வரை பரந்த வகையில் மிகச் செழிப்பான ஆயுத வர்த்தகத்தை அவர்கள் போஷித்தார்கள் என்றும் கொள்ளலாம்.

துதயேவின்மீது பொறுமை இழக்க வைப்பதற்கு யெல்சினின் எதிர்ப்புப் பிரசாரமும் கூடுதலாகப் பயன்படுத்தப்படுகிறது. செக்வியரின் போதைவஸ்து வியாபாரம் ருஷ்யா முழுவதையும் ஆளாவியதாயுள்ளது. ஆடம்பரக் கார்களின் கடத்தல் வியாபாரமும் அவர்களால் தாராளமாக நடத்தப்படுகின்றது. எண்ணெய் வியாபாரம், கள்ளச் சந்தை அடிப்படையில் செக்வியாவின் முக்கிய தொழிலாகியுள்ளது. வங்கி ஆவணங்களில் ஆள்மாறாட்டம் செய்வதும், அதன் மூலம் சட்டவரம்பு கடந்த குற்றச்செயல் இடம் பெறுவதும் அதிகரித்துள்ளன. இவை போன்ற பல குற்றச் சாட்டுக்கள் பிரசாரத்தில் இடம் பெறுவது குறிப்பிடத்தக்கது. ''நாங்கள் சுதந்திரமாய் இருந்தால் குவைத் மக்கள்போல வாழ்வோம். எங்களின் எண்ணெய் முழுவதும் எமக்கே பயன்படும். நாங்கள்

தங்கக் கலசங்களில் ஒட்டகப் பாலை நிறைத்து அருந்துவோம்'' என்று துதயேவின் கூறியதாகத் தம் பத்திரிகையில் எழுதிய அப்துல்லாவத்சுயு, அப்பத்திரிகையின் ஆசிரியர் ''இன்றோ நாங்கள் மிக மோசமான வாழ்வை நடத்துகிறோம். எங்கள் பணமெல்லாம் அங்குபோய்விட்டது'' என்று எழுதினார். அரசாங்கத்தினால் இவரது பத்திரிகை தடைசெய்யப்பட்டது.

துதயேவின் படையினரும், எதிர்க்கட்சிப்படையினரும் ஆயுத பலம் மிக்கவர்களாயிருந்தும், அவர்கள் போரின் விளைவுபற்றி நன்குணர்ந்திருப்பதாலேயே தொடர்ந்து கடும் போர் நடத்தத் தயங்குகிறார்கள். சுடுமையான சட்டவரம்புக்குள் நின்று பழிவாங்க முற்படும்பொழுது இரத்த ஆறு மிகப்பெருமளவில் பெருகி ஓடும். அதுவே தமது வழக்கம் என்பது அவர்களுக்கு நன்கு தெரியும். செக்னியனுடைய ஆட்டுக்குட்டித் தோலான தொப்பியை ஒருவன் தட்டிவிட்டால், அந்த ஒன்றே அவ்வாறு தட்டியவனைக் கொல்லப் போதியதாகும். ''தன்மானமே எங்களுக்கு எல்லாம், அதற்காக எமது கடைசித்துளி இரத்தம் உள்ளவரை போராடுவோம். ஒருக்காலும் சரணடையோம்'' என்றார் பாற்பண்ணை உற்பத்தி அமைச்சர் யாக்கோப் சுல்தகோவ். எனவே இவ்வாறான கொடும்போரைத் தடுக்க அவ்துர்கோவாவிடம் துதயேவ் சமாதானத் தூதனுப்பியும், அது அவரால் புறக்கணிக்கப் பட்டுவிட்டது. எதிர்க்கட்சித் தலைவரும் அவர் சார்பினரும் துதயேவின் ஆட்சி ஊழல் நிறைந்தது என்றும், அது முழுமையான வீழ்ச்சியை நோக்கியே செல்கின்றதென்றும் குற்றம் சாட்டுகிறார்கள்.

காக்கேசசில் ருஷ்யாவின் மேலாதிக்க உரிமை எந்த அளவிற்குச் செல்லுபடியாகும் என்பது கேள்விக்குரியாகவேயுள்ளது. இனத்துவேஷ அடிப்படையில் ஸ்ராலின் பலரையும் நாடுகடத்திய தால் ஏற்பட்ட வெறுப்பும் வெஞ்சினமும் பலதலைமுறைகளுக்குத் தொடரவே செய்யும். எவினும் செக்னியாவில் ருஷ்ய ஆட்சிபீடம் தனது பிடியைத் தளர்த்தத் தயாராயில்லை. அவ்வாறு தளர்த்தினால் மற்றைய பகுதிகளும் சுதந்திரக்குரல் எழுப்பத்தவறமாட்டா. சமாதானம் செய்வோர் என்ற ரீதியில் சமாதானத்துக்கு கூடாக ஒத்துழைப்பையோ, அடங்கியிருத்தலையோ எதிர்பார்ப்பதே ருஷ்யாவின் போக்காக உள்ளது. ஆனால் இன்றைய நிலையில் இரத்தம் பெருக்குதலுக்கான சாத்தியக் கூறுகளே தென்படுகின்றன.

நியூஸ்வீக்.

வெளிக்களப் பயணத்தின்போது சமைத்தலுக்கு ஒரு புதுவகைச் சூட்டடுப்பு

எங்காவது வெளிக்களப் பயணம் ஒன்று செல்லும் பொழுது அங்கே தாமதமாகச் சமைத்து உண்ண விரும்புவோர் அதற்காகப் பாரமான அடுப்பும் விறகும் எரிபொருளும் சுமந்து செல்லவேண்டிய சிரமம் இருந்தது. இப்பொழுது அதற்கு மாற்றாக ஒரு பாரம் குறைந்த மடித்து எடுக்கக் கூடிய இடத்திற்கு இடம் இலகுவில் கொண்டு செல்லக்கூடிய பலவகை எரிபொருளையும் பயன்படுத்த வசதியான புதுவகைச் சூட்டடுப்பு ஒன்று சந்தைக்கு வந்துள்ளது. அமெரிக்காவின் றிமோண்ட் நகரில் உள்ள ஒரு நிறுவனம் அதனைத் தயாரிக்கின்றது. பெயர்: பக்லைட் பிளஸ் என்பதாகும். மடித்து எடுத்தது 6½, 6½, 1½ அங்குல அளவில் வரும் 18 அவுன்ஸ் பாரமான அந்தச் சூட்டடுப்பை விரித்துவிட்டு அதனை விறகு, நிலக்கரித்துண்டு, கொள்கலனில் அடைக்கப்பட்ட எரிவாயு, காகிதம் காய்ந்த எரியக்கூடிய எதனையும் கொண்டு சூடாக்கலாம். ஒரு பிரமிட்டின் உச்சியைத் தலைகீழாக வைத்தது போன்ற அதன் அமைப்பு எரிந்துவரும் வெப்பத்தை விரைவாகவும் திறமையாகவும் ஈர்த்து விரைந்து சூடேறவிடுகிறது. வேறு வகை அடுப்புகளைப் போல் அல்லாமல் தூடு முழுமையும் சமைக்கும் உணவையே தாக்குவதால், சமையல் விரைவு படுகிறது. பலவகை உணவுகளையும் இந்த அடுப்பில் விரைவாகச் சமைக்கலாம்.

புகைச் சூட்டில் வாட்டியெடுத்த மீனோ, கோழியோ உண்ண விரும்புவர்கள் அந்தப் புதிய அடுப்புடன் அதற்கென்று இணைத்துக் கொள்ளக் கூடிய மேலதிக இணைப்பையும் சேர்த்து வாங்கலாம். விலை 80 டொலர்.



வெள்ளை மாளிகையின் ஆகாயப் பாதுகாப்பையும் மீறி உள்ளே வந்து தாக்கியதால் சேதப்பட்ட செஸ்னா விமானம்.

தெற்கு மைதானத்தில் திகில்

வெள்ளை மாளிகை: பறக்கும் தற்கொலையாளி கட்டுக்கதையை அம்பலப்படுத்துகிறார்.

1912 இல் நடந்த போரின் போது, பிரித்தானியா வால் வாசிங்ரன் நிரா கரிக்கப்பட்டதற்குப் பிறகு வெள்ளை மாளிகை அவ்வாறான நேரடிக் கண்டத்துக்கு இலக்காகவில்லை கடந்த வாரம் துணிந்த தற்கொ லைத் தாக்குதலோ அல்லது துர தீர்ஷ்ட வசமாக ஆழமாகப் பாதிக் கப்பட்டதால் தூண்டப்பட்ட உணர்ச்சி வேகமோ, 38 வய து மேரிலாந்தைச் சேர்ந்த ஒருவர், வெள்ளை மாளிகையைச் சுற்றிவர அமைக்கப்பட்ட பாதுகாப்புக்களை யும் மீறி களவாடப்பட்ட செஸ்னா 150 ரக விமானத்தை தெற்கு மைதா னத்தில் பலத்த ஓசையோடு மோதி னார். விமான ஒட்டி உட்பட ஒரு மனோலியா மரம் பசுமையான புதர்ச்செடி மற்றும் ஜனாதிபதி வதிவிடத்தைப் பூரண பாதுகாப் பாக வைத்திருக்க முடியும் என்ற அசட்டு நம்பிக்கையும் பலியாகின. ''நாங்கள் முகம்கொடுப்போம்'' ''வைரக்கியம் கொண்ட தற் கொலைளுனின் குண்டு வீச்சுக்கு தப்ப ஒருவழியும் கிடையாது'' என ஒரு பாதுகாப்பு நிபுணர் கூறினார்.

ஆனால் விமான ஒட்டி பிராங்க் இயூகீன் கோர்டர் (Frank Eugene Corder) செலவில் கவசமிடப் பட்டதும் விமானம் பறப்பதற்குத் தடைவிதிக்கப்பட்டதுமான நகரப் பகுதிக்கு மேலாக சுலபமாக ஊடுரு வினார். இரகசிய சேவையில் உள் ளவர்களுக்கு அதிகபட்ச தர்ம சங் கடத்தை வாசிங்ரன் உண்டுபண்ணி விட்டது. மேலும் அது எல்லோரை யும் சோர்வடையச் செய்கிறது. மனத்தளர்ச்சியடைந்த வேலையற்ற மற்றும் மதுவுக்கும் போதைப் பொருளுக்கும் ஆட்பட்ட கோர்டர் வாசிங்ரனில் இருந்து அரைமணி பறக்கும் தூரத்திற்கு அப்பால், சேர்ச்வில்லைக்குக் கிட்ட உள்ள சிறிய விமானத் தளத்தில் இருந்து விமானத்தை எடுத்துச் சென்றுள் ளார். அவர் உளவு அறிபவர்கள் காணாதவாறு நகருக்கு மேலாக வாசிங்ரன் நினைவுச் சின்னத்தை நோக்கிப் பறந்து திருப்பம் எடுத்து வெள்ளை மாளிகையை இலக்கு வைத்து விமானத்தைச் செலுத்தி னார். பில் கிளின்ரன் மீதான தாக்கு தலாக இருக்கலாம் என்ற எச்ச ரிக்கை காலை 1.45-க்குக் கிடைத்தது. அவ்வமயும் ஒரு காவ லாளி விமானம் வெள்ளை மாளிகை வேலிக்கு மேலாகத் திடீரென ப் போனதைக் கண்டார், தெற்கு மைதானத்தை உழுதபின்பு விமானம் கட்டடத்தில் மோதி நொறுங்கித் தரித்தது. கோர்டர் மோதலில் உயிர் இழந்தார்.

கிளின்ரன், அவரது மனைவி, அவர்களுடைய மகள ஒருவரும் ஆபத்துக்குள்ளாகவில்லை. ஆனால் அது அவர்களுடைய அதிர்ஷ்டம் என்று வெள்ளை மாளிகை அதிகா ரிகள வெளிப்படுத்தினார்கள். வெள்ளை மாளிகையைச் சூடாக்கும் ஒழுங்கமைப்பு சீர்செய்யப்பட்டிருப்ப தால் முதன்மைக் குடும்பம் தெரு வுக்கு அப்பால் பிளேயர் மாளிகை யில (Blair House) அவ் இரவைக் கழித்தது

(சம்பவத்திற்குப் பிறகு தமது பணி யாளர்களால எழுபப்பட்ட கிளின் ரன் மீண்டும் நித்திரைக்குப் போனார் என்று சொல்லப்படுகி றது).

இப்போ என்ன நடக்கிறது என் றால, வெளிப்படையாக எந்த வொரு காப்பு இயந்திரமும் வேலை செய்யவில்லை. 1980 இல் இருந்து பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப் படுத்தப்பட்டிருந்த போதிலும் வெளளை மாளிகை இலகுவான குறிக்கு நீரந்தே இருந்தது. அந்த இடம் காவல அரண்களாலும், குண்டை மோப்பம் பிடிக்கும் நாய் களாலும், கூரைமீது றைபிள் ஏந்திய வீரர்களாலும் பாதுகாக் கப்பட்டது. ஆகாயத்தில் இருந்து தாக்குவோரைச் சுட்டு வீழ்த்துவதற்

படும் ராடர் கருவி மூலம் அதிகாலையில் எச்சரிக்கை கிடைத்தது. கடந்த 60 நாள்களுக்குள் இரகசிய சேவை வெள்ளை மாளிகையை தாழப் பறக்கும் விமானம் தாக்கப் போகிறது என்று எச்சரிக்கை கொடுக்கப்படும் பட்சத்தில் ஜனாதிபதியைக் காப்பாற்றுவதற்கான திட்டம் வெற்றிகரமாகப் பரீட்சித்துள்ளது என்று நியூஸ்வீக் சொல்கிறது. ஆனால் வியாபார நோக்கிற்காகச் செயற்படும் விமானப் போக்குவரத்து இரவு 11.00 மணியுடன் மூடப்பட்டு கோபுரத்திலுள்ள கட்டுப்பாட்டாளர் வேறு பணிகளில் இருந்தனர். கோர்டோன் தோன்றிய போது FAA உண்மையில் ஜனாதிபதியை பறக்கும் தற் கொலையாளியிடம் இருந்து காப்பாற்றும் பொறுப்பில் இல்லை. இதை இரகசிய அதிகாரி ஒப்புக் கொள்கிறார். அது, காப்பாற்றுவது யார்? என்ற நியாயமான கேள்விக்கு இடமளிக்கிறது.

நியூஸ்வீக், செப்ரெம்பர் 26, 1994

காக ஸ்ரிங்கர் விமான எதிர்ப்பு பீரங்கி சகிதம் தயார் நிலையில் உள்ளனர். ஆனால் ஒருவரும் முழு அளவிலான தேசிய உசார் நிலைக்கு குறைந்த மட்டத்தில் ஸ்ரிங்கரை ஏவமாட்டார்கள். அண்மையிலுள்ள தேசிய விமானத் தளத்திலுள்ள விமானம் மீது எதேச்சையான இலக்கு ஆகும்போது அது வல்லது. 1991 இல் மிகச்சிறிய அளவு கருவி (Doppler radar) பரசூட்டிலிருந்து இறங்கும் கொலையாளிகளைத் துப்பறியப் பொருத்தப்பட்டது. இராணுவத்திலிருந்தும் (Delta Force SEALs) கடற்படையிலிருந்தும் வந்து பரசூட்டிலிருந்து வேடிக்கையான தாக்குதல் நடாத்தியபோது, நன்றாகவே வேலை செய்தது என்று நியூஸ்வீக் மூலம் செய்தி கிடைத்தது. ஆனால் ராடர் கருவி கோர்டோனில் விமானத்தைக் கண்டு கொள்ளவில்லை.

அதனால் கிளின்ரனுக்கு ஆற்றுக் கப்பால் உள்ள தேசிய விமானத்தளத்திலுள்ள FAA விமானப் போக்குவரத்து கட்டுப்பாட்டுக்காகச் செயற்

தமிழ் அகராதிகள்

பாதுகாப்பான பணவைப்புப் பெட்டகம்

ஒக்காக்கோவில் உள்ள மக்கள் பாதுகாப்புப் பெட்டித் தயாரிப்பு நிறுவனம் 400 இறாத்தல் எடையுள்ள ஸ்மாட்சேஃப் 2,000 என்ற பெயர்கொண்ட புதிய வகைப் பணப் பெட்டகம் ஒன்றைச் சந்தைக்கு விட்டுள்ளது. பெருந் தொகைப் பணத்தை எப்போதும் கையில் வைத்திருக்க வேண்டிய வகையான வர்த்தக நிலையங்களுக்கு அது மிகவும் உகந்தது. பிழையான ஆட்களின் கைகளுக்குப் பணம் மாறிப் போகாமல் இருக்க அந்தத் திருகி இலக்கங்களைப் பொருந்த வைத்துத் திறக்கும் பெட்டி ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட நபர்கள் மட்டுமே காசைப் பெறக் கூடியதாகவும் இருப்பதுடன் ஒவ்வொருவர் பெற்ற தொகையும் கூடக் குறித்து வைத்துக்கொண்டே தானாகவே எண்ணுவதையும் செய்ய வல்லது. அது காலச் சுணக்கப் பூட்டு ஒன்றைத் திட்டமிட்டுவிட்டால் ஏற்றபடி 10 அல்லது 15 நிமிடநேரம் சுணங்கித்தான் திறக்கும். இதனால், அவசரத்தில் கொள்ளையிட்டு எடுத்துக் கொள்ளச் செல்வோர் தயங்க நேரும். விலை: 4,900 அமெரிக்க டொலர்.

கொலை மலிந்த அமெரிக்கா

நாட்டின் சட்டத்தை மீறித் தீய எண்ணத்துடன் மனித உயிரைப் பறிப்பது கொலை எனப்படும். விபத்துக்களும், தற்பாதுகாப்பு நடவடிக்கைகளும் சட்டத்தின் பார்வையில் கொலைகளல்ல. சித்த சுவாதீனமற்றவர்கள் செய்யும் உயிர்ப் பறிப்பும் அவ்வாறே கணிக்கப்படுகிறது. கொலைக் குற்றச்சாட்டிற்குத் தீய எண்ணம் மிகவும் அவசியம். தீய எண்ணமென்றால் என்னவென்பதற்கு அறிஞர்களால் ஒரு பொது விளக்கம் தர முடியவில்லை. ஆகவே ஒவ்வொரு கொலையின் பின்னணியிலுள்ள காரணியான தீய எண்ணத்தைத் தனித்தனியாக ஆராய வேண்டியுள்ளது. மனித உடலில் இரத்தம் என்னும் சிவப்புத் திரவம் நிரம்பியிருக்கிறது. உடலில் சிறிய ஆனால் ஆழமான துவாரம் செய்தால் இரத்தம் மாத்திரமல்ல உயிரும் வெளியேறிவிடும் என்கிறார் ஒரு புத்திசாலி. இவ்வாறான துவாரங்களைச் செய்வதற்கு இன்று அமெரிக்காவில் விரும்பியோருக்கு எளிதில் கிடைக்கும் சிறிய கைத்துப்பாக்கி பெரிதும் உதவுகிறது. கொலை விகிதாசாரத்தில் அமெரிக்கா முன்னணியில் நிற்பதற்குக் கட்டுப்பாடற்ற துப்பாக்கிப் பாவனை முக்கிய காரணமாக அமைகிறது.

சேற்றில் கிடக்கும் எருமையினம் போல் அமெரிக்கர்கள் பலாத்காரத்திற்கு மத்தியில் வாழப் பழகியுள்ளனர். சிறு வயது தொட்டு அவர்கள் பொதுசனத் தொடர்புச் சாதனங்கள் மூலமாகவும், நேரடியாகப் பலதரப்பட்ட வன்முறைகளைப்

தெருவில் சுடப்பட்டு இறந்து கிடக்கும் இளைஞன்

பார்த்த காரணத்தினாலும் இந்த நிலைக்கு வந்துள்ளனர். வீட்டில் இருந்தவாறே தொலைக்காட்சியில் கொலை, பாலியல் வன்முறை, தீ வைத்தல், தற்கொலை போன்றவற்றை நாளந்தம் கண்டு மனதில் பதித்துக் கொள்கின்றனர். கீழ்த்தரமான உணர்ச்சிகளைக் கிளறும் சஞ்சிகைகளையும் வயது வித்தியாசமின்றிப் படிக்கின்றனர். ஆயுதமேந்தி எதையும் சாதிக்கலாம் என்ற எண்ணம் அவர்கள் மனதில் இடம் பிடிப்பதில் அதிசயமில்லை. மனிதர்களுடைய தலைவிதியையும், நடத்தையையும் நிர்ணயிப்பது எம்மை இயக்கும் சிந்தனையும் இருவகைக் குணமும் தான். நாம் வாழ்வில் பெறும் வெற்றி தோல்வியும் நாம் பிரச்சனைகளை அணுகும் விதமும் பெரும்பாலும் இவற்றில் தங்கியுள்ளன.

கொலைக் குற்றவாளிகளைத் தூக்கிலிருந்து மீட்பதில் வல்லவர் காலஞ் சென்ற அமெரிக்க வழக்கறிஞர் கிளேயரனஸ்டரோ. இவரைத் திணறடித்த வழக்கொன்றை இவ்விடத்தில் குறிப்பிடுவது மிகப் பொருந்தும். 14, 15 வயதினரான இரு கோடீஸ்வரரின் பிள்ளைகள் தம்மிலும் வயது குறைந்த ஒரு சிறுவனைக் கடத்திச் சென்று கொன்று விட்டனர். தாம் ஒரு கொலை செய்து பார்க்க விரும்பியதாகப் பொலிஸ் விசாரணையின் போது அவர்கள் கூறியுள்ளார்கள். தமது பிள்ளைகள் கல்வியிலும், ஒழுக்கத்திலும் சிறப்பானவர்கள் என்று பெற்றோர்கள் தெரிவித்தனர். பிள்ளைகள் கேட்டதெல்லாம் வாங்கிக் கொடுத்து ஒரு குறையும் வைக்காது வளர்த்து வருகிறோம் என்றும் அவர்கள் உரைத்தனர். ஆனால் இந்த வழக்கில் சம்பந்தப்பட்டவர்களையும், சம்பவத்தையும் ஊன்றிக் கவனித்தவர்கள் பல திடுக்கிடும் உண்மைகளைக் கண்டு பிடித்துள்ளனர். கேட்டதெல்லாம் வாங்கிக் கொடுத்தால் மட்டும் போதாது. பிள்ளைகள் தமது பொழுதை எவ்வாறு செலவிடுகிறார்கள், அவர்களுடைய நாட்டம் என்ன போன்றவற்றில் பெற்றோர் கவனஞ்செலுத்த வேண்டும். அமெரிக்காவிலும், மேற்குலக நாடுகளிலும் பெற்றோர்களுக்கும், சிறார்களுக்கும் இடையில் இருக்க வேண்டிய பாசப் பிணைப்பு அருகி விட்டது. தனிமனிதர் சுதந்திரம் சட்டத்தின் பாதுகாப்புப் போன்ற காரணங்களுக்காகப் பிள்ளைகளைத் தண்டிக்கும் உரிமை பறிக்கப் பட்டுள்ளது. பிள்ளைகள் பெற்றோரின் கட்டுப்பாடற்ற வாழ்வை நடத்துகின்றனர்.

மறுபக்கத்தில் பணமே குறியாக மேம்பாடே தெரியாக வாழும் சராசரி அமெரிக்கர்களுக்குப் பிள்ளைகள் மீது அக்கறை காட்ட அவகாசம் இல்லை. இதனால் இளம் வயதினர் பெற்றோர் அறியாமல் பல தீய பழக்கங்களை ஆரம்பித்து இறு

தியில் அவற்றிற்கு அடிமையாகின்றனர். பிள்ளைகளுக்குத் தேவையான பணத்தை மாத்திரம் வாரி வழங்குவதால் சிறுவர்கள் தாம் விரும்பிய முறைகேடான இன்பங்களை விலைகொடுத்து வாங்க முடிகிறது. ஆசைக்கு அளவில்லை. அவைகளோ பலவிதம். ஒன்றில் கவிப்படைந்தால் இன்னொன்றில் நாட்டம். இறுதியில் கொலை செய்து பார்த்தால் என்னவென்ற சபலம். கொலைக் குற்றஞ் சாட்டப்பட்ட இரு இளைஞர்களும் இவ்வாறுதான் பாரதூரமான கொலையைச் செய்யுமளவுக்குச் சென்றதாக ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். வாழ்வில் மகிழ்ச்சிக்கும், மனச்சாந்திக்கும் பணம் தான் மருந்து என்பது முற்றிலும் உண்மையல்ல.

அமெரிக்காவில் எல்லோரும் பணம் படைத்தவர்கள் அல்லர். இந்த நாட்டில் பெரும் சமூக ஏற்றத் தாழ்வு நிலவுகிறது. நிரந்தர வேலையற்ற வகுப்பினர் அரசு வழங்கும் உபகாரச் சம்பளத்தைப் பெற்றுக் கொண்டு வாழ்க்கையை நடத்துகின்றனர். வேலையற்றவர்களுடன் வேலைக்குப் போக விரும்பாதவர்களையும் நாம் சேர்த்துக் கொள்ளவேண்டும். ஜனாதிபதிகள் றேகன், புஷ் போன்றோர் வெளிநாட்டுப் பிரச்சனைகளில் அதிக கவனம் செலுத்தியுள்ளனர். பூதாகாரமானதொரு சமூகப் பிரச்சனை உருவாகியுள்ளதையும் அவர்கள் ஏற்கவும் இல்லை. அதற்குப் பரிகாரம் தேட முனையவுமில்லை. கிளின்ரன் நேர்மாறானவர். அவர் உள்நாட்டு விவகாரங்களுக்கு முன்னுரிமை கொடுத்து வெளிநாட்டுப் பிரச்சனைகளைத் தள்ளி வைத்துள்ளார். வேலையில்லாத் திண்டாட்டம் பெருகி வரும் குற்றச் செயல்கள், சுகாதார சேவைகள், மோசமடையும் நிதிநிலைமைகளைச் சீர்திருத்தல் போன்ற உள்நாட்டுப் பிரச்சனைகளை அவர் தட்டிக் கழிக்காமல் எதிர் கொண்ட விதம் அவருக்கு கடந்த தேர்தலில் வெற்றியைக் கொடுத்துள்ளது. மேல் மட்டத்தினரும், நடுத்தர வகுப்பினரும் தாழ்த்தப்பட்டோர் போன்ற வேலையற்ற பெருந்தொகையினருடன் ஒரு தொடர்பும் வைப்பதில்லை. அவர்கள் தம்பாட்டிற்கு இயங்கிக் கொண்டு விலங்குகள் போன்ற வாழ்வை நடத்துகின்றனர். இந்த அடி மட்டத்தில் கொலைகளும், பலாத்காரச் செயல்களும் சிறமந் தவறாத வழமை நிகழ்ச்சிகளாகும்.

தொலைநோக்கி பொருத்தப்பட்ட துவக்குடன் பொலிஸ்

கறுப்பினத்தவர்கள் ஒரு தனி உலகமாக இயங்குகிறார்கள். இந்த இனத்தவர்கள் மத்தியில் மிகக் கூடுதலான வேலையற்றோர்களும், தீருப்தி அற்ற வீட்டு வசதி உள்ளோரும் காணப்படுகின்றனர். இவர்கள் மதுபானம், போதைவஸ்துப் போன்ற வற்றுக்கு அடிமையானவர்களாக இருக்கின்றார்கள். தங்களுக்குத் தேவையானவற்றை வாங்குவதற்காக இவர்கள் கொலைக்கு அஞ்சமாட்டார்கள். அத்துடன் கொலையை இவர்கள் அதிகார வர்க்கத்திற்கு எதிரான வெளிப்பாடாகவே நடத்துகின்றனர். கடந்த வருடம் லொஸ்ஏஞ்ஜல்ஸ் நகரில் கறுப்பினத்தவர் ஒருவரை நகரப் பொலிசார் கொன்ற பின் கறுப்பினத்தவர் செய்யும் கொலைகள் எண்ணிக்கையில் கூடி விட்டன. கறுப்பர்களின் உயர் பதவியில் நல்ல வசதி உள்ளவர்களும் இருக்கிறார்கள். நடுத்தர வகுப்பினரும் உள்ளனர். ஆனால் இவர்கள் கீழ்மட்ட கறுப்பர்களின் பிரச்சினைகளில் தலையிடுவதில்லை.

இதன் முற்பகுதியில் தீய எண்ணத்தைப் பற்றிக் குறிப்பிட்டோம். ஆனால் இன்று அமெரிக்காவில் யாதொருகாரணமுமின்றி அர்த்தமில்லாத கொலைகள் பரவலாக நடைபெறுகின்றன. அந்த இரு சிறுவர்களதுஒரு காரணத்தை வைத்திருந்தார்கள். இந்த ரகக் கொலைகளோ காரணத்தை வெளிப்படுத்தாமல் பெரும் மர்மமாக இருக்கின்றன.

கொலை செய்தவர்களும் பிடிபடாமல் இருப்பதால், குற்றத்தடுப்புப் பிரிவினர் வருடாவருடம் மீடை காணமுடியாத கொலைகள் என்ற புள்ளிவிபரத்தைத் தயாரிப்பதுடன், தமது வேலையை நிறுத்தியுள்ளனர். சென்ற மாதம் வாஷிங்ரன் நகரில் பிரபல கட்டடப் பொறியியலாளர் நரித்திறபேயும், அவர் மனைவி சுல்தான் இறபேயும், மகள் பஸ்மா இறைபேயும் அவர்களுடைய வீட்டில் வைத்து மரப்பொல்லால் அடித்துக் கொல்லப்பட்டுள்ளனர். விலையுயர்ந்த பொருள்கள் இருந்தும்கூட ஒன்றும் திருடப்படவில்லை. கொலையாளிகளை அல்லது கொலையாளிகளைக் கட்டிக்காட்டும் யாதொரு தடையமும் கிடைக்கவில்லை. கருத்து வர்களின் கருத்தாட்சிப் பத்திரங்களை மாத்திரம் பொலிசார் எடுத்து வைத்திருக்கின்றனர். புள்ளி விபரங்களில் இருந்து பொறுக்கியெடுக்கப்பட்ட சில தகவல்கள் பின்வருமாறு:

கொலையாளியோ, கொலையின் காரணமோ கண்டுபிடிக்காமல் இருக்கும் விதிதாசாரம் என்ன?

நடைபெற்ற முழுக்கொலைகளின் தொகையில்:

1976 ஆம் வருடம்	—	20 வீதம்
1980 ஆம் வருடம்	—	28 வீதம்
1985 ஆம் வருடம்	—	30 வீதம்
1990 ஆம் வருடம்	—	32 வீதம்
1993 ஆம் வருடம்	—	34.4 வீதம்

மேற்காட்டிய விபரம்போன்று 1970 ஆம் ஆண்டு தொடக்கம் அமெரிக்கா நாடுமுழுவதிலும் வருடா வருடம் கொலைகளின் தொகையும் படிப்படியாகக் கூடிக்கொண்டு வருகின்றன: புள்ளி விபரம் பின்வருமாறு:-

வருடம்	கொலைகளின் முழுத்தொகை
1970	16, 000
1975	20, 510
1980	23, 040
1985	18, 980
1990	23, 440
1993	24, 500

கறுப்பு வெள்ளை இனங்களுக்கிடையிலான முரண்பாடுகளாலும் பல கொலைகள் நடைபெறுகின்றன. 1992 ஆம் வருடத்திற்கெனத் தயாரிக்கப்பட்ட புள்ளி விபரங்கள் பின்வருமாறு:-

கறுப்பர்கள் கொன்ற வெள்ளையர்களின் தொகை – 1, 216.
வெள்ளையர்கள் கொன்ற கறுப்பர்களின் தொகை – 392.

இத்துடன் குடும்பப்பிரச்சனை காரணமாக நடைபெறும் கொலைகளின் புள்ளிவிபரமோ கதை சொல்லுகின்றது. இந்தக் குடும்பத்தினரின் நிறம் குறிப்பிடப்படவில்லை. பொதுவில் எல்லா அமெரிக்கக் குடும்பங்களையும் இந்த ஆய்வில் உட்படுத்தியுள்ளார்கள்.

கொலை செய்பவர் யார்?	வருடாவருடம் நடக்கும் கொலைகளின் முழுத்தொகையில் எத்தனை வீதம்?
கணவன் – மனைவி —	5.6 வீதம்
குடும்ப அங்கத்தவரைக் கொல்லுதல் (பிள்ளைகள் உட்பட) —	6.5 வீதம்
உறவினர்கள் —	35.2 வீதம்

கிரிமினோலொஜி எனப்படும் குற்றவியல் படிப்பில் வல்லவர்கள் இரண்டு முக்கிய குறிப்புக்களை எமக்குத் தருகின்றனர். பெருந் தொகையான கொலைக்குற்றங்கள் அமெரிக்காவின் பெரிய நகரங்களில் நடைபெறுகின்றன. கூடுதலான கொலைகள் வெப்பம்மிகுந்த கோடை காலங்களில் நடத்தப்படுகின்றன. அமெரிக்காவின் மிகப் பெரிய நகரம் நியூயோர்க். தொழில், வர்த்தகம் பணமுதலீடு ஆகியவற்றின் அமெரிக்க மையம் இதுதான். பொலிஸ், தீயணைக்கும்படை, சுகாதாரவாரியம் என்ற முப்படை இருப்பினும், அமெரிக்காவின் கொலை, நெருப்பு அபாயம், ஆரோக்கியக் குறைவு ஆகியவற்றின் உச்சத்தில் நியூயோர்க் நிலையாக நிற்கின்றது. 840 ஏக்கர் கொண்ட இந்த நகரத்தின் மத்தியிலுள்ள சென்றல் பூங்காவில் நடக்கும் கொலை, பாலியல் வன்முறை, வழிப்பறி போன்ற வற்றிற்கு அளவே யில்லை. மலையும் மடுவும்போல வறுமையும் செல்வமும் இங்கு பக்கம் பக்கமாகக் காணப்படுகின்றன. ஏழைகளுக்கு வீட்டுவசதி செய்வதும், பெருகிவரும் குற்றங்களைத் தடுப்பதும் இந்த நகரின் முக்கிய பிரச்சனையாகும். உலகின் மிகப் பெரிய நகரங்களில் ஒன்றென்ற பெருமையுள்ள நியூயோர்க் உயிர்ப் பறிப்பிலும் பெரும் சாதனை நிகழ்த்தி வருகின்றது.

பெரும் நிலப்பரப்பைக் கொண்ட நாடு அமெரிக்கா. ஒரே நேரத்தில் நாட்டின் பல்வேறு பகுதிகளில் வித்தியாசப்பட்ட சீதோஷண் நிலைகளைக் கொண்ட இந்த நாட்டில் பெரும்பாலும் வெப்ப காலம் ஜூன் பிற்பகுதியில் தொடங்கி செப்டெம்பர் தொடக்கத்துடன் முடிவுறும். இக்காலத்தில் கூடுதலான மதுவும், போதைவஸ்துக்களும் விற்பனையாகின்றன. பணத் தேவைக்காகச் செய்யும் கொலைகள் பெருகும் வாய்ப்பு ஏற்படுகிறது. வழிப்பறிக் கொள்ளைகளும் கூடுகின்றன. அண்மையில் 50 டொலர் பணத்திற்காக ஒரு வர்த்தக நிலையக் காசாளர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். சங்கிலித் தொடர்புபோல பல கொலைகளை ஒரு தனி நபர் புரிவது அமெரிக்காவிற்கும் இங்கிலாந்திற்கும் பொதுவான விடயமாகும். கூர்மதியுடன் செயற்றிறனும் படைத்த இந்த ரகக் கொலையாளிகள் தொடர்ச்சியாகப் பல கொலைகளைச் செய்த பின்பே பிடிபடுகின்றனர். அமெரிக்கா ஒரு வல்லின நாடு, பல்வேறு குணாம்சங்கள் உள்ளோர் வாழும் நாடு. கொலையாளிகளும் கொலை செய்யக் காத்திருப்போரும் மலிந்த நாடு அமெரிக்கா எனலாம்.

நியூஸ்வீக் ஒக்ஸ்ற் 15, 1994

றேகன், புஷ் ஆகியோர் பாதையில் கிளின்ரன்

"அயல் நாடுகளில் இராணுவத் தலையீடு மிக எளிது; மானத்தோடு வெளியேறுவது தான் கடினம்."

இராணுவத் தலையீடு;

பிரிட்டன், பிரான்ஸ் ஆகிய நாடுகள் போன்று பாரிய சாம்ராச்சியத்தைக் கட்டியெழுப்புவதில் அமெரிக்கர்கள் நாட்டங் கொள்ளவில்லை. தமது பணவலிமையால் பிறநாடுகளைத் தம்வசப்படுத்துவதே அவர்கள் கொள்கை. இரண்டாம் உலகப் போர் முடியும் தருவாயில் ஜெனரல் ஜோர்ஜ் மார்ஷல் என்பவரின் மூலக்கருத்தை வைத்து அமெரிக்கர்கள் பின்வரும் திட்டத்தை வகுத்தனர். யுத்தத்தில் அடிபட்ட ஐரோப்பிய நாடுகள் நிதிப்பற்றாக் குறையால் பெருங்குழப்பங்களுக்கு ஆளாகி கொமியூனிஸ்ற் நாடுகளாகும் சாத்தியம் உண்டு. தேங்கிக் கிடக்கும் டொலரை இவர்களுக்கு உதவுவதால் இவர்கள் ஆட்சி முறை மாறாமல் இருக்கும். அத்துடன் டொலரின் ஆதிக்கமும் பேணப்படும். இத்திட்டத்தின் கீழ் உதவிய பணம் மேற்கு ஜேர்மனி, பிரான்ஸ், இத்தாலி, ஜப்பான் போன்ற நாடுகளை மேம்படுத்தியுள்ளது. இத்திட்டத்தின் இன்னுமோர் அங்கமாக அமெரிக்க ஆதரவுடன் உலகவங்கியும், சர்வதேச நிதியமும் நிறுவப்பட்டுள்ளன. அண்மைக்காலத்தில் அமெரிக்காவிடம் உதவி பெற்ற நாடுகளின் தாணயம் டொலரை மிஞ்சிய வளர்ச்சி பெற்றுள்ளன. ஜேர்மன் மார்க்கும், ஜப்பான் யெனும் இதற்கு ஓர் உதாரணம்.

இரண்டு உலக யுத்தங்களிலும் ஜேர்மன், ஜப்பான் ஆகிய நாடுகளின் வல்லாதிக்கத்தை மடக்குவதற்காக அமெரிக்கா முக்கிய பங்கேற்றுள்ளது. இதைத் தொடர்ந்து கொரிய யுத்தத்திலும், அதன் பின் வியற்நாம் யுத்தத்திலும் அமெரிக்கப் பங்களிப்பை நாம் அலதாவிக்கலாம். கொமியூனிஸ்ற் நாடுகளான சோவியத் ருஷ்யா, சீனா ஆகியவற்றின் எல்லைநாடுகளுடன் அமெரிக்கா நெருங்கிய உறவாடினாலும் தனது பிராந்தியத்தில் ஏந்த நாடுகள் தலையிடுவதை அமெரிக்கா ஒருபோதும் அனுமதிப்பதில்லை. மேற்கு இந்தியத்தீவுகளையும், தென் அமெரிக்க நாடுகளையும் அமெரிக்கா தனது மேற்பார்வையில் இயங்கும் பிரதேசமாகவே கருதிவருகின்றது. சோவியத் ருஷ்யாவுடன் ஒட்டி உறவாடியதற்காகவே நியூபாத்தீவு மீதும் அதன் தலைவர் கஸ்ரோ மீதும் அமெரிக்கா பெரும் விரோதம் காட்டி வருகிறது. இதே காரணத்திற்காக றேகன் ஜனாதிபதி இன்னுமொரு மேற்கிந்தியத்தீவான கிரெனடாவுக்கு அமெரிக்கப்படைகளை அனுப்பியுள்ளார். இதே காலத்தில் மத்திய கிழக்கில் அமெரிக்காவுக்குக் இடைத்துவந்த எண்ணெய்க்கு ஞந்தகம் ஏற்படும் என்று கண்டவுடன் சதாம் ருசேயின் மீது, புஷ் பாரியதாக்குதல் ஒன்றை நடத்திப் பெருவெற்றியை ஈட்டியுள்ளார்.

சார்வல் செட்ரோஸ் தனது குடும்பத்தினருடன் பனாமா செலகின்றார்.

ஜனாதிபதி கிளின்ரனின் சோமாலியப் பிரதேசம் அமெரிக்கப் படைகளுக்குப் பெரும் இழுக்குத் தேடியுள்ளது. பெரும் பஞ்சம் நிலவிய சோமாலியாவில் மக்களுக்கு என்று இறக்கப்பட்ட உணவை ஆயுதக் குழுக்கள் கொள்ளையிட்டபோது காவலனாகச் சென்ற இராணுவம் குழுக்களோடு போராடித் தோல்வி கண்டுள்ளது. இத்தோல்விக்கு அமெரிக்க மத்திய புலனாய்வுக் கழகமும் பங்கேற்க வேண்டும். சரியான தகவல்களைப் பெறத்தவறியதாலும் குழுக்களுக் கிடையில் நடந்த தொலைப்பேசித் தொடர்புகளை ஒற்றுக்கேட்கத் தவறியதாலும் சி. ஐ. ஏ பெருந்தினை நிறைத்துவிட்டதுஎனலாம். ஹெயிற்றியிலும் முன்டர்பலடயின் தலைவனுக்கு சி. ஐ. ஏ பெருந்தொகைப் பணம் கொடுத்தது அண்மையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. சி. ஐ. ஏ யின் நடவடிக்கைகள் ஒருவித அர்த்தமில்லாமல் பெரு நட்டம் விளைவிப்பதாக இருக்கின்றன.

ஹெயிற்றி விவகாரத்தில் எவ்வளவு தான் விலத்தி நடந்தாலும் கிளின்ரனால் தப்பமுடியவில்லை. கடந்த 200 வருடகாலமாக ஹெயிற்றியின் வரலாறு இரத்தம் தோய்ந்ததாகவும் பிரதாபம் நிறைந்ததாகவும் இருக்கின்றது. இந்த நாட்டு மக்களின் 90 சதவீதத்தினர் முன்னாள் மேற்கு ஆபிரிக்க அடிமைகளான கறுப்பினத்தவர். மிகுதி 10 சத வீதத்தினர் ஒரு காலத்தில் ஹெயிற்றியை ஆண்ட பிரெஞ்சுக்காரருடன்

கலந்த வெள்ளையும், கறுப்பும் அல்லாத கலப்பினத்தவர்கள். இந்த 10 சதவீதத்தினர் கையில் இராணுவம், பொலிஸ், குண்டர் படை, பெருந்தோட்டங்கள் யாவும் மண்டிக் கிடக்கின்றன. எல்லையில்லாத சர்வாதிகாரமும் முரட்டுப் பலாத்காரமும் நாட்டில் தலைவிரித்தாடுகின்றன. 1991 ஆம் ஆண்டு அதிசயமாக ஒரு பொதுத்தேர்தல் ஹெயிற்றியில் நடந்து விட்டது. இதில் பிரெஞ்சுப் பெயருள்ள கறுப்பின மதகுரு அரிஸ்டைட் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார். இவர் கறுப்பின மக்களின் தலைவன். அவர்களுக்காகக் குரல் கொடுத்து வருபவர் ஆனால் இவருடைய ஆட்சி நிலைக்கவில்லை.

மேற்கூறிய 10 சதவீத ஆளும் வர்க்கம் தங்கள் உரிமைகள் கைமாறுவதை அமைதியாக வர வேற்கத் தயாரில்லை. இந்த மேட்டுக்குடியினர் பேசுவதோ பிரெஞ்சு மொழி. தம்மை வித்தியாசமான வர்கள், ஆளப்பிறந்தவர்கள் என்ற தோரணையில் பழக்கிக் கொண்டவர்கள். கறுப்பினத்தவர்கள் அறியாமையிலும், வறுமையிலும் கிடப்பவர்கள். அவர்கள் பேசுவது பிரெஞ்சு, ஆங்கிலம், பல்வேறு ஆபிரிக்க மொழிகள் கலந்த கிரியோல் எனப்படும் கலப்புமொழி. 10 சதவீதத்தினர் நடத்தும் பொலிஸ்படையிலும் இராணுவத்திலும், குண்டர்படையிலும் கறுப்பினத்தவர்கள் அங்கம் வகிக்கின்றனர். ஆனால் பொது மக்கள் மீது நடத்தப்படும் வன்முறைகளை இந்தக் கறுப்பர்களே செய்கின்றனர்.

1991 ஆம் ஆண்டு இப்போதைய ஹெயிற்றிப் பிரச்சனை இராணுவத் தலைவன் ரவுல்செட்ராஸ் தலைமையில் ஆளும் இனம் கொதித்தெழுந்து ஜனாதிபதி அரிஸ்டைட்டை அமெரிக்காவுக்குத் துரத்தியதோடு ஆரம்பித்துள்ளது. ஜெனரல் செட்ராஸ் நாட்டை ஆட்சி செய்வதாகச் சொல்லப்பட்டாலும் உண்மையில் ஆண், பெண் இருபாலாரும் இணைந்த குழுவே ஹெயிற்றியின் ஆட்சி பீடத்தில் இருக்கின்றது. பொலிஸ் படைத் தலைவன் மிற்ச்சல் பிரான்சுவா இராணுவ முப்படைத் தளபதி ஜெனரல் பிலிப்போபியாம்பீ மேற்கூறிய செற்ராசின் மனைவியானிக், செற்ராசின் ஆசைநாயகி ஆகியோர் இந்த இராணுவக்குழுவில் இருக்கின்றனர். செற்ராசின் மனைவியானிக் பியாம்பீயின் ஆசைநாயகி என்றும் சொல்லப்படுகிறது. ஹெயிற்றியின் ஆயுதப் படையின் விபரங்களின் வருமாறு:

885 பேர் கொண்ட இராணுவம், ஊர்காவற்படை 2,000 தொடக்கம் 4,000 வரை, 1.300 படையினர் கொண்ட பொலிஸ், ஒரு விமானம் கொண்ட விமானப் படை, கப்பற்படையும் இவ்வாறே ஒரு கப்பலுடன் இயங்குவதாகும். ஆனால் பிறாப் என்ற பிரெஞ்சுப் பெயருடன் இயங்கும் குண்டர் படைக்குத்தான் மக்கள் பயந்து வாழ்ந்தனர். பெண்களை மானபங்கப்படுத்துதல் முதற்கொண்டு சகல அடாவடித்தனமும் இவர்களின் செயற்பாடாகும். இதன் தலைவன் சி.ஐ.ஏ யின் கைக்கூலியாவான்.

சோமாலியாவின் பின் வெளி நாடுகளுக்குத் துருப்புக்களை அனுப்புவதில் கிளிங்ரனுக்குப் பெரும் தயக்கம் கடந்த மூன்று வருடமாகச் செய்வதறியாது திகைத்த கிளிங்ரன் இறுதியில் இராணுவத்தை ஹெயிற்றிக்கு அனுப்பியதன் உடனடிக் காரணம் என்ன? பேராயர் மன்றம் – காங்கிரஸ் கூட இராணுவத்தை அனுப்புவதற்கு பூரண சம்மதம் கொடுக்க வில்லை என்பது குறிப்பிடத்தக்கது. ஐ.நா. கொண்டு வந்த பொருளாதாரத் தடை பெருத் தோல்வி அடைந்து ஹெயிற்றியின் ஆட்சியாளருக்குச் சாதகமாக அமைந்து விட்டது. மக்கள் பதிக் கொடுமையில் வகை தொகையாக அமெரிக்காவுக்கு வரத் தொடங்கினர். அகதிகளை அமெரிக்க மண்ணில் வைத்துப் பராமரிப்பதில் உள்ளூரில் கடும் எதிர்ப்பு குறிப்பாகப் புளோரிடா மாகாணம். அகதிகளைக் கப்பலில் ஏற்றி கியூபாவின் அமெரிக்கக் கப்பல் தளத்திற்கு அரசு அனுப்ப ஆரம்பித்தது. இதற்கு அமெரிக்க ஜனநாயகவாதிகளும், கறுப்பினத் தலைவர்களும் மனித உரிமை மீறல் என்று காரணம் காட்டி ஆட்சேபனை தெரிவித்தனர். றன்டால் றொபின்சன் என்ற கறுப்பினத் தலைவன் சாகும் வரை உண்ணா விரதம் ஆரம்பித்தான். அவன் வைத்திய சாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டவுடன் நிலைமை கட்டுக் கடங்காமல் போவதை கிளிங்ரன் உணர்ந்தார். இதற் கிடையில் முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி காட்டர் ஹெயிற்றிக்கு தூது சென்றார். ஹெயிற்றியின் ஆட்சியாளர் நாட்டை விட்டு வெளியேறச் சம்மதித்தனர். ஆனால் தமக்கு பொது மன்னிப்புத் தரும்படி கோரினர். காட்டரின் தூது தோல்வியடைந்தது. கிளிங்ரனுக்கு வேறு வழியில்லை. துருப்புக்களை அனுப்ப வேண்டிய கட்டாயம் அவருக்கு ஏற்பட்டது.

நிலை கொள்ளுதல்:-

சென்ற வருடம் ஒக்ரோபர் மாதம் சோமாலியாவில் 18 அமெரிக்கப் படையினர் கொல்லப்பட்டனர். அவர்களுடைய சடலங்கள் தெருவெல்லாம் ஆரவாரமாக இழுத்துச் செல்வதை உலக செய்தித்தொடர் சாதனங்கள் காட்சி பரப்பின. சிறிய பாப்பென்றாலும் பெரிய தடியால் அடிக்க வேண்டும் என்ற மொழிக் கேற்ப முதற் சுற்றாக 6,000 அமெரிக்கப் படைகள் ஹெயிற்றியில் தரையிறங்கின. படையினரின் நிட்டம் பின்வருமாறு:

01. தரைப்படையும், கப்பற்படையும் கூட்டாக தலைநகர் போட்அப்பிறின்ஸ் நோக்கி திடீரென முன்னேறி ஆயுதாகளைச் செயல் இழக்கச் செய்தல். வானொலி நிலையத்தைக் கைப்பற்றுதல்.
02. விமானங்களில் இருந்து குதித்து ஹெயிற்றியின் விமான நிலையத்தைக் கைப்பற்றுதல்.

03. 82 ஆம் அமெரிக்கப் படையணி விமான நிலையத்தில் வந்து இறங்கி நாட்டிற்குள் ஊடுருவுதல்.

04. கப்பல் படையினர் கப்ஹெலிகொப்டர் கப்பல் துறையைக் கைப்பற்றுதல்.

05. விமானம் தாங்கிகள் படையினரைத் தரையிறக்கும் கப்பல் மூலம் முழு நாட்டிலும் அமெரிக்கப் படையைப் பரப்புதல்.

இது அமைதிப்படையா? ஆயுதப் படையா? என்பதே முக்கிய கேள்வி. இரண்டிற்கும் பெரும் வித்தியாசம் இல்லை. சொல்லோர் உழவர்கள் வித்தியாசம் காணலாம். ஆனால் படைகள் பூரண ஆயுத ஒழுங்குடன் தான் செல்வர். அமெரிக்கப் படைகள் ஜனநாயகத்தை நிலை நாட்டவும், மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதியையும், நாட்டை விட்டு வெளியேறிய மக்களையும், நாடு திரும்ப வைத்தல் போன்ற பணிகளைச் செய்யவே சென்றுள்ளன. ஆனால் தயார் நிலையில் தான் சென்றுள்ளனர். வெள்ளை மாளிகை அறிக்கையின்படி மக்களுக்கும், ஹெயிற்றியின் இராணுவம், குண்டர் படை ஆகியவற்றிற்குமிடையில் சம நிலையைப் பேணுவதோடு அமெரிக்கப் படைகள் தமது செயற்பாட்டை நிறுத்திக் கொள்வர். ஆனால் இதை நடைமுறைச் சாத்தியமற்றதெனக் குறிப்பிட வேண்டும். குண்டர் படையும், தொழிசாரும் மக்கள் மீது ஆயுதங்களால் தாக்கி கொலைகள் செய்யும் போது அமெரிக்கர்கள் தொடர்ந்தும் நடுநிலை வகிக்க முடியுமா? முடியாது. தேசவிரோதக் கும்பல்களின் ஆயுதங்களை, களையும் பணி வெள்ளைமாளிகை அறிக்கையில் காணப்படா விட்டாலும் செய்ய வேண்டியது அவசியமாயிற்று. படிப்படியாக 20,000 அமெரிக்கத் துருப்புக்கள் வந்து சேர்ந்து விட்டன. நாட்டில் உணவுப் பற்றாக்குறை, அதையும் இறக்கிப் பங்கீடு செய்ய வேண்டும். மின்சாரம் கிடையாது அதற்கும் ஒழுங்கு செய்ய வேண்டும். இதற்கிடையில் யாரோ ஒருவன் அமெரிக்கப் படை வீரன் ஒருவனைச் சுட்டுக் காயப்படுத்தி விட்டான். திருப்பிச் சுட்ட போது ஒன்பது தேசவிரோதிகள் வீழ்ந்தனர். இப்படியே பணிகள் விரிந்து செல்கின்றன.

வெளியேறுதல்:-

பாரதப் போரில் அபிமன்யு எதிரியை உடைத்துக் கொண்டு உட்புகுந்த பின் வெளியேற முடியாமல் உயிரிழந்தான். உயிரும், மானமும் சரிநிகரானவை. கர்ச்சிதமாக வந்த வேலையை முடித்துக் கொண்டு ஒரு பொல்லாப்பும் இல்லாமல் திருப்புவதே இராஜ தந்திரம். படைகள் தரையிறங்கி ஒரு மாதம் செல்ல முன்பே செனேற் சபை உறுப்பினர்கள் எமது படைகள் எப்போ திரும்பும் என்று கேட்கத் தொடங்கினர். தலையாகவுள்ள பணி அரிஸ்டைட் அவர்களின் பாதுகாப்பு ஒழுங்குகளைச் செய்தல் வேண்டும். படைகள் வெளியேறியதும் இவருடைய உயிருக்கு என்ன உத்தரவாதம்? அதே போல் செட்ராஸ் கோஷ்டியினரும் உயிரிழப்பின்றி நாட்டை விட்டு வெளியேற ஒழுங்கு செய்ய வேண்டும். இதே சமயத்தில் ஹெயிற்றிக்கு அன்னியப்பயிராள ஜனநாயகத்தை வேரூன்றச் செய்ய வேண்டும். ஜனநாயகம் திடீரென எழும்பக் கூடிய பயிரல்ல, ஆளும் வர்க்கும் பதுங்கிக் இடக்கும். அமெரிக்கர்கள் நாடு திரும்பியதும் மீண்டும் தலை தூக்கும் எப்போது திருப்பி அழைப்பதென்று இலிங்ரலுக்கே தெரியாத விடயம். யுத்தைத் தொடங்கலாம் முடிவுக்குக் கொண்டு வருவது கடினம்.

ஆதாரம்: ரைம், நியூஸ்வீக்
ஒக்ரோபர், 17. 10. 1994

வானுயர் செய்தி

அண்மையில் மலேசியா கொள்வனவு செய்யத் தீட்டமிட்ட ரஷ்ய மிக் 29 விமானங்களும் அந்தப் பிராந்தியத்தில் உள்ள ரஷ்யத் தளபாடங்கள் கொள்வனவு செய்து கொள்ள வேறு நாடுகளுக்கு இந்தியா தான் அந்தப் பிராந்தியத்தில் பராமரிப்புப் பணி செய்து உழைக்கலாம் என்ற நம்பிக்கை உடைந்துபோய் விட்டது. ரஷ்யா அந்தப் பிராந்தியத்தில் தானே அதனைச் செய்ய மலேசியாவில் இயந்திரப் பராமரிப்பு நிலையம் திறக்கத் தீட்டமிட்டு உள்ளது. இறுதியாக ரஷ்ய விமானங்கள் கொள்வனவு செய்வதில் தாய்லாந்தும், பிலிப்பைன்சும் அக்கறை கொண்டுள்ளனவாம். இந்தியப் பிரதமர் நரசிம்மராவ் அண்மையில் மொஸ்கோ சென்றபோது ரஷ்ய விமானங்களைப் பழுது பார்த்துப் பராமரிக்கும் நிலையம் ஒன்றைப் பெங்களூரில் 8,400 மில்லியன் டொலர் செலவில் ஆரம்பிக்க இணக்கம் காட்டப்பட்டுள்ளதாகும். இப்போது அந்தச்சேவை மலேசியாவில் ஆரம்பிக்கப் பட்டால் இந்தியாவிற்குக் கட்டுபடி அற்றதாகிவிடும் என்று கூறப்படுகிறது.

அல்ஜீரியா கிளர்ச்சிக்காரரை விடுவித்தது

குருதி சிந்துவதைத் தடுக்கலாம் என்ற நம்பிக்கையில் அரசாங்கம் அடிப்படைவாதச் சதிப் புரட்சியாளர்கள் இரண்டு பேரை விடுதலை செய்துள்ளது.

அல்ஜீரியாவின் ஜனாதிபதி லியாமீனே சிரோவுல், அண்மையில் விடுத்த செய்தி ஒன்று அதிர்ச்சி அலையாகத் தெருக்களில் பரவத் தொடங்கியதும், அந்த நாட்டு மக்கள் இரவுநேர ஊரடங்குச் சட்டம் அமுலுக்கு வரு முன் தங்கள் வீடுகளை அடைந்துவிடப் பதற்றத்துடன் விரைந்தனர். புரட்சிகர மீட்பு முன்னணியின் தலைவரான அப்பாஸி மடானி 63, துணைத்தலைவரான அலிபெல்ஹாட்ஜி 38 ஆகிய இருவரும் பிளீடா சிறைச்சாலையில் 3 ஆண்டுகள் காவலில் வைக்கப்பட்டிருந்த பின்பு, ''வேறு ஓரிடத்தில் வீட்டுக் காவலில்'' வைக்கப்படுவதற்கு மாற்றப்பட்டார்கள் என்றும், அந்த முன்னணியைச் சேர்ந்த தரத்தில் குறைந்த மேலும் மூன்று தலைவர்கள் சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டார்கள் என்றும் அறிக்கை கூறியது. 1992 இல் அந்த அடிப்படைவாதத் தலைவர்களுக்கு 12 ஆண்டுகாலச் சிறைத் தண்டனை விதித்த அரசாங்கம், இப்பொழுது அவர்களை விடுவித்திருப்பது ஒரு பெரும் சலுகையாகும்.

தமிழில்: திரு. நா. இருபராசா

ஜனாதிபதி விடுத்த செய்தியில், ''வன்முறைகளையும், குருதி கொட்டல்களையும் முடிவுக்குக் கொண்டுவர அரசாங்கம் எல்லா வழிகளிலும் முயல்கிறது என்று கூறப்பட்டிருந்தது. 1992, 1993 ஆம் ஆண்டுகளில் அரசியல் வன்செயல்களால் 10,000 அல்ஜீரியர்கள் கொல்லப்பட்டனர் என்பதை செப்ரெம்பர் மாத முற்பகுதியில் ஜனாதிபதி சிரோவும் முதல் முறையாக ஏற்றுக்கொண்டார். இந்த ஆண்டிலும் 8,000 பேரளவு அவ்விதம் கொலையுண்டுள்ளார்கள். மதத்தலைவர்களான மடானியும், பெல்ஹாட்ஜியும் தாங்கள் சிறையிலிருந்து விடுவிக்கப்படுவது எவ்விதப் பேச்சுவார்த்தை நடத்துவதற்கும் அவசியமான ஒரு நிபந்தனை என்று தெடுகிலும் கூறி வந்துள்ளனர்.

அந்த இஸ்லாமிய அடிப்படைவாதிகள் தேர்தலில் வென்ற பின்பு இராணுவம் அவர்களை ஏற்கவில்லை. இப்பொழுது அவர்களின் தலைவர்கள் அரசாங்க இல்லங்களில் வைக்கப்பட மாற்றப்பட்டு இருப்பது, ஒரு திருப்பு முனையாகும் என்று அவர்கள் ஏற்றுக் கொள்கின்றனர். சுவலைப்பட்டுக் கொண்டு இருந்த மதவாதிகள் அல்லாத அல்ஜீரியர்களும் அந்த உணர்வைப் பரவலாகப் பகிர்ந்து கொண்டனர். ஒரு வங்கியாளர் இது பற்றிக்கூறிய பொழுது, ''மக்கள் பயத்துடன் வாழ்கிறார்கள். அடிப்படைவாதிகள் ஆட்சிக்கு வரப் போகின்றனர் என்று அவர்கள் அஞ்சுகின்றனர். இப்பொழுது அது நடக்கத்தான் போகிறது போல் உள்ளது'' என்கிறார்.

ஆனால் மதத் தலைவர் மடானியும் அவருடைய பயங்கரமான துணைத்தலைவர் பெல்ஹாட்ஜியும் வாக்களித்து உள்ள படியான அமைதி நிலைநாட்டப்படப் போவதில்லை. தலைமறைவாக உள்ள இஸ்லாமிய மீட்சி முன்னணியினர், இந்த ஆண்டில் தங்கள் தவிப்பட்ட படையான இஸ்லாமிய மீட்புப் படையை உருவாக்கியுள்ளதுடன், இந்த மதத்தலைவர்கள் இருவரும் தாம் எந்த விதமான பேச்சுவார்த்தைகளைத் தொடங்குவதாக இருந்தாலும் முதலில் அந்த மீட்புப் படையின் தளபதிகளைச் சந்தித்தாக வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளனர். எந்த இடம் என்று இன்னும் அறிவிக்கப்படாமல் இரகசியமாக வைக்கப்பட்டுள்ள அவர்கள், காவலுக்கு உட்பட்டுள்ள வீட்டிலிருந்து மடானியும், பெல்ஹாட்ஜியும் தொலைபேசியையும், ஃபாக்ஸ் இயந்திரத்தையும் கொண்டு நாட்டைவிட்டு வெளியேறியுள்ள இஸ்லாமிய மீட்சி முன்னணி உறுப்பினர்களுடன் தொடர்பு கொள்வர். அல்ஜீரிய அரச அதிகாரிகளுடன் நெருங்கிய தொடர்புள்ள சிலர், அந்தத் தலைவர்கள் இருவரும் ''அவர்கள் இராஜ தந்திரம்.

நாட்டில் உள்ள பதற்ற நிலையைத் தணிக்கும் முகமாகவே சிறையில் இருந்த மடானியையும், பெல்ஹாட்ஜியையும் அவர்களது பாதுகாப்புக்கருதி அரசாங்கவீட்டில் வைக்கப்பட்டுள்ளனர் என்று தற்போதைய சனாதிபதி கூறுகின்றார்.

ளுடைய பாதுகாப்பிற்காகவே" அரசாங்க வீட்டில் வைக்கப்பட்டு உள்ளனர் என்று கூறுகின்றனர்.

ஜனாதிபதி சிரோவுல்லும், இஸ்லாமிய மீட்சி முன்னணித் தலைவர்களும் எவ்விதத் தீர்வுப் பேச்சையும் நடத்த முடியாதபடி தீவிரமான அடிப்படைவாதிகளின் அச்சுறுத்தல் நெருக்குதலுக்குள் அகப்பட்டுக் கிடக்கிறார்கள். சிலோவுல் ஓர் இராணுவ ஜெனரலாக இருந்து ஓய்வு பெற்றவர். என்றாலுங்கூட ஓர் இராணுவ அதிகாரிகள் குழுவொன்று முன்பிருந்த ஜனாதிபதி சாடிலி பென்ஜிடாட்டை பதவிவிலகச் செய்து, 1992 இல் நடந்த பாராளுமன்றத் தேர்தலையும் செல்லுபடியற்றதாக்கிவிட்டு, இஸ்லாமிய மீட்சி முன்னணியினரைச் சிறையிலிருந்து விடுவிப்பதை எதிர்க்கின்றனர். இந்த உயர்தர இராணுவ அதிகாரிகள், அடிப்படைவாதிகளை ஒழித்துக்கட்ட உறுதி பூண்டு உள்ளனர். அல்ஜீரியாவில் அவர்கள் "அழிப்பவர்கள்" என்று பெயரிடப்படுகின்றனர்.

கிளர்ச்சிக்காரர் படைகளுக்கு உள்ளேயும், ஆயுதம் ஏந்திய இஸ்லாமியக் குழு ஒன்று உள்ளது. ஒரு வருடத்தில் 60 வெளிநாட்டவர்களை அல்ஜீரியாவில் படுகொலை செய்தவர்கள் என்று நம்பப்படும் அந்தக் குழுவினர், தாம் விதிக்கும் நிபந்தனைக்கு உட்படாத எந்தச் சமாதானப் பேச்சுக்கும் கடுமையான எதிர்ப்புக் கொண்டவர்களாக உள்ளனர். அந்தக்குழு சென்ற சில மாதங்களாக அதன் படுகொலை செய்யும் முறை, குழுத்தைத் துண்டிப்பதாகக் கொண்டு இயங்குகின்றது.

சிரோவுல்லின் அறிவிப்பு வெளிவந்த அன்று இரவு, அந்தக் கிளர்ச்சிக் குழுவினர் அந்த அறிவிப்பை ஏளனம் செய்யுமாப்போல், அல்ஜீரியாவின் மூன்று வெவ்வேறு பகுதிகளில் தங்களுடைய வீடுகளில் இருந்த குடிமக்களை இழுத்துவந்து அவர்களுடைய குழுத்துக்களைத் துண்டித்துக் கொன்றனர். அதில் ஒரு 20 வயதுப் பெண்ணும் அடங்குவார். சில நாள்களுக்கு முன்பு வடகிழக்குப் பிராந்தியத்தில் உள்ள ஒரு கிராமத்தைச் சேர்ந்த ஐந்து பேர் குழுத்து வெட்டிக் கொல்லப்பட்டனர். அப்படிப் பலியானவர்களுள் இராணுவத்தையும், பொலிசையும் சேர்ந்தவர்களின் உறவினர்களும் அடங்குவர்.

ஆகவே, மடானியும் பெல்ஹாட்ஜியும் விடுதலை செய்யப்பட்டாலுங்கூட அல்ஜீரியாவில் நடக்கும் உள்நாட்டுப்போர் தொடர்ந்து குருதி கொட்டவைக்கும்போல் தெரிகிறது.

ரைம், செப்ரெம்பர் 26, 1994

அதிசய ஆண்டுகள்

இரண்டாம் உலக மகாயுத்தத்திற்கு பின்பு உலக வரலாற்றில் நிகழ்ந்த முக்கியமான சம்பவங்களை, குறிப்பாக ஆசியாக் கண்டத்தில் நிகழ்ந்த முக்கிய நிகழ்வுகளை நாம் தொகுத்துத் தருகின்றோம்.

1945 ஜப்பான் மீது அணுக் குண்டு வீச்சு; பசுபிக் போர் முடிவுக்கு வருகிறது.

1946 பிலிப்பைன் நாட்டின் சுதந்திரம் மீள்கிறது.

1947 இந்தியா - பாகிஸ்தான் பிரிவினை வகுப்புவாத வெறியாட்டத்தால் இரத்த ஆறு பெருக்கெடுத்தோடுகிறது.

1948 இந்து மத வெறியால் மகாத்மா காந்தி படுகொலை. இலங்கை பர்மா சுதந்திரம் பெறுகின்றன. பாகிஸ்தான் அதிபர் முகமது அலி ஜின்னாவின் மரணம்.

1949 மாசேதுங் தலைமையிலான பொதுவுடைமைவாதிகள் சீனாவில் மேலாண்மை பெறுகின்றனர். சியாங்கை ஷேக் தலைமையில் சீனத் தேசியவாதிகள் தாய்வானுக்குத் தப்பி ஓட்டம். சயாம், தாய்லாந்து என்று தன் பெயரை மாற்றிக்கொள்கிறது.

1950 நீபெத் மீது சீனர்களின் ஆக்கிரமிப்பு; தென் கொரியா மீது வடகொரியா படையெடுப்பு.

1953 கொரியாப் போர் குறுகிய காலப் போர் நிறுத்தத்தால் முடிவுக்கு வருகிறது. ஸ்ராலினின் மரணம். நிகிட்டா குருச்சேவ் சோவியத் ஒன்றியத்தின் தலைவர் ஆகிறார். நேபாளத்தவரான டென்சிங்நோர்கே, நியூசிலாந்தினரான எட்மன், ஹிலாரி எவரெஸ்ற் சிகரத்தை எட்டுகின்றனர்.

1954 டியென்பியென்பு என்ற இடத்தில் பிரான்சுதோல்வியுற்று வியற்நாமில் அதன் தலையீடு முடிவடைகிறது. கோட்சிலா (Godzilla) டோக்கியோவில் உள்ள நிரைப்பட ஸ்ரூடியோவில் உதயம்.

1955 பாண்டுங் மாநாடு ஆபிரிக்காவையும், ஆசியாவையும் ஒன்று சேர்க்கிறது. சத்யஜித்ரே தமது மகத்தான முதற் படத்தை நெறியாள்கிறார். பிறபிள்ளைவாதத் தடுப்பூசியின் முன்னேற்றம்.

1957 துங்கு அப்துல் றஹ்மான் மலேசியாவுக்கான சுதந்திர அரசவையைப் (Merdeka) பிரகடனம் செய்கின்றார். சோவியத் ஒன்றியம் 'ஸ்புட்விக்'கை விண்வெளிக்குச் செலுத்துகிறது.

1959 விகுவான்லூ சிங்கப்பூரின் பிரதமராகிறார். நீபெத்தின் தலாய்லாமா இந்தியாவுக்குத் தப்பியோடுகிறார். இலங்கைப் பிரதம பண்டாரநாயக்கா புத்த பிக்குவின் துப்பாக்கிக்கு இரையாகிறார். போயிங் 707 விமானம் ஜெற் விமானயுகத்தைத் தொடக்கி வைக்கிறது.

1960 சிறிமா பண்டாரநாயக்கா இலங்கைப் பிரதமர் ஆகிறார். இவரே உலகின் முதலாவது பெண்பிரதமர்.

தெரிந்து கொள்ளுங்கள்

1962 நீவின் பர்மா ஆட்சியைக் கைப்பற்றுகிறார்.

1963 வியற்நாமின் நிகோடின் ஏற்டைம் படுகொலை செய்யப்படுகிறார். மலேசிய சமஷ்டி உருவாகிறது. இந்தோனேசிய ஜனாதிபதி சுகார்னோ Kon Frontasi என்ற ஆட்சியவையைப் பிரகடனம் செய்கிறார். அமெரிக்க ஜனாதிபதி யோன் எவ்கெனடியின் படுகொலை உலகை அதிர்ச்சிக்குள்ளாக்குகிறது. தொலைக்காட்சி சிங்கப்பூருக்கு அறிமுகமாகிறது.

1964 ரொங்கின் வளைகுடாத் தீர்மானத்தின் அடிப்படையில், ஐ நா. சபை வியற்நாம் விவகாரத்தில் முதன்மையாகத் தலையை நுழைக்கிறது. சர்வதேச ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிக்கு ஜூசியாவின் முதல் வரவேற்பாளராய் ஜப்பான் இடம் பெறுகிறது. சீனர் முதல் அணுக்குண்டை வெடிக்க வைக்கின்றனர். சிங்கப்பூரில் இனக் கலவரம் வெடிக்கிறது.

1965 சிங்கப்பூர் மலேசிய சமஷ்டியிலிருந்து பிரிகிறது. ஜகார்த்தாவில் அரசியற் சதி. அது பொதுவுடைமைக்கு எதிரானவர்களின் குருதியைப் பெருகி ஓடவைக்கிறது. 'மினிஸ்கேட்' நாகரிகத் தொடக்கம்.

1966 மாவோ கலாசாரப் புரட்சியைக் கூட்டவிழ்த்து விடுகிறார். மணிலாவில் பீற்றில்ஸ்கள், (Beatles) மார்க்கோஸ் சார்பினரோடு மோதுகின்றார்கள்.

1967 தென்கிழக்காசியக் கூட்டவை உதயம்.

1968 வியற்கொங் 'ரெற்' (Tet) எதிர்ப்பியக்கத்தை ஆரம்பிக்கிறது. இந்தோனேசிய ஆட்சியை ஜெனரல் சுஹார்ட்டோ கைப்பற்றுகிறார்.

1969 மனிதன் சந்திரனில் நடக்கிறான். மலேசியாவை இனக்கலவரம் தாக்குகிறது.

1970 பிலிப்பைனில் மாணவரிடையே அமைதியின்மை தலையெடுக்கிறது. பீற்றில்ஸ்கள் பிரிகிறார்கள்.

1971 பங்களாதேஷ் உருவாக இந்தியா உதவுகிறது.

1972 றிச்சாட் நிக்சனின் சனி ஜயம். வோட்டர்கேட் மார்க்கோஸ் இராணுவச் சட்டத்தைப் (Martial Law) பிரகடனம் செய்கிறார்.

1973 தாய்லாந்தின் இராணுவ ஆட்சியாளரை எதிர்ப்பாளர் கவிழ்க்கின்றனர். புறூஸ்லீயின் மரணம். ஒபெக்கின் எண்ணெய் வர்த்தகத்தடைச் சட்டம் ஜப்பானை அதிர்ச்சிக்குள்ளாக்குகிறது. அமெரிக்கப்படை வியற்நாமிலிருந்து வெளியேற்றம்.

1974 இந்தியா, அணுத்தாக்குக் ''கருவி'' ஒன்றினைப் பரீட்சிக்கிறது.

1975 சைகோன் வீழ்ச்சியடைகிறது போல் பொட் (Pol-pot) சர்வாதிகார ஆட்சி கம்போடியாவை ஆள ஆரம்பிக்கிறது. படகு மக்கள் (Boat People) இத்தோசீனாவிலிருந்து வெளியேறுகின்றார்கள்.

1976 மாவோவின் மரணம், சௌஎன்லாயின் மரணம். நால்வர் கொண்ட குழப்பக்குழு (Gang of four) கைதாகிறது.

1978 டெங் சியோப்பிங் சீனச் சீர் திருத்தத்தை ஆரம்பிக்கிறார். முதலாவது பரிசோதனைக் குழாய்க் குழந்தையின் பிறப்பு.

1979 சோவியத் படைகள் ஆப்காளிஸ்தான் மீது படையெடுப்பு. 'பொல்பொட்' ஐ வியற்நாம் கவிழ்க்கிறது. பாக்சுங்ஜூஹியின் படுகொலை. சூல்பிகர் பூட்டோ தூக்கிலிடப்படுகிறார். சீனா ஒருகுடும்பத்துக்கு ஒரு குழந்தைத் திட்டத்தை (குடும்பக் கட்டுப்பாட்டியக்கத்தை) ஆரம்பிக்கிறது.

1980 தென்கொரியாவில் குவாங்ஜியு நகரத்தில் எதிர்ப்பாளர்கள் கொடுங் கொலைக்குள்ளாகின்றனர். கார் தயாரிப்பில் உலகிலேயே ஜப்பான் முதலிடம் பெறுகிறது.

1983 மணிலா விமானத் தளத்தில் வைத்து பெனிக்னோ அக்குனோ கொலை செய்யப்படுகிறார். கொரியாவின் ஜெற் விமானம் சுட்டு வீழ்த்தப்படுகிறது இலங்கையில் இனக்கலவரம் மூள்கிறது. தென்கொரிய அமைச்சர்கள் றங்கூனில் படுகொலை செய்யப்படுகிறார்கள். எயிட்ஸ் நோய்க்கான நுண்ணுயிர் இனங்காணப்படுகிறது. ஐபிஎம் நிறுவனம் தனக்கென்று செய்த கணனியைத் திறந்து வைக்கிறது.

1984 பிரித்தானியாவும், சீனாவும் ''ஹொங்கொங்'' பிரகடனத்தில் இணைந்து கைச்சாத்திடுகின்றன. இந்திராகாந்தியின் படுகொலை. புறூனை சுதந்திரம் அடைகிறது

1986 செர்னோபில் அணு ஒழுக்கு. மக்களின் சத்தி கொறசோன் அக்குவினோவை ஆட்சித் தலைமையில் இருத்துகிறது.

1987 உலகின் கையிருப்புச் சந்தையின் வீழ்ச்சி.

1988 பர்மாவில் சனநாயகச் சார்பாளர் ஆட்சிக்கு எதிர்ப்புக் காட்டியபடியால் ஆயிரக் கணக்கில் கொல்லப்படுகிறார்கள். சாத்தானின் பாடல்கள் நூலை சல்மன் ருஸ்டி வெளியிடுகிறார். தென்கொரியா ஒலிம்பிக்போட்டியின் வரவேற்பாளர்.

1989 ரியான் மன் சதுக்கம் உடைப்புக்குள்ளாகிறது. அவுங்சான் சூகி வீட்டுக்காவலில் வைக்கப்படுகிறார். ஜேர்மனியர் பேர்லின் சுவரை வீழ்த்துகிறார்கள்.

1990 23 ஆண்டுகளாய்த் தளர்த்திருந்த சீன இந்தோனேசிய உறவுத்தளை மீண்டும் இறுகுகிறது.

1991 சோவியத் ஒன்றியம் சிதறுகிறது. வளைகுடாப் போரில் ஈராக்கின் தோல்வி. ராஜீவ் காந்தி படுகொலைக்குள்ளாகிறார். பினாட்டியூபோ எரிமலைச் சிகரம் தீக்குகுகிறது. ஸ்ரார் தொலைக்காட்சி ஆசியாவிலும் தனது ஒளிபரப்பைத் தொடங்குகிறது.

1992 புதிய ஹொங்கொங்கின் ஆளுநர் கிறிஸ் பற்றேன் சீனாவை எதிர்க்கிறார். பிலிப்பைன் கிளர்ச்சியாளரை இராணுவ ஆட்சியாளர் அடக்கி மேலெழுகின்றனர்.

1993 கம்போடியாவில் அரசர் ஷிஹானூக் முடி சூட்டப்படுகிறார். ஜப்பான்படை போர்க் காலத்தில் பெண்களை (''வசதியான பெண்கள்'') இழிவு படுத்தியதாகிய குற்றச்சாட்டினை ஜப்பான் ஏற்றுக்கொள்கிறது.

1994 வியற்நாமுக்கெதிரான வர்த்தகத்தடையை ஐ. அமெரிக்கா நீக்குகிறது. 1948 இல் பதவிக்கு வந்த கிம் II சங் மரணமடைகிறார்.

தொகுப்பு: சொக்கன்

ஏசியாவீக், ஒக்ரோபர் 5, 1994

சீனா:

4000 வருடங்களின் பின் உருமாறாமல் புதைகுழியிலிருந்து வெளிவரும் சடலங்கள்

இயற்கை உருவாக்கித் தந்த எண்ணற்ற பொருள்களுள் மண்ணும் ஒன்று. உயிரினங்கள் தோன்றி வாழவும், வளரவும் மண்தான் முக்கிய ஆதாரம். உயிருள்ளவை தோன்றி உயிரற்றவை முடியுமிடம் மண் என்கிறார் ஒரு தத்துவ ஞானி. பன்னெடுங் காலத்தின் முன் மண்ணில் புதைக்கப்பட்ட மனித உடல்களும், மண்ணால் மூடப்பட்ட இறந்த மிருகங்களும் தாவரங்களும் காலத்திற்குக் காலம் சிதைவுறாமல் வெளிவருகின்றன. இந்த வரிசையில் 1970 ஆம் ஆண்டு தொடக்கம் சீனாவின் மத்திய மாகாணம் சின்ஜியாங்கில் (Xinjiang) வெளிவரும் நூற்றுக்கு மேற்பட்ட மனித உடல்கள் முக்கிய இடம் பெறுகின்றன. மண்ணின் தன்மையாலும், இப்பிரதேச தட்ப வெப்ப நிலையாலும் கி. மு. 2000 ஆண்டளவில் புதைக்கப்பட்ட இவ்வுடல்கள் இன்று நேற்று அடக்கஞ் செய்யப்பட்டவை போன்று கெட்டுப் போகாமல் இருக்கின்றன.

இவ்வுலக வாழ்வை நீத்தபின் தமக்கு இன்னுமோர் உலக வாழ்வு உண்டு என்று பண்டைய எகிப்தியர்கள் நம்பினர். இவ்வுலகில் இருக்கும் போதே மறு வாழ்வுக்கு வேண்டிய ஆயத்தங்களைச் செய்ய வேண்டுமென்றும் அவர்கள் பூரணமாக நம்பினர். உயிருடன் இருக்கும் போதே எகிப்திய அரசர்களும், மேட்டுக் குடியினரும் தமக்கு மிகவும் ஆடம்பரமான கல்லறைகளைக் கட்டுவித்தனர். இந்தக் கல்லறைகளுக்கு மேல் இன்றைய உலக அதிசயங்களில் ஒன்றான பிரமிட்டுக்களையும் கட்டுவித்தவர். எகிப்திய அரசர்களும், அவர்களுடைய குடும்பத்தினரும் இறந்த பின் தலை, நெஞ்சு, வயிறு ஆகியவற்றில் உள்ள உள்ளுறுப்புக்கள் அகற்றப்பட்டு 72 நாள்களுக்கு உப்பு நீரில் ஊறவைக்கப்படுவர். இதன் பின் இவ்வுடல்கள் நன்றாக உலரவைக்கப்பட்டுப் பல்வேறு மருந்து வகைகளால் நிரப்பப்படும். பதனிடுவதற்குத் தேனும் பாவிக்கப்பட்டதாகச் சில பண்டைய நூல்கள் தெரிவிக்கின்றன. நீளமான சேலைக் இலங்களால் இறுக்கமாகச் சுற்றப்பட்ட உடல் பின்பு மரம் அல்லது கல்லால் செய்யப்பட்ட பெட்டிகளில் இடப்படும். இப்படியாகப் பதனிடப்பட்ட உடலுக்கு ஆங்கிலத்தில் 'மம்மி' (Mummy) என்ற பதம் வழங்கப் படுகின்றது.

வெளியேற்றப்பட்ட ஓர் உடல்

கல்லறைகளில் உள்ள பாதாள அறைகளில் மம்மிகள் பாதுகாப்பாக வைக்கப்படுகின்றன. இவ்வுலகில் அவர்கள் பாவித்த விலைமதிப்பற்ற பொருள்களும், ஆடை ஆபரணங்களும் அங்கு வைக்கப்படுகின்றன. மறு வாழ்வுக்குத் தேவையான சகலமும் உணவு, நீர் உட்பட அங்குபவுத்திரப்படுத்தப் படுகின்றன. இதன் பின் பாதைகள் யாவும் அடைக்கப்படுகின்றன. இன்றுவரை மம்மிகள் கெட்டுப் போகாமல் நல்ல நிலையில் இருக்கின்றன.

சன் ஜியாங்கில் செய்யப்பட்ட அகழ்வுகளில் வெளிவந்த உடல்கள் வித்தியாசப்பட்டவை. இவை எகிப்திய மம்மிகள் போன்று நெடுங் காலம் இருப்பதற்காகத் தயார்ப் படுத்தப் படவில்லை. இறந்தவர்களின் உடல் புதைக்கப்படவேண்டும் என்ற ஒரே காரணம் தவிர வேறுமத நம்பிக்கையோ எண்ணமோ இங்கு காணப்படவில்லை சீனாவின் வட மேற்குப் பகுதியின் ரியன் சான் (Tianshan) மலைத் தொடர்அடிவாரத்திலிருந்து தெற்குச் சீனாவின் தக்கிலிமாக்கன் பாலைவனப் பிரதேசம் வரையிலான உஷ்ண வலயத்தில் தோண்டும் வேலைகள் நடைபெறுகின்றன. வெளிவந்த உடல்கள் பொது மக்களுக்குச் சொந்தமானவை யென்றும் தெரிவிக்கப்படுகின்றது. காய்ந்த வரட்சியான பாலைவனப் பகுதியில் புதைக்கப்பட்ட படியால் உடல் வேகமாகக் காய்ந்து பல நூற்றாண்டுகள் சென்ற பின்பும் பழுதடையாமல் இருக்கின்றன.

உலகத்தோரை நிறவாரியாக மூன்று பெரும் பிரிவுகளாக வகுக்கலாம். மொன்கோலோயிட்ஸ் (Mongoloids) எனப்படும் மஞ்சள் தொடக்கம் பழுப்பு நிறம் வரையிலானவர்கள் நீக்ரோயிட்ஸ் எனப்படும் (Negroids) இலேசான கறுப்பில் தொடங்கி இருள் கறுப்பு வரையிலானவர்கள் கொக்கேசியன்

(Caucasian) எனப்படும் வெண்மையில் தொடங்கி மாநிறம் வரையிலானவர்கள் என்ற மூன்றையும் ஐந்தாக விரித்துக் கூறுபவர்களும் உளர். இந்த மூன்று பிரிவினர்கள் பற்றிக் காலங் காலமாக நிலவும் சில அடிப்படை வரலாற்றுத் தரவுகளை சின்ஜியாங் அகழ்வுகளின் பின் மாற்ற வேண்டியுள்ளது. நிறவாரியான பிரிவுகள் இறுக்கமானவையல்ல. ஒவ்வொரு நிறத்திற்குள்ளும் வேறு நிற உட்பிரிவினர் உளர்.

சின்ஜியாங் புதைகுழியிலிருந்து மீட்கப்பட்ட சடலங்கள் யாவும் கோக்கேசியன் இனத்தவர்களுடையதாகும். அவர்களுடைய நிறமும், உடலமைப்பும் இதைத் தெளிவாகக் காட்டுகின்றன. இவர்கள் கிழக்கு ஐரோப்பாவுக்குச் சொந்தமானவர்கள் என்பதே ஆய்வுகளின் முடிவு. அப்படியாயின் அவர்கள் இவ்வளவு தூரம் வரக் காரணம் என்ன? மஞ்சள் நிறத்தவர்கள் உலகப் பிரசித்தமான நாடோடிகள். அவர்களை மிஞ்சியவர்களும் வெள்ளை இனத்தவர்கள் மத்தியில் உளர். அத்துடன் பல கண்டுபிடிப்புக்களுக்குக் காரணமான சீனர்களுக்கு வண்டில் சில்லுச் செய்முறையையும், உலோகத்தாலான ஆயுதம் மற்றும் பாவனைப் பொருள்களையும் இவர்கள் அறிமுகஞ் செய்திருக்கலாம் என்று ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

மூன்று மரப்பலகைகளை ஒன்றாக அடித்து இறுக்கி நடுவில் துவாரம் இட்டு சுற்றி வட்டமாக வெட்டி எடுக்கும் முறை கி.மு. 3,000 அளவில் உக்கிரேயின் பகுதியில் காணப்பட்டுள்ளது. புதைகுழிகளில் இது போன்ற சில்லுகளின் துண்டுகள் காணப்படுகின்றன. பிற்கால மொங்கோலியர்கள் போன்று இவர்கள் குதிரை மேல் உலாவியவர்கள் என்பதை அகழ்வுகளில் கிடைத்த கடிவாளம், வார்சேணம் போன்றவை தெரிவிக்கின்றன. இவர்கள் பேசிய மொழி இன்றைய இந்தோ-ஐரோப்பிய மொழிகளின் முன்னோடியாக இருக்குமா என்ற கேள்வி எழுந்துள்ளது. மத்திய ஆசியாவில் கொக்காரின் எனப்படும் இந்தோ-ஐரோப்பிய மொழி இன்றும் வழக்கில் உள்ளது பட்டுப் பாதையுடன் தொடர்புடைய கஸ்கார் நகருக்கு அண்மையில் உள்ள குகைகளில் ஐரோப்பிய உடலமைப் புள்ளவர்களின் சித்திரங்கள் காணப்படுகின்றன.

இந்தச் சடலங்கள் உடுத்தியிருந்த ஆடைகளும் நிபுணர்களின் கவனத்தைப் பெற்றுள்ளன. அவற்றின் செய்திறனும், நெசவு முறையும் அக்கால ஐரோப்பிய ஆடைகளை ஒத்ததாகும். அவுஸ்திரியா, ஜேர்மன், ஸ்கந்திநேவியா ஆகிய நாடுகளில் செய்யப்பட்ட அகழ்வுகளின்போது இதுபோன்ற ஆடைத் துண்டுகள் வெளிவந்துள்ளன. இவை கம்பளி ஆட்டின் உரோமத்திலிருந்து நெசவு செய்யப்பட்டு வர்ணம் தீட்டப்பட்டவையாகும். வெட்டித் தைக்கப்பட்ட விதம் வெகு நேர்த்தியானதென்று ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

தமிழில்:
கலாநிதி க. சோமஸ்கந்தன்

இது வரையில் 113 புதைகுழிகள் தோண்டப்பட்டுள்ளன. சடலங்கள் யாவும் முகம் மேற்பார்த்த படியும் கால் வயிற்றை நோக்கி இழுத்து ஒடுக்கிய படியும் காணப்படுகின்றன. ஒடுக்கமான புதைகுழியில் அடக்கஞ் செய்வதற்கு இதுவே சிறந்த முறை. இறந்த ஆண், பெண், சிறுவர் யாவரும் முழு ஆடைதரித்தபடியே காணப்படுகின்றனர். எல்லோருக்கும் வெளுப்பான தலைமுடியே உண்டு. சில பெண்களின் தலையில் இரண்டடி நீளமான தோல் தொப்பி காணப்படுகின்றது. சுசக்கஸ்தான் குடியரசில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வொன்றில் ஓர் ஆணின் தலையிலும் இதுபோன்ற நீளத் தொப்பி காணப்பட்டுள்ளது. இது ஓர் இனத்தின் குறியீடு அல்லது அந்தஸ்தின் சின்னமாக இருத்தல் வேண்டும்.

புதைகுழிகளில் நாளாந்தப் பாவனைப் பொருள்களும் எடுக்கப்பட்டுள்ளன. மட்பாண்டங்கள் மரச்சீப்புக்கள், எலும்பு ஊசிகள், மணிகள், உணவு வகைகள் இத்தியாதி இவற்றைப் பரிசோதனை செய்தபோது அவற்றின் காலம் கி.மு. 1,200 என்று தெரியவந்துள்ளது. ஓர் உடலின் பக்கத்தில் சத்திர சிகிச்சைக்குப் பயன்படுத்தும் சிறிய கத்தியும், மூலிகையும் காணப்பட்டுள்ளன. இவர் ஒரு மருத்துவர் ஆக இருத்தல் வேண்டும். இன்னுமோர் உடலில் சத்திரசிகிச்சை செய்யப்பட்டு குதிரை மயிரால் தையல் போடப்பட்ட தடயம் கிடைத்துள்ளது.

இன்றைய சின்ஜியாங் மாகாணத்து உய்கூர் (Uyghur) இனத்தவர்கள் சிமைக்களிலிருந்து வேறுபட்டவர்கள். உருவத்திலும் மொழியிலும் இவர்களுடைய தனித்துவம் தெரிகின்றது. இந்த உடலுக்குரியவர்கள் உய்கூர் இனத்தவர்களுடன் கலந்திருக்கவேண்டும். வரலாற்றுப் புகழ் பெற்ற பட்டுப்பாதையுடன் உய்கூர் இனத்தவர்கள் நெருங்கிய தொடர்புடையவர்கள். இங்கே புதைக்கப்பட்டிருப்போர்களும் இந்தப்பாதையால் வந்திருக்கக்கூடும், அல்லது அவர்களுக்கும் பட்டுப் பாதைக்கும் ஏதேனும் விதத்தில் நெருங்கிய தொடர்பு இருக்கலாம். வருங்கால ஆய்வுகள் தான் முடிவான பதில் சொல்ல வேண்டும்.

நீடர்ஸ் டைஜஸ்ற் செப்தெம்பர், 1994

மண்ணின் மறைந்த பொருள்

மதத்திற்கும் கலைகளுக்கும் நெருங்கிய தொடர்புண்டு. புராதன காலந் தொட்டு கலைகள் மதத்தின் நிழலில் வளர்ந்துள்ளன. எங்கெல்லாம் பெரும் நாகரிகங்கள் தலையெடுத்தனவோ அங்கு இந்த நிலையை நாம் காணலாம். மனித வாழ்வில் இனக்குழு வாழ்வு முடிந்த கட்டத்தில் மன்னரைத் தெய்வமாகக் காணும் மன நிலை வளர்ந்துள்ளது. இதன் காரணமாக அரசன் அல்லது ஊர்த்தலைவனது மேலாதிக்கத்திற்குப் பணிவது கடவுளுக்குப் பணிவதாக எண்ணப்பட்டுள்ளது. திருவுடை மன்னனைக் கண்டேன். திருமாலைக் கண்டேன் என்கிறது வைணவப் பிரபந்தம். ஆகவே இறைவனுக்குக் கொடுக்கப்பட்ட ஆடல், பாடல், அணிகள், அடிமை, சீர், வரிசை யாவும் நடமாடும் தெய்வமாகிய அரசனுக்கு கொடுக்கப்பட்டுள்ளது. சீனா, இந்தியா, எகிப்து, தென் அமெரிக்கா ஆகியவற்றின் பண்டைய வரலாறுகள் இதை எமக்கு நன்கு உணர்த்துகின்றன.

16 ஆம் நூற்றாண்டின் ஆரம்பகாலத்தில் கிறிஸ்தோப்பர் கொலம்பஸ் மேற்கு இந்தியத்தீவுகளையும், தென் அமெரிக்காவையும் நெடிய கடற் பிரயாணம் செய்து கண்டு பிடித்துள்ளான். கொலம்பசைப் பின்தொடர்ந்து இங்கு வந்த (Spain) ஸ்பெயின் நாட்டவர்கள் இங்குள்ள பழம் பெரும் நாகரிகங்களையும் சாம்ராச்சியங்களையும் இல்லாதொழித்துள்ளனர். இத்தகைய காரியத்தில் 1,475 ஆம் ஆண்டு ஸ்பெயினில் பிறந்த டொன், பிரான் பிஸ்ஸாரோ (Don Fransisco Pizzaro) என்ற படைத்தலைவன் முதன்மையானவன். அக்காலத்தில் தென் அமெரிக்காவின் பெரும்பகுதியை உள்ளடக்கிய இன்கா சாம்ராச்சியத்தை (Inca Empire) இவன் 180 படை வீரர்களின் துணையுடன் ஸ்பெயின்

நாட்டின் உடைமையாக்கியுள்ளான். வடக்கில் பேரு (Peru) நாட்டில் தொடங்கித் தெற்கில் சிலி. (Chile) நாடு வரையும் மேற்கில் பசுபிக் சமுத்திரக் கரையிலிருந்து அமேசன ஆர்ஜென்ரீனா (Argentina) நாடுவரை படர்ந்திருந்த இந்தப் பிரமாண்டமான நிலப்பரப்பைப் பிஸ்ஸாரோ கைப்பற்றிய சாதனை உலக இராணுவ வரலாற்றில் முக்கிய இடம் பிடித்துள்ளது.

இன்கா அரச பரம்பரையினரின் பெயரே இந்த நாட்டிற்கும் வழங்கப்பட்டுள்ளது. அன்டிஸ் (Andes) மலை உச்சியில் குஸ்கோ (Cuzco) என்ற தலைநகரை அமைத்து, அங்கிருந்து இன்கா மன்னர்கள் தமது நாட்டை நிர்வகித்து வந்துள்ளனர். அன்டிஸ் மலைத்தொடரைக் குடைந்து அங்குள்ள பெருந் தொகையான பொன், வெள்ளி, வைரக்கற்கள் யாவற்றையும் இவர்கள் வெளிக்கொணர்ந்துள்ளனர். தமக்கும் தாம் வணங்கிய தெய்வங்களுக்கும் பெருவியப்பூட்டும் கலையழகு பொருந்திய ஆபரணங்களையும், பாவனைப் பொருள்களையும் பொன், வெள்ளி ஆகியவற்றில் கற்களைப் பதித்துச் செய்வித்துள்ளனர். இந்த மன்னர்களுடைய களஞ்சியங்களில் பெருஞ் செல்வம் முடங்கிக் கிடந்துள்ளது. என்றாலும் இன்கா நாகரிகத்திற்குரியவர்கள் எழுத்தையும் இரும்பையும் அறியாதவர்கள். இதனால் அவர்களுடைய உண்மையான வரலாற்றை எம்மால் அறிய முடியாதிருக்கின்றது.

இன்கா நாட்டை மடக்கிப் பிடித்த ஸ்பெயின் நாட்டவர்கள் எழுதிவைத்த ஒரு தலைப்பட்சமான நூல்கள் தான் எமக்கு வழிகாட்டுகின்றன. இன்கா விடம் பெரும் இராணுவமும் சாம்ராச்சியத்தின் மூலை முடுக்கெல்லாம் இவர்கள் போவதற்கு வசதியாக நெடுஞ்சாலைகளும் இருந்ததாக இவற்றிலிருந்து நாம் அறிகிறோம். எழுத்தறியா நாட்டில் நிர்வாகம் எப்படி அமைந்துள்ளது என்றறிய உலகம் ஆவலாய் உள்ளது. நிர்வாக அதிகாரிகளின் இடுப்பில் தொங்கும் நீளமான கயிறுகளில் போடப்படும் முடிச்சுக்கள் நிர்வாக விபரங்களைக் கொண்டுள்ளதாக வரலாற்று நூல்கள் தெரிவிக்கின்றன. அலுவலகங்களில் பெரும் கயிறுகளும் முடிச்சுகளும் காணப்பட்டுள்ளன.

இன்கா மக்களின் மிகப்பெரிய கடவுள் வீரக்கொச்சா (Viracocha) என்றழைக்கப்பட்டார். இவர் வெள்ளை நிறமும், தாடியும் உள்ள சூரியக் கடவுள். இன்றும் சூரிய வணக்கம் இப்பிரதேசங்களில் முக்கிய இடம் வகிக்கின்றது. வீரக் கொச்சாவிற்கு அர்ச்சனை செய்யும் பூசகர்கள் நரபலிகொடுத்ததற்குச் சான்றுகள் கிடைத்துள்ளன. இந்த சாம்பிராச்சியத்தின் மிகப்பெரிய அரசனின் பெயர் ஹீபானாகப்பா (Huyana Cappa). இவன் இறக்கும் தறுவாயில் இருக்கும் போது தனது நாட்டை இருபகுதியாகப் பிரித்துத் தனது இரு மனைவிகளின் பிள்ளைகளாகிய ஹீவெஸ்கார், அற்றஹீவல்பா (Huascar, Atahualpa) என்ற இருவருக்கும் கொடுத்துள்ளான். அரசன் இறந்ததும் இருவருக்குமிடையில் கொடிய உள்நாட்டு யுத்தமொன்று வெடித்துள்ளது. இறுதியில் மூத்தவன் கொல்லப்பட்டு இளையவன் அற்ற ஹீவெல்பா அரியாசனம் ஏறினான்.

இத்தக் கட்டத்தில் தான் பிஸ்ஸாரோவும் அவனுடைய 180 தோழர்களும் அப்பகுதிக்கு வந்துள்ளனர். நேரில் போர் செய்ய வலிமையற்ற பிஸ்ஸாரோ வஞ்சனையால் அற்ற ஹீவல்பாவை மடக்கிப் பிடித்துள்ளான். அவனுடைய இரும்பு ஆயுதங்களையும், இரும்புக் கவசங்களையும் நெருங்கிப் பார்வையிடுவதற்காக வந்த போதே அரசன் அப்பட்டதாக ஸ்பெயின் நாட்டு வரலாறு இயம்புகின்றது இன்கா நிர்வாகம் மிகவும் இறுக்கமானது. அரசன் ஒருவன் கட்டளை இடுவதற்குத் தகுதி வாய்ந்தவன். ஆகவே அரசனின் இடத்திற்கு ஸ்பெயின் நாட்டவர்கள் ஏறிபதும் மக்கள் அவர்களின் சொற்படி நடக்கத் தலைப்பட்டனர். ஸ்பெயின் நாட்டவர்கள் தமது நாட்டின் அருஞ் செல்வம் யாவற்றையும் கப்பல்களில் ஏற்றிச் செல்லும் போதெல்லாம் அவர்கள் காட்டிய சிறிய எதிர்ப்பையெல்லாம் வெள்ளையர்களின் இரும்பு ஆயுதங்கள் எளிதில் அடக்கி விட்டன. என்றாலும் 1,532 ஆம் ஆண்டு இன்கா நாட்டைக் கைப்பற்றி ஸ்பெயின் நாட்டரசின் ஆளுநராகப் பதவியேற்ற பிஸ்ஸாரோ, 1,541 ஆம் ஆண்டு தனது சகாக்களினால் ஆளுநர் மாளிகையில் வைத்தே குத்திக் கொலை செய்யப்பட்டுள்ளான். காரணம் பதவிப் பொறாமை.

தங்கத்தில் புலியின் தலை

ஸ்பெயின் நாட்டிலும் பன்மடங்கு நிலப்பரப்புக் கொண்ட இன்கா சாம்ராச்சியம் பெரும் பழைமை வாய்ந்ததல்ல. நடுநிலை வகிக்கும் ஆய்வாளர்களின் கருத்தில் இந்தச் சாம்ராச்சியத்தின் வயதெல்லை நூறு வருடமளவு

Tamileelam Archive

தமிழில்:

கலாநிதி க. சோமஸ்கந்தன்

தான் இருக்கும். ஆனால் அண்மைக் கால அகழ்பொருள் ஆய்வுகள் பிறிதோர் கதை சொல்லுகின்றன. ஸ்பெயின் நாட்டவர்களும் பின்பு இங்கு வந்த போர்த்துக்கேசர் போன்ற ஐரோப்பியர்களும் இன்கா சாம்ராச்சிய வரலாற்றுடன் தமது நூல்களை நிறுத்திக் கொண்டுள்ளனர் இப்போது கிடைக்கும் தகவல்களின்படி கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலந் தொட்டு இன்கா அரசர்கள் பிடித்த நிலப்பரப்பில் பல தொன்மைமிகு நாகரிகங்கள் இருந்துள்ளன. எழுத்துரு இல்லாதபடியால் மண் அகழ்வில் கிடைப்பனவே சான்று பகரவேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. இவ்வாறான நாகரிகங்களை ஆய்வாளர்கள் நான்பெரும் பிரிவுகளாக வகுத்துள்ளனர். அவையாவன:

01. மத்திய அந்திய மலைப்பிரதேச நாகரிகங்கள்.
02. கருபியன் கடற்பிரதேசம்,மற்றும் அதைச்சார்ந்த தென் அமெரிக்க நிலப்பரப்பு நாகரிகங்கள்.
03. உஷ்ண வலயக் காட்டுப்பிரதேச நாகரிகங்களும், தெற்கு அந்திய மலைப்பிரதேச நாகரிகங்களும்
04 உதிரியான வேறு சில நாகரிகங்கள்.

முதலாவதைவிட மற்றெல்லாவற்றிலும் பற்பல உட்பிரிவுகள் உண்டு. அந்திய மலைப்பிரதேசத்திற்கும் பசுபிக் கடற்கரைக்கும் இடைப்பட்ட பகுதி பாலைவனத்தை ஒத்த உஷ்ணவலயமாகும். இங்கு மண்ணின் கீழ் சென்ற பொருள்களுடன் புதைக்கப்பட்டவையும் இன்றுவரை நல்ல நிலையிலுள்ளன. புதைகுழிகளிலிருந்து மீட்கப்பட்டவற்றையும் ஆய்வாளர்கள் பின்வருமாறு வகைப்படுத்தியுள்ளனர். (அ) மட்பாண்டங்கள், சாடிகள், பாவனைப் பொருள்கள். (ஆ) பவுண், வெள்ளி, வைர ஆபரணங்கள். (இ) வேலைப்பாடுகள் நிறைந்த இறந்த உடலைச் சுற்றும் பருத்தி, கம்பளி ஆடைகளும், துணிகளும் (ஈ) புதைகுழியில் இடப்பட்ட சாடிகளில் அடைக்கப்பட்ட அவரை, சோளம் போன்ற தானியங்கள்.

அங்குள்ள கரையோர உஷ்ண வலய நகர வீடுகள் பெரும்பாலும் மண்ணால் கட்டப்பட்டிருந்தன. ஆனால் மலைப்பகுதி வீடுகள் வெட்டியெடுக்கப்பட்ட கற்களால் கட்டப்பட்டு இன்றுவரை நிலைத்துள்ளன. உருளைக்கிழங்கு விதம் விதமான அவரைகள், கொடியில் வளரும் வெள்ளரி, வத்தகை போன்றவை, இந்தப் பிரதேசத்தில் வாழ்ந்தோர் உலகிற்களித்த உணவு வகைகளாகும்.

தென் அமெரிக்காவின் பழங்குடியினரின் வரலாறு ஒருவருமறியாத புதிராகவே இருக்கிறது. இவர்கள் யார்? இவர்களின் வாழ்க்கை முறை என்ன? என்பதெல்லாம் ஒரே மர்மமாக இருக்கின்றன. பேரு நாட்டின் உஷ்ணப்

பிரதேசத்தில் வாழ்ந்த மூன்று பூர்வீகக்குடிகள் இதுவரையில் அடையாளம் காணப்பட்டுள்ளனர். மொச்சிக்கா (Mochica) என்றும் அழைக்கப்படும் மொச்சே (Mochica) இனம், நஸ்கா (Nazca) மற்றும் பரஸ்காஸ் (Paracas) இனத்தவர். பேரு நாட்டில் அரசர்கள், கிராமத் தலைவர்களின் கல்லறைகளைச் சூறையாடுவது பரம்பரைத் தொழிலாகும். அதாவது அப்பன் பிள்ளையென்று தொடர்ச்சியாக இந்தத் தொழில் வழங்கி வருகின்றது. இதனால் பல வரலாற்றுச் சான்றுகள் அழிக்கப்படுகின்றன அல்லது அலங்கார பொருள்கள் வாங்கி வீடுகள் வர்த்தக நிறுவனங்களை அலங்கரிப்போரிடம் போய்ச்சேருகின்றன. பேருவில் கிடைக்கும் 2,000 வருடங்களுக்கு முற்பட்ட கலைப்பொருள்களுக்கு அமெரிக்கா, இங்கிலாந்து, ஜேர்மன், ஜப்பான் போன்ற நாடுகளில் நல்ல விலையுண்டு இதனால் மேற்கூறிய பூர்வீகக்குடிகளின் வரலாற்றுத் தகவல்களைத் தேடுவது கடினமாக இருக்கின்றது.

மொச்சே சாம்ராச்சிய காலம் கி.மு. 100 தொடக்கம் கி.பி 700 வரை என்று வரலாற்றாசிரியர்கள் நிர்ணயம் செய்துள்ளனர். மொச்சே பள்ளத்தாக்கில் இவர்களுடைய சின்னங்கள் காணப்படுவதால் இவர்களுக்கு இந்தப் பெயர் கொடுக்கப்பட்டுள்ளது. இவர்கள் விட்டுச் சென்ற சின்னங்கள் பல உள. அவற்றைப் பின்வருமாறு விபரிக்கலாம். 20 மாடிக் கட்டட உயரமுள்ள பிரமிட் கட்டடத் தொகுதிகளும், சிறிய ரக பிரமிட் கட்டடங்களும். இதை விடப் பல்வேறு மதச்சடங்குகளுக்குப் பாவிக்கப்பட்ட கட்டடங்களும் அழிந்த நகரங்களும், அத்துடன் அசைவுள்ள உயர்தர கலையம்சம் பொருந்திய பொன், வெள்ளி ஆபரணங்களும், மதச் சடங்குகளுக்கு உபயோகிக்கப்படும் பாத்திரங்களும் ஏராளம். வெண்கலியில் செய்யப்பட்ட சாடிகளும் இதிலடங்கும். இத்தகைய அசைவற்ற மொச்சே சின்னங்கள் அவர்கள் வாழ்ந்த பலபகுதிகளில் காணப்படுகின்றன.

ஆனால் இவர்களைப் பற்றிய மேலதிக விபரங்கள் யாதொன்றும் இதுவரை வெளிவரவில்லை. 800 வருடங்களென மதிப்பிடப்பட்ட இவர்களது வரலாற்றிற்குரிய தடயமொன்றும் இதுவரை கிடைக்கவில்லை. இவர்களுடைய மத அனுட்டானங்கள் எவை? இவர்கள் பூசித்த தெய்வம் என்ன? இவர்களை ஆண்ட அரசன் யார்? போன்ற செய்தி ஒன்றும் அகப்படவேயில்லை! மேற்கூறிய பிரமிட்டுக்குள் மூடியிருக்கும் ஒரு பேரரசன் அல்லது தலைவனுடைய கல்லறை திறபட்டால் மாத்திரம் மர்மம் ஓரளவு துலங்கும் வாய்ப்பு உண்டு.

மொச்சே நாகரிகம் விவசாயத்தை அடிப்படையாகக் கொண்டது. இன்கா மக்கள் மாதிரி இவர்களும் எழுத்தறியாதவர்கள் இவர்களும் இன்கா மாதிரி சூரிய வணக்கம் செய்திருக்க வேண்டும். சுடப்பட்ட மண்கட்டிகளால் கட்டப்பட்ட பிரமிட் உருவ சூரியன் கோயில் 12 ஏக்கர் நிலத்தை மூடிக் கொண்டு இன்றுவரை நிற்கின்றது. 130 மில்லியன் நீள் சதுரக்கட்டிகள் இதில் அடங்கி இருப்பதாகக் கணக்கிடப்பட்டுள்ளது. இந்தக் கோயிலைச் சேவிப்பதற்கு 10,000 மக்கள் அவ்விடத்தில் குடியிருந்திருக்கவேண்டுமென்றும் தெரிவிக்கப்படுகின்றது. அவர்களுடைய இராணுவக் கட்டடங்களும் இதைப்போன்று பிரமாண்டமானவை. அவர்கள் மலையிலிருந்து நீர் கொண்டுவந்து பாலைவனத்தில் பயிர் செய்துள்ளனர். 71 மைல் நீளமான நீர் வாய்க்கால் ஒன்று இன்றும் பாவிப்பில் இருக்கின்றது. எனினும் இவர்களைப்பற்றிய தடயங்கள் யாவும் ஐரோப்பியர்களாலும், பேரு நாட்டவர்களாலும் சூறையாடப்பட்டு மறைந்து விட்டன.

1987 ஆம் ஆண்டு பேரு நாட்டின் வடகரைக் கிராமம் ஹூவாக்கா றஜாடா (Huaca Rajada) வில் இதுவரை கேள்விப்படாத பிரமிட் ஒன்றைத் திருடர்களும், கிராமத்தவர்களும் கூட்டாக உடைக்கிறார்கள் என்று அண்மை நகர் காவல் துறைக்குச் செய்தி கிடைத்துள்ளது. காவல் துறையினர் அசட்டையாக இருப்பது வழக்கம். ஒம்முறை அவர்கள் மாறாக பேரு நாட்டின் புதை பொருள் நிபுணர் வால்ரா அல்வா (Walter Alva) என்பவரையும் அழைத்துக் கொண்டு ஸ்தலத்திற்கு விரைந்தனர். அல்வா அவர்கள் பல வரலாற்று முக்கியம் வாய்ந்த கண்டு பிடிப்புக்களைச் செய்துள்ளார்; பிரமிட்டின் மேல் தளத்தில் உள்ள திரவியங்கள் மாயமாக மறைந்துவிட்டாலும் அவர் உதவியாளர்களுடன் இழாக வெட்டிச் சென்று விலைமதிப்பற்ற தங்க ஆபரணங்களை வெளிக்கொணர்ந்துள்ளார்.

17,00 வருடங்களுக்கு முற்பட்ட அதிசய வேலைப்பாடுகளுடன் கூடிய அரசருக்குரிய ஆபரணங்களும், பாவனைப்பொருள்களும் முதன்முறையாக இவ்விடத்தில் வெளிவந்துள்ளன. இன்னுமொரு மட்டத்தில் பருத்திச் சேலையில் சுற்றப்பட்ட உயர்குடிப் பிறந்த நாட்டுத் தலைவனின் எலும்புகளும் அவனுடன் உயிருடன் புதைக்கப்பட்ட அடிமைகளின் எச்சங்களும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. பவுண் தகடுகளால் தலைவனின் உடல் மூடப்பட்டிருந்தன இதில் செய்யப்பட்டிருந்த வேலைப்பாடுகள் எகிப்து நாட்டின் புராதன ஆபரணங்களுக்கு நிகராக இருக்கின்றன. இந்த ஆபரணங்கள் இவ்வரசன் மானுட உருவத்தில் உலாவும் தெய்வம் என்பதைக் காட்டுகின்றன. இதற்குரிய மதவைபவச் சான்றுகளும் அவ்விடத்தில் காணப்படுகின்றன. இந்தக் கல்லறையில் காணப்பட்ட வையாவும் பல்வேறு ஆய்வுகளுக்கு உட்படுத்தப் படுகின்றன. எதிர்காலத்தில் புராதன தென் அமெரிக்க நாகரிகங்கள் பற்றிய வரலாற்றை எழுதுவதற்கு இவை பெரிதளவு உதவலாம்.

தென் அமெரிக்க சமூதாயங்கள்
கலிபோர்னியா பல்கலைக்கழக
விரிவுரை 1987
ஆதாரம் (2) நீடர்ஸ் டைஜஸ்ற்
செப்ரெம்பர் 1994

மாசுபடுத்தப்பட்ட அமேசன் பிரதேசம்

எழுதியவர்:
மைக்கல் எஸ். ஸெரிஸ்

சாமுவேல் பீமோர்கீஸ் என்பவருக்கு வாயில் புண்ணும், வயிற்றோட்டமும் சேர்ந்த வியாதி ஒன்று ஏற்பட்டது. இதனைத் தொடர்ந்து கண்களும் மங்கி, கைகளிலும், கால்களிலும் கடுமையான நடுக்கம் ஏற்பட்டு, கைகளினால் எதனையும் பிடிக்கவோ, கால்களால் நடக்கவோ முடியவில்லை என்கிறார் பீமேர்கீஸ்.

பிறேசிலின் தங்கச் சுரங்கப் பட்டணமான ஜூயோடியூபாவில், பலசரக்குக்கடை ஒன்றை வைத்திருக்கும் சாமுவேல் தனக்கேற்பட்ட இந்த வியாதிக்காக உள்ளூர் மருத்துவர்களிடம் சிகிச்சை பெற்றார். நோயின் மர்மம் கண்டு பிடிக்கப்படாமல் போகவே மருத்துவ நிபுணர்களைக் காணும் பொருட்டு சாவோ பௌலுவிற்குப் பறந்து சென்றார். மேக்குரியினால் ஏற்பட்ட நச்சுத்தன்மை (Acute Mercury Poisoning) இது என இனங்காணப்பட்டது. மேக்குரியினால் நஞ்சூட்டப்பட்ட டபஜோஸ் (Tapajos River) ஆற்றில் பிடிக்கப்பட்ட மீனைச் சாப்பிட்டதனாலே இது ஏற்பட்டது. இது சுமார் 7 வருடங்களுக்கு முன் நடந்தது.

தங்கத்தின் மீது பைத்தியம் பிடித்தவர்கள், அமேசனை நோக்கிப் படையெடுத்த போது அதனால் ஏற்படுகின்ற சூழல் பிரச்சனைகளைப் பற்றி ஆகக் குறைந்தது பிறேசில் அரசாங்கம் கூட அக்கறை கொள்ளவில்லை. தங்கத்தைப் பிரித்தெடுப்பதற்குப் பயன்படுத்தப்பட்ட மேக்குரி மழையை வரவழைக்கின்ற காடுகளைச் சிதைத்து ஆறுகளையும் சேறாக்கியதோடு மட்டுமல்லாமல் ஆற்று நீரையும் நச்சுத்தன்மையாக்கிவிட்டது. உணவுச் சங்கிலித் தொடரை மேக்குரி எப்படி அடைகின்றது என்பதற்குரிய ஆய்வுகள் முழுமையாக இல்லாததனால் விஞ்ஞானிகள் முரண்பட்டு நின்றாலும் கூட, ஐரோப்பா அளவு பிரதேசத்தைக் கொண்ட அமேசன் ஆற்றுப் படுக்கையில் ஆயிரக்



1990 அன்றுநாம் எதிர் பார்த்தது ஒன்று; இன்று நடப்பது பிறிதொன்று.

அமேசன் பிரதேசத்தின் சூழல் பாதிக்கப்படுவதால் எதிர் காலச் சந்ததியின் வாழ்வு ஆட்டங் கண்டுள்ளது.

பிறேசிலியன் தங்கச் சுரங்கத்தின் மேக்குரி என்கிற இரசாயனப் பொருளை அதன் ஆற்றுப் படுக்கைகளில் கழிவுப் பொருளாகக் கொட்டுகிறார்கள்.

● ❋ ● ❋ ● ❋ ●

கணக்கானவர்களுக்கு ஆபத்து ஏற்பட்டிருக்கிறது. உயிரியல் விஞ்ஞானியான டாக்டர் ஜெரால்டோ கைமராயீஸ், "அமைதியான சூழல் அழிவினை எதிர்கொள்ளுகின்றோம்" என்கிறார். ஆற்றங் கரையில் வாழும் 90 சதவீத மானவர்களின் உணவு மீன். இவர்கள் பெதுவாக நஞ்சூட்டப்படுகின்றார்கள், இவர்களை உசார்ப் படுத்த வேண்டும். சந்ததியின் எதிர் காலம் ஆட்டம் கண்டுள்ளது என அவர் மேலும் கூறுகிறார்.

அமேசன் பிரதேசத்திலுள்ள பெரிய ஆறுகளில் நூற்றுக் கணக்கான கிலோ மீற்றர்கள் மேக்குரியினால் மாசுபடுத்தப்பட்டுள்ளது என ஆய்வுகள் கூறுகின்றன. தங்கத்தைத் தோண்டுபவர்கள் எங்கே எதனைப் பாவித்தாலும் அவர்கள் மிச்சம் விடுகின்ற வெள்ளிக் கழிவுப் பொருள்கள் மேக்குரியுடன் இணைந்து பெரிய மீன்களில் செறிவாகி மனிதனை அடைகின்றன. கடந்த 15 வருடங்களில் மாத்திரம் ஏறக் குறைய 2,000 தொன் மேக்குரி அமேசன்

பிரதேசத்தில் கொட்டப்பட்டுள்ளதாகவும், மேலும் ஆண்டு தோறும் 200 தொன் மேக்குரி கழிவாக விடப்படும் எனவும் மதிப்பிட்டுள்ளது. மேக்குரி நச்சுத்தன்மையினால் ஏற்படுகின்ற மினாமேற்றா வியாதியினால் மூளையில் பாதிப்பு, குழந்தைகளில் பிறப்பு குறைபாடு, இறப்பு என்பன ஏற்படும். 1950 களில் ஜப்பானிலுள்ள மினாமேற்றா குடாவில் (Japan's Minamata Bay) தொழிற் சாலைகளில் இருந்து வெளிவிடப்படுகின்ற மேக்குரி கழிவுப் பொருளினால் உள்ளூர் வாசிகளுக்குப் பரவலாக ஏற்பட்ட வியாதியினாலேயே 'மினாமேற்றா வியாதி' என்கின்ற பெயர் ஏற்பட்டது. ஆயிரக் கணக்கானவர்களுக்கு மூளையில் நிரந்தரமான பாதிப்பு ஏற்பட்டது. 1,382 பேர் மரணமடைந்தார்கள். கர்ப்பிணித் தாய்மார்களில் பாதிப்பு ஏற்பட்டு வலது குறைந்த பிளளைகள் பிறப்பதே மிகவும் பயங்கரமான பாதிப்பு என்கிறார்கள்.

தங்கச் சுரங்கங்களில் மேக்குரி ஆவியை சுவாசிப்பதனால், அமேசன் பிரதேசத்தில் ஏராளமானோர் பாதிக்கப்படுகிறார்கள். மினாமேற்றா வியாதி முழு அளவில் ஏற்பட்டதை இது வரையில் உறுதிப்படுத்த முடியாவிட்டாலும், இது படிப்படியாக ஏற்படுகின்றது இன்னும் குறிப்பாக அமேசன் பிரதேசத்தில் அதிகளவில் தங்கம் விளைகின்ற இயாறிபியுலாவில் கருச்சிதைவு அதிகளவில் ஏற்படுகின்றது. அரசும், ஆய்வாளர்களும் அதிகளவு அக்கறை எடுக்காவிட்டால் அடுத்த 10-15 வருடங்களில் அமேசன் பிரதேசத்தில் மினாமேற்றா வியாதி முழுமையாக ஏற்படும் என்கிறார், டாக்டர் பொன்னாடோ கார்டோசா.

விஞ்ஞானிகள் இந்த மதிப்பீட்டை முழுமையாக ஏற்கத் தயாராக இல்லை. ஏனெனில் ஜப்பானிலுள்ள மினாமேற்றா குடா மிகவும் அமைதியானது, அடக்கமானது ஆனால் அமேசன் ஒரு பெரிய பிரதேசம். சுழல் காற்றும், கடுமையான மழை வீழ்ச்சியையும் கொண்டது. எனவே இங்குள்ள கழிவு மேக்குரி கழுவப்பட்டும், ஐதாக்கப்பட்டும் விடுவதனால் ஜப்பானில் ஏற்பட்ட விபரீதம் இங்கும் ஏற்படாது என்கிறார்கள்.

இதனை அமெரிக்க ஆராய்ச்சியாளரான டாக்டர் புரூஸ் போர்ஸ்பேக்கும் உறுதிப்படுத்துகிறார்.

ஏறக்குறைய 2,00,000 தங்கச் சுரங்கத் தொழிலாளிகளும், குடும்பத்தினரும் அந்த நதிக்கரைப் பிரதேசத்தில் ஆபத்தில் வாழ்கிறார்கள். 30 கி. மீற்றர் தூரத்தில் ரெயின்ஹா கிராமத்து வாசிகளின் தலைமுடியைப் பரிசோதித்த போது அதிகளவு மேக்குரி இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. அது மாத்திரமல்ல தங்கச் சுரங்கங்களிலிருந்து நூற்றுக்கணக்கான கிலோ மீற்றர் தொலைவில் வசிக்கும் கிராமவாசிகள் கூட இதனால் பாதிப்பிற்குள்ளாகியிருக்கிறார்கள்.

தமிழில்:
டாக்டர் எஸ். பி. ஆர் சர்மாறன்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

தபாஜாஸ் என்கின்ற பிரதேசமே மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது, மற்றும் மடேரியா ஆற்றங்கரைவாசிகளும், கயாப்போ இந்தியர்களும் இதனால் பாதிக்கப்பட்டுள்ளார்கள். மேக்குரியினால் மாசுபடுத்தப்பட்ட ஆற்று மீன்களை உண்ண வேண்டாம் என விஞ்ஞானிகள் தெரிவித்த போதிலும், எங்கள் சட்டியில் வாழுகின்ற அனைத்தையும் நாம் உண்ணுவோம். மீனை உண்ணாவிட்டால் நாம் இறந்து விடுவோம் என்கிறார்கள் கிராமவாசிகள்.

ஆனாலும் அமேசன் பிரதேசத்தில் அநேகம் பேருக்கு இந்த வியாதி இன்னும் ஏற்படவில்லை. எனவே இந்தப் பிரதேசத்தில் இருக்கின்ற ஏதோ ஒன்று மினாமேற்றா வியாதி ஏற்படுவதைத் தடுக்கின்றது என்கிறார்கள் ஆய்வாளர்கள். மேலும் சுகாதார அழிவு ஏற்படப் போகின்றது என எச்சரிப்பவர்கள் பொறுப்பற்றவர்கள் என்கிறார்கள். ஆனாலும் இதனைக் கட்டுப்படுத்துவதற்குரிய நடவடிக்கைகள் உடனடியாக மேற்கொள்ளப்படல் வேண்டும் என்பதனை ஒப்புக் கொள்கிறார்கள். மேலும் மீதமுள்ள மேக்குரிக்கான நச்சுத் தன்மைக்குரிய அறிகுறிகள் காணப்பட்டால் நிலைமை எல்லையைக் கடந்து விட்டதென்றே அர்த்தமாகும்.

பிரச்சனையின் ஆழத்தை விஞ்ஞானிகள் விவாதித்தாலும் அரசாங்கம் அசைவதாக இல்லை. சூழல் தரத்திற்கான நிணைக்களத்தின் (Department of Environmental Quality of IBAMA) தலைவர் ரெயினால்டோ வாஸ் கொன்சிலோஸ் இது பற்றிக் கூறுகையில், ''1988 இல் இயற்றப்பட்ட சட்டம் தங்கச் சுரங்க உரிமையாளர்களை அதிகளவு மேக்குரி பயன்படுத்துவதைக் கட்டுப்படுத்தினாலும் அதனை அமுல் படுத்துவதற்குரிய தைரியம், மனோபலம் அரசாங்கத்திற்கு இல்லை'' என்கிறார்.

பத்திரிகைகளில் இந்தப் பிரச்சனை தலையங்கங்களாக வரும் போது மாத்திரம் ஏதேனும் செய்ய

வேண்டுமென்ற அழுத்தம் அரசாங்கத்திற்கு ஏற்படும். ஆனால், அது மறைய அக்கறையும் மறைந்து விடும் என்கிறார்கள்.

மேக்குரி பிறேசிலிற்குள் இறக்குமதி செய்யப்படுவதனால் இதனை அரசு நன்கு கட்டுப்படுத்தலாம் என்கிறார்கள் நிபுணர்கள். இரண்டு வருடங்களுக்கு முன்னர் IBBMA இறக்குமதியைக் கண்காணிப்பதற்காக ஏற்பாடுகளைச் செய்த போதிலும் 40–50 சதவீதமான மேக்குரி கண்களில் படாமலேயே பிறேசிலிற்குள் நுழைந்து விடுகின்றது. உதாரணமாக இயற்றுபா நகரில் ஒரு கிலோகிராம் எவட கொண்ட மேக்குரி பக்கட்டுகளாக சாதாரண கடைகளில் கிடைக்கின்றது.

உடனடியாக அவசரமான நடவடிக்கை மேற்கொண்டால் கூட இதனைக் கட்டுப்படுத்துவதென்பது முடியாத காரியமாகும். ஏனெனில் 30 வருடங்களுக்கு முன்னர் மினாமேற்றாவில் நடந்த அழிவினால் இன்றும் கூட மீன்களில் ஆபத்தான அளவில் மேக்குரி காணப்படுகின்றது என்றால் இன்றைய மாசுபடுத்தலினால் இன்னும் 30 வருடங்களில் கடுமையான மேக்குரி நச்சுத்தன்மை இருக்கத்தான் போகின்றது. மேலும் மேக்குரி ஒரு முறை சூழலுக்குள் விடப்பட்டால் அதன் ஆபத்து எப்போதுமே இருக்கும் என்கிறார்கள்.

மேக்குரியினால் ஆபத்து விளையப் போகின்றது எனத் தெரிந்தும் அங்குள்ளவர்கள் எதுவித மாற்றத்தையும் செய்யத் தயாராக இல்லை.

— ✶ —

காட்டுத் தீ அபாயம்

உலகில் மூன்றாவது மிகப்பெரியதீவு போர்னியோ. இங்கிலாந்திலும் பார்க்க ஐந்து மடங்கு கூடிய நிலப்பரப்புக் கொண்டதாகும். இத்தீவு மூன்று நாடுகளுக்கிடையில் பங்கிடப்பட்டுள்ளது. மேற்குக் கரையோரமாக மலேசியாவுக்குச் சொந்தமான சாபா, சரவாக்கும், இரண்டுக்கும் நடுவில் புரூனியும் காணப்படுகின்றன. மிகுதியான பெருநிலம் கலிமான்தன் என்ற பெயரில் இந்தோனேசியாவுக்குச் சொந்தமாயுள்ளது.

பூமத்தியரேகை இத்தீவின் நடுப்பகுதியில் காணப்படுகிறது. வருடம் முழுவதும் வெப்பமும், நவம்பர் தொடக்கம் ஜூன் வரை மழையும் கலிமான்தனின் சீதோஷ்ண நிலையாகும். மிகவும் அடர்த்தியான காடுகளும், நெருங்கிய மலைகளும், சுன்றுகளும் கலிமான்தனில் உண்டு. சில பகுதிகள் இன்னும் முறையாக அரச அதிகாரிகளால் பார்வையிடப்படவில்லை.

கலிமான்தனின் செல்வம் அதனுடைய பல்வேறு மரங்கள்தான். ஆனால், வனபரிபாலனம் மிகவும் கடினமாக இருக்கிறது. மனிதக் குரங்குகளும், காட்டுயானைகளும், காட்டுமாடுகளும், சிறுத்தைப் புலிகளும் ஏராளமாக இங்கு வாழ்கின்றன. மிகவும் கொடிய விஷப் பாம்புகளும், மலைப்பாம்புகளும் இக்காட்டில் இடம் பிடித்துள்ளன. பலவிதமான முதலைகளும் இங்கு உள்ளன. இரண்டு கொம்புள்ள றைனோசீரஸ் எனப்படும் மிருக இனம் இக்காடுகளில் உலாவுகிறது.

மக்கள் கரையோரங்களில் மாத்திரம் வாழ்கின்றனர். உட்புகுவதன் கடினத்தை ஓரளவுக்குப் புரிந்து கொள்ளலாம். தாவரவியல் அறிஞர்கள் காட்டு மரங்களை மென்மையானவை, வைரமானவை என்று இருவகைப்படுத்தியுள்ளனர். போர்னியோவில் காணப்படுபவை பெரும்பாலும் வைரமான மரங்களாக இருக்கின்றன இவை காற்று வீசும்போது ஒன்றோடொன்று உராய்ந்து தீப்பற்றுகின்றன. இதனால் பெருந் தீ விபத்து விளைகின்றது.

இந்தோனேசியாவின் காடுகள் நிறைந்த தீவுகளில் வருடாவருடம் மேற்கூறியவாறு பெருந் தீ மூள்கின்றது. கலிமான்தனிலும், சுமாத்ராவிலும் கோடைகாலத்தில் வெப்ப மிகுதியாலும், மரங்கள் உராய்வதாலும் இது நிகழ்கிறது. கலிமான்தனில் மூளும் தீயின் புகை தென் சீனக் கடலைக் கடந்து 600 கி.மீ.க்கு அப்பால் உள்ள மலேசியாத் தீபகற்பம், சிங்கப்பூர்த் தீவு வரை செல்கிறது. இவ்வருடம் சிங்கப்பூருக்கும், மலேசியாவுக்கும் மேலால் படர்ந்த புகையும், சாம்பரும் ஒரு மாதம்வரை நிலைத்துள்ளன. வாகனங்கள் ஒட்டுபவர்கள் 200 யார்களுக்குமேல் பார்க்க முடியாத நிலை தோன்றியுள்ளது. அத்துடன் சுவாசிக்கும் காற்றிலும் புகை கலந்து காணப்படுகிறது. சூரியனை மறைத்தபடி இருக்கும் இந்தப் புகை மண்டலம் பல நோய்களுக்கு வழி வகுக்கலாம்.

மலேசியாவின் ஆங்கிலத் தினசரிப் பத்திரிகை ஒன்று தனது தலையங்கத்தில் பின்வருமாறு கேள்வி எழுப்பியுள்ளது: "இந்தோனேசிய அரசின் கவலையீனத்திற்கு மலேசியா, சிங்கப்பூர் ஆகிய இரு நாடுகளும் வருடா வருடம் வேதனைப்பட வேண்டிய அவசியமென்ன?" என்பதாக. இன்று வனபரிபாலனம் நிபுணர்களால் பெரும் பொருட் செலவில் பல தொழில் நுட்பங்களை உண்டாக்கிச் செயற்படும் கருமமாகும். நெருக்கத்தைக் குறைத்து மரங்களை நெடியாந்து வளர வழி செய்வதும், நோயுற்ற மரங்களை வெட்டி அகற்றுவதும் முக்கிய செயற்பாடுகளாகும். தான்தோன்றித்தனமாக வனம் வளர இடங் கொடுத்தால் தீ போன்ற அபாயம் நேருவது திண்ணம்.

நியூஸ்வீக், ஒக்ரோபர் 10, 1994.

வாழும் சிலந்தியினத்தில் மகா கொடியது

எழுதியவர்: ரொனி மகையிர்

காம் பேன்சைட், அவுஸ்திரேலியாவின் சிட்னி நகரைச் சேர்ந்த மருந்துத் தயாரிப்பாளர். அவர் ஒரு நாள் சமையலறையில் இருந்த பொழுது பக்கத்தறையில் படுத்திருந்த எட்டே மாதமான அவரின் குழந்தை கதறுவதைக்கேட்டு அங்கு விரைந்தார். குழந்தை யூலியாவின் உள்ளங்கையிலே கோல்ப்பந்தாவினதான சிலந்தி ஒன்று காணப்பட்டது. ''யூலியா, கடியுண்டிருக்கிறாள்'' என்று தன் மனைவியை நோக்கிக் கத்திய பேன்சைட், ''இது ஃபணல் வெப் (Funnel web) புலி நகச் சிலந்தி போன்ற ஒன்று என்றே நினைக்கின்றேன்'' என்று கூறினார். (Funnel) என்பது எண்ணெய் முதலியவற்றைப் போத்தல்கள் முதலியவற்றில் ஊற்ற உதவும் கருவி. இந்தச் சிலந்தியின் வலை அந்த (Funnel) வடிவில் அமைந்ததால் இதற்கு (Funnel web) காரணப் பெயராயிற்று.

யூலியாவின் உடல் செக்கச் செவேலென்று நிறம் மாறிக் காட்சியளித்தது. அவளுடைய புயமயிர்கள் குத்திட்டு நின்றன. வாந்தியெடுக்கத் தொடங்கினாள். பெற்றோர் உடனடியாக அவளை வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றனர். யூலியா மூச்சுவிட முடியாது திணறினாள். அவளுடைய சின்னஞ் சிறிய உடல் அடித்துப்போட்டது போலத் துவண்டு கிடந்தது. சிலந்திகளின் நடத்தை பற்றி ஆய்வாளரான கெ.பின் எம் காற்லி ''ஃபணல் வெப்பின் ஒருசிறுதுளி நச்சு மிழ் நீரே மிகவும் நச்சுத்தன்மை வாய்ந்ததாகும்'' என்று கூறுகிறார்.

ஃபணல் வெப்பின் நச்சுப்பல் 2/3 அங்குல அளவே கொண்டது. விரல் நகத்தால் துளைப்பது போலத் துளைத்து அந்தச் சிறு

அதன் சிறியதொரு துளி நச்சுமிழ் நீரே ஓர் உயிரைப் போக்கப் போதியது

துளையினூடாக அது நஞ்சைப் பாய்ச்சி விடுகிறது. அந்நஞ்சானது சிறுகுழந்தையை ஒரு மணித்தியால வேளைக்குள் கொன்றுவிடும் சக்தி வாய்ந்ததாகும். பெரியவர்களானால் சில நாள்களிலேயே அவர்களுக்கு மரணம் சம்பவித்து விடும்.

மிகக் கொடுமை நிறைந்த இந்தப்பிராணி, தனது வழியில் குறுக்கிடும் எதனையும் எவரையும் தாக்கக் கூடிய ஆற்றல் வாய்ந்தது. தாக்குதற்குள்ளானவரின் நாக்கு நரம்புகள் விறைப்படையும், கடும் வாந்தி ஏற்படும், வியர்வைபெருக்கெடுக்கும், உமிழ்நீர் பெருகும். சுவாசிப்பது கடினமாகும், இரத்த அழுத்தம் திடீரென அதிகரிக்கும், உடம்புத்தசைகள் முறுக்கேற்று பாம்புபோல நெளியத் தொடங்கும்.

ஃபணல் வெப்கள் கிழக்கு அவுஸ்திரேலியாவில் மட்டுமே உள்ளன. ஆனால் இப்பகுதியிலேதான் சனநடமாட்டம் அதிகம். சிலந்திகளும் இங்குதான் பெருமளவில் வாழ்கின்றன.

பீட்டர் மெல்வில் என்ற பொறியியலாளர் கூட்டம் ஒன்றில் இரண்டு மணித்தியாலங்கள் கலந்து கொண்டு வீட்டு வெளியில் வந்த போது தமது குதிக்காலிலே பெரும் வலி ஏற்படுவதை உணர்ந்தார். அவர் தமது சப்பாத்தைக் கழற்றிய போது அதனுள்ளே பெரியதொரு சிலந்தி இருக்கக் கண்டார். உடனே அவர் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டார். அவரின் அதிர்ஷ்டம், 'அற்ராக்ஸ்நோபஸ் மப்' என்ற இனத்தைச் சேர்ந்ததும் பயங்கரமான மரணத்தை விளைவிக்கக்கூடியதுமான அந்தச் சிலந்தியானது, சப்பாத்தின் வெளிப்புறத்திலே தனது நச்சுநீரின் பெரும் பகுதியை வீணாக்கிவிட்டதால், ஒரு சிறுதளவே அவரின் குதிக்காலூடாக உள்ளே சென்றிருந்தது. மேல்லில் சிகிச்சை அளிக்கப்பட்ட ஏழு மணித்தியாலங்களின் பின்பு வைத்தியசாலையிலிருந்து வெளியேறினார்.

அவுஸ்திரேலியத் தொல்பொருட் காட்சியகத்தில் உயிரியல் ஆய்வாளராகப் பணியாற்றும் மைக்கிறே, ஃபணல் வெப் பற்றி அது உறையும் காட்டுப்பிரதேசத்திற்கு நேரிற் சென்று ஆய்வு நிகழ்த்துவதில் பல ஆண்டுகள் செலவழித்தவர். சிட்னிக்கு வடக்கிலுள்ள காட்டுப்பகுதிக்கு நானும் அவருடன் சென்றேன்.

திடீரென்று கிறே ஒரு மரத்துண்டைத் தமது சப்பாத்துக்காலால் விலக்கி, ''சிட்னியின் ஃபணல்வெப் இதுதான் நன்றாகப் பாரும்'' என்றார். மயிர் அடர்ந்த கால்களுடனும், சொக்கிளேற் நிறவயிற்றுடனும், கறுத்த நெஞ்சுடனும் தலையுடனும், அந்தப்பயங்கரப் பிராணி காட்சி தந்தது. அது தனது முன்னங்கால்களைத் தூக்கியது கண்டு நான் அச்சத்துடன் பின்வாங்கினேன். ''பயப்படவேண்டாம் அது உன்மீது பாயாது; அதற்குப் பாயும் ஆற்றல் இல்லை'' என்று கிறே என்னை ஆசுவாசப்படுத்தினார்.

கிறே அதன் முன்பு ஒரு தடித்துண்டை நீட்டியபோது அது தனது கண்களின் கீழுள்ள சுறுத்தப் பற்களால் கடுமையாகத் தாக்கியது – அதன் பயனாக அந்தத் தடியிலே இரு நச்சுநீர்த்துளிகள் விழுந்தன. ''அற்றாப்ஸ் நோபட்டஸ் மரங்களில் வாழ்வது ஃபணல்வெப்பின் சகோதர இனத்தைச் சேர்ந்தது.

நாங்கள் தொடர்ந்து நடந்தோம்; வழியில் நான் தள்ளாடி விழாமலிருக்க மரமொன்றின் தண்டைப் பற்றினேன். கிறே அவ்வாறு செய்யவில்லை மரத்தண்டொன்றில். சிலந்திகள் ஒரு கையின் அளவுக்கு மொய்த்துக் கீடப்பதைக் கிறே எனக்குக் காட்டினார். அவர் கொழுக்கி கொண்டு சிலந்தியொன்றின் வலையைத் தொட்ட பொழுது அது திடீரென ஊதிப்பெருத்தது. அதனுள்ளிருந்து சிலந்தியின் இரு கால்கள் வெளிப்பட்டன. தொடர்ந்து வெளிப் போந்த அதன் வயிற்றுப்பகுதி வலையைப் பற்றிக் கொண்டது. இதனை அடுத்துக் கொறிக்கின்ற ஒலி எழுந்தது. ''அந்த ஒலி வலைமீது சிலந்தி தனது கரும்பற்களால் தாக்குவதால் ஏற்பட்டதாகும்'' என்று கிறே விளக்கம் அளித்தார். சிலந்தியின் உமிழ் நீர் அதன் வயிற்றுனுள்ளேயே நஞ்சுக்கலப்பைப்பெற்று உமிழும் போதோ, கொட்டும் போதோ அந்த நஞ்சு சிலந்தி கொட்டிய உறுப்பினுள்ளே சென்று விடுகின்றது.

இயற்கை செய்யும் அற்புதங்களில் ஒன்று இந்தப் பயங்கரப் பிராணியின் நஞ்சானது மனிதரையும் குரங்குகளையும் தவிர வேறு பெரிய பிராணிகளை எவ்வகையிலும் பாதிக்கா திருப்பதே.

1920 தொடங்கிச் சிலந்திக் கடிக்கு மாற்று மருந்து (Antidats) ஒன்றைக் கண்டு பிடிக்கும் முயற்சியிலே ஈடுபட்டனர். ஆனால் நீண்ட காலமாக அது சாத்தியமாகவில்லை. ஃபணல் வெப்பின் நஞ்சுக்கு நரம்பு மண்டலத்தின் இயக்கத்தைத் தடுக்கும் சக்தி கிடையாது. பதிலாக உடற் றசைகளில் சுரப்பிகளிலும் இயங்குறுப்புக்களிலும் பின்தாக்கத் தூண்டுதலை ஏற்படுத்துவதுதான் அதன் நஞ்சின் முதன்மையான செயற்பாடாகும்.

நஞ்சுச் செறிவு பற்றி ஆய்வு நிகழ்த்தும் ஸ்ட்ரூவன் சதர்லாண்ட் என்பவர், ஃபணல்வெப் கடித்த மூன்று மனித்தியாலங்களில் சிறுவன் ஒருவன் மரணமடைந்தான் என்ற செய்தியைப் பத்திரிகையில் படித்தார். இந்தக் கொடுமையைப் போக்குவதற்கு ஒரு வழியைக் கண்டுபிடித்தேயாகவேண்டும் என்று அவர் அன்றே உறுதிசெய்து கொண்டார்.

தமிழில்: திரு. கொக்கன்

பொதுநலவாய நாடுகளின் ஆதரவில் மெல்போனில் இயங்கும் ஆய்வு கூடங்களில் சதர்லான்ட் தமது ஆய்வுகளை மேற்கொண்டார். முதலில் அவர் நச்சு நீரிலிருந்து அதன் ஆற்றல் வாய்ந்த உள்ளடக்கமான 'அட்ராக்கோ ரொக்சின்' (Araxo Toxin) என்பதை வேறாக்கினார். அடுத்து மேற்குறித்த ரொக்சினை ஏற்றுவதால் ஒரு நாள் வயது கொண்ட சுண்டெலிகள் பாதிப்புக்குள்ளாகும் என்பதைக் கண்டறிந்தார், புதியனவாகப் பிறந்த சுண்டெலிகளுக்கு வெவ்வேறான அளவில் ரொக்சின் ஏற்றப்பட்டது. ஆனால் ஒவ்வொரு நாட்காலைப் பொழுதிலும் இந்தச் சிகிச்சைக்குள்ளான எலிக்குஞ்சுகள் இறந்து போயின மாதக்கணக்கில் தொடர்ந்த இந்த ஆய்வு அவற்றின் மரணத்திலேயே முடிவடைந்தது.

இதே வேளை ஃபணல் வெப்களின் தொல்லைகளும் தொடர்ந்து கொண்டேயிருந்தன. கிறிஸ்டின் ஸ்டேஜெஜ் என்ற பெண் படுக்கையைச் சரிசெய்து கொண்டிருந்த பொழுது, ஃபணல் வெப் ஒன்றினால் கடியுண்டாள். அவள் அறி விழந்து மூர்ச்சையடைந்த நிலையிலேயே இறந்து போனாள். ஓராண்டின் பின்னர் இதே விதி இரண்டு வயதான சிறுவன் ஒருவனுக்கும் நேர்ந்தது.

1980 இல் சதர்லான்டின் ஆய்வில் நம்பிக்கை ஒளி ஏற்படக்கூடிய சந்தர்ப்பம் உண்டாயிற்று. அசாதாரண சக்திவாய்ந்த அட்ராக்கோ ரொக்ஸினை முயல்களிலிருந்து பெறக்கூடிய வகையில் அவரின் ஆய்வு பலனளித்தது அவ்வாறு பெற்ற ரொக்ஸின் சுண்டெலிகளுக்கு ஏற்றப்பட்ட பொழுது முன்போலவன்றி அவற்றின் இறப்பு தாமதமடைந்தது. முதல் நாளிலேயே அவை இறந்துபோகும் துர்ப்பாக்கியம் நேரவில்லை.

இந்த வெற்றியினால் கூடிய ஆர்வங் கொண்ட சதர்லான்ட் நச்சுமிழ் நீரை புதியனவாய்ப் பிறந்த எட்டுச் சுண்டெலிகளுக்கு ஏற்றினார். அவை சாகாது தப்பிப் பிழைத்தன. அடுத்த கட்டமாக ஆய்வு கூடக் குரங்கொன்றிற்கு நச்சுமிழ் நீரை ஏற்றித் தொடர்ந்து மாற்று மருந்தையும் ஏற்றினார். அன்றிரவு அவர் தமது ஆய்வினை நிறுத்தி விடுசெல்ல ஆயத்தமான பொழுது சிகிச்சைபெற்ற குரங்கு தனது கூட்டினுள்ளே அங்குமிங்கும் தாவிக் கொண்டிருக்கக் கண்டார். ''நான் மாற்று மருந்தைக் கண்டுபிடித்துவிட்டேன்'' என்று சதர்லான்ட் எண்ணினார்.

ஆனால் தமது மாற்றுமருந்து மனிதரில் எவ்வாறு தொழிற்படும்

என்பதை சதர்லான்ட் இன்னும் அறியாதவராகவே இருந்தார். எனினும் நோய் முற்றி உயிர்வாழ்வார்கள் என்ற நம்பிக்கை குடிபோன நோயாளிகளில் அவரது மாற்று மருந்தைப் பிரயோகிப்பதாக வைத்தியர்கள் அவருக்கு உறுதியளித்தனர்.

இத்தகைய நோயாளிகளுக்காக அவர்கள் நீண்டகாலம் காத்திருக்க நேரமில்லை. 1981 ஜனவரியில் ஒரு நாள் தமது வீட்டறையில் ஓய்வாக இருந்த கோடன் வில்லி என்பவர் சிலந்திக்கடிக்குள்ளாகி ஆபத்தான நிலையில் வைத்தியசாலைக்குக் கொண்டு வரப்பட்டார். வாழ்வா சாவா என்று ஊசாலாடிய அவருக்குச் சதர்லான்டின் ரொக்ஸினை ஏற்றிப் பார்ப்பதற்கு அவர் மனைவி இசைந்து அவ்வாறே ஏற்றப்பட்டது. இந்தச் சிகிச்சையை டாக்டர் மல்கம் பிசர் என்பவர் மேற்கொண்டு முதலில் எவ்வித பயனும் கிடைக்கவில்லை. ஏமாற்றமடைந்த பிசர் சதர்லான்டை தொலைபேசியில் அழைத்து நிலைமையை எடுத்துரைத்தார். சதர்லான்ட் தொடர்ந்து இரண்டாவது தடவையாகக் குறித்த ரொக்ஸினை ஏற்றுமாறு ஆலோசனை கூறினார். அவ்வாறே ஏற்றப்படவே அது நற்பயன் அளித்தது. வீற்லியின் இரத்த அமுக்கமும், நாடித் துடிப்பும் வழமைக்குத் திரும்பின.

இதனைத் தொடர்ந்து கிழக்கு அவுஸ்திரேலியாவில் ஃபணல் வெப் பைப் பிடிக்கும் வேட்டையும் அவற்றிலிருந்து நஞ்சைக் கறந்தெடுக்கும் முயற்சியும் அவற்றிலிருந்து மாற்று மருந்து தயாரிக்கும் வேலையும் மும்முரமாக நடைபெறலாயின.

ஆபத்தான நிலையில் ஒன்பதாண்டுகளுக்கு முன்பு யூலியாவிற்குப் புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட அன்ரிவெனின் மாற்று (Antivenin) மருந்தைப் பல தடவைகள் ஏற்றியதால் உயிர் பிழைத்தாள். சாவுக்கும், வாழ்வுக்கு மிடையே ஊசலாடிய அந்தக் குழந்தை நீண்ட போராட்டத்தின் பின் உயிர் பிழைத்ததற்காகப் பிழைக்க வைத்தமைக்காக அவளின் பெற்றோர் சதர்லான்டுக்கு நீங்கள் இல்லாவிட்டால் "எங்கள் குழந்தை உயிர் பிழைத்திருக்க மாட்டாள்" என்று தங்கள் நன்றியை உளங்கனிந்து செலுத்தினர். இந்தச் சம்பவத்தின் பிறகு சிலந்திக் கடியால் எவரும் இறந்து போகாதது குறிப்பிடத்தக்கதாகும். ஆனால் இன்று வரை எவருக்கு எத்த அளவு மாற்று மருந்து கொடுப்பது என்பதுதான் தெரிந்துகொள்ளப் படாதிருக்கிறது. அது எவ்வாறாயினும் உலகின் மிக ஆபத்தான சிலந்தியின் கொடுமையை எதிர்த்து இன்று வெற்றி காணப்பட்டு விட்ட தென்பது மகிழ்ச்சி தருவதாகும்.

றீடர்ஸ் டைஜெஸ்ற்
செப்ரெம்பர் 1994

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

ருஷ்யாவிலிருந்து வந்து விற்பனையாகும் புனித தீர்த்தம்

பரிசுத்த தீர்த்தநீர் போத்தலில் அடைத்து மென்பானம் போல் விற்கப்படுகின்றது என்று சொன்னால் ஏதோ தேவ நிந்தையாக நினைத்து விட வேண்டாம். அதுவும் ருஷ்யாவில் நடக்கிறது. இரண்டு ஆண்டுகளாக நல்ல வெற்றிகரமான வியாபாரமாக நடந்து கொண்டு உள்ளது. அமெரிக்க வர்த்தகராள ஜோன் இல் சந்தர்ப்பவசமாக ருஷ்சியாவின் கொஸ்றோமா பிராந்தியத்து ஒதொடக்ஸ் கிறிஸ்தவ திருச்சபையின் பேராயர் அலக்ஸான்டர் என்பவரைச் சந்திக்க நேர்ந்த போது உதித்த ஒரு யோசனைப்படி செயல்பட்டு முன்னவர் முதலாகப் பின்னவர் திருச்சபைக்கு நிதி சேர்த்துக் கொள்வதற்கு முடிகிறது. அந்தத் திருச்சபை மடத்திற்கு அண்மையில் உள்ள இயற்கை நீர் ஊற்றொன்றின் நீர் ஏற்கனவே புனிதமானதாகப் பெயர் பெற்றிருந்தது. இப்பொழுது அது அந்த மடாலயத்தின் முதற்குருவரால் ஆசீர்வதிக்கப்பட்டதாகப் போத்தல்களில் அடைக்கப்பட்டு விற்பனைக்கு விடப்பட்டு அமெரிக்காவில் பல நகரங்களில் மிகவும் அறிமுகப்பட்டதாகி விற்பனையாகிக்கொண்டு உள்ளது. வெங்காய வடிவிலான குவிவான 1.5 லீற்றர் கொள்ளளவு போத்தல் தீர்த்த நீரின் விலை 1.75 டொலர் ஆகும்.

"புற்றுநோயை அதன் வழியிலேயே தடுத்து நிறுத்துதல்"

எழுதியவர்:
ஜே. மன்டலின் நாஷ் – சிகாகோ

பரம்பரை அலகுகளையும் முறைதவறிய புரதங்களையும் பற்றிய புதிய கண்டுபிடிப்புக்கள். புற்றுநோய் எப்படி தோன்றுகின்றன எப்படி கட்டுப்படுத்தலாம் என்பதைக் காட்டுகின்றன.



மார்பக புற்றுநோய்க் கலங்களில் இருந்து வெளிவரும் இரசாயனப் பொருள்கள் சுற்றிவர உள்ள திசுக்களைச் சேதப்படுத்தி இரத்தக் குழாய்ச் சுவர்களில் உட்பிரவேசிப்பதால் இந்நோய் உடல் முழுவதும் பரவி குணமாக்க முடியாத விளைவை உண்டுபண்ணுகிறது.

கடலின் சிறிய முனையொன்றில் பதுங்கியிருந்து இரகசியமாக நழுவிப் போகின்ற கடற்கொள்ளைக்காரன் போன்று புற்றுநோய்க் கலங்கள் மிக விரைவாகச் சென்று ஏனைய சுவர்களுடன் ஒட்டிக்கொள்கின்றன. பின்னர் விரல்கள் போன்ற அமைப்புக்களாக ஒன்று, இரண்டு, மூன்றென நீட்டி ஊர்ந்து வருகின்றது. மிக நுணுக்கமான இரத்தச் சிறு குழாய்களை இனங்கண்டு அந்தச் சுவர்களிலுள்ள கலங்களுக்கிடையில் ஊடுருவுகின்றது. பின்னர் இரத்த ஆற்றில் குதித்து இரத்தோட்டத்துடன் சுவாசப்பைகள், ஈரல், பெருங்குடல்களின் மார்பகங்கள் என்பவற்றை அடைகின்றன. ஒரு மணித்தியாலத்தின் பின்னர் ஓர் அமைதியான கரையோரமாக ஒதுங்கி, ஆறுவதுடன் அதிர்ஷ்டமில்லாத அயலவர்களின் செலவில் செழிக்க ஆரம்பிக்கின்றது.

படிப்படியாகச் சாதாரண கலங்கள் இருக்கின்ற இடங்களை ஊடுருவுவதுடன் வழி நெடுகில் காணுகின்ற அவற்றைக் கொல்லுவ, மேலும் அருகிலுள்ள சாதாரண கலங்களை ஏமாற்றி உணவை வழங்குகின்ற இரத்தக் குழாய்களை உருவாக்கச் செய்து சப்ளையைப் பெறுவதுடன் வளர்ச்சியைத் தூண்டுகின்ற இரசாயனப் பொருள்களையும் உற்பத்தி செய்யச் செய்கின்றது. இரத்தத்தில் ரோந்து வருகின்ற பாதுகாப்புக் கலங்களிடமிருந்து தப்பித்துக்கொள்வதற்கு கடற்சிப்பி போன்று பாதுகாப்பான புதிய கவசத்தைத் தோற்றுவிக்கின்றது. மேலும் தம்மைக் கொல்லுவதற்கென மருத்துவர்கள் அனுப்புகிற பிரதிநிதியைத் தூக்கி எறிவதற்கான குறுகிய விசைக் கருவிகளைத் தமது கவசத்தில் கொண்டிருக்கின்றன.

புற்றுநோய்க் கலங்களைச் சத்திர சிகிச்சை மூலம் வெட்டி எறிதல், கதிரியக்கத்தினால் எரித்தல், மருந்துகள் மூலம் நஞ்சூட்டல் போன்ற இரக்கமற்ற முறைகளினால் இதுவரையில் மருத்துவம் வெற்றி காண முயற்சித்தது. ஆனால் அநேகமாக இதன்போதெல்லாம் சில கலங்கள் எப்படியோ தப்பித்துக் கொண்டு சில வேளைகளில் சில வருடங்களின் பின்னர் கூட சிகிச்சை மூலம் குணப்படுத்த முடியாத பெரிய கட்டிகளாக வளர்ந்து வருகின்றன. தன்னைத் தாக்குபவர்களை எப்படி முறியடித்து வெற்றிவாகை சூடி வருகின்றது என்பதற்கு இது வரையில் புற்றுநோயினால் இறந்தவர்களின் எண்ணிக்கையின் புள்ளிவிவரங்களே நல்ல தோர் எடுத்துக் காட்டாகும்.

குழந்தைகளின் இரத்தப் புற்றுநோய், வயது வந்தவர்களில் ஏற்படும் நிணநீர்க்கலம், லிம்போமா போன்ற புற்றுநோய்களுக்கெதிராக வெற்றிகள் கண்டிருந்தாலும்கூடப் புற்றுநோயினால் இறப்பவர்களின் மொத்த எண்ணிக்கை உயர்ந்தே காணப்படுகிறது. உதாரணமாக அமெரிக்காவில் இந்த வருடம் ஏறக்கூடிய மரணங்களை ஏற்படுத்திய மார

டைப் பிற்கு அடுத்தபடியாகப் புற்றுநோய்களினாலேயே அதிகளவு மரணங்கள் ஏற்படுகின்றன.

பாதிப்புற்றவர்களின் எண்ணிக்கை தொடர்ந்தாலும் புற்றுநோய்க்கெதிரான ஒரு போராட்டம் ஒரு புதிய திருப்பத்தை அடைந்திருக்கின்றது. கடந்த 2 தசாப்தங்களில் கண்டு, புற்றுநோயின் தன்மையினை ஆளுமை செய்து வந்த உள் இரகசியங்களை அம்பலப்படுத்தியுள்ளது.

அடிப்படை ஆய்வுகள் உள்ளே நடப்பதைக் கண்டு பிடித்துவிட்டதால் ஒரு தொடர்கதை போன்று புற்று நோய்க்குரிய சிகிச்சையை முற்றாக அழிக்க முடியாது என்பதனால் அவற்றைக் கண்டு பிடிப்பதற்கான வாய்ப்புக்களைப் பெருக்கிப் பழக்க வழக்கங்களை நெறிப்படுத்துவதன் மூலம் புற்றுநோயாளியின் வாழ் நாளைக் கூட்டலாம் என்கின்றனர் ஆய்வாளர்கள். புதிய சிகிச்சை முறை வெட்டுக் கொத்துக்களை விடச் சிறந்தவை மட்டுமல்லாமல் கட்டாயமாக சிகிச்சைக்கு உட்படுத்தப்பட வேண்டியவர்களுக்கு இது மென்மையாக இருப்பதனாலும் பெரும் நன்மையைத் தோற்றுவித்துள்ளது.

மனிதனுடைய தலை எழுத்துப்பற்றிய பிரதி கலத்திலுள்ள மாபெரும் மூலக் கூறான டீ.என்.ஏ. என்ற புரத மூலக்கூற்று வடிவத்தில் இருபதனையும், புற்றுநோய் என்பது இதில் ஏற்படுகின்ற வ்யாதி என்பதனையும ஆய்வாளர்கள் 1960களில் கண்டறிந்ததிலிருந்துதான் இந்தப் புரட்சி அலை ஆரம்பித்திருக்கிறது. டீ.என்.ஏ. மூலக்கூற்றின் பிரதான தொழிற்பாடு என்னவென்றால் கலமொன்று பிரிந்து இன்னொரு கலம் தோன்றுகின்ற கலப் பிரிவை நெறிப்படுத்துதலாகும்.

சாதாரண கலப்பிரிவு மிகவும் இறுக்கமாக ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது. ஆனால், புற்றுநோய்க் கலமானது கட்டுப்பாடின்றிக் கண்டபடி பெருக்கமடைந்து அருகிலுள்ள தசைகளுக்குச் செல்கின்றது.

வைரசானது நல்லதொரு பரம்பரை அலகைத்திருடி வேறு ஒரு தீய நோக்கத்திற்குப் பயன்படுத்துகின்றது. இந்தக் கண்டுபிடிப்பு கலத்திலுள்ள பரம்பரை இயந்திரம் தவறாகச் செயற்படுகின்றபோது புற்றுநோய் ஏற்படுகின்றது என்பதனை அறிந்துகொள்ள பெரிதும் உதவியது. இந்தத் தவறு ஏற்படுவதற்கான பாதிப்புக்களை வைரசுக்கள், கதிர்வீச்சு, சூழலில் காணப்படும் நச்சுக்கள், பெற்றோரிடமிருந்து பெறப்படுகின்ற பாதிப்பிற்குள்ள பரம்பரை அலகு இவற்றின் தொகுப்பு என்பன ஏற்படுத்துகின்றன.

இதுவரையில் புற்றுநோயை ஏற்படுத்துகின்ற 120 நோய் அலகுகளைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். இதில் 24 வரை மனிதனில் வளருகின்ற கட்டிகளில் முக்கியமாகக் காணப்படுகின்றன.

தமிழில்: வைத்திய கலாநிதி
எஸ். பி. ஆர். சிர்மாறன்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

புற்றுநோய் பற்றிய தவறான நம்பிக்கையை விஞ்ஞானிகள் கிழித்தெறிந்து விட்டார்கள். இது ஒன்றும் இயற்கையான பேய் பில்லன் அல்ல. நிச்சயமாகத் திருத்தப்படக் கூடிய ஆனால், பழுதடைந்துவிட்ட இயந்திரத்தின் செயற்பாட்டினாலேயே புற்றுநோய் ஏற்படுகின்றது. அது ஆரம்பத்திலேயே சிறு கட்டிகளாக ஆரம்பிப்பதிலிருந்தே விகாரமான புற்று நோயாக வளருகின்ற படிகளில் அனைத்திலுமே பாதிக்கப்பட்ட பரம்பரை அலகு காரணமாக அமைந்திருக்கின்றது.

மரணத்தை ஏற்படுத்தும் துணிக்கைகள்

புற்றுநோய் ஒரு புதிய வியாதியல்ல. எமது ஆரம்பகால மூதாதையருக்கே புற்றுநோய் ஏற்பட்டிருக்கிறது. டைனோசார்ஸ் எனகின்ற பாரிய மிருகங்களுக்குக்கூடப் புற்றுநோய் இருந்திருக்கின்றது. பல கலங்களைக் கொண்ட விலங்குகள் அனைத்திற்கும் உள்ள ஆபத்து இது என்கிறார்கள். கலம் பிரிகின்ற ஒவ்வொரு முறையின்போதும் 3 பில்லியன் தகவல்களைக்கொண்ட ஏடாக டீ.என்.ஏ. பிரதி பண்ணப்படுகின்றது. இதன்போது கலங்களும் தவறுகளை விடுகின்றன. ஆனால், பெரும்பாலும் இந்தத் தவறுகள் உடனடியாக நிவர்த்தி செய்யப்படுகின்றன. எப்போதாவது இருந்துவிட்டு பாதிப்புற்ற மூலக்கூற்றைக் கொண்ட கலம் தொடர்ந்து பிரிகின்றது. இதனால் கட்டி வளருகின்றது. விலங்கொன்றின் கலமானது எத்தனை சுற்று வட்டங்கள் பிரிகின்றதோ, அவ்வளவிற்கு அசாதாரண கலங்களைக் கொண்ட வாரிசுகள் தோன்றுகின்றன. இவ்வாறு மனிதன் வயதிற்கு வளருகின்றபோது உடலிலுள்ள இலட்சக்கணக்கான கலங்கள் புற்றுநோயை நோக்கி ஒரு படி முன்னெடுத்து வைத்துவிடும்.

இருந்தபோதிலும் புற்றுநோய் ஏற்படுவது தவிர்க்க முடியாத தொன்றல்ல. உதாரணமாக 50 சதவீத அமெரிக்கர்களுக்குப் புற்றுநோயை ஏற்படுத்துகின்ற கட்டிகள் பெருங்குடலில் வளர்ந்தாலும் மிகச் சிலருக்கு புற்றுநோயாக வளருகின்றன ஏனென்றால் பெருங்குடலில் புற்றுநோய் ஏற்படுவதற்கு நீண்ட காலம் எடுக்கும். அதனால் அவர்கள் வேறு நோய்களினால் இறந்து விடுகிறார்கள். பெரும்பாலானோர் நம்புவதுபோல் புற்றுநோய் ஏற்படுவது அவ்வளவு சுலபமான காரியமல்ல. ஆரம்பிப்பதற்கே ஒரு பரம்பரை அலகுகளில் மாற்றம் ஏற்பட்டால் மட்டும் போதாது, பலவற்றில் மாற்றங்கள் ஏற்படவேண்டும்.

எவ்வளவு புற்றுநோய் ஏற்படும் ஆபத்து சிலருக்கு இருக்கின்றது. அதாவது குறைந்த வயதிலேயே ஏற்படுகின்றது. இவர்களுக்குப் பரம்பரை ஒரு முக்கிய காரணமாகும்.

புற்றுநோயை ஏற்படுத்துகின்ற மாற்றம் ஒரு விபத்தாகவே நடக்கின்றது. ஆனால் புற்றுநோயை ஏற்படுத்துகின்ற காரணிகள் சில தொடர்ச்சியாகத் தூண்டப்படுகின்றபோது அதன் டீ.என்.ஏ.

மூலக்கூற்றுடன் இணைந்து கலப் பிரிவின் வேகத்தைக் கூட்டுகின்றது. இதனால் தவறுகளும் அதிகரிக்கின்றன. அஸ்பெஸ்டஸ் தூள், பென்ஸீன், சிகரெட்புகை என்பன நிரூபிக்கப்பட்ட காரணிகளாகும். ஆனாலும், ஒவ்வொரு தொகுதியில் தாக்கத்தை ஏற்படுத்தி வெவ்வேறு புற்றுநோய்களை ஏற்படுத்துகின்றன. உதாரணமாக சிகரெட் குடிப்பதனால் சுவாசப்பையில் புற்று நோய் ஏற்படுகின்றது.

டீ.என்.ஏ. மூலக்கூற்றில் ஏற்படுகின்ற இந்தச் சிறிய மாற்றம் ஏன் இவ்வளவு அழிவை மனித குலத்திற்கு ஏற்படுத்துகின்றது என விஞ்ஞானிகள் அதிசயிக்கிறார்கள். உதாரணமாக SMITH என எழுத வேண்டிய பெயரை SMYTH என எழுதுவதுபோன்றதான தவறாகும். ஆனால், மனிதனின் கலமானது புரதத்தைத் தயாரிக்கின்ற பெரும் தொழிற்சாலையாகும். எனவே பிழையான மூலப்பொருள்களைக் கொடுத்தால் அவை தவறான புரதங்களையே உற்பத்தி செய்யும்.

உடலிலுள்ள நல்ல கலங்கள் நீண்ட காலம் உயிர் வாழ்வதல்ல, குறிப்பிட்ட நிலைமைகளின் கீழ் கலம் இறப்பதற்கே திட்டமிடப்படுகின்றன. மனித அபிவிருத்தியின் ஆரம்ப சிறப்பம்சங்களில் ஒன்று கலங்கள் பன்மடங்கு பெருகுவதும் தொடர்ந்து பெருமளவில் தற்கொலை செய்வதுமாகும். உதாரணமாகக் கருவில் முண்டமாக வளருகின்ற கையில் பெருமளவில் கலங்கள் இடையினில் இறப்பதனால் விரல்கள் தோன்றுகின்றன. கோடிக் கணக்கில் நரம்புக் கலங்கள் இறப்பதனாலேயே மூளை விருத்தியடைகின்றது. வயது வந்தவர்களில் கலங்கள் இறப்பதென்பது கடுமையான ஒழுங்காக நெறிப்படுத்தப்பட்ட நிகழ்வாகும். நன்கு பழுதடைந்து விட்ட கலங்கள் மனிதனின் நன்மைக்காக ஒதுங்கிக் கொள்ளும். ''விலங்கொன்று உயிர் வாழ்வதற்கு'' தேயிய புற்றுநோய் நிறுவனத்தைச் சேர்ந்த டாக்டர் சாமுவேல் புரோடரின் கூற்றுப்படி தாங்கள் உயிர்த்தியாகஞ் செய்ய வேண்டும் என்பதனை உணர்ந்திருக்க வேண்டும். ஆனால் புற்றுநோய்கள் பன்மடங்கு பெருகுகின்றனவே தவிரத் தாம் எப்படி இறக்க வேண்டும் என்பதனை மறந்து விட்டன என்கிறார்.

கலங்கள் பிரிகின்றபோது தவறுகள் ஏதேனும் நடந்து விடாமல் பி 53 என்கின்ற பரம்பரை அலகொன்று சுன்காணிப்பில் ஈடுபடுகின்றது. ஏதாவது பழுது ஏற்படும் பட்சத்தில் அது உடனடியாகச் செய்தி அனுப்பி கலப் பிரிவை நிறுத்துகிறது. திருத்த வேலைகள் மேற்கொள்ள முடியாத அளவிற்குப் பாதிப்பு ஏற்பட்டு விட்டால் அந்தக் குறிப்பிட்ட கலத்தை அழித்து விடுமாறு வேறு கலங்களுக்கு உத்தரவு பிறப்பித்திருக்கிறது. ஆனால் இந்தக் கண்காணிப்பில் ஈடுபடுகின்ற பரம்பரை அலகிலேயே மாற்றம் ஏற்படுகின்ற பொழுது கலங்கள் பெருகுகின்றன. ஆய்வுகூடத்தில் பரீட்சார்த்த மாகக்கூட பி 53 இன் பெருக்கத்தைக் கட்டுப்படுத்த முடியவில்லை. உடலிலுள்ள கலங்கள் தமது சுடமைகளை முடித்துக் கொண்டு எப்போது இறக்கவேண்டும் என்பது முன்கூட்டியே தீர்மானிக்கப் படுகின்றது. இதனை நிறைவேற்றுவதற்கு டெலோமேர்ஸ் என்கின்ற புரத மூலக்கூற்றிலான மணிக்கூடு இருக்கின்றது. கலம் இளமையாக இருக்கின்ற பொழுது ஆயிரமாயிரம் டெலோமேர்ஸ் புரதங்கள் கழுத்தில் போடுகிற நெக்கிலஸ் ஆபரணவடிவத்தில் இருக்கின்றது. கலம் ஒவ்வொரு முறை பிரிகின்றபோதும் 20 தொடக்கம் 30 வரையிலான டெலோமேர்ஸ் இழக்கப்படுகின்றன. இவ்வாறு கலப் பிரிவின் போது புரத இழப்புப் படிப்படியாக ஏற்பட்டு இறுதியில் பிரிவு ஏற்பட முடியாத நிலை தோன்றும். இதன்போது கலம் இறந்து விடும். ஆனால் புற்றுநோய்க்குரிய கலம் இதற்கு முரணானது. புற்றுநோய்க் கலங்கள் தமது மரணத்தை முன்கூட்டியே தீர்மானித்துச் செயற்படுகின்ற மணிக்கூட்டை எப்படி நிறுத்துவது என்று கருத்துக் கொண்டன. டெலோமேரேஸ் என்கின்ற நொதியத்தைச் சுரக்கின்றது. இது டெலோமேர்ஸ் எனகின்ற புரதம் உடைந்து போகாமல் பாதுகாக்கின்றது. இதன் மூலம் தனது மரணத்தைத் தவிர்த்துக் கொள்கின்றது.

இரத்தத்திற்கான அமைப்பு

ஒரு கட்டியில் ஒரு மில்லியன் கலங்கள் உருவாகும் வரை எது விதமான ஆபத்தும் இல்லை. ஏனெனில் இவை இரத்தக் குழாய்களிலிருந்து வெகு தூரத்தில் இருப்பதனால் சத்துணவைப் பெறுவதில்லை. இதனால் ஆபத்துக்களும் இல்லை.

மாதங்கள், வருடங்கள் தசாப்தங்கள் செல்லலாம். திடீரெனத் திருப்பம் ஏற்படும் மனித உடலில் இயற்கையாகத் தேவைப்படுகின்ற நிர்ணயிக்கப்பட்ட குழாய்களைத் தவிர புதிய இரத்தக்குழாய்கள் தோன்றாது. தோன்றினால் பிரச்சனைகள் ஏற்படும். உதாரணமாக மூட்டுக்களுக்குள் இரத்தக் குழாய்கள் வளர்ந்தால் ஆர்த்தரைற்றில் என்கின்ற மூட்டு வருத்தம் ஏற்படுகின்றது. கண்களுக்குள் வளர்ந்தால் கண்பார்வை இழப்பு ஏற்படும். எனவே புதிய இரத்தக் குழாய்கள் தோன்றாமல் இருப்பதற்குத் துரம்பஸ்பொண்டிஸ் சுரக்கப்படுகின்றது. சில விசேடமான நிலைமைகளின் போது உதாரணமாகப் புண்கள் ஆறுவதற்குச் சிதைந்து போன இரத்தக் குழாய்கள் புதிதாக முளைப்பதற்குத் துரம்பஸ்பொன்டின் சுரக்கப்படுவது குறைக்கப்படுகின்றது. புற்று நோய்க்கலங்களும் 10 இலட்சம் வரை பெருகியதும் துரம்பஸ்பொன்டின் சுரக்கப்படுவதைச் சடுதியாக நிறுத்திக் கொள்கின்றன. தேவையற்ற இரத்தக் குழாய்கள் தோன்றுவதைக் கட்டுப்படுத்துகின்ற துரம்பஸ்பொன்டின் சுரக்கப்படுவதை தெறிப்படுத்துவதே புற்றுநோயின் தோற்றத்திற்குக் காரணமான பி 53 என்கின்ற பரம்பரை அலகுதான் என்கிறார்கள்.

மரணம் ஏற்படுகின்ற முறைகள்

1994 இல் அமெரிக்காவில் உள்ள மதிப்பீடு

புற்றுநோய்	மரணம்	புதிய நோயாளிகள்	வீதம் (5 வருடங்கள் உயிர் வாழ்தல்)	ஆபத்தான காரணிகள்
சுவாசப்பைகள்	153,000	172,000	13 வீதம்	சிகரெட் புகைத்தல், அஸ்பெற்றோஸ் மாசு இரசாயனப் பொருள்கள், கதிர் வீச்சு, கதிர்வீச்சைக் கொண்ட இரசாயனப் பொருள்கள்.
பெருங்குடல் மலவாசல்	56,000	149,000	58 வீதம்	பரம்பரை கொழுப்புச் செறிந்த உணவு, நார்ப் குறைந்த உணவு.
பெண்களின் மார்பு	46,000	182,000	79 வீதம்	வயது, குடும்ப சரித்திரம், தாய்மையுறாமை, பிந்திய மாதவிடாய் நிறுத்தம், நேரத்துடன் பூப்பெய்தல்.
புரஸ்ரேற்	38,000	200,000	77 வீதம்	வயது, குடும்ப சரித்திரம், அதிகளவு கொழுப்புணவு.
சதையி	25,900	27,000	3 வீதம்	வயது, சிகரெட் புகைத்தல், அதிகளவு கொழுப்புணவு.
நிணநீர்க்கலன்	22,750	52,900	78 வீதம்	எதிர்ப்புச் சக்தி குறைந்திருத்தல், கிருமி நாசினிகளுடனான தொடர்பு.
பெண்களின் சூலகம்	13,600	24,000	39 வீதம்	வயது, குடும்ப சரித்திரம், பரம்பரை அலகு, தாய்மையுறாமை.
சிறுநீரகம்	11,300	27,600	55 வீதம்	புகைத்தல்
சிறுநீர்ப்பை	10,600	51,200	79 வீதம்	புகைத்தல்
கருப்பை வாசல்	10,500	46,000	67 வீதம்	சிறுவயதில் உடலுறவு கொள்ளுதல், பலருடன் பாலியல் தொடர்பு வைத்திருத்தல், புகைத்தல், சிறுவயதில் பூப்பெய்தல், மாதவிடாய் நிறுத்தம் பிந்துதல், உடல்நிறை அதிகமாக இருத்தல்.
கருப்பை உட்சுவர்			83 வீதம்	
வாய்	7,425	29,600	53 வீதம்	புகைத்தல், அதிகளவில் மதுசாரம் குடித்தல்.
சரும புற்றுநோய்	6,900	32,000	84 வீதம்	சூரிய ஒளி வெள்ளை நிறமாக இருத்தல்.

தகவல்: அமெரிக்க புற்றுநோய்ச் சங்கம்.

தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive

ஆபத்தைத் தேடுதல்

புதிய இரத்தக் குழாய்கள் புற்றுநோய் பரவுவதற்கான முதற் படி என்பர். புற்றுநோய்க் கட்டிகளுக்கு இரத்தம் வழங்குகின்ற குழாய்களே அவை பரவுவதற்குரிய வழிகாலாகவும் அமைகின்றன. இரத்தோட்டத்தில் விடப்படுகின்ற அனைத்துப் புற்று நோய்க் கலங்களும் இரத்தோட்டத்தின் வேகத்திற்கு ஈடு கொடுப்பதில்லை. ஆனால் தாக்குப் பிடிக்கின்ற கலங்கள் இரத்தக் குழாயின் சுவர்களைத் தாண்டி உறுப்புக்களை அமைக்கின்றன.

இதற்குக் காரணம் mm 23 என்கின்ற பரம்பரை அலகாகும். 1,988 ஆம் ஆண்டு ஸ்டீக் என்பவர், 'பரம்பரை அலகுதான் கலங்கள் சாதாரணமாகப் பிரிகின்ற போது அவை எப்போது நிறுத்தப் படல் வேண்டும் என்பதைத் தீர்மானிக்கின்றது. புற்று நோய்க் கலங்களில் இந்த mm 23 அலகு குறைபாடுடையதாக இருப்பதனாலேயே கலங்கள் பிரிவடைவது'' கட்டுப்படுத்த முடியாமலுள்ளது. என்கிறார்.

பிரதான கட்டுப்பாட்டறையைப் பாதுகாத்தல்

1,993 இல் மாத்திரம் பி 53 அலகைப் பற்றிய ஆயிரத்திற்கு மேற்பட்ட விஞ்ஞான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. புற்று நோயில் இதுவே மிகப் பிரதான மான பரம்பரை அலகாகக் கருதப்படுகின்றது.

(Msti) பரம்பரை அலகின் முக்கியத்துவம் என்னவென்றால் கலப் பிரிவுத் தொடரில் முக்கியமான நேரடிப் பங்கை வகிப்பதாகும். அதாவது விசேடமான செய்திகள் வந்ததும் கலத்தின் சுவரிலுள்ள வாங்கிகள் இதனைக் கருப் பொருளுக்கு உச்ச வேகத்தில் கடத்துகின்றன, இந்தக் கலப் பிரிவை Msti இலிருந்து உற்பத்தியாகின்ற விசேட சிறிய புரதம் கட்டுப்படுத்துகின்றது. எனவே இதில் பிழை ஏற்படுகின்ற போது கலம் தொடர்ந்து பிரிகின்றது. பல்வேறு புற்றுநோய் நிபுணர்களும் மனிதனின் புற்று நோய்க்குரிய இதுவரை கண்டுபிடிக்கப்பட்ட பரம்பரை அலக Msti என்பதனை ஏற்றுக்கொள்கிறார்கள்.

மருந்து நிறுவனங்கள் இந்தக் கண்டுபிடிப்புக்களின் அடிப்படையில் மருந்துகளைத் தயாரிக்கப் போட்டி போடுகின்றன. புற்று நோயை எதிர்ப்பதற்கு உடலிலுள்ள எதிர்ப்புச் சக்தியை வளர்த்தெடுக்கும் முகமாகத் தடுப்பூசியொன்று கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

புற்றுநோய்க் கலங்கள் தம் முடைய மரணத்தைத் தவிர்க்க டெலோமெரேஸி நொதியத்தை நம்பியிருக்கின்றன என்கிற, புதிய கண்டுபிடிப்பு புற்றுநோய்க்குரிய மருந்துகளைத் தயாரிப்பதில் உள்ள அணுகு முறையை மாற்றி அமைத்துள்ளது.

புற்றுநோய்க் கட்டிகளுக்குள் இரத்தக் குழாய்கள் புதிதாக முளைப்பதும் சிகிச்சைக்குச் சாதகமான சூழ்நிலையாகும். ஏனெனில் புதிய இரத்தக் குழாய்கள் உருவாகுவதைக் கட்டுப்படுத்த மருந்துகள் தயாரிக்கப்படும் வாய்ப்பு அதிகரித்துக் காணப்படுகின்றது. இது புற்று நோய்க்குரிய முழுமையான சிகிச்சையல்ல என்றாலும் வழமையான சிகிச்சை முறைகளுக்குத் தப்பித்துக் கொண்ட எஞ்சிய புற்றுநோய்க் கட்டிகள் மேலும் பரவாமல் இருப்பதற்கு இந்த மருந்துகள் உதவும் என்கிறார்கள். 10 வருடங்கள் இவ்வாறு நீடித்தால் மேலும் 10 வருடங்கள் என்று நீடித்துக்கொண்டு போகலாம் என டாக்டர் போல்க்மன் மேலும் மனிதனுடைய வாழ்க்கைச் சக்கரத்துடன் போட்டி போட ஆரம்பித்திருக்கிறோம் என்கிறார்.

புற்று நோயைக் குணப்படுத்துவதற்கான எதிர்காலத்தில் கண்டுபிடிக்கப்படுவதற்குரிய முன் மாதிரி தயார் என்கிறார்கள். எனினும் டயபற்றீஸ் உயர் இரத்த அழுத்தம் வியாதிகளுக்குப் போன்று எந்த வியாதியையும் யாரும் குணப்படுத்த முடிவதில்லை என்று தேசிய புற்றுநோய் நிறுவனத்தின் டாக்டர் லான்ஸ் லயற்றோ கூறுவதுடன் அவற்றைக் கட்டுப்படுத்தவே சிகிச்சை அளிக்கிறோம் அப்படித்தான் புற்று நோயையும் பார்க்க வேண்டும் என்கிறார்.

இவ்வாறு புற்றுநோயை மருத்துவ ரீதியாகப் பூரணமாகக் கட்டுப்படுத்துவதற்குரிய மருந்துகளைக் கண்டுபிடிப்பதற்கான ஆய்வுகள் தொடருகின்றன. விரைவில் வெற்றி கிட்டும் என்பதில் பல ஆராய்ச்சியாளர்களுக்கும், மருத்துவர்களுக்கும் நம்பிக்கை இருக்கின்றது.

சரம், ஏப்ரல் 25, 1994

பழைய நகரச் சுவரங்கப் பகுதி புதிய கோல்ப் விளையாட்டுத் திடலாகியது

மலேசியாவின் தலைநகர் கோலாலம்பூரில் இருந்து 15 நிமிட நேரக் காரோட்டத்தில் சென்றடையக்கூடிய சுங்காய் பசி என்ற இடம் முன்பு நகரச் சுவரங்கப் பகுதியாக இருந்து கைவிடப்பட்டுக் கிடந்தது. அந்த இடத்தில் 18 குழிகள் கொண்ட புதிய கோல்ப் விளையாட்டுத் திடல் ஒன்று அமைத்துள்ளார்கள். அந்த இடத்தில் நகரம் என்ற கணிப்பொருள் அகழ்வால் ஏற்பட்டிருந்த பெரும் பள்ளப் பகுதி ஒரு செயற்கை நீரேரியாக ஆக்கப்பட்டுள்ளது. மலேசியப் பிரதமர் மகதீர் முகமட் உட்பட பல பிரமுகர்கள் அதன் திறப்புவிழா விளையாட்டுப் போட்டியில் வென்ற பொழுது மலேசியாவின் புதிய அரசரும், கோல்ப் விளையாட்டுப் பிரியருமான துங்கு ஜாபர் பரிசுகளை வழங்கினார்.

தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive

எவருடனும் எந்த விடயம் பற்றியும் உரையாடக் கற்றுக் கொள்ளுங்கள்.

எழுதியவர்: பாம் குறாகர்



பல ஆண்டுகளாகக் காணாதிருந்த எனது முன்னாள் மேலதிகாரி, தொலைக்காட்சித் துறையிலே பணமும் புகழும் ஒரு சேரப் பெற்றிருந்த காலத்தில், நாடகம் ஒன்றின் ஒளிப்பதிவு இடைவேளையின் போது இருவரும் சந்தித்துக் கொண்டோம். என்னில் அவருக்கு நல்லதொரு மனப்படிவினை ஏற்படுத்த வேண்டும் என்று நான் விரும்பியது இயல்புதான்.

வாக்குச் சாதுரியம், விவேகம், தனித்துவம் என்பவற்றை வெளிப்படுத்தக் கூடியவகையிலே உரையாடலைத் தொடங்குவதற்குப் பதிலாக, மேலதிகாரி வாழ்ந்துவரும் நகரத்தின் காலநிலைபற்றிப் பேச ஆரம்பித்தேன். அந்த நகரம் பற்றிய எனது கருத்து வெளிப்பாடு விளக்கமற்றதாகவும் வசை கூறுவதாகவுமே அமைந்தது (' ஆழமற்றது,' 'ஒழுக்க வரையறையற்றது ') முதலான என் சொற்பிரயோகங்கள், அவர் தமது நகரத்தினை விரும்பிய போதிலும்– என்னால் கையாளப்பட்டன. இறுதியாக, '' உங்களின் நிகழ்ச்சி, நான் நினைத்திருந்ததிலும் மிகவும் சிறப்பாக இருந்தது '' என்று கூறி முடித்தேன்.

நீர் யாருடன் உரையாடுகிறீரோ அவர் உமது முன்னாள் மேலதிகாரியாகவோ, புதிதாகத் தொடர்பு கொள்ளும் ஒருவராகவோ இருக்கலாம். உமது உரையாடல் மென்மையாகவும், முன்னரே திட்டமிடாததாகவும் இருப்பதே விரும்பத்தக்கது. ஆனால் இவ்வாறு உரையாடுவது தான் எம்மிற் பலருக்குக் கடினமான ஒன்றாக உள்ளது. பல சந்தர்ப்பங்களில் எமது உரையாடல்கள் படுதோல்வியில் முடிந்து விடுகின்றன.

ஓர் உரையாடலைத் தொடங்கி அது தடையின்றித் தொடர்வதற்கான பத்து வழிகள்.

'சிறிய உரையாடல் ஒன்றும் பிரமாதமானதன்று' என்று நீர் உம்மை ஆறுதற்படுத்திக் கொள்ளக் கூடும். பரவாயில்லை, அது பற்றி மீண்டும் சிந்தியும். இத்தகைய சிறிய உரையாடல்களே புரிந்துணரும் உறவினை, நட்புப் போன்றவற்றைக் கட்டி எழுப்புவன. தொடர்புச் சாதனம் பற்றிய ஆலோசனை முகவமான 'சொக் ஒல் சொக் அன்ட் கோல்ட் பேக்' (Chock of Chock and Goldberg) கைச்சேர்ந்த லோறி என்பவர், இது பற்றிப் பின்வருமாறு கூறுகிறார். '' சிறிய சிறிய உரையாடல்களே கூடிய பதிவுகளை (Impacts) ஏற்படுத்த வல்லன. ''

எதைக்கூறுவது, எந்தச் சந்தர்ப்பத்தில் கூறுவது என்பதை அறிந்தவர்களே நட்புக்குகந்தவர்களாயும், இனியவர்களாயும், கவர்ச்சி வாய்ந்தவர்களாயும் விளங்குவார்கள். சிலர் இந்த ஆற்றலைப் பிறவிக் கொடையாகப் பெற்றிருக்கலாம்; ஆனால் இதனைப் பயிற்சி மூலமும் வளர்த்துக் கொள்ள முடியும். '' எங்களிற் பலர் கூச்ச சுபாவம் உடையவராயிருக்கிறோம். ஆனால் அதனையே சாட்டாகக் கொண்டு தப்பிக்கொள்ள வேண்டியதில்லை. முயற்சி செய்வது உமது கடமை. ஏனெனில் கௌரவமும், பண்பும் வாய்ந்த மானிடத்தின் ஒரு கூறாக விளங்குவது சிறந்த உரையாடலே '' என்று 'கொஸ்மோபோலிற்றன்' சஞ்சிகையின் பிரதம ஆசிரியரான, ஹெலன் கேலிபிளவுன் கூறுகிறார். எவருடனும் எது பற்றியும் உரையாடுவதற்கான பத்து இரகசியங்கள் கீழே தரப்படுகின்றன.

1. உள்ளுறையும் கண்டன காரரை அடக்குக:

'அன்னி ஹோல்' என்னும் தலைசிறந்த திரைப்படத்தில் பாத்திரம் ஏற்று நடித்த டயான் கீற்றனும் வூடி அலெனும் சந்திக்கும் காட்சி ஒன்றும் இடம் பெறுகிறது. இருவரும் ஒருவரில் மற்றவர் நல்ல மனப்பதிவினை ஏற்படுத்துவதில் ஆவலாக இருக்கின்றனர். அவர்களிருவரும் உரையாடுகையில் திரையிலே இடப்படும் வாக்கியங்கள் அவர்களின் மனங்களிலே ஓடிக்கொண்டிருக்கும் உண்மைத் தன்மையை வெளிப்படுத்துவனவாய் அமைந்தன. '' நான் சொல்வதைக் கவனி–எத்தகைய தீவிர இழுப்பு '' என்ற அவரின் (டயான்

கீற்றினின்) வார்த்தைகளுக்குத் திரையில் இடப்பட்ட வியாக்கியான வாக்கியம்; ''நான் எவ்வளவு முட்டாள்'' என்பதாகும். வூடி அலென் ''நான் எவ்வளவு மேம் போக்கானவள் (ஆழமற்றவள்)'' என்று நினைப்பதாக அடுத்த வாக்கியம் தொடர்கிறது.

மருத்துவப் பரிசோதனைக் கூட உளவியலாளரான யூடித் சில்ஸ் மேற்குறித்தவை போன்ற கடுமையான சுயகண்டனம் வெற்றிகரமான சிறிய உரையாடலுக்கு முட்டுக்கட்டையாகும் எனக் கருதுகிறார். ''நீர் (இவ்வுரையாடலால்; ஒன்றையும் இழந்து விடவில்லை) ஏனெனில் உமது உரையாடலுக்கு எவ்வித நிகழ்ச்சி நிரலும் முன்னரே வகுக்கப்பட்டிருக்கவில்லை என்று உணர்வீரானால் பெரும் ஆறுதலும் சுய மதிப்பீடு தொடர்பான அச்சவின்மையும் பெறுவீர்'' என்பது அவரின்கூற்று. முன்னரே திட்டம் வகுக்காமையால் எம்முடன் விமானத்தில் பயணம் செய்யும் சகபயணியோடு உரையாடுவதில் வெற்றி பெறும் நாம், எமது மேலதிகாரியின் மனைவியோடு உரையாடுவதில் படுதோல்வி அடைகிறோம் என்றால் காரணம் என்ன? பின்னைய உரையாடலிலே சுயகண்டனமும், திட்டமிட்ட பாங்கும் அமைவதே.

2. தெளிவான முடிவு ஒன்றுடன் தொடங்குக

உமது அயலவரான பெண்மணி அண்மையிலே தான் பிள்ளைப் பேறடைந்து உள்ளார். தாய்மையை அவர் எவ்வாறு அனுபவிக்கிறார், என்ற கேள்வி அவரோடு உரையாடப் பொருத்தமானது. உமது மேலதிகாரி பதவி உயர்வு பெற்றுள்ளார். அவரைப் பாராட்டுவதோடு ''புதிய உத்தியோகம் எப்படி?'' என்று வினவலாம்.

நிர்வாகம் உடையவராக இருக்கவேண்டும் என்ற அவசியம் இல்லை. நீர் யாருடன் உரையாடுகிறீரோ அவரின் ஆர்வம் சார்ந்த விடயம் பற்றிக் கருத்துத் தெரிவிப்பதும், உமக்கும் அவருக்குமிடையே பொதுப்படையாகவுள்ள விருப்பத் தோடிணைந்த விடயம்பற்றி உரையாடுவதும் கடினமானவையல்ல. இவை மிகவும் அற்பமானவையாக இருந்தாலும் பரவாயில்லை.

உங்கள் இருவரிடையேயும் பேசக்கூடிய பொதுவிடயம் இல்லை. வெறும் நேரத்தைப் போக்குவதற்காக மேற்கொள்ளப்படும் உரையாடல் தான் அது என்றால் உதாரணமாக மேலேற்றியில் (Elevator) இருவரும் ஒன்றாக நிற்கும் போது என்றால் காலநிலைபற்றி உரையாடலாம். அது அவ்வேளையில் மிகவும் வரவேற்கத்தக்க ஒன்றாகவே இருக்கும். பல்வைத்தியர் ஒருவரின் அலுவலக முகாமையாளரான லிண்டா கொடாவா, பல்லுக் கொதியால் வருந்தும் நோயாளிகள் பலரை இத்தகைய சிறிய உரையாடலாலேதான் ஆறுதற் படுத்தி வருகிறார்.

ஒரு சொல்லிலேயே உமது உரையாடலை வெட்டிவிட முயல்பவருடன் என்ன செய்யலாம்? அவர் தம்மைத் தனிமையிலே விடுவதை விரும்புகிறார் என்பது தான், அவரின் அந்த ஒரு சொல்லுக்கு அர்த்தம். ஆனால் இது தனிப்பட்ட முறையில் உம்மீது கொண்ட எரிச்சலோ வெறுப்போ என்று கொள்ள வேண்டாம்.

3. பாராட்டு - மிகக் கவனமாகச் செய்ய வேண்டியது:

''இரத்த பயங்கரத்தில்'' என்ற தமது புத்தகத்தை வெளியிட்ட நாவலாசிரியர் ட்ரூமன் கபொட்டே என்பவருக்குத் தொலைக்காட்சிப் பத்திரிகையாளரான பார்பரா வால்ட்ர்ஸ், ஒரு விருந்துபசாரத்தின்போது அறிமுகம் செய்து வைக்கப்பட்டார். கபொட்டேயின் நாவலை அவர் எவ்வளவு தூரம் இரசித்தார் என்பதைப் பார்பரா அவருக்கு வெளிப்படித்த விரும்பினார். ஆனால் கபொட்டே பாராட்டுக்களைக் கேட்பதை விரும்பாது அலுத்துக்கொள்வார் என்று பார்பரா அஞ்சியதால், அவர் மெதுவாக ''எப்படிச் சுகம்?'' என்பதோடு நிறுத்திக் கொண்டார்.

''ஆனால் இப்பொழுது நான் முதிர்ச்சியும் கூடிய புத்திசாலித்தனமும் உடையவராகிவிட்டேன். நூலாசிரியர்கள் தம் நூல்களை எவ்வளவு பாராட்டினாலும் கேட்க அலுக்கமாட்டார்கள் என்பதையும் அவை பற்றிய விகவாசமான கேள்விகளை விரும்புவார்கள் என்பதையும் தெரிந்து கொண்டேன்''.

நூலாசிரியர்கள் மட்டுமோ? நாங்கள் எல்லாருமே பாராட்டுக்களை ஒருவகையில் விரும்புபவர்கள் தாம். ஆனால் பாராட்டினாக்கள் இலகுவாக விடையளிக்கக் கூடியவையாய் இருத்தல் அவசியமாகும். ''உங்கள் மகளின் உடையை நான் பெரிதும் விரும்புகிறேன். இதை எங்கே வாங்கினீர்கள்'' என்று கேட்கப்படும் கேள்விக்குரியவர் எவ்வளவுதான் அடக்கமானவராயிருந்தாலும், கேள்வி விகவாசமானதாய் உள்ளவரை அதனை இரசித்துப் பதில் இறுப்பார் என்பது நிச்சயம்.

ஒருவரின் உடல்தோற்றம் போன்ற கடினமான பகுதிகளைத் தவிர்க்க வேண்டும். உமது அபிப்பிராயம் எவ்வளவுதான் நல்ல நோக்கத்தைக் கொண்டதாயினும் கேட்போருக்கு மன உறுத்தலை ஏற்படுத்துமாயின் தீயவிளைவே ஏற்படும். எவராவது ஒருவர் 'நண்பரே, நீர் ஒளிப்படத்தில் தோன்றுவதிலும் நேரில் அதிக அழகாய் இருக்கிறீர்' என்று சொல்லுவாரானால் அவருக்கு நான், இறுக்கக் கூடிய பதில் என்ன?'' என்று உரைக்காட்சியாளரான சலிஜேளி றபியேல் கேட்டுவிட்டுப் பின்வரும் வினாவையே பதிலாக இறுப்பேன் என்கிறார். ''ஓ, நன்றி என்னைப் படம் எடுத்தவரை நான் கட்டுக் கொல்லட்டுமா'' இவ்வினாவுக்குப் பதிலாக பாராட்டப்பட்டவர் முகங்கறுத்து உம்மை விழித்து நோக்கி மௌனம் சாதிக்கவும் கூடும்.

4. நட்பார்ந்ததும் மெய்ப் பாட்டுடன் கூடியதுமான மொழியைக் கையாள்க:

உரையாடலைத் தொடங்கும் முன்னரே அதனை முடிவுக்குக் கொண்டுவரக் கூடிய விரைவான வழியாதெனில், உமது தோள்களைச் சுருக்கி, கூர்மையான பார்வையைச் செலுத்தி, முகத்தைப் பூட்டிக் கொள்வது தான். நீர் இதனை உள் நோக்கத்தோடு செய்யாவிடினும் கவர்ச்சியற்றவராயும், தனித்தவராயும் உம்மை அந்த மெய்ப்பாட்டுச் செயலானது ஆக்கிவிடுகிறது.

இதற்குப் பதிலாக, வீழிகளிலே தொடர்பாடற் பாங்கை வெளிப்படுத்தி மனந்திறந்த நிலையில் புன்னகை புரிதல் சிறந்தது. "மெய்ப் பாட்டு மொழியானது நீர் வாயாற் பேச முன்னரே உம்மை இனங்காட்டி விடும்" என்று, "101 சிக்கலான சூழ்நிலைகளில் உமது உள்ளம் பேசுகிறது" என்னும் நூலாசிரியர் டொன் கோபர் கூறுகிறார். நீர் நட்பார்ந்த செய்திகளை வெளிப்படுத்துபவரானால் அதே நட்பார்ந்த செய்திகள் உமக்கும் வெளிப்படுத்தப்படும்."

5. குவிப்பொளியை (*Spot Light*) ப் பிறர் மீது திருப்புக:

தம்முடைய பிள்ளைகள் பற்றிப் பெருமை கொண்டுள்ள பெற்றோர் மீண்டும் மீண்டும் தம் பிள்ளைகளின் ஆச்சரியம் நிறைந்த திறன்கள் பற்றியே பேசுவார்களன்றி, எம்முடைய சிறப்பாற்றல் பெற்ற பிள்ளைகள் பற்றிக் கேட்டறிவதில் அக்கறை காட்டமாட்டார்கள். ஒரு கட்டத்தில், இவ்வாறு பேசுபவரே தமது உரையாடலைத் திசை திருப்பி, "உம்முடைய பிள்ளைகள் எப்படி?" என்று வினாவும் கடப்பாடுடையவராவார்.

"தங்களைப் பற்றித் தாங்களே பேசுவதைக் கேட்பதில் உமக்கு ஆர்வம் இருக்கிறது" என்று மக்கள் பலரும் நினைப்பார்கள். இவர்களிடம் கேள்வி மேல் கேள்விகளாகச் சுருக்கி அவர்களின் ஆர்வம் எதில் உள்ளது என்று அறிய வேண்டும். பேசுவோர் எது பற்றிப் பேசுகிறார் என்பது உமக்கு விளங்கா விடில் அதனை வெளிப்படையாகச் சொல்க. உமது கேள்விகள் ஆர்வத்தினால் நீர் கேட்டும் சாதுரிய மற்றவையாயிருக்கின்றன என்பதை அவர்கள் அறியாதிருப்பார்களானால். அவர்கள் தம்மை நீர் துதி செய்வதாகக் கருதுவதே வழக்கம்.

6. செவிமடுத்துக் கேட்க:

தங்கள் அறிவைப் பேச்சுக்களில் உய்மைச் சிக்கவைத்து வாட்டுபவர்களின் உரையாடலின் போது நீர் யாது செய்வீர்?

உரையாடலிலே பட்டை தீட்டாத வைரம் போல உள்ளவர்கள் தாங்கள் உளறிக் கொட்டுவனவற்றை நெருக்கமாகச் செவி மடுத்துக் கேட்கவேண்டுமென்று விரும்புவதையும், அதன் மூலம் படித்துக் கொள்ளப் பலவுண்டு என்று எதிர்பார்ப்பதையும் கண்டு கொள்ளலாம். அவர்கள் தம் நோக்கங்களில் வெற்றி பெறாத வேளையில், "நீர் கூறுவதன் பொருள் என்ன?" என்று சிறிய உரையாடலில் அனுபவம் வாய்ந்தவர் அவரைக் கேட்டு ஊக்குவிப்பார்; அல்லது ஏற்றதற்கு அடையாளமாகத் தலையையாட்டி, "ஓ, அது மிகவும் பரபரப்பானது தான்" என்பார். இதற்குப் பதிலாக, "இது உமக்கு மிகவும் கடினமானதாய் இருந்திருக்க வேண்டும்" என்றும் அவர் கூறுவார்.

7. உரையாடலைப் பாரமற்றதாய்க் கொள்க:

நன்னடத்தையாளர், கருத்து முரண்பாடான உரையாடல்களைத் தவிர்க்குமாறு எச்சரிப்பது மரபாக இருந்து வருகிறது. ஒருவரின் அந்தரங்கமான நோய், நிதிச் சிக்கல், திருமணப் பிரச்சினை என்பவை பற்றிப் பேசுவதைத் தவிர்ப்பதோடு இந் நாள்களில் அரசியல் சார்ந்த சிறு உரையாடல்களும் கருத்தில் எடுத்துக் கொள்ளப்படுகின்றன.

கருத்து முரணான உரையாடல்கள் இடம் பெறும் பொழுது 'நீர் சொல்லுவது பிழை, நான் சொல்வதே சரி' என்று வலியுறுத்திக் கூறுவது தவிர்க்கப்படல் வேண்டும். உம்முடன் உரையாடுபவரின் கருத்தை உம்மால் ஏற்க முடியாத சந்தர்ப்பங்களில், "நாம் இவ்விடயத்தை வித்தியாசமான முறையில் கருதுவதாக எனக்குத் தோன்றுகிறது" என்று மென்மையான முறையில் கூறுக.

8. சமநேர அவகாசம் வழங்குக:

இரவு விருந்தொன்றின் போது உமக்கு இடப்பக்கத்தில் அமர்ந்திருக்கும் ஆண்மகனோடு உரையாடுவதில் பத்து நிமிடங்கள் செலவழிக்கிறீர் என்று வைத்துக் கொள்வோம். உமக்கு வலப்புறத்தில் அமர்ந்துள்ள பெண்மணியோடும் உரையாட அதே அளவு நேரத்தை ஒதுக்குவீரா? "நீர் இடப்புறத்தில் உள்ளவருடன் உரையாடுவது வலப்புறத்தவருக்கு அலுப்பைத் தருகிறது என்று நீர் உணர்ந்தால், அவரையும் உமது உரையாடலில் தொடர்பு படுத்துவதன் மூலம் அந்த அலுப்பு நிலையைப் போக்கலாம்" என்கிறார் ஹெலன் கேலி பிறவுன். "இவ்வாறான சந்தர்ப்பங்களிலே உரையாடலில் நாம் கலக்க வைக்கப்படாது அலட்சியப்படுத்தப்படுகையில், எமது மனத்துக்குச் சங்கடம் உண்டாகிறது என்பதை அது

பவ ரீதியாக அறிந்திருக்கிறோம்'' என்று பிறவுன் விளக்குகிறார். ''யாரோ ஒருவருடன் தொடர்ந்து உரையாடுவது உமக்கு விருப்பமா யிருந்த போதிலும், உமக்குப் பக்கத்தில் உள்ள மற்றவர் பற்றியும் கருத்திற் கொள்ள வேண்டும். ''நான் எனது உரையாடலின் மூலம் உம்மை எனக்கு ஏகபோக மானவராய் ஆக்கியதற்கு மன்னிக்க வேண்டும். விருந்தில் உம்மோடு கலந்து கொள்ளும் சகாவிற்கும் உம்முடன் உரையாட நான் வாய்ப் பளிக்க வேண்டும் என்று நானா யிருந்தால் கூறியிருப்பேன்'' என் பது பிறவுனின் கூற்று.

9. நகைச்சுவை உணர்வும் வேண்டும்:

மிகவும் மேன்மை பொருந்திய வரும், பண்புடையோருங் கூடச் சில வேளைகளில் முடத்தனமாக வும், கண்டனமாகவும், பகுத்தறி வின்றியும் பேசுவதுண்டு. நீர் இத் தகைய ''ஹாஸ்யத்துக்கு'' இலக் காக நேர்ந்தால் அதனைப் பெரிது படுத்த வேண்டியதில்லை. ''குறித்த நபர் அற்பத்தனம் காரணமாக அவ் வாறு பேசியிருக்க மாட்டார். அவ ருக்கு அந்த விடயம் பற்றித் தெரியாதென்றே கொள்ள வேண் டும்'' என்கிறார் கேபர்.

10. அந்த இடத்திலிருந்து அகல்க:

உமது மனைவி சமையலறை யைத் திருத்திக் கட்டுவது பற்றித் தரும் விளக்கம் உமக்குக் கவலை தருகிறது, அல்லது அது சம்பந்த மான உரையாடல் உம்மனதை உறுத்திவிடுகிறது. அவ்வேளையில் உமது மனைவியை அவமானப் படுத் தாமல் அங்கிருந்து செல்வது எப்படி?

அமைதியான வேளை பார்த்து மனைவியிடம் வெளியே செல்வ தற்கு இசைவு கேட்டோ, பானம் அருந்தத் தருமாறு வேண்டியோ, வேறொருவரைச் சந்திக்கப் போவ தாகக் கூறியோ அந்த இடத்திலி ருந்து அகல்வதே நன்று.

''பெரும்பாலான சந்தர்ப்பங் களில் மக்கள் சிறிய உரையாடல் களைத் தவிர்ப்பதன் காரணம், தம் முடன் உரையாடுவோர் உரையாட லில் நிபுணர்கள் என்று கற்பனை செய்வதே. இது தவறான கருத்து. அவர்கள் உரையாடல்களில் தனித் துவமான ஒளி வீசுபவர்களல்லர். உரையாடலில் இணைபவர்கள் அவர்கள் போலவே தீரும் உரையா டல்களில் இணைந்து கொள்ப வரே'' என்று நிபுணர்கள் கூறு கிறார்கள்.

'ரீடேர்ஸ் டைஜெஸ்ற் செப்ரெம்பர், 1994.

நன்னீர்

ஒரு துளி அழுக்கு நீர் பருகினால் எத்தனையோ அமளி துமளியான நோய்வாய்ப்படல்களும், சங்கடங்களும் எவருக்கும் வரலாம். தொழில் ரீதியாகவோ சுற்றுலாவுக்கோ நல்ல குடிநீர் பற்றாக்குறை உள்ள இடங்களுக்குச் செல்வோர் நோய்த் தொற் றுக்கு உள்ளானால் அவர்களின் திட்டமெல்லாம் தலைகீழாகி நட்ட மடைவதும் உண்டு. இப்பொழுது அந்தக் குடிநீர்ப் பிரச்சனைக்கு முற்றுப்புள்ளி வைக்க உலகத்திலேயே மிகவும் சிறிய அளவின தானதும், இடுக்கிற்கு இடம் கொண்டு செல்லக் கூடியதும், நீரைக் கொதிக்க வைக்காமலே வடிகட்டக் கூடியதுமான ஒரு நீர் வடி கட்டியைச் சுவிற்சர்லாந்தில் உள்ள கடாடின் புரொடக்ட்ஸ் என்ற நிறுவனம் உற்பத்தி செய்து விற்பனைக்கு விட்டுள்ளது. அந்தச் சாதனத்தின் வடிகட்டுத் தண்டத்தின் துளை அளவு 0 0002 மில்லி மீற்றர் என்பதால் மிகவும் அளவு சிறியதான பற்றீரியா வைக் கூட அது வடிகட்ட வல்லதாம். நெருப்புக் காய்ச்சல், வயிற்றுப்போக்கு, கொலரா போன்ற நோய்களை உண்டாக்கும் நுண் அங்கிகளையும், புறோட்டோவா, பூஞ்சணம், ஒட்டுண்ணி கள் முதலியவற்றையும் அது வடிகட்டவல்லது. அதனைப் பாவிக் கும் ஒருவர் வடிகட்டாத நீரில் அதனை வைத்து உள்ளுறைந்திப் பிடியை 20 முறை இழுத்து அமர்த்தப் பருகக் கூடிய நீர் அதற் கான வெளியேற்றியூடாக வடியும். சிறு துகள் அளவில் அந்த வடிகட்டியினுள் வெள்ளி இணைக்கப்பட்டுள்ளதால் அந்த வடிகட்டி தானியங்கிச் சுத்தமாகுவதுடன் உள்ளுறைந்த பற்றீரியாக்கள் பெருக விடாமலும் தடுக்கும். அமர்த்தி நீர் இறைக்கும் பொழுது அழுக்கமாக இருந்தால் அது சாதனத்தைச் சுத்தப்படுத்த வேண் டும் என்பதற்கு அறிகுறியாகும். பாவனையாளர் வடிகட்டித் தண் டைக் கழற்றி அது தனது பழைய தோற்றத்தை அடையும்வரை பிறஸ் கொண்டு தேய்த்துக் கழுவவேண்டும். ஒரு வடிகட்டி இரண் டாயிரம் கலன் நீர்வரை வடிகட்டப் பாவிக்கப்படக்கூடிய வலுக் கொண்டதாகும். விலை 150 டொலர்.

மறைந்துபோன அரும் பொருள்கள்

வரலாற்றுச் சான்றுகளான கையெழுத்துப் பிரதிகள் பிலிப்பைன் நிறுவனங் களில் மறைவு

எழுதியவர்: இலென் அன்ரனி மே

"தேசிய நூலகத்தின் களவுக்குத் தீர்வு" என்ற வாக்கியம் 1993 நவம்பர் 12 ஆந் தேதியன்று மணிலாவின் தினத்தாள் 'பலிற்றா' வில் தலைப்பாக வெளியாயிற்று. தலைப்புக்குரிய கட்டுரையோடு நிழற்படமும் இணைந்திருந்தது. அந்தப் படத்தில் திருடன் என்று குற்றஞ் சாட்டப்பட்ட ரொலண்டோ பெய்ஹோன், தேசிய வரலாற்றுக் கழகத்தில் ஆய்வாளர், பிலிப்பைனின் வரலாற்று அருஞ்செல்வத்தின் பொறுப்பாளியான முகவம், 'பண மரம்' என்ற பெயரில் மணிலாவின் எமிற்றா மாவட்டத்தில் நடந்துவந்த தொல்பொருள் விற்பனை நிலைய உரிமையாளர் றஃபினோ ஃபேயின் ஆகியோர் காட்சி தந்தனர். பிலிப்பைன் தேசிய நூலகத்தில் (PNL), பிலிப்பினியானா – ஆசியாப் பிரிவில் பேணப்பட்டுவந்த ஆவணங்களே களவாடப்பட்டவையாகும். இந்தக் களவு ஆவணங்களுள், பிலிப்பைன் குடியரசின் முதலாவது தலைவர் எமிலியோ அகுயினால்டோவால் கையெழுத்திடப்பட்ட பத்திரங்கள் பலவும் அடங்கும்.



பட்டான்காசிலுள்ள அகோன்கிலோ நூதனசாலையில் அகுயினால்டோவின் ஆவணங்களின் பிரதிகள் இருக்கின்றன.
இடம்: 1901இல் எடுத்த அகுயினால்டோவின் பிரதிமைப்படம்.

பிலிப்பைன் தேசிய நூலகத்தில் இடம்பெற்ற இந்தக்களவு, அந்நாட்டிலுள்ள ஒரு சில வரலாற்றறிஞர்களுக்கு மட்டுமே பெருங்கவலையை அளித்தது. இருதசாப்தங்களுக்குரிய பிலிப்பைனின் அரும் பெறற் கருவூலங்களாகிய ஆவணங்களும், பழம்பெரும் நூல்களும் மறைத்துபோனதையிட்டு நவம்பர் 12 ஆந் தேதி வரை, எவரும் பகிரங்கமாக ஒரு சொல்லைக்கூட வெளியிடாதது உண்மையில் கவலைக்குரியதே. றொலண்டோ பெய்ஹோன் களவாடிய பொருள்கள் ஒப்பீட்டவில் செப்புக் காசுக்கும் பெறுமதியற்றவை என்று கருதப்பட்டனபோலும்.

முதலில் PNL களவுபற்றி ஒரு சில வார்த்தைகள் கூறவேண்டும். பெய்ஹோனின் கதை வெளியான சில நாள்களின் பின்னர், செல்வரான பிலிப்பினியாத் தொல்பொருள் தொகுப்பாளர் இந்தக் கட்டுரை ஆசிரியருக்குச் (இலென் அன்ரனி மே) சில உண்மைகளை வெளியிட்டார். அகுயினால்டோவின் பல ஆவணங்கள் தவிப்பட்ட முறையில் ஏலத்திற்கு வந்ததாகவும், தாம் அவை களவுப் பொருள்களாய் உள்ளன என்று ஊகிப்பதால், அவற்றை விற்பனை செய்தவர்களுக்குச் சொன்னதாகவும் அவர் கூறினார். அவர் எதனையும், தமக்கென விலைக்கு வாங்கவில்லை. ஆனால், மற்றைய தொகுப்பாளர்கள் அவரின் ஊகிப்பைப் பொருட்படுத்தவில்லை. அகுயினால்டோவின் கையொப்பம் நல்ல தொரு முதலீடு என்பது அவர்களுக்குத் தெரியும். அவை மட்டுமல்ல மிக அரிய புத்தகங்களும் களவு போயின. யூன் 1972 இல், ஃபேடினன்ட் மார்க்கோஸ் இராணுவச் சட்டத்தைப் (Martial Law) பிரகடனப்படுத்த முன்னர், இக்கட்

தமிழில்: நிரு. சொக்கன்

டுரையாளர் PNL இல் ஆய்வு முயற்சியில் ஈடுபட்டபொழுது, அங்கு பிலிப்பைன் பற்றி உலகெங்கும் வெளியான மிகச்சிறந்த அரும் பெரும் நூல்கள் இருப்பதைக் கண்டார். மீண்டும் 1976 இல் அங்கு சென்று ஆய்வைத் தொடர முற்பட்ட வேளையில், முன்பு தாம் பயன்படுத்திய நூல்கள் பல மறைந்து போயிருந்ததை இவரால் அவதானிக்க முடிந்தது. நூற்பதிவட்டைகள் எங்குள்ளன என்று அங்கு பணி புரிந்தவர்களால் விளக்கந் தரவும் கூடவில்லை. 1979-80 காலகட்டத்தில் மேலும் பல நூல்கள் மறைந்து போயின. இடைப்

பட்ட எட்டாண்டுகளில் PNL பெரு மளவு சூறையாடப்பட்டிருக்கிறது என்ற உண்மை புலனாயிற்று.

இந்த நூல்களுக்கு நேர்ந்தது தான் என்ன? பிலிப்பைன் கல்வி யாளர்களிடம் இந்த வினாவைக் கிளப்பியபொழுது அவர்கள் அனை வரும் இறுத்த பதில் ஒரே தரமாக இருந்தது. தட்ஹனா என்பது தான் அந்தப்பதில். பிலிப்பினியச் சொல் லான இதன் பொருள் 'விதி' (Fate) என்பதாகும். மார்க்கோஸ் பிலிப்பைன் வரலாற்றைப் பல பாகங்களாக விரித்து எழுதி வெளி யிடக் கொண்டிருந்த பேராசை முற்றுப்பெறாத நிலையில் உள் ளது. அந்த வரலாற்று நூலுக்கு இடப்பட்ட தலைப்பே 'தட்ஹனா'. உண்மையில் அந்த ஆக்கம் வரலாற் றறிஞர்குழு ஒன்றின் கூட்டுமுயற்சி யாயினும், நூலாசிரியர் பெயராக மார்க்கோஸின் பெயரே இடப்பட் டது. நூலாக்கக்குழுவில் ஆய்வா ளர், தட்டச்சிடுவோர், தேசிய வர லாற்றுக் கழகத்தினர், பல்கலைக் கழக வரலாற்றுத் துறையினர் ஆகி யோர் இடம் பெற்றிருந்தனர். காலப் போக்கில் இவர்களுக்கு நூல் களைத் தாராளமாக விரும்பிய வண்ணம் பயன்படுத்தும் வாய்ப்புக் கிடைத்ததால், நூற்றுக்கணக் கான, ஆயிரக் கணக்கான நூல்கள் தனிப்பட்டோரின் நூலக உடை மைகளாக மாறின.

1896 இல் தகலொக் என்னும் பிலிப்பினியமொழி பேசுவோர் வாழ்ந்த மாகாணங்களில் (மணி லாவைச் சூழ்ந்துள்ள மாகாணங் கள் இவை.) ஸ்பானிய ஆட்சியை எதிர்த்து மக்கள் ஒரு புரட்சியை நடத்தினர். இந்தப் புரட்சி பற் றிய ஆரம்ப ஆய்வுகளிலே ஈடுபட முனைந்த இக்கட்டுரையாளர், 1986 இல் PNL க்கு ''வாட்சன் தொகுப்புக்கள்'' என்ற அரிய ஆதாரங்களைத் தேடிச் சென்றார். இருபதாம் நூற்றாண்டுத் தொடக் கத்தில் பிரித்தானிய பத்திரிகை யாளரான வில்லியம் பிறெக்கொக் வாட்சன் என்பவர் மேற்குறித்த புரட்சிகள் பற்றி ஆராய்ந்து தொகுத்து வைத்தவையே இவை. 1960 புரட்சிபற்றி இரு நூல்கள் வெளியான பொழுது, மற்றைய சான்றாதாரங்களோடு மாவீரன் ஆட்டெபியோ றிக்காட்டேயின் நினைவுக் குறிப்புக்களும், அவர் தமது கைப்பட எழுதிய பிரதிக ளும் PNL இல் இருந்தன. ஆனால், ''வாட்சனின் தொகுப்புக்கள்'' பற்றியும் றிக்காட்டேயின் கையெ ழுத்துப் பிரதிகள் பற்றியும் வினா வியபொழுது, அங்கு பணியாற் றிய எவராலும் அவை எங்குள் ளன என்று கூற முடியவில்லை. அவற்றுக்கு என்ன நேர்ந்தது என்று விளக்கம் தரவும் கூடவில்லை.

இந்த மறைவுகள் தொடர் பான விடயம் பிலிப்பைன் வர லாற்றில் நிபுணரான வில்லியம் ஹென் றிஸ்கொட் (இன்று இவர் அமரர்), பத்திரிகையாளரும் பிலிப் பைன் வரலாற்றினைச் சனரஞ் சகமாக எழுதி வந்தவருமான அம் பேத் ஒகம்போ ஆகியோரின் கவ னத்திற்குள்ளாயின. இவர்கள் நீவிர விசாரணை நடத்தி முடி வில் அவை யாவும் மர்மமான வகையில் மறைந்து போயின என்று தம் தீர்ப்பினை வெளியிட் டார்கள். றொலண்டோ பெய்ஹோ னின் திருட்டுக்கு முன்பே சான்றா தார ஆவணங்களும், நூல்களும் தனிப்பட்ட தொகுப்பாளர்களின் கைப்பட்டு விட்டன எனவே இன் றுள்ள நிலையில் பிலிப்பைன் வர லாற்றினை ஆராய முற்படும் ஒரு வர் PNL உக்குப் பதிலாக இவர் களின் உதவியைத் தான் நாட வேண்டும். இந்த முறையையே இக்கட்டுரையாளர் கையாண்டார். இதற்காகவே மணிலாவில் சுற்றுப் பயணஞ் செய்தார். 1896 இல் இடம்பெற்ற புரட்சியில் இரகசி யப் புரட்சிக் குழு அமைத்துத் தீரமாகப் பணியாற்றி அகால மரணமடைந்த அண்ட்றிஸ் பொனி.:பாலியோவின் கடிதங்கள் இச் சுற்றுப்பயண காலத்தில் இவ ருக்குக் கிடைத்தன. இன்று பொனி.:பாலியோ மறைந்து 95 ஆண்டுகள் ஆன பின்பு பிலிப்பை னின் தேசிய வீரனான அவனைப் பற்றி ஆராய்ந்த உயர்நிலை மாண வர்கள் தமது பாட நூல்களில் வாசிக்க வாய்ப்புப் பெற்றிருக்கி றார்கள். பிலிப்பைன் திவக் கூட்ட மெங்கணும் அவனுக்குச் சிலைகள் எழுப்பப்பட்டு மக்கள் அவனை உணர்வு பூர்வமாக நினைவு கூர் கின்றனர். இவனுடைய கடிதங் கள் 1989 இல் பிரசித்தி பெற்ற அரும் பொருள் தொகுப்பாளரால் கொள்வனவு செய்யப்பட்டுப் பல கைகளுக்கு மாறிய வரலாறு சுவா ரசியமானது. ஆனால் அவை பெறப்பட்ட மூலாதாரம் இதுவரை மர்மமாகவே உள்ளது. பொவி.: பாலியோவின் ஆவணங்களைப் பெறுவதற்கு ஒருவர் 10,000 அமெரிக்க டொலர் செலுத்தி னார் என்பதிலிருந்து அதன் பெறு மதியை உணர்ந்து கொள்ளலாம். இருந்த போதிலும் இவை யாவுமே ஆதாரபூர்வமானவை என்பதிலும் இக்கட்டுரையாளருக்கு ஐயமுண்டு.

இவற்றைத் தமது உடைமை யாக வைத்திருந்தவர், முதலில் தேசிய வரலாற்றுக் கழகத்திற்கே விற்பனை செய்ய விரும்பினார். ஆனால் அந்த உடைமையாளரின் கூற்றுப்படி தேசிய வரலாற்றுக் கழகம் கொள்வனவு செய்ய மறுத்து விட்டது என்று தெரிய வருகிறது.

றொலண்டோ பெய்ஹோனது திருட்டுப் பொருள்கள் பற்றியும், மற்றும் அரும் பெரும் ஆவணங் கள் பற்றியும் அண்மையில் உலா வும் கதை என்னவெனில், PNL அவற்றைப் பெறுவதற்கு விரும்ப வில்லை என்பதுதான். பெறுதற் கரிய இக்கருவூலங்களை அது வாங்கிக் கொள்ளத் தயங்குவதற் குக் காரணம் அவை மீண்டும் கள வாடப்பட்டு முன்னரிலும் கூடிய விலைக்கு விற்கப்படலாம் என்ற அச்சமா? பிலிப்பைன் அரும் பொருள்களைப் பேணிக் காப்ப தில் இன்று கடைப்பிடிக்கும் வழி இதுதான். ''தலிப்பட்டவர்களின் கைகளில் இவை கூடிய பாதுகாப் பாக இருக்கும். தேசிய நூலகத் திலே அவை வைக்கப்பட்டால் மீண்டும் மறைவதற்கான சாத்தி யம் உண்டு'' என்று ஒருவர் இக் கட்டுரையாளருக்குச் சொன்னது தான் உண்மையோ?

வார் ஒஸ்ரேன் எக்கனமிக் றிவியூ. 27 ஜனவரி 1994

40 திருடர்களை ஏமாற்றிய அலிபாபாவிடம் திருடிய தாய்லாந்துக்காரன்

இந்த நூற்றாண்டின் மிகப் பெரிய திருட்டு என வர்ணிக்கப்பட்ட 20 மில்லியன் டொலர் பெறுமதியான நகைக் கொள்ளை 1989 ஆம் ஆண்டு சவுதி அரேபியாவில் ஒரு தாய்லாந்துக் காரனால் நடத்தப்பட்டுள்ளது. சவுதி மன்னரின் உறவினரான இளவரசரின் அரண்மனையில் ஆறுவருட ஒப்பந்தக் கூலியாக வேலை செய்த கிரியாங்கிராய் தெய்ச்சாமொன்ங் (வயது 40) குற்றவாளியாகக் காணப்பட்டுள்ளான். பெறுமதிமிக்க பொருள்கள் யாவும் சேமித்து வைக்கப்படும் பாதுகாப்பு அறையைப் பூட்டித் திறக்கும் இலத்திரனியல் கருவிகள் இயக்கப்படுவதை ஒருமுறை தனது கடமைகளின்போது இவன் கவனித்துவிட்டான். சிறிது காலத்தின் பின் இளவரசர் தனது குடும்பத்தினருடன் வெளிநாடொன்றிற்குச் சென்றவுடன் இவன் இக் கருவிகளை இயக்கிப் பாதுகாப்பு அறைக்குள் பிரவேசித்திருக்கிறான். 20 பெட்டிகள் நிரம்பிய தங்க நகைகளையும், வைரக் கற்களையும் இவன் மெல்லமெல்லத் திருடியதாக இவன் மீன்பு வழக்கு விசாரணையில் தெரிவித்துள்ளான். யாவற்றையும் தான் தங்கியிருந்த பகுதி நிலத்திற்கடியில் வைத்ததாகவும், கடல் மார்க்கமாகவும், விமானம் மூலமாகவும் யாவற்றையும் சிறிய பொதிகளாக்கித் தாய்லாந்தில் தனது விலாசத்திற்கு அனுப்பி வைத்ததாகவும் இவன் வாக்குமூலம் கொடுத்துள்ளான்.

பொதிகளைத் தனது நாட்டிற்கு அனுப்பி வைத்த பின்பு கிரியாங்கிராய் தொடர்ந்து வேலை செய்துள்ளான். ஆனால், இளவரசரும் குடும்பத்தினரும் சவுதிக்குத் திரும்பிய பின் திருட்டுக் கண்டுபிடிக்கப்

1990 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட பத்திரிகையாளர் மாநாட்டின் பார்வைக்கு வைக்கப்பட்ட நகைகளும் கைவிலங்கிடப்பட்ட திருடனும்.

பட்டு கூச்சல் கிளம்பியதும் அவன் திடீரென வேலையை உதறித்தள்ளி விட்டு நாடு திரும்பியுள்ளான். அவன் காரணமின்றி சவுதியை விட்டகன்ற விதம் அவன் மேல் சந்தேகப்படக் காரணமாயிற்று. இரு நாடுகளுக் கிடையிலான தூதுவர் மட்டத்தில் இப்போது விவகாரம் சென்றடைந்தது. சவுதித் தூதுவர் கொடுத்த அழுத்தத்தினால் தாய்லாந்தின் புலனாய்வுத் துறை இரண்டாவது முத்த அதிகாரி சாலோ கேடதேஸ் குற்ற வாளியையும், நகைகளையும் தேடும் பணிக்கு நியமிக்கப்பட்டார். தாய்லாந்தில் நடக்கும் மிகப் பெரிய கொலைக் குற்றம், திருட்டு யாவுக்கும் துப்புத் துலக்கும் பொறுப்பு எப்போதும் சாலோரீடமே ஒப்படைக்கப்படும். அவருடைய திறமை அத்தகையது. இரண்டு வாரங்களில் கிரியாங்கிராய் லம்பாங் மாகாணத்தில் ஒரு குக் கிராமத்தில் பிடிபட்டான். 120,000 டொலர் பெறுமதியான ஆபரணங்களை அவன் விற்றுத் தனக்கென ஒரு வீடும் வாங்கி வேறுசில வசதிகளும் செய்து கொண்டுள்ளான். மீகுதி அவனுடைய வீட்டு நிலத்தின் குழியொன்றில் மறைக்கப்பட்டிருந்தன.

சவுதி அரேபியாவில் திருடப்பட்ட தங்க ஆபரணங்களினால் தாய்லாந்தின் காவற்றுறை உயர்பீடத்தின் ஊழல்கள் அம்பலத்துக்கு வந்துள்ளன.

தலைநகருக்குத் திரும்பிய சாலோ பத்திரிகையாளர் மாநாடொன்றைக் கூட்டித் திருடனையும், திருடப்பட்ட பொருள்களையும் பத்திரிகையாளர்களின் பார்வைக்குப் பகிரங்கப்படுத்தினார். கிரியாங்கிராங்கிற்கு தாய்லாந்துச் சட்டப்படி நீதிமன்றத்தின் முன் நிறுத்தப்பட்டு இரண்டு வருடக் கடுழியச் சிறைத் தண்டனை வழங்கப்பட்டுள்ளது. அவனைச் சவுதிக்கு அனுப்பி அந்த நாட்டுச் சட்டத்தின் முன் நிறுத்தப் படுவதே சரியான சர்வதேச முறைமை. ஆனால் இல்லை அது நடைபெறவில்லை. ஆபரணாதிகள் யாவும் சவுதி இளவரசரின் அரண்மனைக்கு அனுப்பப்பட்டுள்ளது. இத்தோடு விடயம் முடிந்திருந்தால் இந்தத் திருட்டு ஒரு சர்வதேச விவகாரமாகவும், பரபரப்பான செய்தியாகவும் மாறியிருக்க மாட்டாது. மீளப் பெற்ற பொருள்களைத் தனது அலு

வலர்களுடன் பரிசோதனை செய்து பார்த்தபோது அவற்றில் பெரும்பாலானவை போலி நகைகள் என்றும், அசல் நகைகள் முழுத் தொகையில் 30 சதவிதம் மாத்திரம் தேறும் என்றும் இளவரசர் கண்டுபிடித்துள்ளார்.

இப்போது இரு நாட்டு உறவுகளும் மிகவும் கசப்பான நிலைக்கு வந்துள்ளன. 1990 ஆம் ஆண்டு தொடக்கம் தாய்லாந்துத் தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்புக் கொடுப்பதை சவுதி அரேபியா நிறுத்தியுள்ளது. இதுவரை அங்குவேலை செய்து கொண்டிருந்தவர்களும் நாடு திரும்பும்படி உத்தரவிடப்பட்டுள்ளனர். இதனால் தாய்லாந்திற்குப் பலகோடி டொலர் நட்டம் ஏற்பட்டுள்ளது. பிரச்சனையை அமைதியாகத் தீர்க்கவே தாய்லாந்து விரும்புகின்றது. ஆனால், நிலைமையை அவதானிப்போரின் கணிப்பில் இன்று கிரியான்ங் கிராயிலும் பார்க்கப் பெரிய திருடர்கள் தாய்லாந்துப் பொலிஸ் படையின் உயர் மட்டத்தில் இருக்கிறார்கள். இவர்களில் முதன்மையானவர் புலனாய்வில் புலி என்ற பேரெடுத்த சாலோர் கேட்தேஸ் என்ற பலமான சந்தேகம் எழுந்துள்ளது. அண்மையில் ஆசிய நாடுகளின் பல்வேறு காவல்துறைகளைப்பற்றி மேற்குலக நீதித்துறை நிர்வாகி ஒருவர் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்: "ஆசியாவின் காவல்துறையினர் பெரும்பாலும் கிரிமினல் நடத்தையில் கைதேர்ந்தவர்களாக மாறுகின்றார்கள்." இது உண்மை என்பதை இந்தத் திருட்டின் மிகுதி அத்தியாயங்கள் நிருபிக்கின்றன.

கிரியான்ங் கிராய், திருடித் தனது நாட்டிற்கு அனுப்பிய திரவியங்களின் முழு நிறை 90 கிலோ. இதே நிறையுள்ள நகைகள் திருப்பி அனுப்பப்படவில்லை. கிரியான்ங் கிராய் விற்றதுபோக மிகுதி அனுப்பப்படவேண்டும். ஆனால், நடைபெறவில்லை. முழுப் பொறுப்பெடுத்த சாலோர் சந்தேகத்திற்குரியவரே. 1989 ஆம் ஆண்டுதொடக்கம் தாய்லாந்தில் சவுதித் தூதுவராகக் கடமையாற்றும் முகமது செய்யது கோஜா அவர்கள் சொல்கிறார்: "தாய்லாந்துப் பொலிஸ் நகைகளைப் பாரமெடுத்த பின் மாயமாக மறைந்த ஆபரணாதிகளுக்குக் காவல் துறையே பொறுப்பு." இவருடைய இராஜதந்திர மொழியில் தாய்லாந்து உயர்மட்டப் பொலிசாரே உண்மையான திருடர்கள். பிரச்சனையை அணையவிடாமல் கோஜா பல மட்டங்களில் தாய் அரசிற்கு அழுத்தம் கொடுத்து வருகின்றார்.

இதன் காரணமாகச் சென்ற வாரம், 1991 ஆம் ஆண்டு தொடக்கம் 1993 ஆம் ஆண்டு வரை, பொலிஸ் முதல்வராகப் பதவி வகித்த சவஸ்தி அமோர்ன்வித் கைது செய்யப் பட்டுள்ளார், இவர் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் இரண்டு. ஒன்று கடமையைச் சரிவரச் செய்யாமை. இரண்டு கறுப்புச் சந்தையில் நகை விற்பனையில் ஈடுபட்டமை. இவருடைய இடத்திற்கு நியமனம் பெற்றுள்ள புதியபொலிஸ் முதல்வர் பிராதின் சாந்திபிராபொப் அவர்கள் இன்னும் ஆறு உயர் அதிகாரிகளையும் இது சம்பந்தமாகக் கைது செய்துள்ளார். எல்லாமாக பதினைந்து உயர்மட்டப் பொலிஸ் அதிகாரிகள் மீது வழக்குத் தொடரப்படுமென்று அவர் பகிரங்கமாகத் தெரிவித்துள்ளார். மேற்கூறிய ஆறு உயர் அதிகாரிகளில் முதல் இடம் சாலோர் கேட்தேஸ் அவர்களுக்கே கிடைத்துள்ளது. எல்லாவற்றிற்கும் சிகரம் வைத்ததுபோல் இருக்கின்றது முன்னாள் பொலிஸ் முதல்வரின் பத்திரிகைச்செய்தி; "என்மீது குற்றஞ் சுமத்துபவர்கள் எல்லோரும் சீருடை தரித்த திருடர்கள்" என்பதாக.

இந்தத் திருட்டு நடந்தது 1989 ஆம் ஆண்டிற்கும் 1990 ஆம் வருடம் முடிவுறும் வரையிலான காலப்பகுதியில். ஐந்து சவுதி அரேபியப் பிரஜைகள் தாய்லாந்து மண்ணில் கொல்லப்பட்டுள்ளனர். அக்காலகட்டத்தில் இத்திருட்டுக்கும், கொலைக்கும் உள்ள தொடர்பு வெளிவரவில்லை. தாய் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தாலும் தகுந்த சாட்சியங்களைப் பொலிசார் நெறிப்படுத்தத் தவறியபடியால் வழக்குகள் தீர்ப்பின்றித் தள்ளப் பட்டுள்ளன. இப்போது இந்த விவகாரமும் முன்னணிக்கு வந்துள்ளது. 1987 ஜனவரி 4 ஆந் தேதி, 35 வயதினரான தூதுவராக அதிகாரி அல்மலித்தி தூதுவரகத்திற்கு அண்மையில் வைத்தே சுட்டுக் கொலைசெய்யப் பட்டுள்ளார். 1990 இல் இரண்டு மோட்டார் காரில் சென்ற 3 சவுதித் தூதுவரக அதிகாரிகள் பட்டப்பகலில் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். இவர்கள் யாவரும் நகைத்திருட்டுச் சம்பந்தமான புலன் விசாரணையில் ஈடுபட்டிருந்தவர்கள். இது மாத்திரமல்ல சவுதி வர்த்தகர் முகமது அல்ரு வேயிலி ஒரு வாரத்தின் பின் கடத்தப்பட்டுக் கொலைசெய்யப்பட்டுள்ளார். இவருடைய கடத்தல் மற்றும் கொலை சம்பந்தமாகப் பொலிஸ் தலைமைச் செயலக அதிகாரி சோம்கித் புண்தனம் நீதி மன்றத்தில் நிறுத்தப்பட்டுள்ளார். ஆனால், வழமைபோல் தகுந்த சாட்சியங்கள் இல்லாத காரணத்தால் வழக்குத் தள்ளுபடி ஆகிவிட்டது. இன்றுவரை தூதுவர் கோஜா இந்தக் கொலைகள் சம்பந்தமான விசாரணைகளை மீண்டும் அகலத் திறக்கும்படி தாய் அரசுடன் மோதிக்கொண்டே இருக்கின்றார்.

இது இவ்வாறு இருக்க, புதிதாக நியமனம் பெற்றுள்ள பொலிஸ் முதல்வர் பிராதின் சாந்திபிராபொப் மலைபோல் நம்பியிந்த சாட்சி நகைவியாபாரி சான்தி சிறிதனக்கனுடைய மனைவியும், 14 வயது மகனும் மர்மமான முறையில் கொல்லப்பட்டுள்ளனர். இக்கொலை குற்றம் சாட்டப்பட்ட பொலிஸ் அதிகாரிகளுக்கெதிராகச் சாட்சி சொல்ல இருக்கும் நகைவியாபாரிக்கு விடப் பட்ட எச்சரிக்கையாகும், தனது மனைவி, மகன் ஆகியோரின் மரணச் சடங்குக்கே வராமல் சிறிதனக்கன் தலைமறைவாகி விட்டார். ஊழல் புரியும் பொலிசார் மூர்க்கத்தனமாகத் தாக்க ஆரம்பித்து விட்டனர். இத்துடன் சில சந்தேகத்திற்கிடமான அரசியல் வாதிகளும் தங்கள் உள் நாட்டு அரசியலில் தலையிடுவதாக சவுதித் தூதுவர் மீது குற்றஞ் சுமத்த ஆரம்பித்துள்ளனர். தாய்லாந்து உயர் அதிகாரமீடமே தனது நம்பகத் தன்மையை இழந்துவிட்டது போல் தென்படுகின்றது.

ஏசியா வீக், செப்ரெம்பர் 7, 1994.

விண்வெளி வேலிச் சண்டை

எழுதியவர்:
— யேம்ஸ் வால்ஸ் —

ஆசியாவின் செய்மதிமூல தகவல் தொடர்புகளுக்கான சுதந்திர வர்த்தகப் போட்டியை சீனாவின் அத்துமீறல் ஆபத்திற்குள்ளாக்குகிறது.

ஹொங் கொங்கின் அழகிய கட்டடத் தொகுதிகள் நிறைந்த பகுதியாகிய 'பஸிபிக் பிளேஸ்' இல் அமைந்த கட்டட மொன்றில் பெய்ஜிங்கின் கட்டுப் பாட்டில் இயங்கி வரும் 'APT' செய்மதித் தொடர்பு நிறுவனம் சீனாவின் துணிகர விண்வெளி யகப் பிரவேச வெற்றியின் வெளிப் பாடான வெற்றிச் சின்னங்களுடன் கலகலப்பாகக் காணப்பட்டது. சீனாவின் புதிய செய்மதி மூல விண்வெளித் தொடர்பு வர்த்தக முயற்சிக்கான 'லோங்மாச் 2E' '(Long march 2E)' ராக்கெட்டின் 1.5 மீற்றர் நீள முழு உருமாதிரிகள் அலுவலக முன்மேசைக்கருகில் காணப்பட்டன. பெரும் சக்தியுடன் விண்நோக்கிச் சீறிக் கிளம்புவதைக் காட்டும் புகைப்படங்கள் மற்றும் அமானுஷ்யமான விண்வெளி வெற்றிடத்தில் மிதந்து கொண்டிருக்கும் செய்மதியின் தெளிவான அருகாமைப் படங்கள் (Close up) அலுவலக வரவேற்புப் பகுதியை அலங்கரித்துக்கொண்டிருந்தன. உண்மையான தொலைத் தொடர்பு, இழுபறிச் சண்டைகள் பூமிக்கு மீண்டும் திரும்பியிருக்கின்றன என்பதை எப்படியும் 'APT' தனது இந்த அலங்கார நாடகங்களுக்கு மத்தியிலுங்கூட அனுபவ ரீதியாகக் கற்றுக்கொண்டுதானிருந்தது. யூலை 21 இல் அந்நிறுவனத்தில் அனுப்பி வைக்கப்பட்ட 1 ஆவது செய்மதியின் செயற்பாடு பேரவாக் கொண்ட விண்வெளி மொங்கோவியர்களுக்கு உச்சத் திருதுவலியைக் கொடுக்குமளவிற்குப் போதிய தொடர்பலைக் குழப்பங்களை (Static) உருவாக்கி விட்டிருக்கிறது.



உயர உயர மேலே: கொள்கை தடம் புரளலுக்கான 'ஏப்ஸ்ரார்' செய்மதி தூக்கிய 'லோங் மாச்' ராக்கெட் மேலே விண் நோக்கி கிளம்புகிறது:

'ஏப்ஸ்ரார்-1' ('Apstar-1') க்குக் கிளம்பியுள்ள எதிர்ப்புக்கள் சீனாவின் சர்வதேச மட்டத்திலான வர்த்தக முயற்சிகள் எவ்விதமான நோக்கத்தைக் கொண்டுள்ளன என்ற அடிப்படைக் கேள்வியை எழுப்புவதாகவுள்ளன. விண்ணில் செய்மதிகள் ஒன்றுக்கொன்று நெருக்கடி யேற்படுத்துவதைத் தவிர்ப்பதற்கென்றே வழமையான ஏற்பாடுகளாகத் திட்டமிடப்பட்ட ராக்கெட் ஏவும் முக்கியமான முன்னேற்பாட்டு ஒழுங்குகளையும் (Important Pre Launch Protocols) மீறியதாக ஆதாயமான முறையில் தூரகிழக்கு நாடுகளுக்குத் தனது ஒலிபரப்புக்களை மேற்கொள்வதற்குச் சிறப்பானதொரு நிலை என்ற ஒரே நோக்கில் 'APT' மிக எளிதாகவே தான்தோன்றித் தனமாக ஏனைய செய்மதிகளின் பாதையில் இடைச்செருகலாகத் தன்னுடைய செய்மதியைப் புகுத்தியுள்ளது. ஐப்பானிய, அமெரிக்க செய்மதிகளுக்கு வெகு அருகாமையில் மிகவும் நெருக்கியதாகச் செலுத்தப்பட்ட அதன் நிலையினால் பாரதூரமான அளவில் சமிக்கைக் குறுக்கீடுகளும், குழப்பங்களுமேற்படுவது உறுதியான ஒன்றாகவே தோன்றுகிறது. விதிமுறைகளை மீறியதையும் விடக் கொள்கைத் துரோகமான முறையில் இச் செய்மதி ஏவப்பட்டதாவது ஆசியாவின் பரந்துபட்ட செய்மதி டெலிவிசன் சந்தைகளில், Extensive Satellite Market நட்சத்திரப் போர் முறையில் போட்டி

யாளர்களை முறியடித்து மேற் கொள்ளும் (a Star Wars Like shoot out overtaking Rivalries) அபாயகரமான நிலையொன்றைத் தோற்றுவித்துள்ளது.

இது மாதிரியொன்று நடை பெறுவது மக்களிடையே பரஸ்பர நம்பிக்கையினத்தை உருவாக்குவ துடன் ஆத்திரமூட்டுவதாகவும் உள்ளதாக ஹொங்கொங்கைச் சேர்ந்த செய்தித் தொடர்பு ஊடாக மூலோபாய ஆலோசக ரான ஸ்ரீபெனி குறொஸ்வில்ஸ்ன் கூறுகிறார்; ஜப்பானிய அதிகாரிக ளும் கடுஞ் சீற்றங் கொண்டுள்ள னர். கடந்த வாரம் 'எப்ஸ்ரார் 1' இன் செயற்பாடுகள் ஆரம் பித்து வைக்கப்படுவதற்கு முதல் நாளன்று சீன மற்றும் ஜப்பானிய அதிகாரிகள் பேச்சுவார்த்தைகளின் பொருட்டு ரோக்கியோவில் சந் தித்திருந்த போதிலும் சீனத் தரப் பில் விட்டுக்கொடாமை காரண மாகத் தீர்மான மெதுவுமின்றியே பேச்சுக்கள் இடைநடுவில் முறிந்து போயிற்று. ''இது எல்லோருக்கும் ஒரு படிப்பினையாகும். இது போன்ற மோசமான நடத்தை சம்பந்தமான செயற்பாடுகள் தடுக் கப்பட வேண்டுமென்பதை நாம் உணருகிறோம்'' என்பதே ரோக் கியோ தரப்பில் காஒரு சுணுக்கி யன் கூற்றாகும்.

'ஸக்குறா-3 ஏ' ('Sakura 3a') செய்மதியைப் பயன்படுத்தும் ஜப் பானிய தனியார் நிறுவனங்கள், மற்றும் அரசாங்க ஏஜென்சிகள் பலவற்றின் சார்பாக ஒப்பந்த முயற்சியில் ஈடுபட்டுக்கொண்டி ருந்த ஜப்பானியத் தபால் தொலைத் தொடர்புகள் அமைச் சைச் சேர்ந்த ஒரு மூத்த ஆலோ சகரே இந்தச் சுணுக்கியாவார். பூமி யின் நிரந்தர சுற்றுவட்டப் பாதை யில் (Geo Stationary orbit) அதா வது 35,576 கி.மீ உயரத்தில் பூமத்திய ரேகைக்கு மேலாகக் கிழக்கே தீர்க்க ரேகையில் 132 பாகை கோணத்தில் நிலைகொண் டிருக்கும் 'ஸக்குறா' (செர்ரி) பழம் என்ற அர்த்தம் (Cherry) தூரத்து ஜப்பானியத் தீவுகளுக்கான

பனிப்போர்க் காலகட்டத்திற்கூட ருஷ்ய மற்றும் யு. எஸ் இராணுவ அதிகாரிகள் ஒன்றாகவே அமர்ந்து இணக்கமாக செயற்படக் கூடியவர்களாக இருந்திருக்கிறார்கள். அவ்விதமாக அவர்கள் செயற்பட வில்லையெனில் இருசாராருமே தத்தமது செய்மதிகளைப் பயன்படுத்திக் கொள்ள முடியாது போயிருக்கும்.

தொலைபேசி மற்றும் அரச தக வல் தொடர்புச் சேவைகளை வழங்கி வருகின்றது. அருகாமை யில் 130 பாகை கிழக்கேயுள்ள பலிபிக் தீவக இராச்சியமான 'ரொங்கா' வின் மிகச் சிறிய விண் வெளிப் பிராந்திய இடுக்கொன் றில் us இன் 'றிம்ஸாற்-1 (Rimsat -1) செய்மதி நிலைகொண்டுள் ளது. இந்தியாவிற்கான அமெரிக்க ரி.வி. ஒலி ஒளிபரப்பு நிகழ்ச்சி களை இது அஞ்சல் செய்து வரு கின்றது. இச் செய்மதிகளிரண்டுக்கு மிடையில் 131 பாகை கிழக்கே அதுவும் 1 பாகை வித்தியாசத்தில் இரண்டையும் மிக அண்மித்ததா கவே (750 கி.மீ) இந்த 'எப்ஸ் ரார்-1' நெருக்கமான ஓர் இடைச் செருகலாக உள்நுழைக்கப்பட்டுள் ளது. மூன்றினது சமிக்கைத் தொடர்புகளையுமே இது ஆபத் திற்குட்படுத்துவதாக உள்ளது.

தன்னுடைய செய்மதிகளுக் கிடையில் 4 பாகை வேறுபாடி ருக்க வேண்டுமென்பதே ஜப்பா னின் விருப்பமாகும். ஆனாலும் இந்தத் தொழிலில் நாடுகளின் தனிப்பட்ட செய்மதிகளுக்கிடையி லான இத் தூர வேறுபாடு 3 பாகையாக இருக்கவேண்டுமென் பதே சர்வதேச ஒழுங்காகும். விண் வெளியில் தொடர்புச் செய்மதி களை நிறுத்துவதற்கான இடை வெளிகள் சுருங்கி வரும் நிலைமை வளர்ந்து கொண்டே போகும் போக்கினைச் சீர்செய்வதற்காக ஐ.நா.வினால் நடத்தப்படும் சர்வதேச தொலைத் தொடர்பு கள் சம்மேளனமே 'ITU' இந்த நியம அளவுகளைப் பிடிக்க வேண்டுமென்று வற்புறுத்துகிறது. 'ITU' விற்கு இவ்விடயத்தில் நிர்ப்பந்திக்கும் அதிகாரம் கிடை யாத போதிலும் இதுவரை இத் தொழிலில் தன்னிச்சையாகவே இவ்வொழுங்கு பேணப்படுவதை இது ஒருவாறாகச் சாதித்தே வந் துள்ளது. ஆசியாவில் தாம் கொண் டுள்ள செய்மதித் தொடர்பு நிறு வனமொன்றின் ஆலோசகரொரு வர் சீனாவின் இச்செயலினால் திடுக்குற்றவராகப் ''பனிப்போரின் போது கூட ருஷ்ய மற்றும் யு. எஸ் இராணுவ அதிகாரிகள் 'ITU' வில் ஒன்றாக அமர்ந்து இணக்கமான தீர்வுகளுக்கு ஒருமித்தே வந்து மிருக்கிறார்கள். அப்படி அவர்கள் செயற்படவேண்டியதாக இருந் தது. அப்படியில்லையென்றால் இருசாராருமே தத்தமது செய் மதிகளைப் பயன்படுத்த முடியாது போயிருக்கும்'' என்று குறிப்பிட் டார்.

ஆசியாவில் செய்மதிமூல அஞ்சல் நிகழ்வுகளால் பயன்பெறும் கேபிள் ரீவி.க்கள் மற்றும் தனிப்பட்ட செய்மதித்தொடர்புகள் மற்றும் தனிப்பட்ட செய்மதித்தொடர்புப் பரிவர்த்தனை நிறுவனங்கள் போன்றவற்றின் தகவல் தொடர்புகளுக்கான அகோரப்பசி கடந்த சில வருடங்களாக அதிகரித்துக் கொண்டே வருகிறது. இதன் காரணமாக ஆசியாவில் இதற்கான போட்டியுங்கூட குறிப்பிடத்தக்களவில் கடுமையானதாகவே உள்ளது. அண்மைக்காலம் வரையில் ஒரு சொற்ப அளவிலான ஒளி, ஒலி பரப்புக்களுடன் அதுவும் அரச ரீ.வி.க்களினால் நடத்தப்படும் உள்ளூர்ப் பிரச்சாரப்போதனைகளுடன் ஆசியர்கள் திருப்திப்பட்டுக் கொள்ள வேண்டியதாக இருந்த காலம் மலையேறிப்போய்விட்டது. இப்போதே அவர்களிற் பலரும் சர்வதேச செய்திகள், களியாட்டக் காட்சிகள், அறிவியல் நிகழ்ச்சிகள் போன்றவற்றுடன் வர்த்தக முயற்சிகளுக்கான பல்வேறு விடயங்கள், தரவுகள் போன்ற தலைசுற்றவைக்கும் நிகழ்ச்சி நிரல் ஒழுங்குகளுக்கே தமது தொலைத் தொடர்பு சாதனங்களை முடுக்கி விட்டுப் பயன்பெற்றுவருகிறார்கள். எதிரெதிர்ப்போட்டிகள் சூடு பிடித்து வருகின்றன. ''அலைவரிசைகள் மட்டுப்படுத்தப்பட்ட ஒரு மூலவளமாக இருப்பது ஒரு பிரச்சனையாக இருப்பதுடன், நிகழ்ச்சிகளுக்குப் போதுமான இடமில்லை என்ற நிலையும் எமக்கு உருவாகிக்கொண்டிருக்கிறது. அவை முற்றாகவே இல்லாமற் போய்விடாதென்றாலும் இடநெருக்கடியொன்று ஏற்படத்தான் போகிறது'' என்கிறார் ரோக்கியோஸிலிருக்கும் யூ.பி.எஸ் செக்கியூரிட்டீஸ் (UBS Securities) நிறுவனத்தின் தொலைத்தொடர்பு செய்தி ஊடாக பகுப்பாளரான ரொலிஹோஹா ஸாட்டோ.

'எப்ஸ்ரார்-1' செய்மதியின் சொந்த ஆற்றல்களுக்கான ஆபத்தை கருத்திற் கொண்டுபார்த்தால், 'ஏபிரி' ('APT') எதற்காக அவசரப்பட்டு அதனை செலுத்தியதென்பது அதேகமாக முற்றிலும் தெளிவாகத் தெரியவில்லை. தொடர்பலைக் குழப்பங்கள் காரணமாக செய்மதியின் 24 பரிவர்த்தனைக் கருவிகளில் (Transponders) அதேகமாக 13 வரையிலானவை சரியாகச் செயற்படாமற் போகக்கூடுமென்பதே வல்லுநர்கள் சிலரது மதிப்பீடாகும். வர்த்தக ரீதியிலான விண்வெளிப் போட்டியில் பெரியதொரு முதலாளியாகி விடும் சீனாவின் பேரவாவிற்குக் கிடைத்த முழுமையான ஒரு பேரடியாகவும் இது அமையலாம். ஏனென்றால், எப்ஸ்ரார்-1 செய்மதி மூலப்பரிவர்த்தனைகளுக்கு 'ஏபிரி' வெளிநாட்டைச்சேர்ந்த தனது கட்சிக்காரர் பலருடன் வர்த்தக ஒப்பந்தங்களைச் செய்து கொண்டிருந்தது. அதனது இந்த ஒப்பந்தத்திற்கான கட்சிக்காரர் கூட்டத்தில் அவுஸ்திரேலியாவின் 9 ஆவது அலைவரிசை (Channel-9) மற்றும் பிரித்தானியாவின் றியூட்டேர்ஸ் டெலிவிசன் போன்றவற்றுக்குப் புறப்பாக, அமெரிக்கன் கேபிள் ரீவி நிகழ்ச்சிகள் வழங்கும்

தமிழில்:

— திரு. தி. யோகரட்ணம் —

நிறுவனங்களாகிய ESPN (sports)' 'MTV' (music videos), 'Viacom' (mixed entertainment — பல்வகைக களியாட்ட நிகழ்ச்சிகள்), Ted Turner's CNN (news) மற்றும் 'TNT' (பழைய சினிமாக்கள்) போன்றவற்றுடன் முதற்தர வெளியீடுகளான ரீ.வி சினிமாப் படங்களை வழங்குபவர்களான 'ரைம் வோனேரஸ் ஹோம் பொக்ஸ் ஒபிஸ்' (Time Warner's Home Box Office), அல்லது எச்.பி.ஒ ('HBO,) போன்றவை அடங்கிய ஒரு பெரும் பால்வெளி (Galaxy) நட்சத்திரக்கூட்டமே அடங்குகிறது.

தற்போது இவர்களுட் பலர் அமெரிக்காவினது 'பனாம் ஸட்' (PanAmSat) செய்மதி மூலம் நிகழ்ச்சிகளைப் பெற்றுக்கொள்ளும் முன்னுரிமைக்காக முண்டியடித்துக் கொண்டிருக்கின்றனர். 'எப்ஸ்ரார்-1' ஒன்றுடனான ஒப்பந்தங்களை வெறுமனே அவசரப் பின்னணித் தேவைக்கு மட்டுமென்ற வகையில் ஒதுக்கிவிட்டு மேலும் எவ்வளவோ தூரத்திற்கு மப்பால் பளிபிக் மேலாக வலம் வரும் செய்மதியை நோக்கிய அவர்களது இத்திருப்பம் அதலைத் திடீர் குபேர நட்சத்திரமாக்கியுள்ளது. இந்தோனேசிய செய்மதி நிறுவனமொன்றுடன் தனக்கு ஏற்கனவேயிருந்த முன் ஒப்பந்தத்தை 'HBO' ஏற்கனவே 1999 ஆம் ஆண்டுவரை நீடித்துக் கொண்டுள்ளது. 'எப்ஸ்ரார்' மில் முதலீடு செய்து கொண்ட ரீ.வி நிகழ்ச்சி வழங்குநர்கள் பலரும் பெரும் அச்சத்திற்குள்ளாகியிருக்கின்றனர். தமது நிகழ்ச்சி வழங்கல் முயற்சிகள் பயனற்றுப்போய் விடப் போகிறதென்பதே அவர்களது அச்சமாகும். எனஜகார்த்தாவைச் சேர்ந்த ஆலோசனை நிபுணர் ஒருவர் குறிப்பிடுகிறார். சீனாவைக் குறிவைத்ததான எந்த வித நிகழ்ச்சிகளும் தகுதியற்றதென தீர்மானிக்கப்படுமிடத்து, அவற்றை இருட்டடிப்புச் செய்வதற்கு சீனாவை அனுமதிப்பதான அதன் தணிக்கை பற்றிய ஒப்பந்த சரத்தும் அதனது கட்சிக்காரர்கள் சிலரை அதவிடமிருந்து அந்நியப்படுத்தியிருப்பதாக அறிக்கைகள் கூறுகின்றன. ''உண்மையில் இவ்விடயம் நீண்டகால நம்பகத் தன்மைக்கான ஒன்றாக இருப்பதுடன், இதனாலாகும் தாக்கமுங்கூட நீண்டகாலத்திற்கான ஒன்றாகவே இருக்கும்'' என்கிறார் ஆலோசனைத் நிபுணராகிய குறொஸ்வில்சன்.

கடந்த வாரத்திற்கு முன்னரும் கூட சீன அதிகாரிகள் இணக்கமொன்றுக்கு வருவர் என்ற நம்பிக்கை கலுக்கியிடம் காணப்பட்டது. பரஸ்பர ஒலியலைக் குறுக்கீடுகளைத் தவிர்த்துக் கொள்வதற்கு தம்மால் முடிந்தவற்றை அவர்கள் செய்வார்கள் என்பதே அவரது கூற்றாக இருந்தது. இந்தவிதமான தொருளதிர்பார்ப்பு, தபால்

தொலைத் தொடர்புகள் அமைச்சு சீன வான் வெளிக் கைத்தொழில் கூட்டுத்தாபனம் (China Aerospace Industry Corporation) மற்றும் ஓர் இராணுவ விஞ்ஞான கமிசன் (a military science commission) போன்ற பெரும் பொறுப்புமிக்க சீனப் பெருநிலப்பகுதி ஏஜென்ஸிக்கள் உரிமைப்பங்கேற்கும் 'APT' யின் அத்துமீறல் நடத்தையைஎந்தவிதத்திலும் சீர்செய்து விடும் என்பதல்ல. விண்வெளிக்கு செய்மதி ஏவும் ஒழுங்குச் செயற்பாடுகளை 'ITU' ஊடாக ஒருங்கிணைந்து மேற்கொள்வதென்பது ஏறக்குறைய 2 இலிருந்து 6 வருடங்கள் வரையில் பிடிக்கக்கூடிய சலிப்பான ஓர் இழுத்தடிப்பு வேலையே என்பது ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்றேதான். இருந்தாலும் எவருமே இதுவரை அதனது விதிகளை மீறியதில்லை.

விண்வெளியில் தனது செய்மதிக்கான நிலையொன்றாக 'APT' யினால் முன்வைக்கப்பட்ட திட்டக் கருத்தின்படி, அதனது கோரிக்கையான அந்த 131 பாகை நிலைபற்றிய முன்னறிவிப்பு ஒன்றை 'ITU' கடந்த வருடம் வெளியிட்டிருந்தது. சீனா தனது இச்செய்மதித் திட்டம் பற்றிய ஏனைய ஆறு செய்மதி உரிமையாளர்களுக்கு முறைப்படி அறிவித்துமுள்ளது. ஆனால் தொழில்நுட்ப ரீதியிலான மதிப்பீடுகளைப் பூர்த்திசெய்து கொள்வதற்கான சந்தர்ப்பமெதுவும் 'ITU' விற்கு வழங்கப்படாதுடன் ஜப்பானுக்கு அறிவிக்க வேண்டியதில்லை என்றே சீனா தீர்மானித்துக்கொண்டு இருக்கிறது. இதனால் செய்மதி செலுத்தப்படுவதற்கான நாள் நெருங்கிய போது மட்டுமே ஜப்பான் இது பற்றிய தனது எச்சரிப்பொலியை எழுப்ப ஆரம்பித்துள்ளது. 'நிம்ஸாற்' செய்மதியின் அமெரிக்க உரிமையாளருங்கூட இதே விதமாக இவ்விடயத்தில் இருட்டடிப்பிற் குள்ளாக்கப்பட்டிருந்ததுடன் இறுதியாகச் சீற்றத்திற்கும் உள்ளாக்கப்பட்டுள்ளனர். சீனாவின் இந்தப் போக்கிரித்தனமான செயலைக் கூடுதலாக ஆசியாவுக்கு வெளியிலுங்கூட மிகவும் அபாயகரமான ஒரு துர்க்குறியாகவே ஜப்பானிய நிபுணர்கள் பார்க்கின்றனர். இந்த விதமான நடவடிக்கை சொந்த ஆதாயங்களதும் இம்மலிவான செயலில் ஈடுபடுவதற்கு கெள்கைமாறிகள் பலரையும் ஊக்கப்படுத்துவதாகவேயிருக்குமென்ற தமது கருத்தினை இத்தொழிலில் அக்கறையுள்ள அதிகாரியொருவர் பெரிதும் கவலையுடன் தெரிவிக்கிறார்.

பேச்சுவார்த்தையிலீடுபட்ட சீன அதிகாரிகள் 'எப்ஸ்ராற்' செய்மதித் தொடர்பு வேலைகளை ஆரம்பிப்பதை பிற்போடுவதுபற்றி கூடந்தவார இறுதியளவில் ஜாடையாக கருத்து வெளியிட்டுள்ளனர். இவ்விடயத்தில் சீனா தெரிந்து கொள்வதற்கு மூன்று தீர்வுகளே உள்ளன என்பதே ஜப்பானுடைய நிலைப்பாடாகும். ஒன்று தொடர்புக் குறுக்கீடுகளைக் குறைத்துக் கொள்வதற்காக 'எப்ஸ்ராற்' இன் தொடர்புப் பரிவர்த்தனைச் சாதனங்களுள் சிலவற்றின் ஒலி – ஒளி அலைவரிக்கட்டுப்பாட்டு ஆற்றலை மாற்றிக்கொள்வது. மற்றது எல்லாச்சந்தர்ப்பங்களிலுமே ஜப்பானியப் பிராந்தியத்தைத் தவிர்த்துக் கொள்ளும் விதத்தில் பூமிக்கான அதனது தொடர்பலைக் கவிகைப் பரப்பினை (Swath of earth toward beaming) மட்டுப்படுத்திக் கொள்வது, அல்லது மூன்றாவதாக அது வலம் வரும் சுற்றுப்பாதையை மாற்றிக் கொள்வது. தொழில்நுட்பரீதியில் இது சாத்தியமானதே யென்பதுடன் ஆசியாவில் இத்தொழில் முயற்சிக்கான உள்ளார்ந்த ஆதாய நோக்கிற் பார்த்தாலுங்கூட இது தவிர்த்துக்கொள்ளப்படுமளவிற்குப் பணவிரயமான ஒன்றுமல்ல என்பதே சுணுக்கியின் கருத்தாகும்.

1990 சீன 'லோங்மாச்' ராக்கெட் ஒன்று பூமியின் சுற்றுவட்டப் பாதைக்குச் செலுத்தப்பட்டதன் மூலம் இத்துறையில் வர்த்தக சேவைக்கான அதன் கன்னிப் பிரவேசம் ஆரம்பித்தன. பின்னர் தூரகிழக்கிற்கான செய்மதித் தொடர்புத்தொழில் துறையானது பணம்புரளும் பாரிய கைத்தொழிலேதான் என்பது இப்போது தெளிவாகியுள்ளது. இச்சீன கன்னிச் செய்மதியாகிய 'ஏசியாஸட்' (Asia sat) பெரும்பாலும் இத்துறையில் பெரும் பணமுதலையாகத் திகழும் றுப்போட் மேர்டொச்' சுடைய ''நியூஸ்கோர்ப்'' நிறுவனத்தின் கட்டுப்பாட்டிலிருப்பதுடன், அவரது 'ஸ்ராஸ் ரிவி' நிகழ்ச்சிகளையே ஒளி ஒலிபரப்பியும் வருகிறது. சூதாட்டம் போல் ஆரம்பிக்கப்பட்ட இம்முன்னோடித் திட்டம் குப்பை குப்பையாகப் பணத்தைத் தேடிக் கொடுத்தது. 'ஸ்ராஸ் ரிவி' இப்போது 200 மில்லியன் ஆசிய தொலைக்காட்சிப் பார்வையாளர்களைக் கவர்ந்துள்ளது மட்டுமன்றி, ஒவ்வொரு நோக்கத்திற்குமான விருப்ப நிகழ்ச்சிகளைக் கட்டண அடிப்படையில் ஒலிபரப்பும். மேலுங் கூடுதல் ஆதாயமான வழிமுறைகளை நோக்கி மேர்டொச்சின் நிர்வாகிகளை உந்தித் தள்ளுவதாகவுமிருக்கிறது. 'ஏசியாஸட்' இன் வெற்றியையும் அதேபோன்று செய்மதித் திட்டமொன்றினை ஆரம்பிப்பதற்கான கட்டணமாகப் பேரடிப்படையில் ஆகக்குறைந்த தொகையெனச் சீனாவிடமிருந்து சம அளவில் கிடைக்கும் பேரதிர்ஷ்டத்தையும் கருத்திற் கொள்ளும் மேர்டொச் போட்டியாளர்களில் குறிப்பிடத்தக்க ஒரு தொகையினர், தமது முயற்சிக்கான ரிக்கட்டுகளை சீன மக்கள் குடியரசிடம் பெற்றுக் கொள்வதற்கே முனைகின்றனர்.

'எப்ஸ்ரா' ருடன் உங்களுக்கு தொடர்புகளில்லையென்றால் நீங்கள் தகுதிவாய்ந்த நிகழ்ச்சி வழங்குதாரராகவே இருக்கமுடியாது என்ற ஓர் உள்ளார்ந்த கருத்து விளம்பர உலகில் நிலவியது என ஹொங்கொங்கைச் சேர்ந்த குறோல் வில்சன் என்பவரது சகாவாகிய மார்த்தா பென்லன் விபரிக்கிறார். இப்போதோ ஆபத்தை எதிர்கொள்ளும் விதத்தில் சீனாவு

டன் இவ்விடயத்தில் கூட்டு வைத்துக் கொள்வது பயனுள்ளதாகுமா என்றே இத்துறையில் ஈடுபடுபவர்கள் ஆச்சரியப்படுகின்றனர். 'ATP' யின் கட்சிக்காரர்கள் பலரும் வருட இறுதியில் ஆரம்பிக்கப்படவிருக்கும் 'எப்ஸ்ராா் - 2' தொடர்புச் செய்மதித் திட்டத்திலும் பங்காளிகளாக இணைவதற்கு இணங்கிய போதிலும் வெற்றிகரமான ஏனைய போட்டிச் சேவைகளும் சூடுபிடித்துள்ளன. ஆசியாவுக்கு ஒலிபரப்புச் செய்வதற்கெனத் தற்போதிருக்கும் சுற்றுவட்டப் பாதையின் செய்மதி நிலைய வளைவு (Orbit mc) 57 பாகையிலிருந்து 186 பாகையாக கிழக்கே விசாலிப்பதுடன், அதனிடையே குறைந்தது 51 செய்மதிகளாவது ஒன்றில் ஏற்கனவே செயற்பட்டுக் கொண்டிருக்க வேண்டும். அல்லது வெகு விரைவிலேயே ஆரம்பிக்கப்படுதற்கு ஏற்பாடுகள் பூர்த்தியாகியிருக்க வேண்டும். அவற்றின் ஆற்றல் அநேகமாக 500 லிருந்து 600 வரையிலான பரிவர்த்தனைக் கருவிகளின் (Transponders) செயற்பாட்டிற்கே போதுமானதான ஒரு பகுதியில் அவற்றுக்கான பயன்பாடு இறுதியில் 800 லிருந்து 1000 வரையிலான கருவிகளுக்கான ஒன்றாக அதிகரிப்பதாகவே இருக்கும். வாடிக்கையாளருக்கான சந்தையைப் பிடித்து விடுவதற்கான ஒரு பேரவாவே இந்நிலைமைக்கான காரணமாகும்.

துணிகரமான ஒரு முன்னணியைப் பிடித்து விடுவதற்கான முயற்சியையே 'APT' மேற்கொண்டிருக்கிறது. ''சின்னமும் ஏதாவது ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை விசேடமாக ஜப்பானுடன் நாம் மேற்கொள்ள வேண்டியிருக்கிறது. ஆனால் அனைத்துத் தரப்பினரையுமே திருப்திப்படுத்த எம்மால் முடியுமென்றே 'APT' நம்புகிறது'' என மார்க்கெட்டிங் டிரெக்ரராகிய யாங்குமெங் ஏற்றுக் கொள்கிறார். அயலிலுள்ள செய்மதிகளின் உரிமையாளர்களும் நிச்சயம் அதனையேதான் நம்பி எதிர்பார்க்கிறார்கள். எப்ஸ்ராருடைய விண்வெளிச் செயற்பாடுகள் குறுகிய ஒரு காலத்திற்கேதான் என்று பார்த்தாலும், எப்படியும் அதனது 1 பாகை அளவிலான இடைவெளித் தூரம் பிரமாண்டமானதொரு தொடர்பு வெற்றிடத்தை உருவாக்கி விடுமளவிற்கு அச்சுறுத்துவதாகவே இருக்கிறது.

ரைம், செப்ரெம்பர் 19, 1994

பாடகன் ஜோன் லெனோனையும் உளவு பார்த்துள்ளனர்.

அமெரிக்காவில் பிடில்ஸ் என்ற பெயரில் சுமார் 30 ஆண்டுகளுக்கு முன்பு ஒரு கலக்குக் கலக்கி உலகப் பிரபல்யம் பெற்ற பொப் இசைக் குழுவின் ஓர் உறுப்பினரான ஜோன் லெனோன் பற்றியும் அமெரிக்க மத்திய அரசு உளவு நிறுவனமான எப்.பி.ஐ இரகசியத் தகவல் சேர்த்து ஒரு பெரும் கடதாசிக் கோவை ஆக்கி வைத்திருந்தது ஏன் என்று புரிந்து கொள்ள முடியாமல் உள்ளது. கலிபோர்னியாவில் உள்ள அமெரிக்க சமூகவியல் விடுதலைச் சங்கத்திற்கு இப்பொழுது அந்த உளவு பார்க்கப் பட்டது பற்றிய ஆவணங்கள் கிடைத்துள்ளன. அந்த முன்னாள் பிடில் குழு உறுப்பினர் இயங்காத ஒரு சமாதானக் குழுவுக்கு 75, 000 டொலர் நிதியுதவி கொடுத்தார் என்றும் ஓர் ஒற்றன் அதில் அறிக்கையொன்று சமர்ப்பித்துள்ளான். லெனோன் தேசியப் பாதுகாப்பிற்கு ஓர் அச்சுறுத்தலாக இருந்தாரா? அந்தக் கடிதக் கோவையில் அப்படியான ஆதாரம் ஏதும் இல்லை. ஓர் ஒற்றனின் கூற்றுப்படி, ''லெனோனும் அவருடைய மனைவியும் அமெரிக்க அரசியலுக்குப் பொருத்தமற்றவர்கள்'' என்று கூறப்பட்டுள்ளது. அந்தக் கடிதக் கோவையின்படி அப்பொழுது அமெரிக்க ஜனாதிபதியாக இருந்த ஜனாதிபதி நிக்சனுக்கு இந்த உளவு பார்க்கப்பட்ட விடயம் தெரிந்திருந்தும் ஒருவேளை ஜனாதிபதி நிக்சன் அந்தப் பாடகனின் விசிறிகளில் ஒருவரோ?

இலக்குமாறிய பயணம்!

சனத்தொகை கட்டுப்படுத்தல் பற்றிய கெய்ரோ மாநாட்டின் பயணம்.

எகிப்திய நாட்டின் தலைநகர் கெய்ரோவில் கடந்த செப் ரெம்பரின் முதல் வாரத்தில் சர்வதேச சனத்தொகை பற்றிய மாநாடு இடம் பெற்றது. சனத் தொகையைக் கட்டுப்படுத்துவது பற்றிய விடயங்களை ஆராய்வதே இங்கு முதன்மைப் பிரச்சனையாக எடுத்துக் கொள்ளப்பட இருந்தது. கடந்த ஆண்டில் றியோடி ஜெனி ரோவில் இடம் பெற்ற சூழல் பாதுகாப்புச் சம்பந்தமான மாநாட் டின் பின்னர் பல்வேறு நாட்டு அமைச்சுக்களின் கவனத்தையும் ஈர்ப்பதாக இம் மா நா டு இடம் பெற்றமை குறித்து வியப்படைய ஏதுமில்லை. எனினும் உத்தியோக பூர்வமாகச் சனத்தொகையைக் கட்டுப்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட இம்மாநாடானது கலா சார மோதல்களுக்கான போர்க் களம் போல ஆகியதும் பாலியற் சமத்துவமும், பெண்ணுரிமையும் பற்றியே அதிகம் விவாதிக்கப்பட்ட தும் இங்கு குறிப்பிட வேண்டிய தாகும்.

மாநாட்டின் குறிக்கோள்

இந்த மா நா ட் டி ன் குறிக் கோள் வாசகம் ''எங்கள் உடல் கள் நாங்கள்'' என்பதுவாக இருந் தது. இது சுமார் 25 ஆண்டுக ளுக்கு முன்னர் அமெரிக்க பெண் ணினவாதி ஒருவர் எழுதிய நூல் ஒன்றின் தலையங்கமாகும். இவ் வாசகத்தின் உட்கருத்து மிகவும் எளிமையானது. அதனைப் பெண் ணுக்கு நிகழ்வது எதுவாயினும் அது அவளாலேயே தீர்மானிக்கப் பட வேண்டும். தீர் மா ன மும், செயற்பாடும் அவளுடைய கட்டுப் பாட்டிற்கு உட்பட்டதாக இருக்க வேண்டும் என வகுத்துக் கொள் ளலாம்.

மாநாட்டின் முக்கிய நிகழ்ச்சி நிரலில்; மீள் உற்பத்தி, சுகாதார கவனிப்புச் சேவை என்பனவற்றின் அடிப்படையில் கருத்தடை மற் றும் பாலியற் கல்வி தொடர்பாக அனைவருக்கும் அறிவூட்டுவது என் பது இடம் பிடித்து இருந்தது. எனினும் மாநாடு ந ட வ டி க் கை யின் போது இது இந்த எல்லை யைக் கடந்து குடும்பக் கட்டுப் பாட்டு நடைமுறைகளுக்கு நியா யந் தேடுவதாகவும், பாலியல் சமத் துவம் மற்றும் பெண்ணுரிமையை வலியுறுத்துவதாகவும் அமைந்து விட்டது. சனத்தொகையைக் கட் டுப்படுத்துவதன் ஆதாரத் தூண் கள் இவையே என்று தான் கொள்ளப்பட்டது.

மாநாட்டின் முரண்பாடுகள்

ஒவ்வொரு தனியாரும் தனக்கென உரிமை படைத் தவன் என்ற வாக்கியத்தின் பொருட் பரப்பு அமெரிக்க ரைப் பொறுத்த வரையில் பொருத்தமானதாக இருக் கலாம். ஆனால் மற்றைய கலாசாரங்களைப் பொறு த்து இதன் கருத்துப் பரப்பு வித்தியாசமானது. எனினும் வேலைக்கு ஏற்ற கூலி பெற முடியாத வளர்முக நாடு களிலே பிரதமர் தொடக் கம் தொழிற்சாலை, தொழி லாளி வரையுள்ள பெண் களின் வேலை வாய்ப்புக்கள் அதிகரித்து வ ரு கி ன் ற ன. இருந்தும் அமெரிக்காவிலே பெண்களின் தொழில் சமத் துவத்திற்கான போராட் டம் அவ்வளவு எளிதான தாக இல்லை. இ ந் த க் குழப்ப நிலையானது மரபு வழிச் சமூக அமைப்பைப் பேணத் திளைப்பவர்களின் வெ று ம் வ ர ய் க் கு ப் பொரிமா கொடுப்பதுபோலானதாக உள்ளது.

மேலும் ''குடும்பம்'' என்பது இடத்துக்கு இடமும், இனத்துக்கு இனமும் வேறுபட்ட பொருளைத் தருவதாக உ ள் ள து. அமெரிக்கா போன்ற நாடுகள் பெ ரு ம் பா லும் வந்தேறு குடிகளால் உருவானவை. எனவே அங்கெல்லாம் குடும்பங் கள் (குடும்ப உறுப்பினர்கள்) எளி தில் பிரிந்துவிடக்கூடிய இ ய ல் பு காணப்படுகிறது. தந்தை, தாய் மற்றும் இரண்டு பிள்ளைகள் ஒரு குடும்பமாக அங்கு அமைந்து விடுகி றதால இத்தகைய சமூகத்தில் பெண்ணொருத்தியினுடைய தீர்மா னம் கட்டாயமாக அவளுடைய தனிப்பட்ட தீர்மானமாக இருக்கி றது. ஆனால் ஆசியாவிலும், முஸ்லிம் நாடுகளிலும், கத்தோலிக்க நாடு களிலும் ஒரு குடும்பம் (கூட்டுக்

குடும்பம்) ஒரு தீர்மானத்தில் தங்கியிருக்க வேண்டிய நிலை காணப்படுகிறது. தாய், தந்தையுடன் அவர்களால் பாதுகாக்கப்படவேண்டிய சகோதர சகோதரியர் மற்றும் மாமி, பாட்டி போன்றோரும் ஒரு குடும்பத்தின் உறுப்பினர்களாக உள்ளனர். குறித்த ஓர் இடத்தில் கட்டுண்டு தமக்கென ஒரு வரலாற்றையும் கொண்டவர்களாகவுள்ளனர். எனவே இக் குடும்பங்கள் தனித்த வகுப்புகளாய் ஒருவரிலிருந்து மற்றவர் விலகிச் செல்ல முடியாத பந்தம் உடையவை. ஆக வளர்முக நாடுகளில் குடும்பம் ஒரு நிறுவனமாக விரிவாக்கங் கண்டு இயங்கி வருகிறது. தீர்மானங்கள் கூட எடுக்கப்படுகிறது.

இந்த இடத்தில் இந்திய சனத்தொகை பற்றிய ஆய்வு நிபுணர் கவெலி வெளிலுட்டியின் கூற்று கவனிக்கப்பட வேண்டியதாகிறது. அவர், "மரபு என்பது மிக உயர்ந்தது தான். ஆனால், பெண்களைத் தாழ்த்துவதாக அந்த மரபு இருந்தால் அது மாற்றப்பட வேண்டியதே" என்கிறார். பெண்களே தமது பிள்ளைப்பேற்றளவினை மட்டுப்படுத்தும் ஆற்றல் பெற்றிருக்காவிட்டால் அவர்களால் தங்களையோ, தங்கள் உயிர்வாழ்வையோ கட்டுப்படுத்த முடியாமற் போய்விடும். "குடும்பமே அடிப்படை அலகு" என்று கெய்ரோ மாநாடு குறிப்பிட்டுள்ள போதிலும் கூட "குடும்ப வடிவங்களில் காணப்படும் பாகுபாடுகள்" பற்றியும் அவற்றின் தேவைகள் பற்றியும் அது கவனம் செலுத்தியிருப்பது போதாது எனக் கூறப்படுகிறது.

ஆகவே இவற்றைத் தொகுத்துப் பார்க்கும்போது கெய்ரோ மாநாட்டின் நிகழ்ச்சி நிரல் பெண்களை ஒரு முகாமிலும், குடும்பங்களை இன்னொரு முகாமிலும் பிரித்துப் போராடலைப்பதாக விட்டுள்ளது எனலாம். சர்வதேச மகளிர் சுகநலக் கூட்டணியின் தலைவி கோன் டன்லப், அமெரிக்கக் கத்தோலிக்க சபையின் பணிப்பாளர் அதெத் கேன் ஆகியோரின் கருத்துக்கள் இதனைப் புலப்படுத்துவதாகும். "வத்திக்கானிலுள்ள றோமன் கத்தோலிக்க திருச்சபை தனிப்பட்ட பெண்கள் பற்றி ஆர்வம் கொள்ளவில்லை" என்று டன்லப் கூற "குடும்பமே குடும்பம் பற்றிய விடயத்தைத் தீர்மானிக்க வேண்டும்" என கேன் பதிலளித்து இருந்தாராம்.

வத்திக்கானின் சிற்றமும் முஸ்லிம் மதவாதிகளின் நட்பதையும்:-

"மீளுற்பத்தி உரிமைகள்" "கருக்கொள்ளலை இடை நிறுத்தல்" என்பன கெய்ரோ மாநாட்டில் முதன்மை பெற்றிருந்தன. இதன் மூலம் கருச்சிதைவு நிலை நிறுத்தப்படுவதற்கும் அதற்கு ஐக்கிய நாடுகள் சபை இசைவு வழங்கும் என்ற நிலையும் வத்திக்கானிலுள்ள றோமன் கத்தோலிக்கத் திருச்சபையின் கவலத்தை சர்த்தன. குறிப்பாகப் புனித பாப்பரசர் இரண்டாம் அருளப்பர் சின்னப்பர் "புனிதமான விவாக பந்தம் இழப்பிற்கு இலக்காகப் படுவதற்கும், குடும்பத்தின் மகத்துவம் புறக்கணிக்கப்படுவதற்கும் கெய்ரோ மாநாட்டின் அறிக்கை இடம் அளிக்கிறது" என சிற்றத்துடன் சுட்டிக் காட்டியுள்ளார். எவினும் பாப்பரசரின் சிற்றத்துக்கு கெய்ரோ மாநாட்டு அறிக்கை மட்டும் காரணமல்ல. சனத்தொகைப் பெருக்கத்திற்கும், பொருளாதாரத்திற்கும் இடையே உறவைக் காணும் வகையில் ஐ.நா. புள்ளி விபரங்களை உருவாக்குகிறது என்பதும் பாப்பரசரின் ஒரு குற்றச்சாட்டு.

இவ் வகையில் பாப்பரசர் அரசுத் தலைவர்களுக்குத் தாமே நேரில் கடிதம் அனுப்பி இருக்கிறார். அதில் "பொருளாதார வளமும் பாதுகாப்பும் கொண்ட வளர்ச்சிமிக்க நாடுகளில் அவற்றிற்கே உரித்தாகவுள்ள வாழ்க்கைப் பணியின் சில தவிப்பட்ட அம்சங்களைக் கெய்ரோ மாநாடு வளர்முக நாடுகளுக்கும் திணித்துவிட முயல்கிறது" எனக் குறிப்பிட்டுள்ளார். அத்துடன் இயற்கை விழுமியங்களிலும் ஒழுக்கக் [கோட்பாட்டிலும், சமயத்திலும் பற்றுறுதியும் உணர்வும் கொண்ட சமூகங்கள் இவற்றை எல்லாம் புறக்கணிக்கும் மனித நோக்கினை எதிர்க்காமல் ஏற்றுக் கொள்ளப்போகின்றனவா? எனவும் கேள்வி எழுப்பியுள்ளார்.

வத்திக்கானின் இவ்வெதிர்ப்பு இஸ்லாமிய உலகின் எதிர்ப்பை

> சனத்தொகையை கட்டுப்படுத்துவது பற்றிய கெய்ரோ மாநாடு மதவாதிகளின் கடும் தாக்கத்திற்கு இலக்காகியது. மேற்கு நாடுகளின் "கலாசார ஆக்கிரமிப்பு" என்று இஸ்லாமிய அடிப்படை வாதிகள் கருதினர். றோமன் கத்தோலிக்க திருச்சபை கருச்சிதைவிற்கான உலக அங்கீகாரம் என்றும், குடும்பத்தின் புனிதத்தை சிதருலக்கும் முயற்சி என்றும் கண்டனம் செய்துள்ளது.

மேலும் தூண்டியுள்ளது. மேற்கு நாடுகளின் "கலாசார ஆக்கிரமிப்பு" என்று கெய்ரோ மாநாட்டை இஸ்லாமிய அடிப்படைவாதிகள் குற்றம் சாட்டியதும், "பாலியலை திழிவுபடுத்தும் மாநாடு என்று கெய்ரோவிலுள்ள

இஸ்லாமிய போராளிகள் இம் மாநாட்டிற்குப் பெயர் சூட்டியதும் இங்கு சுட்டிக் காட்டத்தக்கதாகும். அத்துடன் உள்ளூர் அழுத்தங் களின் காரணமாக துருக்கி, பங் களாதேஷ் நாடுகளின் பெண் பிரதமர்கள் மாநாட்டில் கலந்து கொள்ளாமையும் சூடானும், சவூதி அரேபியாவும், லெபனானும் மாநாட்டை புறக்கணித்தமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

கருச்சிதைப்பை உலக உரிமை யாக்கவும், குடும்பத்தின் புனிதத் தைச் சீர்குலைக்கவும் குடும்பத்தின் இன்றியமையாமையைக் கேலிசெய் வதாகவும் கெய்ரோ மாநாடு முற் பட்டதாக இஸ்லாமிய உலகு குற்றம் சாட்டியுள்ளது.

தன்னினச் சேர்க்கையும், வயதிளமைப் பருவ பாலியல் நடத்தையும்

கெய்ரோ மாநாட்டின் வரையப்பட்ட நிகழ்ச்சி நிரல் தன் னினச் சேர்க்கையையும் (Homosexuality) வயதிளமைப் பருவ பாலியல் சேர்க்கையையும் (Teenage) ஊக்குவிப்பதாக இருந்துள்ளது எனவும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. மேற்கு நாடு களுக்கு வெளியேயுள்ள சமயக் குழுக்கள் அமெரிக்காவிலும் மேற்குஐரோப்பிய நாடுகளிலும் கடைப்பிடிக்கப்பட்டு வரும் கட்டுப் பாடற்ற பாலியற் பரிசோதனைகள் ஆபத்தானவை என்று அச்சம் கொண்டுள்ளன, ''தத்தம் நாடுகளில் தோல்வி கண்டுவிட்ட மேற்கத்திய சமயம் சாராத கலாசாரம் மற்றும் நாடுகளிலும் ஊடுருவப் பார்க்கிறது. இதனை அனுமதிக்க முடியாது'' என்று அமெரிக்க முஸ்லிம் சபையின் நிறைவேற்றுப் பணிமனைச் அப்துல் ரஃமான் அல்மௌத குரல் எழுப்பியுள்ளார்.

எனினும் இஸ்லாமிய உலகின் முக்கிய நகரமான கெய்ரோ வுக்கு மிக அண்மையில் கூட பால்ய வயதுப் பெண்களை வய தான முதியவர்கள் திருமணம் செய்வதும், முகத்திரையால் மூடப் பட்ட நிலையில் பெண்கள் வாழ நிர்ப்பந்திக்கப்படுவதும் குறிப் பிடத்தக்கதாகும். சனத்தொகையைக் கட்டுப்படுத்தும் இம்மாநாடு கெய்ரோவில் நடந்து கொண்டிருந்த அதேவேளையில் 15 வயதைக் கொண்ட நக்லா அறுபது வயதைக்கடந்த முதியவர் ஒருவருக்கு திருமணம் செய்து வைக்கப்பட்ட நிகழ்ச்சியும் கெய் ரோவில் இருந்து ஒரு மணிநேரக் காரோட்டத்தில் சென்றடையக் கூடிய கிராமத்தில் நிகழ்ந்திருக்கிறது. இது இஸ்லாமிய நாடு களின் பெண்களின் மீதான அடக்கு முறைகள் மற்றும் நிர்ப்பந் தங்களுக்கு ஓர் எடுத்துக்காட்டு எனலாம்.

சனத்தொகைப் பெருக் கமும் பொருளாதார வளர்ச்சியும்:

சனத்தொகைப் பெருக்கம் பற்றியதான இம்மாநாடு திடீர்ப் பேரழிவுகளும் குற்றச்செயல்களும் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு இருந்ததை விடவும் அதிகரித்து இருப்பதைக் கவனத்தில் கொள்ளவில்லை. 20 ஆம் நூற் றாண்டில் மனிதர்கள், தாங்கள் வாழ்கின்ற உலகினைத் தனிப்பட்ட நகரங்களாக்கி வருகின்றன என்று ஐம்பதுகளிலேயே அல்டுவஸ் ஹக்ஸ்லி கூறியிருப்பதையும் இங்கு நினைவு படுத்திக் கொள்ளலாம். மானிடமும் அமானிடம் ஒன்றிணைந்த ஒரு பொறியின் கீழ் அகப்பட்டு உயிர் வாழ்க்கை மிக மலிவாகிவிட்டது என்று கூறப்படுவதும் ஒரு வகையில் பொருத்தப்பாடு உடையதே.

தொகுப்பு:

உலக உலா ஆசிரியர் குழு

ஆபிரிக்காவில் றுவாண்டாவில் மிக அதிக அளவில் இடம்பெறும் மனிதப் படுகொலைகள் இங்கு சுட்டிக்காட்டப்பட்டது. றுவாண் டாவில் சனநெருக்கம் உலகில் மிக அதிகமாக இருப்பதும் இப்படு கொலைகள் பற்றிய விவாதத்தில் எடுத்துக் கூறப்பட்டது. எனினும் இந்த மனிதப் படுகொலைகளின் அவசர நிலையைக் குறைத்து மதிப்பிட்ட அமெரிக்க உப அதிபர் கோர் இந்த இடத்தில் இந்த உதாரணம் பொருத்தமற்றது எனக் குறிப்பிட்டார். ஆனால் வத்திக்கானின் பிரதிநிதிகள் றுவாண்டாவின் சனப் பெருக் கத்தை விடவும் ஐப்பானின் சனப் பெருக்கம் மிக அதிகம் என்பதை யும் அங்கு மனிதர்கள் தமது சகோதரர்களைக் கொல்லவில்லை என்பதையும் குறிப்பிட்டு போரின் விவாதத்திற்கு ஆப்புவைத்தனர்.

எனவேதான் சனப் பெருக்கம் என்பது பிரச்சனையல்ல என்பதும் பொருளாதார சமூகக் குறைபாடே பிரச்சனை என்பதும் கவனிக்கப் பட வேண்டியதாகிறது. பொரு ளாதாரத் தேக்கத்தால் தான் பிரச்சனைகள் ஏற்படுகின்றது என்பதை உணர்ந்து கொண்டு அதனைத் நிறம்படக் கையாண்டு உற்பத்தியைப் பெருக்கிக் கொள் வதே மேலும் மேலும் பெருகி வரும் மக்களுக்கு வாழ உகந்த தாக உலகினை மாற்றுவதற்கு வழி என்பது ஏற்புடையதாகின் றது. எனினும் இதனை ஏற்காத வர்கள் கூடிய ஆரோக்கியமுடைய, கூடிய கல்வியுடைய, கூடிய வேலைவாய்ப்புடைய மக்கள் சமுதாயம் உருவாவதற்குச் சனத் தொகையைக் கட்டுப்படுத்துவதும் அவசியம் என்றே கருதுகின்றனர். பிறக்கின்ற ஒவ்வொரு குழந்தை

யும் வாயுடனும் வயிற்றுடனும் மட்டுமன்றி இரண்டு கைகளுடனும், கால்களுடனும் தான் பூமிக்கு அறிமுகமாகிறது எனப் பெரியார்கள் சிலர் சுட்டிக்காட்டுவதையும் இங்கு குறிப்பிடுவது பொருத்தமே.

முடிவுரை:

எவர் எதைக் கூறினாலும் சனப்பெருக்கப் பிரச்சனை என்பது அச்சுறுத்தி வரும் பாரிய பிரச்சனையே. முன் எப்போதும் இல்லாதவாறு இன்று சனப்பெருக்கம் பயங்கரமான வகையில் அதிகரித்த வண்ணமே உள்ளது. இன்று 5.7 பில்லியன்களாக உள்ள சனத்தொகை ஐ.நா சபையின் புள்ளி விபரக்கணிப்பின்படி ஆண்டுதோறும் 94 மில்லியன்களாக உயர்ந்து வருகிறது. இதில் 93 சதவீதம் ஆபிரிக்காவிலும், லத்தீன் அமெரிக்காவிலும், ஆசியாவிலும் ஏற்படுகிறது. கடந்த முப்பது ஆண்டுகளுக்கும் மேலாக உலகம் சனத்தொகைப் பெருக்கத்தை கட்டுப்படுத்துவதற்கும், பெண்களின் உரிமைகளை எளிதுபடுத்தவும் பெருமளவில் முயன்று வருகின்றது. எனினும் இந்த இரு விடயங்களிலும் ஆர்வம் இல்லாதவர்களுக்குத் தானே முன்னோடி எனக்காட்ட முற்பட்டமையால் அவலமான ஒரு நிலைக்கு உள்ளாக நேரிட்டுவிட்டது. அதாவது செல்வாக்குப் பொருந்திய சில குழுக்களை கெய்ரோ மாநாட்டில் வரையப்பட்ட ஆவணம் எதிரிகளாக்கிக் கொண்டு விட்டது என்பதே மாநாட்டின் முடிவாகத் தெரிகிறது.

நியூஸ்வீக், செப்டெம்பர் 12, 1994

*

அறிவூட்ட உதவும் விளையாட்டுப் பொருள்கள்

தமிழ் ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

நான்கு வயதிற்கு மேற்பட்ட குழந்தைகளுக்கெனப் பல வகை விளையாட்டுப் பொருள்களாகப் பிளாஸ்டிக்காலான பல வகைச் சண்டை ஆயுதங்கள் விற்பனையாகின்றன. அவற்றிற்கு மாறாக அறிவை வளர்க்கவும், புரிந்து கொள்வதைத் தூண்டவும் உதவும் வகையான பல விளையாட்டுப் பொருள்களை சான் பிரான்ஸிஸ்கோவில் உள்ள வைல்ட் பினாட் டோல்ஸ் என்ற நிறுவனம் உற்பத்தி செய்கின்றது. சாரணச் சிறுவர்கள் பயன்படுத்தவும், பல வகையான பிரயோக வசதி கொண்ட பிளாஸ்டிக் பொருள்கள் ஆக்கப்படுகின்றன. ஸீவிஸ் இராணுவக் கத்தி போன்று பிளாஸ்டிக்கால் செய்யப்பட்ட ஒன்றில் மண் தோண்டவும், துளைக்கத்தல் பூருவுதல் போன்ற போன்ற பல வேலைகள் செய்வதற்கு உபயோகமான ஆயுதங்கள் இணைக்கப்பட்டு இருப்பதுடன் அது ஒரு கையின் விளக்காகவும் பயன்படுகிறது. பெரும் ஈரணிப்புக் காடுகளில் உயிரியலாளர்கள் அலைந்து விலங்கு மாதிரிகளைப் பிடிப்பது போல் வீட்டுத்தோட்டத்திலே நடக்கும் போது சிறு பூச்சிகள் ஊர்வன போன்றவற்றைப் பிடிக்கும் பொறிக்கோலும் அவற்றைப் போட்டு வைக்கும் ஏனமும் அவற்றின் பெருப்பித்த உருவைப் பார்த்தறிய 30 வலுக்கொண்ட நுணுக்குக் காட்டியும் உள்ளன. அதனைப் பிள்ளைகள் பயன்படுத்தும் போது இயற்கை அறிவுபற்றிய அவர்களுடைய அறிவும் உணர்வும் அதிகரிக்க இடமுள்ளது. அத்துடன் இவை அனைத்தையும் இடுப்புப்பட்டியில் செருகிக்கொண்டு செல்ல முடியும். பல பரிசோதனைகள் செய்முறைகளும், திட்டங்களும் அடங்கிய அட்டைகளும் அவற்றுள் அடங்கும். அவற்றைப் படித்து விதைகளை முளையிட வைத்தல் போன்ற பல பரிசோதனைகள் செய்யலாம். ஒரு நாளைக்கு மட்டும் பயன்படுத்த ஏற்றதாக நீர்வீலங்கு வளர்ப்புத்தொட்டி செய்து விளையாடலாம்.. அத்துடன் ஒரு சிறு பிள்ளையான சேகரிப்பாளர் தான் சேகரித்தவற்றைப் போட்டு பல வேடிக்கைத் தோற்றங்கள் கண்டுகளிக்க உதவும் கொலிடோஸ்கோப்பும் அந்தத் தொகுதியில் அடங்குகிறது. நுணுக்குக் காட்டியும் தொலைநோக்கியும் ஒன்றிணைந்த ஒரு சாதனமும் உண்டு. விலை 4 இல் இருந்து 18 டொலர் வரை.

இது அறிமுகமல்ல; ஆற்றலின் வெளிப்பாடு.

புதிய புதிய உத்திகளில் - உங்கள் புளொக்குகளைச் செய்து கொள்ளுங்கள்.

- ★ லைன் (LINE)
- ★ ஹாவ்ரோண் (HALF TONE)
- ★ கலர்ப்படங்களில் பளிச்சிடும் புளொக்குகள்
- ★ நீடித்த பாவனைக் குசிங் புளொக்குகள் (ZINC BLOCK)
- ★ லைன் (LINE) புளொக்குகள்
- ★ நவீன இயந்திரத்தில் பிளாஸ்ரிக் புளொக்குகள்

அழகன் புளொக் தயாரிப்பாளர்கள்

27/7, மகேந்திரா (வைமன்) வீதி,
யாழ்ப்பாணம்.

அச்சுப்பதிப்பு: இராசன் அச்சகம், அருச்சுனா சாலை, யாழ்ப்பாணம்.
அட்டைப்பதிப்பு: அந்திவானம் பதிப்பகம்.